GROWTH WITHIN TRANSFORMATION

மாற்றத்தினுள் வளர்ச்சி

SLIC

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

வருடாந்த அறிக்கை 2021

GROWTH WITHIN TRANSFORMATION

மாற்றத்தினுள் வளர்ச்சி

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் இது ஒரு சவால்மிக்க வருடமாக காணப்பட்ட பொழுதிலும் கூட உறுதி, பலம், தலைமைத்துவம் ஆகியன தொடர்பில் நாம் எப்பொழுதும் தொடர்ச்சியான கலங்கரை விளக்காக திகழ்ந்துள்ளோம். கடந்த காலங்களில் எமது மனோதிடம் சோதிக்கப்பட்ட பொழுதிலும் கூட காப்புறுதித் துறையில் சிறந்த கருத்துக்களின் முன்னோடிகள் என்ற முறையில் மாற்றங்களுக்கு ஏற்ப தொடர்ச்சியாக செயற்படுகிறோம் என்பதையும் காப்புறுதித் துறையில் தளராத உதவிகள் மற்றும் சலைக்காத வளர்ச்சி ஆகியவற்றை கொண்டுள்ளோம் என்பதையும் நாம் நிரூபித்துள்ளோம். எமது புத்தாக்கமானது எமது கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு வழிவகுத்ததுடன் டிஜிட்டல் சார்ந்த அறிவினை தொடர்ச்சியாக பிரயோகித்து வந்தோம். கடந்த காலத்தில் காணப்பட்ட எமது அனுகூலம் பெறல் உபாய முறைகள் மூலம் இவை தொடரப்பட்டன. நாம் எமது தகுதிக்கு அப்பாற்பட்ட தராதரங்களை பேணுவதுடன் எமது பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கு பெறுமதிகளை வழங்குகின்றோம், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கு தயாராக இருக்கின்ற அதேவேளை எமது மக்கள், செயன்முறைகள், எதிர்வரும் வருடங்களுக்கான திட்டங்கள் ஆகியன தொடர்பான மாற்றங்கள் மூலம் வளர்ச்சியடைதல்.

உள்ளடக்கம்

எம்மைப் பற்றி

4 - இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தைப் பற்றி

6 - பணிப்பாளர்கள் சபை

12 - தலைமைத்துவக் குழு

24 - இகாகூ குழு கட்டமைப்பு

26 - நிதி ரீதியான முக்கிய விடயங்கள்

28 - நிதிசாரா முக்கிய விடயங்கள் 2021

தலைமைத்தவ மீளாய்வுகள்

30 - தவிசாளரின் செய்தி

33 - பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

அறிக்கைசார் விபரங்கள்

38 - அறிக்கைசார் விபரங்கள

உபாய முறை மற்றும் கவனம் செலுத்துதல்

40 - வியாபார மாதிரி

42 - பொருள் சார்ந்த விடயங்கள்

43 - பங்கீட்டுப்பாட்டாளர் தொடர்பு முறைகள்

45 - உபாயமுறை முன்னுரிமைகள்

முகாமைத்துவ கருத்துக்கள்

48 - தொழிற்பாட்டு சூழல்

49 - நிதி சார் மூலதனம்

54 - உற்பத்தி மூலதனம்

58 - புலமை மூலதனம்

62 - மனித மூலதனம்

70 - சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்

85 - இயற்கை மூலதனம்

ஆளுகை மற்றும் இடர் மேற்பார்வை

88 - கூட்டுறவு ஆளுகை அறிக்கை

92 - கணக்காய்வு மற்றும் இணக்கக்குழு அறிக்கை

94 - முதலீட்டுக் குழு அறிக்கை

96 - இடர் முகாமைத்துவ அறிக்கை

107 - இணக்க அறிக்கை

114 - உள்ளக கட்டுப்பாடு கூற்று

நிதி அறிக்கைகள்

116 - கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை

120 - பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

121 - பொறுப்புகள் தொடர்பான பிரதான நிதி அதிகாரியின் கூற்று

122 - காப்புறுதி காப்பீட்டு கணக்கரின் சான்றிதழ்

123 - பொறுப்பு போதுமை சோதனை

124 - ஏற்பட்ட அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான சான்றிதழ்

125 - சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

128 - நிதி நிலை தொடர்பான கூற்று

130 - இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய முழுமையான வருமானம் தொடர்பான கூற்று

132 - உரிமை முதலில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று

138 - காசோட்டம் தொடர்பான கூற்று

140 - பிரிவு சார்ந்த மீளாய்வு: நிதி நிலை கூற்று

142 - பிரிவு சார்ந்த மீளாய்வு: வருமானம் தொடர்பான கூற்று

144 - நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்

மேலதிகத் தகவல்கள்

270 - ஆயுள் காப்புறுதி தொடர்பான நிதி நிலை கூற்று

271 - நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - ஆயுள் காப்புறுதி நிதி

276 - வருமானம் தொடர்பான பத்து வருட சுருக்க கூற்று

278 - பத்து வருட ஐந்தொகை சுருக்கம் - குழு

280 - பத்து வருட ஐந்தொகை சுருக்கம் - கம்பனி

284 - கிளை வலையமைப்பு

293 - பெருநிறுவன தகவல்கள்

294 - வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்

295 - குறிப்புகள்

297 - பதிவு படிவம்

299 - பதிலுறுமை படிவம்



இந்த ஆண்டறிக்கையைப் பார்வையிட ஸ்கான் செய்யவும்.
வழிவரு ://www.srilankainsurance.com/en/about-us/annual-reports

எம்மை பற்றி

4 - இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தைப் பற்றி
6 - பணிப்பாளர்கள் சபை
12 - தலைமைத்துவக் குழு
24 - **இகாசூ** குழு கட்டமைப்பு
26 - நிதி ரீதியான முக்கிய விடயங்கள்
28 - நிதிசாரா முக்கிய விடயங்கள் 2021

GROWTH

வளர்ச்சி

மாற்ற செயன்முறைகள் மூலமாக வளர்ச்சியை நாம் வரைவிலக்கணப்படுத்தி மெய்யாக்குகின்றோம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டைப் பற்றி

SLIC

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்

தந்தையும் தாயும் போன்று

இலங்கையின் தேசிய காப்புறுதி சேவைகள் வழங்குநர் மற்றும் நாட்டின் காப்புறுதித் துறையின் முன்னோடி என்ற முறையில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டானது (SLIC) பல தசாப்த துறை சார்ந்த நிபுணத்துவத்தின் உதவியுடனும் தொழில்நுட்ப அறிவின் அடிப்படையில் நாட்டில் மிகவும் அனுபவமிக்க காப்புறுதி துறை என்ற முறையில் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையின் காப்புறுதி துறையின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டினை முன்னெடுத்துச் சென்றமை என்ற நீண்ட கால வரலாற்றினைக் கொண்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டானது பல குறிப்பிடத்தக்க அடைவுகளை பதிவு செய்துள்ளது. இவற்றுள் முன் எப்பொழுதும் செலுத்தப்படாத அதிகூடிய கோரிக்கை தொகையான ரூபாய் 39.5 பில்லியன், காப்புறுதியை பெற்றுக் கொண்டவர்களுக்காக வழங்கப்பட்ட அதிகூடிய போனஸ் தொகையான ரூபாய் 9.8 பில்லியன் போன்றன. SLIC இன் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபாய் 268 பில்லியன், இலங்கை காப்புறுதித் துறையில் அதிகூடிய பங்காளர் நிதியாக ரூபாய் 75 பில்லியன் மற்றும் அதிகூடிய ஆயுள் நிதியாக ரூபாய் 152.5 பில்லியனைக் கொண்டுள்ளது.

SLIC ஆனது இலங்கை மக்களின் தொடர்ச்சியான நம்பிக்கையைப் பெற்ற தேசிய காப்புறுதியாளராகும், இலங்கை மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றும் முகமாக இதன் சேவைகளையும் மற்றும் சேவையின் தன்மையையும் ஒவ்வொரு வருடமும் மேம்படுத்தி வருகின்றது.

எமது தொலைநோக்கு

நாம் எதனை அடைவதற்கு எதிர்பார்க்கின்றோம்?

எமது தொலைநோக்கி

- இடர் பாதுகாப்பு மற்றும் ஆயுள் முதலீடு தேர்வு முறைகளில் நாட்டின் முதல் தெரிவாக திகழ்தல்

எமது பணிநோக்கு

நாம் ஏன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோம்?

எமது பணிநோக்கி

- எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமானங்களை வழங்கக்கூடிய இடர் பாதுகாப்பு மற்றும் ஆயுள் முதலீட்டு தேர்வு முறைகளை நாம் வழங்குகின்றோம்
- அர்ப்பணிப்புமிக்க தொழில்வாண்மைமிக்க குழு மூலமாக செயற்படுகின்றோம். இவர்களது பங்களிப்பினை நாம் அங்கீகரித்து பெறுமதிமிக்கதாக கருதுகின்றோம்
- பொறுப்புமிக்க கூட்டுறவு பிரசையாக திகழ்கின்ற அதேவேளை சிறப்பான பங்காளர் பெறுமதிக்கு தலைமை தாங்குகின்றோம்

பணிப்பாளர்கள் சபை

1. பொறியியலாளர் விஜித ஹேரத்
தவிசாளர்

2. திரு. அனில் கொஸ்வத்த
பணிப்பாளர்

3. திரு. எம்.பீ. அனில் குமார
பணிப்பாளர்

4. திருமதி. ஜே சுரேகா அலஸ்
பணிப்பாளர்

5. திரு. எஸ்.ஏ. நிஷாந்த தயானந்த
பணிப்பாளர்

6. திரு. ஆர்.ஏ. லக்மினி உதய குமார
பணிப்பாளர்

பணிப்பாளர்கள் சபை

1. பொறியியலாளர் விஜித ஹேரத்
தலைவர்

நன்மதிப்புள்ள தொழில்வாண்மைமிக்க பொறியியலாளர் என்ற முறையில் திரு. விஜித ஹேரத் அவர்கள் 2021 ஆகஸ்ட் 03 ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளராக இணைந்து கொண்டார். இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கொள்வதற்கு முன்னர் திரு. ஹேரத் அவர்கள் இலங்கை மின்சார சபையின் தவிசாளராக சேவையாற்றினார் (2019 முதல் 2021 வரை).

2012 ஆம் ஆண்டில் இலங்கையில் இவரது சொந்த நிர்மாணத் துறை கம்பனியை வெற்றிகரமாக ஆரம்பித்தது முதல் பொறியியல் துறையில் பிரதானமாக வெளிநாடுகளில் குறிப்பாக சவூதி ஆரேபியாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு துறையில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் காணப்படும் நிறுவனங்களில் இவரது அனுபவம் விரிந்து காணப்படுகின்றது (2003-2005 மற்றும் 2009-2012). மிகச் சிறப்பான கல்வியியல் துறை சார்ந்த சான்றிதழ்களையும் இவர் பெற்றுள்ளார், பொறியியல் துறையில் விஞ்ஞான மானி, இயந்திரவியல் அடிப்படை இரசாயன பொறியியல் விசேட நிபுணத்துவம், இதனை பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொண்டார். குருணாகல் மலியதேவா கல்லூரியின் பெருமைக்குரிய பழைய மாணவராவார்.

தைசி அன்ட் மிட்ஷுபிஷி கூட்டு நிறுவனத்தின் இல் சிரேஷ்ட இயந்திரவியல் பொறியியலாளராகவும், சவூதி அரேபியா, அல் பதர் எஸ்டேட். இயந்திரவியல் பொறியியலாளராகவும் (2003 முதல் 2005 வரை) மற்றும் இந்தோ ஈஸ்ட் இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் இல் (1999 முதல் 2003 வரை) பொறியியலாளராகவும் பணியாற்றியுள்ளார். எனோவா இஞ்ஜினியரிங் சேர்விஸ் (பிரைவேட்) லிமிட்டெட், மற்றும் லாவினியா பீச் றிசோட் ஆகியவற்றில் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அபான்ஸ் இஞ்ஜினியரிங் மற்றும் சென்றல் எயார் கொன்டிஷனிங் ஆகியவற்றில் (2007 முதல் 2009) பொறியியல் முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டெட் மற்றும் லிற்றோ காஸ் டேர்மினல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட். ஆகியவற்றில் தவிசாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

2. திரு. அனில் கொஸ்வத்த
பணிப்பாளர்

இவர் லிற்றோ காஸ் லங்கா லிமிட்டெட் மற்றும் லிற்றோ காஸ் டேர்மினல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் (2020 ஜனவரி 06 முதல் 2-21 ஜுலை 15 வரை) ஆகியவற்றின் முன்னாள் தவிசாளராகவும், பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் திரு. அனில் கொஸ்வத்த காணப்பட்டார். மேலும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராகவும் சேவையாற்றினார்.

மேலும் திரு. கொஸ்வத்த அவர்கள் நன்கு அறியப்பட்ட வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் தொழில்வாண்மைமிக்கவராகவும், முன்னணி தொழில் முயற்சியாளர் மற்றும் ஸ்தாபகராகவும், லகார்கேட் (பிரைவேட்) லிமிட்டெட். இன் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளராகவும் காணப்பட்டார். இலங்கையின் முன்னணி பல்தேசிய கம்பனியான நெஸ்லே லங்கா பிஎல்சி இன் சந்தைப்படுத்தல் மற்றும் உபாயத்துறை சார்ந்த விடயங்களில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டவராகவும் மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, மாணிக்கக் கல் மற்றும் நகைகள் அதிகாரசபை (NGJA), உள்ளடங்கலாக பல்வேறு வகையான பொதுத் துறை சேவை கூட்டுத்தாபனங்களில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட சிறப்பான அனுபவத்தை கொண்டவராகவும் காணப்படுகின்றார். பொருளாதார அபிவிருத்தி, ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வியாபாரம் போன்ற அமைச்சுகளிலும் கௌரவ அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்களது ஆலோசகராகவும் பணியாற்றிய அனுபவம் திரு. கொஸ்வத்தே அவர்களுக்கு உள்ளது.

பட்டயக் கணக்காளர் முகாமைத்துவ நிறுவகம் (FCMI), சந்தைப்படுத்தல் தொடர்பான பட்டயக் கணக்காளர் நிறுவகம் (FCIM) ஆகியவற்றின் உறுப்பினராகவும், இளம் இலங்கை தொழில் முயற்சியாளர் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினராகவும் (COYLE) காணப்பட்டார்.

3. திரு. எம்.பீ. அனில் குமார
பணிப்பாளர்

திரு. அனில் மீகஹகே அவர்கள் ஈஏபி ஹோல்டின் நிறுவனத்தின் சிரேஷ்ட நிறைவேற்று உதவி தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் EBC TV/Radio/EAP திரைப்பட நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிப்பாளரும் ஆகும். சுவர்ணவாஹினி மற்றும் ETV நிறுவனங்கள் ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி ஆவார். இலங்கை சம்சுங் தொலைபேசி நிறுவனத்தின் முன்னாள் நாட்டு பிரதிநிதியாகவும் திரு அனில் அவர்கள் பணியாற்றியுள்ளார். மற்றும் ஹேமாஸ் வாடிக்கையாளர் மற்றும் பொருட்கள் நிறுவனத்தின் விற்பனை பணிப்பாளர் மற்றும் சர்வதேச வியாபாரத்திலும் பணியாற்றியுள்ளார். விற்பனை தொழிற்பாடுகள், விநியோகம், வாடிக்கையாளர் சந்தைப்படுத்தல், சர்வதேச வியாபாரம், விற்பனை முகாமைத்துவ குழு ஆகியவற்றை நேரடியாக இவர் முகாமைத்துவம் செய்துள்ளார். 265 உறுதியான விற்பனைக் குழுக்கள் மற்றும் 108 விநியோகத்தர்கள் ஆகியோர் விற்பனை முகாமைத்துவ செயற்பாட்டின் கீழ் பணியாற்றின. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன நிறுவனத்தின் பாரிய விற்பனை குழுக்களுக்கு இவர் தலைமை தாங்கியதுடன் பொது முகாமையாளர் என்ற முறையில் இப்பணிகளை மேற்கொண்டதற்கு மேலதிகமாக கிளை வலையமைப்புகளை மேற்பார்வை செய்தமை, விற்பனை சந்தைப்படுத்தல், பயிற்சி, விற்பனை உதவி பிரிவுகள் மற்றும் 5000 உறுப்பினர்களைக் கொண்ட விற்பனை குழுக்கள் மற்றும் 1200 பணியாளர்கள் ஆகியோரை பொது முகாமையாளர் என்பதன் அடிப்படையில் மேற்பார்வை செய்துள்ளார். மேலும் யுனிலிவர் நிறுவனத்தின் திரு. அனில் அவர்களுக்கு 20 வருடங்களுக்கும் மேற்பட்ட பெரு நிறுவன அனுபவம் உண்டு. 1988 ஆம் ஆண்டில் யுனிலிவருடன் இணைந்தது முதல் இவர் பல்வேறு விதமான தலைமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். அவற்றுள் விற்பன நிறைவேற்று அதிகாரி, விற்பனை நிருவாக முகாமையாளர், பிரதேச விற்பனை முகாமையாளர் ஆகியவற்றுடன் நிறுவனம் மற்றும் ஆளணியினர் பராமரிப்பு வகைகள் தொடர்பாக வியாபார வகை முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். வியாபாரா செயற்பாட்டு முகாமையாளராக நவீன வியாபாரம் தொடர்பான விடயங்களை அவர் மேற்கொண்டார். வியடநாம் யுனிலிவரில் பணியாற்றியதன் பின்னர் சனல் அபவிருத்தி மற்றும் வியாபார சந்தைப்படுத்தல் முகாமையாளராக நிறுவனம் மற்றும் ஆளணியினர் பராமரிப்பு வகைகளில் பணியாற்றியதுடன் இலங்கை யுனிலிவர் நிறுவனத்தின் பாமஸி மற்றும் அழகுச் சாதனப் பொருட்களுக்கு தலைமை வகித்துள்ளார்.

இப்பொழுது கென்வில் ஹோல்டின்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட். இன் தவிசாளராக பணியாற்றுகின்றார். ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப்படுத்தல் தொடர்பான பட்டயக் கணக்காளர் நிறுவனத்திலிருந்து சந்தைப்படுத்தலில் (Dip. M MCIM) தொழில்வாண்மை பட்டப்பின் படிப்பு டிப்ளோமைவைப் பெற்றுள்ளார். மேலும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தற்சமயம் ீனு பட்டத்திற்காக படித்து வருகின்றார். மேலும், CIM மற்றும் ICSA மாணவர்களுக்கு திரு. மீகஹகே அவர்கள் 18 வருடங்களுக்கும் அதிகமாக விரிவுரையாற்றி வருகின்ற அனுபவங்களையும் கொண்டுள்ளார்.

4. திருமதி. ஜே சுரேகா அலஸ்
பணிப்பாளர்

திருமதி. ஜே சுரேகா அலஸ் அவர்கள் காப்புறுதித் துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளார். இத்துறையில் பல சிரேஷ்ட பதவிகளை இவர் வகித்துள்ளார். தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தனது காப்புறுதி சார் தொழிற்பாடுகளை ஆரம்பித்த இவர் யூனியன் ஏசுரன்ஸ் லிமிடட் ஆரம்பித்தது முதல் அதன் நிறைவேற்று அதிகாரியாக இணைந்து கொண்டதுடன் உதவி பொது முகாமையாளர் மட்டத்திற்கு வளர்ந்து வந்துள்ளார் (பொதுக் காப்புறுதி). அத்துடன் உதவி பொது முகாமையாளர் என்ற முறையில் உபாய ரீதியான முகாமைத்துவப் பிரிவிற்கு தலைமை வகித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டில் எலையன்ஸ் காப்புறுதி லங்கா லிமிடட்டின் பொது காப்புறுதி தொழிற்பாடுகளுக்கு தலைமை வகித்து வந்தார். மேலும், 2006 ஆம் ஆண்டில் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டதுடன் 2008 ஆம் ஆண்டில் எலையன்ஸ் லைப் இன்ஷூரன்ஸ் லங்கா லிமிடட்டின் பிரதான நிறைவேற்று அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். 2010 ஆம் ஆண்டில் திருமதி. அலஸ் அவர்கள் எலைன்ஸ் காப்புறுதி லங்கா லிமிடட்டின் சபைக்கு நியமிக்கப்பட்டதுடன் எலையன்ஸ் ஆயுட் காப்புறுதி லங்கா லிமிடட்டிற்கு நியமிக்கப்பட்டார். அத்தோடு 2017 ஆம் ஆண்டில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார்.

திருமதி. சுரேகா அலஸ் அவர்கள் லண்டன் (FCII) பட்டய கணக்காளர் காப்புறுதி நிறுவகத்தின் மாணவராகவும் பட்டயக் காப்புறுதியாளராகவும் பணியாற்றினார். அவுஸ்திரேலியா மற்றும் நியுஸிலாந்து காப்புறுதி நிறுவகம் மற்றும் நிதி நிறுவனம் ஆகியவற்றின் சிரேஷ்ட உறுப்பினராகவும் (சிரேஷ்ட உறுப்பினர் - ANZIIF) பணியாற்றியுள்ளார். மேலும், வெஸ்டர்ன் சிட்னி பல்கலைக்கழகத்தில் ஆடீயு பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் நன்மதிப்புமிக்க பல்வேறு வகையான விருதுகளைப் பெற்றுள்ளார். இவற்றுள் "பெண்கள் சிறப்பு அடைவ விருதினை" 2019 இல் பெற்றதுடன், 2018 ஆம் ஆண்டின் பெண்கள் ஐகன் என்ற விருதினையும், 2017 ஆம் ஆண்டில் வருடத்திற்கான CEO என்ற விருதினையும் மற்றும் 2016 ஆம் வருடத்திற்கான மிகச் சிறப்பான தொழில் முதன்மை மாதிரியாளர் என்ற விருதினையும் பெற்றுள்ளார்.

பணிப்பாளர்கள் சபை

5. திரு. எஸ்.ஏ. நிஷாந்த தயானந்த
பணிப்பாளர்

திரு. நிஷாந்த தயானந்த அவர்கள் ஒரு முக்கிய சட்டத்தரணியாகும். சட்டத் துறையில் இவருக்கு 18 வருட கால அனுபவம் உண்டு. இவர் மல்லியதேவ கல்லூரி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாணவராவார். 1999 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தில் LLB பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். மேலும் 2001 ஆம் ஆண்டில் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டத்தரணி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

இவரது கல்வி சார்ந்த ஆற்றல்கள் இளம் வயதிலேயே புலப்பட்டன. 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாவத்தகம மத்திய கல்லூரியிலிருந்து சித்தியடைந்ததன் மூலம் குருணாகல் மல்லியதேவ கல்லூரியில் கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். இங்கிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவரது நடத்தையானது "வாழ்க்கையில் சமநிலை" என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இடம்பெற்றதுடன் தலைமைத்துவ பண்புகள் இணைத் தேர்ச்சியையும் கொண்டிருந்தார். இவரது பாடசாலை காலத்தில் கெடட் மூலம் இவை புலப்பட்டன. Hermann Loos Challenge இல் தனது பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்ததுடன் பல்வேறு நிகழ்வுகளில் கடற் பிரிவிற்கு தலைமை தாங்கினார். மேலும் தேசிய மட்டத்தில் நன்கு அறியப்பட்ட கரப்பந்தாட்ட வீரராகவும் திகழ்ந்தார். மேலும் சட்ட பீடத்தில் கற்று வருகின்ற காலப் பகுதியில் மாணவர்களது நலனுக்காக பல முன்னெடுப்புகளை மேற்கொண்டதுடன் தனது மாணவ சபை உறுப்பினர்களுக்கு அவசியமான வழிகாட்டிகளையும் வழங்கி வந்தார்.

ஒரு சட்டத்தரணி என்ற முறையில் தொடர்ச்சியாக தலைமைத்துவப் பண்புகளை புலப்படுத்தியதுடன் தனது சட்ட வளாகத்தில் கிரிகெட் சகல துறை ஆட்டக்காரராகவும் திகழ்ந்தார். 2017-2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொவுட் லெவணியா சட்டத்தரணிகள் சங்கத்தின் உதவித் தலைவராகவும் பதவி வகித்தார். அத்தோடு கெனோவின் ஹொட்டேல்ஸ் அன்ட் ஸ்பாஸ் (பிரைவேட்) லிமிட்டெட். இன் தவிசாளராவார்.

6. திரு. ஆர்.ஏ. லக்மினி உதய குமார
பணிப்பாளர்

திரு. உதய குமார அவர்கள் நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சிகள் பிரிவில் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றார். பொது திறைசேரியில் 12 வருடங்களுக்கும் அதிகமான அனுபவங்களைக் கொண்டுள்ளதுடன் இக்காலப் பகுதியில் பிரதான அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் மேற்பார்வை செயற்பாடுகளில் காத்திரமாக ஈடுபட்டுள்ளார். பல்வேறு விதமான அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சிகளில் சபை உறுப்பினராக இவர் பணியாற்றியுள்ளதுடன் அவற்றுள் ஊழியர் நம்பிக்கை நிதியம், தென்னை ஆராய்ச்சி நிறுவகம், குருணாகல் பெருந்தோட்ட லிமிடட், இலங்கை கைவினைஞர் சங்கம், மேலும் பல குழுக்களும் உள்ளடங்கும். இவர் தற்சமயம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட், புத்தசாசன நிதியம், செலந்திவ முதலீடுகள் லிமிடட் ஆகியவற்றின் தற்போது சபை உறுப்பினராகவும் சேவையாற்றி வருகின்றார்.

இவர் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நிதி சார் முகாமைத்துவத்தில் பட்டப் படிப்பினை பெற்றுக் கொண்டுள்ளதுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதிசார் பொருளியலில் முதுநிலை பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக காணப்படுகின்றார். மேலும் வொஷிங்டன் டிசி இல் அமைந்துள்ள ஜோர்ஜ் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் முதலீட்டு சந்தைப்படுத்தல்கள் நிகழ்ச்சித்திட்டத்தை பூரணப்படுத்தியுள்ளதுடன் சர்வதேச நிதி கூட்டுத்தாபனத்தில் கட்டுறுப் பயில்வை மேற்கொண்டுள்ளதுடன் குறுகிய கால ஆலோசகராகவும் திகழ்ந்துள்ளார். மேலும் களனி பல்கலைக்கழகத்தில் வணிகத் துறையில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா ஒன்றினையும் பூரணப்படுத்தியுள்ளார்.

7. திரு. டப்ளியு.ஏ. சமந்த உபனந்த
பணிப்பாளர்

திரு. சமந்த உபனந்த அவர்கள் ஒரு பொது நிதி முகாமைத்துவ தொழில்வாண்மைமிக்கவராவார். பொதுத் துறையில் 28 வருட தொழில்வாண்மை அனுபவங்களைக் கொண்டவர். 1992 ஆம் ஆண்டில் இவர் அரசாங்க கணக்குகள் சேவையில் இணைந்து கொண்டார். பொது திறைசேரி உள்ளடங்கலாக பல்வேற வகையான அரசாங்க அமைப்புகளில் பணியாற்றியுள்ளார். மேலும் பொதுத் திறைசேரி, சனாதிபதி செயலகம், இலங்கை பாராளுமன்றம் ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார். 2021 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியன்று அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக தனது கடமைகளை ஏற்றுக் கொண்டார்.

திரு. சமந்த உபனந்த அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பட்டப் படிப்பொன்றினை (வியாபார நிருவாகம்) பெற்றுக் கொண்டதுடன் இரண்டாம் வகுப்பில் விசேட பட்டத்தினையும் பெற்றுக் கொண்டதோடு தகவல் தொழில்நுட்பத்தில் முதுநிலை பட்டம் ஒன்றினையும் பெற்றுக் கொண்டார் (MSC in IT). முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமை பூரணப்படுத்தியதுடன் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப் பின் டிப்ளோமா பொது நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா, மின் ஆராய்ச்சித் துறையில் டிப்ளோமா, முறையியல் பாதுகாப்பு கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வில் டிப்ளோமா (DISSCA) பெற்றுள்ளார். மேலும், ஐக்கிய இராச்சியத்தின் பொது நிதி மற்றும் கணக்குகள் நிறுவகத்தின் பட்டயக் கணக்காளர் பொது நிதி கணக்காளர் அமைப்பின் உறுப்பினராகவும் திரு. சமந்த உபனந்த காணப்பட்டார். இலங்கையின் சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் அமைப்பின் சக உறுப்பினராகவும் மற்றும் பொது நிதி மற்றும் அபிவிருத்தி கணக்காளர்கள் நிறுவகத்தின் சக உறுப்பினராகவும் காணப்படுகின்றார்.

தலைமைத்துவக் குழு

1. திரு. சந்தன அளுத்கம
பிரதம நிறைவேற்று அதிகாரி

திரு. அளுத்கமகே அவர்கள் 2018 ஆம் ஆண்டில் இலங்கை காப்புறுக் கூட்டுத்தாபன லிமிடட்டில் பிரதான நிறைவேற்று அதிகாரியாக தனது கடமைகளை பொறுப்பேற்றார். காப்புறுதித் துறையில் பல்வேறு வகையான பிரிவுகளில் 29 வருடங்களுக்கும் அதிகமான அனுபவங்கள் இவருக்கு உண்டு. தனது தொழில் வாழ்க்கையின் பொழுது பல அமைப்புகளில் சிரேஷ்ட பதவிகளை இவர் வகித்துள்ளார். அவற்றுள் ஈகல் இன்ஷூரன்ஸ் பீஎல்சி, எச்எனபி எஷ்ஷூரன்ஸ் பீஎல்சி என்பனவும் உள்ளடங்குகின்றன. காப்புறுதித் துறைக்கு வெளியிலேயும், தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல முக்கிய தலைமைத்துவ பதவிகளை இவர் வகித்துள்ளார். கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தில் பட்டப் பின் படிப்பு பிரிவில் அதிதி விரிவுரையாளராகவும் திரு. அளுத்கமகே அவர்கள் விரிவுரைகளை மேற்கொண்டிருக்கின்றார். மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாகத்தில் முதுநிலை பட்டமானிப் பட்டத்தைப் பெற்றவர். களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக பட்டமானியை பெற்றவர். மேலும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ நிறுவகத்தின் (FCMI) சக உறுப்பினராவர். காப்புறுதி மற்றும் வங்கி காப்பீடு தொடர்பில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஆய்வுப் பத்திரிகைகளை சமர்ப்பித்தவர். பொது காப்புறுதி AG. வியன்னா, அவுஸ்திரியா மற்றும் NUS வியாபார பாடசாலை, சிங்கப்பூர் உள்ளடங்கலாக தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் விரிவான பயிற்சிகளை பெற்றுக் கொண்டவர். இந்த நியமங்களைப் பெறுவதற்கு முன்னர் திரு. அளுத்கமகே அவர்கள் பிரதான வியாபார அதிகாரியாகவும், HNB பொதுக் காப்புறுதி நிறுவகத்தின் பிரதான அதிகாரியாகவும் செயற்பட்டுள்ளார். மேலும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பிரதான அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

2. திரு. ஆலோக ஜயவர்தன
பிரதம தகவல் அதிகாரி

திரு. ஆலோக ஜயவர்தன அவர்கள் தகவல் தொழில்நுட்பம், ERP ஆகியவற்றில் நிறைவேற்று அதிகாரியாவார். அத்தோடு கருத்திட்ட முகாமைத்துவ துறைகள் போன்றவற்றில் வியாபார பிரிவுகளான தொலைத் தொடர்பாடல்கள் மற்றும் உற்பத்தி, விற்பனை, விநியோகங்கள், மென்பொருள், மூலதன சந்தைகள் ஆகியவற்றில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவங்களைக் கொண்டிருப்பதுடன் 2020 ஆம் ஆண்டு முதல் கொழும்பு டொக் யார்ட் பீஎல்சி சபையில் காப்புறுதி மற்றும் சேவைகள் தொடர்பில் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயர்லாந்து டப்ளின் பல்கலைக்கழக கல்லூரியில் முகாமைத்துவம் தகவல் முறைகளில் தனது BSC பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அத்தோடு அவுஸ்திரேலிய ஸதர்ன் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவத்தில் முதுநிலை பட்டத்தை பெற்றவர். வியாபார முகாமைத்துவம் தொடர்பான தேசிய நிறுவகத்தில் கணினி கற்கைகளில் உயர் டிப்ளோமாவைப் பெற்றவர். அத்தோடு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தில் வியாபாரம் மற்றும் நிதி தொடர்பிலான பட்டப் பின் படிப்பு டிப்ளோமாவைப் பெற்றவராவார். ஐக்கிய அமெரிக்க கருத்திட்ட முகாமைத்துவ நிறுவகத்தில் இவர் ஓர் PMP சான்றுப்படுத்தப்பட்ட கருத்திட்ட முகாமையாளராவர். மற்றும் ஐக்கிய அமெரிக்க ISACA விடமிருந்து CISM சான்றுப்படுத்தப்பட்ட தகவல் பாதுகாப்பு முகாமையாளராகவும் திகழ்ந்தார்.

இவர் SAP சான்றுப்படுத்தப்பட்ட விற்பனை மற்றும் விநியோக ஆலோசகராவார். தற்சமயம் ஸ்ரீ லங்கா SAP user குழுவில் சபை உறுப்பினராக தற்சமயம் தனது பங்களிப்புகளை வழங்கி வருகின்றார். கருத்திட்டங்களுடன் தொடர்புபட்ட PMI கொழும்பு செப்டரின் உறுப்பினராவார். தகவல் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களில் ISACA இலங்கை உறுப்பினராவார்.

3. திரு. பிரியந்த பெரேரா
பிரதான அதிகாரி - பொதுக் காப்புறுதி

திரு. பிரியந்த அவர்கள் ஸ்ரீ லங்கா இன்ஷூரன்ஸின் பொதுக் காப்புறுதியின் பிரதான அதிகாரியாக 2021 செப்டெம்பர் 01 ஆம் திகதி இணைந்து கொண்டார். பொதுக் காப்புறுதித் துறையில் நீண்ட கால அனுபவமுடைய தொழில்வாண்மைமிக்கவராக காணப்படுகின்றார். இத்துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் காணப்படுகின்றது. 1985 ஆம் ஆண்டில் மேக்கன்டய்ல் கிரடிட் லிமிடட்டின் காப்புறுதிப் பிரிவில் தனது பணிகளை ஆரம்பித்தார். இந்தத் துறையின் பல்வேறு வகையான அமைப்புகளில் பல்வேறு பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்தவர். இவரது காத்திரமான தொழில் வாழ்க்கையின் பொழுது பல்வேறு விதமான சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்தவர். காப்புறுதி இடர் மதிப்பீட்டாளர், மீள் காப்புறுதி மற்றும் முதலீட்டுப் பட்டியல் முகாமைத்துவம் உள்ளடங்கலாக பல்வேறு விதமான சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை இவர் வகித்தவர். இகாகூ இல் இணைந்து கொள்வதற்கு முன்னர் குயுஜசுகுஜசுளுவு காப்புறுதி லிமிடட்டில் பிரதான தொழில்நுட்ப அதிகாரியாக பதவி வகித்தவர்.

இவர் ஒரு பட்டய காப்புறுதியாளராவார் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தில் அசோஸியேட் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டவர். ஐக்கிய இராச்சியத்திலுள்ள கார்டிப் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகத்தில் தனது ஆடீயு பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

4. திரு. தயாரத்ன பெரேரா
பதில் பிரதான அதிகாரி - ஆயுள்

திரு. தயாரத்ன அவர்கள் 1998 ஆம் ஆண்டில் சனசக்தி இன்ஷூரன்ஸில் தனது தொழிலை ஒரு முகாமைத்துவ பயிற்சியாளராக ஆரம்பித்தார். அவ் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது பட்டத்தைப் பெற்றதுடன் பௌதீக துறையில் விசேட பட்டம் ஒன்றினை இரண்டாம் வகுப்பு மேல் நிலையில் சித்தியெய்தினார் பிஎஸ்சி ஹொனர்ஸ் அப்பர் டிவிஷன். பட்டப் படிப்பை நிறைவு செய்ததன் பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக பணியாற்றினார். பின்னர் தனது சுய விருப்பத்தின் பேரில் அப்பதவியிலிருந்து விலகியதுடன் பெரு நிறுவனத் துறையில் இணைந்து கொண்டார்.

இவர் ஒரு பட்டயக் காப்புறுதியாளராக திகழ்வதுடன் பட்டயக் காப்புறுதி நிறுவகத்தின் லண்டன் சக உறுப்பினராகவும் இருக்கின்றார் (FCII). மேலும் அவுஸ்திரேலிய மற்றும் நிவுசிலாந்து காப்புறுதி நிறுவகத்தின் சக உறுப்பினராகவும் இருக்கின்றார் ANZIIF (Fellow) CIP. ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்திலுள்ள முகாமைத்துவத்திற்கான பட்டப் பின் படிப்பு நிறுவகத்தில் வியாபார முகாமைத்துவத்திற்கான முதுநிலை பட்டத்தினை (MBA) பெற்றுக் கொண்டார்.

இவர் தற்சமயம் சீபாங்க் அசெட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் நிறுவனத்தின். இன் நிறைவேற்று சாரா பணிப்பாளராக பணியாற்றுகின்றார். அத்தோடு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டின் குறிப்பிட்ட விடயங்களுக்கான அதிகாரியாகவும் பணியாற்றுகின்றார்.

ஸ்ரீ லங்கா காப்புறுதி அமைப்பின் (IASL) ஆயுட் காப்புறுதி ஒன்றியத்தின் தற்போதைய தவிசாளராகவும் பணியாற்றுகின்றார் (LIF).

5. திரு. மாலக பண்டார
பதில் பிரதான நிதி அதிகாரி

கணக்காய்வு மற்றும் நிதித் துறைகளில் திரு. பண்டார அவர்கள் 22 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டிருக்கின்றார். 2007 ஆம் ஆண்டில் ஒரு கணக்காளராக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் இணைந்து கொண்டார். அதன் பின்னர் உதவி பொது முகாமையாளர் - நிதி மற்றும் பிரதி பொது முகாமையாளர் - நிதி ஆகிய பதவிகளுக்கு முறையே 2012 ஆம் ஆண்டு மற்றும் 2018 ஆம் ஆண்டு ஆகியவற்றில் பதவி உயர்வு பெற்றார். 2021 ஆம் ஆண்டு நவம்பர் முதல் திரு. பண்டார அவர்கள் பதில் பிரதான நிதி அதிகாரியாக பணியாற்றி வருகின்றார்.

2017 – 2019 வரை திரு. பண்டார சீபாங்க் அசெட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் நிறுவனத்தின். இல் பணிப்பாளராக பணியாற்றினார். 2020 ஆம் ஆண்டு முதல் சீபாங்க் அசெட் மனேஜ்மன்ட் லிமிட்டெட் நிறுவனத்தின். இல் தவிசாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழத்திலிருந்து கணக்கீடுகளுக்கான BSC பட்டத்தைப் பெற்றுக் கொண்டதுடன் வியாபார நிருவாகத்திற்கான முதுநிலை பட்டத்தையும் பெற்றுள்ளார். இதனை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் சக உறுப்பினராக திகழும் இவர் தனது ஆரம்ப கால தொழில் சார்ந்த அனுபவங்களை நன்மதிப்புடைய கணக்காய்வு நிறுவனமான M/s. Ernst & Young இடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தலைமைத்துவக் குழு

1. திரு. சுரேஷ் பரணவிதான
பிரதான அதிகாரி - ஆயுட் காப்புறுதி
FCII, MBA, DipM, FCIM, MI Mgt, CMA (Aus)
(11.05.2021 முதல் ஓய்வு)

2. திருமதி. ருஅன்தி குணரத்ன
பிரதான அதிகாரி - பொது காப்புறுதி
FCII (UK), Chartered Insurer
(16.06.2021 முதல் இராஜினாமா செய்துள்ளார்)

3. திருமதி. மாலினீ தென்னகோன்
பிரதான நிதி அதிகாரி
MBA, FCA (SL), CPA (Aus), CIMA (UK)
(24.11.2021 முதல் ஓய்வு)

4. திரு. ருக்மன் வீரரட்ன
பிரதான அதிகாரி - வியாபார அபிவிருத்தி
ACIM
(01.09.2021 முதல் ஓய்வு)

பிரதி பொது முகாமையாளர்கள்

1. திருமதி. தனுஜா ஹிங்குலகே
பிரதி பொது முகாமையாளர் - பொதுக் காப்புறுதி
BSc (Hons), FCII (UK), Chartered Insurer, ANZIIF (Fellow) CIP
(31.08.2021 முதல் இராஜினாமா செய்துள்ளார்)

2. திருமதி. பி.ஏ. ருவனி தர்மவர்தன
பிரதி பொது முகாமையாளர் - இணக்கம் மற்றும் இடர்
LLB (Hons), Attorney-at-Law, MBA (UK), ACISI (UK)

3. வைத்தியர் (திருமதி.) சரீகா பர்ணாந்து
பிரதி பொது முகாமையாளர் - மருத்துவம்
MBBS (SL), MSc -சமுதாய மருத்துவம் (SL), ACII (UK), MRCGP (INT) (UK)

4. திரு. லலித் த சில்வா
விநியோகம் - பொது தலைவர்
நிதி மற்றும் பஸ் முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்புஇ MBA

5. திரு. ரோஹித அமரபால
பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் மற்றும் ஊழியர் உறவுகள்
CIPM பட்டய சக உறுப்பினர், FCMI
(UK), MBA (வெஸ்டர்ன் பல்கலைக்கழகம்
சிட்னி, அவுஸ்திரேலியா)

6. திருமதி. நாமலீ ஏ சில்வா
பிரதி பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் (ஆயுட் காப்புறுதி)
MCIM (UK), பட்டய சந்தைப்படுத்தநர்இ பேராசிரியர் சந்தைப்படுத்தல் டிப்ளோமா - CIM, ACIB (UK), MBA

7. திருமதி. சமிந்த குணசிங்க
பிரதி பொது முகாமையாளர் - நிருவாகம்
BB Mgt (கணக்கியல்) Sp (Hons), FCA, ACMA, MBA – நிதிஇ (கொழும்பு)

8. திரு. சரத் பர்ணாந்து
பிரதி பொது முகாமையாளர் - மோட்டார்
BSc Eng (இயந்திரவியல்) Sp, AMIE (இலங்கை)

தலைமைத்துவக் குழு

உதவி பொது முகாமையாளர்கள்

1. திரு. சமிந்த அதாஉட
உதவி பொது முகாமையாளர் - ஆயுள் (தொழில்நுட்பம்)
BSc (Hons), FCII, AIII, ANZIIF (Fellow) CIP, MBA (கொழும்பு), பட்டயக் காப்புறுதியாளர்

2. திரு. ரொஷான் கொலஸ்
உதவி பொது முகாமையாளர் - வங்கி காப்பீடு, மாற்றீட்டு விநியோகம் மற்றும் வியாபாரம் தங்க வைத்தல் (GI)
MBA, CMA (Aus), (அவுஸ்திரேலியா)இ சந்தைப்படுத்தல் டிப்ளோமா (SLIM), MSLIM, FCPM, MIM (இலங்கை)

3. திரு. மஹேந்திர சில்வா
உதவி பொது முகாமையாளர் - நிருவாகம்
சட்டத்தரணி, LLB (இலங்கை), மனித வள முகாமைத்துவத்தில் MBA (திறந்த பல்கலைக்கழகம்), மனித வள முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பு, NDES, MIIE (இலங்கை), IENG, AMCIPM (இலங்கை)

4. திரு. சுதத் நிஷாந்த*
உதவி பொது முகாமையாளர் - தேசிய விநியோகம் - ஆயுள் காப்புறுதி
MLRHRM (கொழும்பு பல்கலைக்கழகம்), தொழில் உறவுகள் மற்றும் மனித உரிமை முகாமைத்துவத்தில் டிப்ளோமாஇ BSc. (B/நிருவாகம்.) (Sp.), LIMRA (USA), AMTC [USA], MIM (இலங்கை)

5. திரு. பிரியவன்ச தேசப்பிரிய
உள்ளக கணக்காய்வுத் தலைவர்
FCA, BCom (Sp), FCMA

6. திரு. ஜகத் வெல்கம
உதவி பொது முகாமையாளர் - விற்பனை உதவி மற்றும் முகவர் நிருவாகம்
MBA, MABE (UK), GD in Mgt. (Aus), PG Dip. – Mkt Mgt (USJP), Ad. Dip in Mkt. Mgt. (USJP), Dip. in Mass Com. (USJP), Dip. in NIT, Licentiate – III, MSLIM

7. திரு. ஜீவன்த வெலிஹிந்த
உதவி பொது முகாமையாளர் - பொறியியல் சேவைகள்
BSc (Eng)

8. திரு. சதிக விக்ரமசிங்க
உதவி பொது முகாமையாளர
BSc (Hons) – MMU (UK), MBA (Cardiff), MBCS

*திரு. நிஷாந்த அவர்கள், 2022 மே 31 வரை விநியோகப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டார்.

உதவி பொது முகாமையாளர்கள்

9. திருமதி. மதுபாசினி பெக்மதெனிய
உதவி பொது முகாமையாளர் - சட்டம்
சட்டத்தரணி, MBA (PIM), (SJPJ), NDHRM (IPM)

10. திருமதி. நதீர குணவர்தன
உதவி பொது முகாமையாளர் - மோட்டார் சாராத காப்புறுதி
(PIM/கெம்பரா பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா), FIII, Sp Dip in Marine (lll), ACII (UK), பட்டயக் காப்புறுதியாளர்

11. திரு. சசிக ரணசிங்க
உதவி பொது முகாமையாளர் - முதலீடுகள்
CFA (USA), FRM (USA), BSc (Hons) பொறியியல்இ ACMA (ருமு), AIB (இலங்கை)

12. திரு. மஹேஷ் கமகே
உதவி பொது முகாமையாளர் - வகை சந்தைப்படுத்தல் (பொதுக் காப்புறுதி)
MBA (AUS), CMA (AUS), PG. Dip. M (இலங்கை), MSLIM, CPM (ASIA)

13. திரு. ஜே.ஏ.டி. கசுன் சமீர
உதவி பொது முகாமையாளர் - வகை சந்தைப்படுத்தல் (ஆயுட் காப்புறுதி)
பட்டய சந்தைப்படுத்துநர்இ சந்தைப்படுத்தலில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா (CIM, UK), CPM (Asia Pacific), MCIM, முகாமைத்துவத்தில் பட்டப் பின் படிப்பு டிப்ளோமா (UoW UK), MBA (UWTSD, UK)

14. திருமதி. டப்ளியு. சிரியானி குலசிங்க
உதவி பொது முகாமையாளர் - நிதி
FCA, ACMA, MBA-நிதி (கொழும்பு), B.Com (Hons.) Sp. (01.08.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

தலைமைத்துவக் குழு

சிரேஷ்ட முகாமையாளர்கள

1. திரு. டப்ளியு.டி.சி. விதானகே
சிரேஷ்ட முகாமையாளர் - தலைமை அலுவலகம் வியாபார அபிவிருத்தி

2. திரு. எஸ்.பீ.ஏ. ரொட்ரிகோ
சிரேஷ்ட முகாமையாளர் - பாதுகாப்பு மற்றும் முதலீடு

3. திரு. கே.ஜீ.டி.ஜீ. கந்தேகம
சிரேஷ்ட முகாமையாளர் - தகவல் தொழில்நுட்ப தரவு நிலையம்

4. திரு. டி.பீ.ஜே.எஸ். மைத்திரிரட்ன
சிரேஷ்ட முகாமையாளர் - மரணம்

5. திரு. என்.ஜீ.கே. பண்டார
சிரேஷ்ட பிராந்திய பொறியியலாளர்

6. திரு. ஆர்.எம்.ஏ.கே. ராஜபக்ஷ
சிரேஷ்ட பிராந்திய பொறியியலாளர்

7. திரு. எம்.டி. சந்திரம்
சிரேஷ்ட முகாமையாளர் - கூட்டுறவு வியாபார அபிவிருத்தி

8. திரு. எம்.பீ.என். குமார
சிரேஷ்ட முகாமையாளர் - கழக உறுப்பினர்கள் வியாபார திணைக்களம்

9. திரு. டி.என்.கே. நாரன்கம்மன
சிரேஷ்ட முகாமையாளர் - முகவர் ஆட்சேர்ப்பு

10. திரு. எல்.எச்.ஏ.எஸ். சிறிமான்ன
சிரேஷ்ட முகாமையாளர் - வியாபாரம் தேங்கி வைத்தல்

11. திரு. ஆர்.என். சேனாதீர
பிரதி பிரதான மோட்டார் பொறியியலாளர்

12. திருமதி. எம்.டி. அத்தநாயக
சிரேஷ்ட முகாமையாளர் - சட்டம் (ஆயுள்)

சிரேஷ்ட முகாமையாளர்கள்

13. திரு. பீ.ஏ.எம்.பீ.டப்ளியு. குணதிலக
சிரேஷ்ட முகாமையாளர் - வலையமைப்பு மற்றும் தொடர்பாடல்

14. திரு. எம்.ஜே.எஸ். தபேரெரா
சிரேஷ்ட முகாமையாளர் - வங்கி காப்பீடு (ஆயுட் காப்புறுதி)

15. திருமதி. ஜி.கே.எம்.எஸ். நாணயக்கார
சிரேஷ்ட முகாமையாளர் - ஆயுட் காப்புறுதி

16. திரு. ஜி.டப்ளியு.ஆர்.சி. த சில்வா
சிரேஷ்ட முகாமையாளர் - ஆயுட் காப்புறுதி

17. திருமதி. என்.டி.கே.எம். ஜயதிலக
சிரேஷ்ட முகாமையாளர் - சட்டம் (வழக்குத் தொடுத்தல்)

18. திருமதி. டப்ளியு.டி.ரீ. டெப்
சிரேஷ்ட முகாமையாளர் – SHE & PA

19. திரு. ஜே.எஸ். ஜயவர்தன
சிரேஷ்ட முகாமையாளர் - மனித வளம்

20. திரு. பீ.என்.ஏ. தர்மசேன
சிரேஷ்ட முகாமையாளர் - ஆயுள் காப்புறுதி

21. திருமதி. பி.எச்.என்.கே.கே. பெரேரா
சிரேஷ்ட முகாமையாளர் - ஆயுள் காப்புறுதி

22. திரு. கே.ஏ.எஸ். ரணதுங்க
சிரேஷ்ட முகாமையாளர் - மீள் காப்புறுதி

23. திரு. ஏ.யு. ராஜபக்ஷ
சிரேஷ்ட முகாமையாளர் - நிதி தொழிற்பாடுகள்

24. திரு. பி.சி.எஸ். பெரேரா
சிரேஷ்ட முகாமையாளர் - தீ மற்றும் பொறியியல் கோரிக்கைகள்

தலைமைத்துவக் குழு

சிரேஷ்ட முகாமையாளர்கள்

25. திரு. ஆர்சி.ரீ. த லிவேரா
சிரேஷ்ட இடர் பொறியியலாளர்

26. திரு. ஜே.எம்.கே.சி.கே.எல். ஜயசிங்க
சிரேஷ்ட முகாமையாளர் - மோட்டார் கோரிக்கைகள்

27. திருமதி. கே.வி.என். நோநிஸ்
சிரேஷ்ட முகாமையாளர் - மோட்டார் காப்புறுதி இடர் மதிப்பீட்டாளர்

28. திரு. ஏ.எச்.எஸ். அபேகுணவர்தன
சிரேஷ்ட முகாமையாளர் - விசேட கருத்திட்டங்கள்

29. திரு. கே.கே.ஏ.பீ. மாபலகம
ஆலோசகர் - புலனாய்வு

30. திருமதி. எஸ்.ஜே.பீ. ஹெட்டிஆரச்சி
சிரேஷ்ட முகாமையாளர் - மென்பொருள் அபிவிருத்தி (ஆயுட் காப்புறுதி)

31. திருமதி. ஓ.எம். இந்திராணி
சிரேஷ்ட முகாமையாளர் - மென்பொருள் அபிவிருத்தி (பொது)

32. திரு. டப்ளியு.ஏ.டி. குணவர்தன
சிரேஷ்ட மோட்டார் பொறியியலாளர்

33. திரு. டப்ளியு.ஏ.டி.எம். வீரக்கொடி
சிரேஷ்ட முகாமையாளர் - விநியோக தொழிற்பாடு (ஆளணியினர் - பொது)

34. திருமதி. எம்.ஆர். குணசேகர
சிரேஷ்ட முகாமையாளர் - கடல் சார்ந்தவை (01.07.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

35. திரு. எல்.ஏ.பீ. பீரிஸ்
சிரேஷ்ட முகாமையாளர் - கொழும்பு வட்ட கூட்டுறவுப் பிரிவு (02.08.2021 இல் செல்லுபடியாகும் வகையில நியமிக்கப்பட்டார்)

36. திரு. டி.எம்.ஜே.பீ.
சிரேஷ்ட முகாமையாளர்- ஆளுஐ (ஐஊவு) (01.11.2021 இல் செல்லுபடியாகும் வகையில நியமிக்கப்பட்டார்)

சிரேஷ்ட முகாமையாளர்கள்

37. திரு. வி.எஸ்.எல். புலத்சிங்கள
சிரேஷ்ட முகாமையாளர் - பொது காப்புறுதி வியாபாரங்கள் பயிற்சி (01.12.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

பிராந்திய முகாமையாளர்கள

1. திரு. பண்டார வீரசூரிய
வடமேல் - 1

2. திரு. சனத் பர்ணாந்து
மேல் மாகாணம் (மேல் பகுதி)

3. திரு. தீபால் நவகமுவ
மேல் மாகாணம் - 2

4. திரு. ரீ.டி.பீ. பீரிஸ்
தென் மாகாணம் - 1

5. திரு. யு.ஜி.யு.ஆர். குமார
மேல் மாகாணம் - 1

6. திரு. டப்ளியு.எம்.ஏ.யு. குலசேன
இரத்தினபுரி

7. திரு. ஆர். ஹேவாபதிரனகே
மேல் மாகாணம் - 3

8. திரு. என்.கே.எஸ்.எஸ். குமார
தென் மாகாணம் - 2

தலைமைத்துவக் குழு

பிராந்திய முகாமையாளர்கள்

9. திரு. பீ. சத்தியன்
வடக்கு

10. திரு. எச்.ஜே.எஸ். மெண்டிஸ்
தென் மாகாணம் - 1

11. திரு. கெலும் ஜயசிங்க
ஊவா

12. திரு. சமந்த பீரிஸ்
மேல் மாகாணம் - 1

13. திரு. ஏ.எம்.எச். அதிகாரி
மத்திய மாகாணம் - 1

14. திரு. காமினி சரத்சந்திர
மத்திய மாகாணம் - 2

15. திரு. தம்மிக பண்டார
ஊவா

16. திரு. அஜித் திலகரட்ன
வடமத்திய மாகாணம் - 2

17. திரு. மஹிந்த திசாநாயக்க
வடமேல் - 1

18. திரு. பீ. புவெனேந்திரன்
கிழக்கு

19. திரு. நாமல் லியனகே
மேல் மாகாணம் (மேல் பகுதி)

20. திரு. ஆர். லிங்கேச்வரன்
கிழக்கு

பிராந்திய முகாமையாளர்கள்

21. திரு. டி.எம்.எஸ். திசாநாயக
இரத்தினபுரி

22. திருமதி. என்.எஸ்.எஸ். லக்சானா
மேல் மாகாணம் - 4
(01.10.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

23. திரு. டி.எம்.யு.பி. திசாநாயக
தென் மாகாணம் - 2
(01.10.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

24. திரு. பி.எம்.ஏ. பஸ்நாயக
வடமேல் மாகாணம் - 2
(01.10.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

25. திரு. ஈ.கே.எஸ். சேனாதீர
மேல் மாகாணம் - 2
(01.10.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

26. திரு. பீ.பீ.பீ.எஸ். குமார
வடமேல் மாகாணம் - 2
(01.10.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

27. திரு. டப்ளியு.எஸ்.ஐ. வெல்கம
வடமத்திய மாகாணம்
(15.04.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

28. திரு. எஸ். கர்ணன்
வட மாகாணம்
(02.05.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)

இகாகூ குழு கட்டமைப்பு

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்

லங்கா வைத்தியசாலைகள் கூட்டுத்தாபனம் பீஎல்சி

51.34%

லங்கா வைத்தியசாலையின் மிகப் பெரிய பங்காளராக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் காணப்படுகின்றது. இது 51.34% பங்குகளைக் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குகின்ற பொது கம்பனியாக லங்கா வைத்தியசாலைகள் காணப்படுகின்றன.

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்

99.94%

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்டின் முதன்மை பங்காளராக இகாகூ காணப்படுகின்றது. 99.94% பங்குகளை இது கொண்டுள்ளது. இலங்கையில் திரவ பெற்றோலிய வாயுவை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற முன்னணி நிறுவனமாக லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் காணப்படுகின்றது.

லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்

100%

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக சொந்தமான துணைக் கம்பனியாக லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட் காணப்படுகின்றது. வீடு, வர்த்தகம் மற்றும் மொத்த வாடிக்கையாளர்களுக்கான திரவ பெற்றோலிய வாயுவினை களஞ்சியப்படுத்தல் தொடர்பில் செயற்படுகின்றது.

லங்கா வைத்தியசாலைகள் நோய் கண்டறிதல் பிரைவட் லிமிடட்

100%

கெனோவின் ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பார்ஸ் பிரைவட் லிமிடட்

100%

இது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முழுமையாக சொந்தமான துணைக் கம்பனியாகும். தெற்கு அதிவேக பாதையை பயன்படுத்துகின்ற பயணிகளுக்கு பல்வேறு வகையான சேவைகளை வழங்குகின்ற தெற்கு அதிவேக பாதையில் காணப்படுகின்ற ஓய்வெடுத்தல் வசதிகளை முகாமைத்துவம் செய்வதுடன் அந்த இடம் கம்பனிக்கு சொந்தமானதாகும்.

கெனோவில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்

52.05%

கெனோவில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடடில் இகாகூ இற்கு 52.05% பங்குகள் காணப்படுகின்றன. ஹோட்டல் கருத்திட்டங்களை முகாமைத்துவம் செய்தல், முதலீடு செய்தல் தொடர்பான வியாபாரங்களை இது மேற்கொள்கின்றது.

முகாமைத்துவ சேவைகள் ரக்ஷானா பிரைவட் லிமிடட்

100%

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு சம்பள முகாமைத்துவம் தொடர்பான சேவைகளை வழங்குவதற்காக முழுமையான சொந்தமான துணை கம்பனியாக முகாமைத்துவ சேவைகள் ரக்ஷானா தாபிக்கப்பட்டது. வெளிநிலை சந்தை அல்லது வெளிநிலை தரப்புகளுக்கு ஏதாவது சேவைகள் அல்லது உற்பத்திப் பொருட்களை வழங்குவது தொடர்பான ஏற்பாடுகளில் இது ஈடுபடுவதில்லை.

சினோலங்கா ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட்

100%

ஹெலன்கோ ஹோட்டல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட்

100%

நிதிசார் முக்கிய விடயங்கள்

	2021 ரூபாய் மில்.	2020 ரூபாய் மில்.
வருடத்திற்கான பெறுபேறுகள்		
மொத்த வருமானம்	64,062	52,614
மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	43,231	39,421
தேறிய ஈட்டப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	38,397	34,206
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	25,665	18,408
வரிக்கு முன்னரான இலாபம்	11,725	7,972
வரிக்கு பின்னரான இலாபம்	10,041	5,789
நன்மைகள்., கோரிப் பெறல்கள், தொழிற்பாடு, நிருவாகம் மற்றும் ஏனைய செலவுகள்	33,487	28,524
பொதுக் காப்புறுதி		
பொதுக் காப்புறுதி நிதியம்	20,880	18,866
தேறிய கோரிப் பெறல் வீதம் (%)	60	51
செலவு வீதம் (%)	35	37
ஆயுட் காப்புறுதி		
ஆயுட் காப்புறுதி நிதியம்	152,585	134,014
செலவு வீதம் (%)	34	37
முகப் பெறுமதி போனஸ்	9,836	8,694

மொத்த சொத்துக்கள்

ரூபா. 268,436 மில். (2021)

ரூபா. 235,630 மில். (2020)

பிட்ச் மதிப்பீடுகள்

AA(lka)

பிரகடனப்படுத்தப்பட்ட போனஸ்

ரூபா. 9,836 மில். (2021)

ரூபா. 8,694 மில். (2020)

வரிக்கு முன்னரான இலாபம்

ரூபா. 11,725 மில். (2021)

ரூபா. 7,972 மில். (2020)

ஆயுள் நிதி

ரூபா. 152,585 மில். (2021)

ரூபா. 134,014 மில். (2020)

மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்

ரூபா. 43,231 மில். (2021)

ரூபா. 39,421 மில். (2020)

மொத்த வருமானம்

ரூபா. 64,062 மில். (2021)

ரூபா. 52,614 மில். (2020)

நிதிசாராத முக்கிய விடயங்கள் 2021

- பொது காப்புறுதி துறையில் சந்தைப்படுத்தல் முன்னணியாளராக வளர்ந்து வந்தமை
- மோட்டார் பிளஸ் - மோட்டார் காப்புறுதித் துறையின் சந்தை முன்னணியாளர்
- இலங்கையில் வேலை செய்வதற்கு சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டமை
- மிகவும் நேசிக்கப்படும் காப்புறுதி பெயர் நாமம் என்ற விருது கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டமை.
- பிரேன்ட் பைனேன்ஸினால் அடுத்தடுத்து 04 வருடங்களாக மிகவும் பெறுமதியான பொதுக் காப்புறுதி என்ற விருது வழங்கப்பட்டமை
- மிகவும் பெறுமதியான பெயர் நாமம் குறியீட்டுடன் கூடிய அதிகூடிய பெயர் நாம் வளர்ச்சி ஆயுளில் பதிவு செய்யப்பட்டமை
- 2021 மில்லியன் டொலர் வட்ட மேசை (MDRT) மாநாட்டிற்காக 05 டொப் ஒப் த டேபிள் (TOT) ஒரு 1 TOT உறுப்பினர் உள்ளடங்கலாக 187 MDRT உறுப்பினர்களை உருவாக்கியமை
- தேசிய வர்த்தக சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2021 17வது நிகழ்வில் காப்புறுதி வகைகளின் கீழ் 2ஆம் இடம் வழங்கப்பட்டது.
- அடுத்து நீண்ட கால நிதி நிலைபேறு தன்மை தொடர்பில் AA(lka) பிட்ச் மதிப்பீட்டினை பெற்றுக் கொண்டமை
- வரையறுக்கப்பட்ட மெசர்ஸ் எஸ்ஜீஎஸ் லங்கா (தனியார்) நிறுவனம் இனால் நன்மதிப்புமிக்க ISO 9001:2015 முகாமைத்துவ முறை தராதரத்திற்கு ஏற்ப இகாகூ இற்கு சான்றிதழ் வழங்கப்பட்டமை
- 2021 ஆம் ஆண்டு முதல் 02 பிரிக்கப்பட்ட அர்ப்பணிப்புமிக்க உபாயரீதியான வியாபார கவனக் குறிப்பு (ஆயுள் மற்றும் பொது)
- கூட்டுறவு திட்டத்தின் மூலம் பெறுமதி சேர்த்தல்கள்
- 38 ABDCs ஐ ஆரம்பித்தமை

தலைமைத்துவ மீளாய்வுகள்

30 - தவிசாளரின் செய்தி

33 - பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

WITH/N

குழுச்

எம்முள் குழுச் செயற்பாட்டினை நாம் தேடியதுடன் முன்னேற்றகரமான வருடத்தினை உருவாக்குவதற்கான மனோதிடம்

தலைவரின் செய்தி

“பல கம்பனிகள் முன்னோக்கிச் செல்வதற்கு சிரமப்படுகின்ற இந்த தருணத்தில், அறிக்கையிடும் காலப் பகுதியில் உங்கள் கம்பனியான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது சிறப்பான செயலாற்றுகைகளை மேற்கொண்டுள்ளது. வரிக்கு பின்னரான இலாபம் 73.5% வளர்ச்சியாகும் மற்றும் 2020குழு உடன் ஒப்பிடுகையில் வருமானம் தொடர்பான வளர்ச்சி 21.7% ஆகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட சாதகமான செயலாற்றுகைகளின் அடிப்படையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது காப்புறுதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர்களுக்கு போனஸ் தொகையாக 9.8 பில்லியனை பிரகடனப்படுத்தியது”

வரிக்கு பின்னரான இலாபம் 2020 நிவ

வருமானம் தொடர்பான வளர்ச்சி 2020 நிவ



அன்பார்ந்த பங்காளர்களே,

2021 டிசம்பர் 31 இல் முடிவடையும் நிதி ஆண்டிற்கான இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையை உங்களுடன் பகிர்ந்து கொள்வதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். பல கம்பனிகள் முன்னோக்கிச் செல்வதற்கு சிரமப்படுகின்ற இந்த தருணத்தில், அறிக்கையிடும் காலப் பகுதியில் உங்கள் கம்பனியான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது சிறப்பான செயலாற்றுகைகளை மேற்கொண்டுள்ளது. வரிக்கு பின்னரான இலாபம் 73.5% வளர்ச்சியாகும் மற்றும் 2020குலு உடன் ஒப்பிடுகையில் வருமானம் தொடர்பான வளர்ச்சி 21.7% ஆகும். இங்கு மேற்கொள்ளப்பட்ட சாதகமான செயலாற்றுகைகளின் அடிப்படையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது காப்புறுதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர்களுக்கு போனஸ் தொகையாக 9.8 பில்லியனை பிரகடனப்படுத்தியது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்த வரையில் 2021 ஆம் வருடமானது சவால்மிக்கதும் வாக்குறுதிமிக்கதாகவும் காணப்பட்டது. இயங்காற்றல்மிக்க வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு மற்றும் சந்தை தேவைகள் ஆகியவற்றிற்கு உகந்த முறையில் மீள் உபாய முறைக்கு உட்படுத்தி மற்றும் எமது வியாபாரங்களை மீள் ஒழுங்குபடுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கக்கூடிய வருடமாக நிரூபனமாகியது. கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அதனால் கிடைத்த அனுபவங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் ஆகியன புதிய சாதரண முறைகள் மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளுதல் ஆகியவற்றிற்கு ஏற்றவகையில் எமது முயற்சிகளை மேற்கொள்வதற்கு செலுமைப்படுத்தியது.

நாம் 60 வருட சிறப்புத் தேர்ச்சிகளை கொண்டாடுகின்ற மற்றும் மாற்றம்மிக்க காலப்பகுதியொன்றில் அடியெடுத்து வைக்கின்ற தருணத்தில், நாட்டின் நம்பிக்கைமிக்க காப்புறுதி நிறுவனம் என்ற எமது வரலாற்றை தொடர்ந்து பேணி வருகின்றோம்.

அடைவுகள் மற்றும் செயலாற்றுகை

கடந்த வருடமானது எமது சேவைகளை மேலும் விரிவாக்குவதற்கான பல்வேறு வகையான சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஆகியவற்றை ஏற்படுத்தியது. மேலும் தேசத்தை பாதுகாக்கின்றவர்கள் என்ற முறையில் எமது கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளையும் வழங்கியது. நாம் தொடர்ச்சியாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை பாதுகாப்பதற்கு தொடர்ச்சியாக பங்களிப்புகளை வழங்கினோம். மேலும் இலங்கையின் முன்னணி காப்புறுதியாளர் என்ற முறையில் இந்த நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு உறுதி பூண்டோம்.
பல தலைமுறைகளாக எம்மீது வைக்கப்பட்ட நம்பிக்கை மிகப் பெரிய மற்றும் உறுதியான காப்புறுதி நிறுவனம் என்ற முறையில் எமது சகல வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதிகளை சேர்க்கின்ற அதேவேளை சிறப்பான உயரத்தை அடைவதற்கான விடயங்களும் வளர்ந்து வருகின்றன.

நாட்டில் காணப்பட்ட கடுமையான பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் எவ்வாறு காணப்பட்ட பொழுதிலும் கூட இலங்கை காப்புறுதியின் சொத்துக்கள் ரூபாய் 2,268 பில்லியனினால் அதிகரித்தது. ஆயுள் காப்புறுதி நிதியம் 152 பில்லியனால் அதிகரித்தது. நாட்டின் மிகப் பெரிய மற்றும் உறுதியான காப்புறுதி நிறுவனம் என்ற எமது நிலையை பேண முடிந்தது.

நாட்டில் தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைமைகளின் காரணமாக ஏனைய உள்ளூர் காப்புறுதி நிறுவனங்கள் எதிர்மறையான விடயங்களை அனுபவித்த பொழுதிலும் கூட இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தினால் AA(lka) பிட்ச் மதிப்பீட்டில் நீண்ட கால நிதி நிலைபேறு தன்மையை பேண முடிந்தது. இகாகூ மாத்திரமே AA(lka) தரப்படுத்தப்பட்ட சான்றிதழையுடைய ஒரே ஒரு காப்புறுதி நிறுவனமாகும்.

பிரேன்ட் பைனேன்ஸினால் தொடர்ச்சியாக 04 வருடங்கள் “மிகவும் பெறுமதியான பொது காப்புறுதி பெயர் நாமம்” மற்றும் “மிகவும் நேசிக்கப்பட்ட காப்புறுதி பெயர் நாமம்” ஆகியவற்றை இகாகூ இனால் பெற்றுக் கொள்ள முடிந்தது. பல வருடங்களாக நாம் மேற்கொண்டு வருகின்ற மக்கள் நேய அனுகுமுறையை இது உறுதிப்படுத்துகின்றது.

2001 ஆம் ஆண்டில் எமது கம்பனியானது ஆயுட் காப்புறுதி காப்பீட்டு கட்டணத்தில் 14.1% வளர்ச்சியை கண்டது. இதன் பெறுமதி 21.9 பில்லியன் ஆகும். கடந்த காலத்தில் இது 19.3 பில்லியனாக காணப்பட்டது. இலங்கை காப்புறுதியே நாட்டில் முதலாவது பொது காப்புறுதி வழங்குநராகும். 5.4% காப்பீட்டுக் கட்டண வளர்ச்சி பதிவு செய்ததுடன் பொது காப்புறுதி துறையில் ரூபாய் 21.2 பில்லியன்

தலைவரின் செய்தி

அதிகரித்துக் காணப்பட்டது.

சாதகமான செயலாற்றுகைகள் தொடர்கின்ற அதேவேளை கடந்த காலத்தை விட தனது வாடிக்கையாளர்களுக்கு அதிகமான போனஸ் தொகையை அதாவது ரூபாய் 9.8 பில்லியனைப் பிரகடனப்படுத்தியது. கூட்டிணைந்த ஆயுட் கால காப்புறுதி போனஸ தானது கடந்த 10 வருடங்களாக செலுத்தப்பட்டு வருகின்றது. இது ரூபாய் 66 பில்லியன் பாரிய தொகையாகும், இகாகூ இன் போனஸ் கொடுப்பனவானது நிகரற்ற அளவில் பெரிதாக காணப்படுகின்றது.

பராமரிப்புடன் கூடிய பாதுகாப்பு

உற்பத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி முன்னெடுப்புகள் மூலம் மற்றும் நடைமுறை சார்ந்த, தாங்கக்கூடிய காப்புறுதி தீர்வுகள் மூலம் சமுதாயங்கள், தனி நபர்கள், தொழில்வாண்மைமிக்கவர்கள், கைத்தொழிற்துறைகள் ஆகியவற்றிற்கு பாதுகாப்பினை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை இகாகூ தொடர்ந்து கண்டறிந்து வருகின்றது. 201 கிளை அலுவலகங்கள், வாடிக்கையாளர் சேவை இடங்கள், 8000 உறுதியான வலையமைப்பு சேவைகள் ஆகியன எமது விரிவான கிளை வலையமைப்பின் பலங்கள் ஆகும். இவற்றின் மூலம் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு பாதுகாப்பினை வழங்குவதற்கு நாம் காப்புறுதிக்கு வழங்கப்பட்ட ஆணைக்கு அப்பால் மக்கள் நலனுக்காக சேவையாற்றி வருகின்றோம்.

வருட காலப் பகுதியின் பொழுது நெகிழ்வுத் தன்மை மற்றும் ஏற்றுக் கொள்ளல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு முதலிடம் வழங்கப்பட்டது. இலங்கை வாடிக்கையாளர்களது பல்வேறு விதமான தேவைகளை கருத்திற் கொண்டு இகாகூ ஆனது பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்தது. அதன் பிரகாரம் பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களை நாம் அடையாளம் கண்டோம். மாறுபடுகின்ற வாடிக்கையாளர் தேவைகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் உபாய ரீதியான மாற்றங்கள் அவசியப்படுகின்ற பல்வேறு விதமான உற்பத்திகளை நாம் இனங் கண்டோம். ஆயுட் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி துறைகளில் பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்கள் மீள் உபாயமுறைக்கும் நவீனமயப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டன. புதிய உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்தியதற்கு மேலதிகமாக இலங்கை கல்வித் துறையை செலுமைபடுத்துவதற்காக இகாகூ கருத்திட்டங்களை நடத்தியது.

வருட காலப் பகுதியின் பொழுது இது தொடர்பான முதல் நிகழ்வாக மதகுருமார்களுக்காக உருவாக்கப்பட்ட மருத்துவ காப்புறுதி காப்பீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இகாகூ இன் சகல கிளைகளிலும் இது காணப்படுவதுடன் பொது மக்களினால் இதனை கொள்வனவு செய்து "பிரிகார" என்ற முறையில் கையளிக்க முடியும். சிறிய மற்றும் மத்திய தொழில்முயற்சியாளர்களின் வளர்ச்சிக்கு உதவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்யக்கூடியதாக காணப்பட்டது. இவற்றுள் தற்போது காணப்படுகின்ற காப்புறுதி உற்பத்திகளை மீள் நிலைப்படுத்தல் மற்றும் சிறிய மற்றும் மத்திய தொழில்முயற்சியாளர்கள் பயன்படுத்தப்படுகின்ற வர்த்தக ரீதியான வாகனங்களுக்காக மோட்டார் காப்புறுதி காப்பீட்டு பத்திரத்தை ஆரம்பித்து வைத்தமை.

டிஜிட்டல் சார் முறைகளின் பயன்பாட்டினை அதிகரித்து அதன் மூலம் வாடிக்கையாளர்கள் தமது கோரிக்கைகளுக்கான கொடுப்பனவை வெகுவிரைவில் பெற்றுக் கொள்வதை இலகுபடுத்தும் முகமாக அவை மீளமைக்கப்பட்டதுடன் தனது தொழிற்பாடு சார்ந்த கட்டமைப்பு மற்றும் முகப்பு வாடிக்கையாளர் தொடர்பான இடையீடுகள் ஆகியவற்றை மாற்றுவதற்கான முன்னணி மற்றும் உறுதியான முன்னேற்றங்களை இகாகூ மேற்கொண்டது. தனது வியாபாரத்தின் சகல அம்சங்களிலும் காகிதம் பயன்படுத்துகின்ற வாய்ப்பினை குறைக்கும் முகமாக தானாக இயங்கக்கூடிய டிஜிட்டல் முறைகளை இகாகூ துரிதப்படுத்தியது. "வேலை சார் முகாமைத்துவ முறை" ஆனது சகல விதமான உள்ளக மெனுவல் மற்றும் காகிதத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பாடுகளை டிஜிட்டல் சார் தொழிற்பாடுகளாக முறையாக மாற்றியது. பயனுறுதித் தன்மையை அதிகரித்து செலவு சார்ந்த அம்சங்களை குறைக்கும் முகமாக கொடுப்பனவு சார்ந்த அம்சங்களும் டிஜிட்டல் முறைக்கு மாற்றப்பட்டன.

நன்றி நவிலல

எமது வெற்றியும் வளர்ச்சியும் குழுச் செயற்பாட்டின் பிரதிபலிப்புகளாக காணப்படுகின்றன. இவற்றை அலுவலகத்திலும் எமது களை செயற்பாட்டிலும் சபை நடவடிக்கைகளிலும் அவதானிக்க முடியும். எமது ஊழியர்கள், சபை, எமது முகவர்கள் உள்ளடங்கலாக இகாகூ குழுவினருக்கு குறிப்பிட்ட காலப் பகுதியின் பொழுது எமது கம்பனியின் வெற்றிக்காக தமது பங்களிப்புகளை வழங்கியமைக்கு நான் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ச்சியாக எமது சேவைகளைப் பெற்று வருகின்ற எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் உங்களது நம்பிக்கையான காப்புறுதி பங்காளர் என்ற முறையில் உங்களுடனான பயணத்தை தொடர விரும்புகின்றோம். சம்பந்தப்பட்ட கொள்கை மற்றும் நிருவாக ரீதியான விடயங்களுக்கு ஏற்ப SLIC's செயற்பட்டுள்ளது என்பதை உறுதி செய்வதற்காக தமது வழிகாட்டிகளை வழங்கிய நிதி அமைச்சு மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் உள்ளடங்கலாக சகல விதமான அரசாங்க நிறுவகங்கள் மற்றும் நிதி அமைச்சு ஆகியவற்றுக்கு அவர்கள் வழங்கிய வழிகாட்டிக்காக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொறியியலாளர் விஜித ஹேரத
தவிசாளர்

24 மே 2022

"2021 ஆம் ஆண்டில் எமது கம்பனியானது ஆயுட் காப்புறுதி காப்பீட்டு கட்டணத்தில் 14.1% வளர்ச்சியை கண்டது. இதன் பெறுமதி 21.9 பில்லியன் ஆகும். கடந்த காலத்தில் இது 19.3 பில்லியனாக காணப்பட்டது. இலங்கை காப்புறுதியே நாட்டில் முதலாவது பொது காப்புறுதி வழங்குநராகும். 5.4% காப்பீட்டுக் கட்டண வளர்ச்சி பதிவு செய்ததுடன் பொது காப்புறுதி துறையில் ரூபாய் 21.2 பில்லியன் அதிகரித்துக் காணப்பட்டது"

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

“ஆயுட் காப்புறுதி மொத்த காப்பீட்டு கட்டணமானது 14.1% வளர்ச்சி கண்டது. ஆயுள் நிதியத்தின் கூட்டுத்தொகையான 152.5 பில்லியனில் இது ரூபாய் 21,976 மில்லியன் பங்களிப்பு செய்தது”

வளர்ச்சி மேம்பாடு 2020 (PAT)

2021 ஆம் ஆண்டு எமது தலைமைத்துவ நிலைமைகளை நாம் வலுப்படுத்தினோம். பெருந்தொற்று தொடர்பில் அறிவார்ந்த முறையில் எமது பதிலளிப்புகள், வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட கட்டமைப்புகள், தொழில்நுட்ப மேம்பாடுகள், முதலீட்டில் கவனம் செலுத்தியமை, செலவுச் சிக்கன முன்னெடுப்புகள், ஆகியன சந்தைசார் மீண்டெழல் தொடர்பான நன்மைகளை முழுமையாக பெறுகின்ற நிலைக்கு மாற்றியது. கணக்கீட்டு வருடத்தில் நாம் கற்றுக் கொண்ட பிரதான பாடங்களாவன, எதிர்பாராமல் ஏற்படுகின்ற சவால்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய விதத்தில் எம்மை தயார் நிலையில் வைத்திருந்தமையாகும். பெருந்தொற்று மற்றும் நாட்டின் பேரண்ட பொருளாதார நிலைமைகள் ஆகியன பல சவால்களை ஏற்படுத்திய பொழுதிலும் கூட இகாகூ என்ற முறையில் நாம் தாக்குப் பிடிக்கக்கூடியவர்களாகவும் காத்திரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவர்களாகவும் திகழ்ந்தோம். ஒவ்வொரு சவால்களின் பொழுதும் வாடிக்கையாளர்களது தேவைகள் நிறைவேற்றப்பட்டன மற்றும் வியாபார ரீதியான செயலாற்றுகைகள் பாதிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளக்கூடிய விதத்தில் ஆக்கபூர்வமாக இகாகூ முகாமைத்துவம் செய்தது.

இகாகூ தொடர்ச்சியாக தங்குதடையின்றி தனது வளர்ச்சிகளை மேற்கொண்டதுடன் எமது வியாபாரத்தின் ஒவ்வொரு துறைகளிலும் முறையாக மேம்பாடுகளை மேற்கொண்டது, ஒவ்வொரு சந்தை வடிவமைத்தது. நாம் மேற்கொண்ட பரந்த அடிப்படையிலான மீள் கட்டமைப்பு முன்னெடுப்புகள் பயன்தரக்கூடியதாக காணப்பட்டது. மேலும், பொது காப்புறுதி வியாபாரத்திலும் ஆயுள் காப்புறுதி வியாபாரத்திலும் மேற்கொள்ளப்பட்ட பரந்தளவிலான முகாமைத்துவ மேற்பாடுகள் இவற்றை இயலுமையாக்கின

வருட காலப் பகுதியின் பொழுது செயலாற்றுகைகள

2021 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த நிதி ஆண்டில் இகாகூ ஆனது வரிக்கு பின்னரான இலாபமாக ரூபாய் 10.04 மில்லியனை பெற்றுக் கொண்டது. 2020 ஆம் வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 73.5% வளர்ச்சியாகும். கோவிட்-19 முடக்கங்கள் மற்றும் பொருளாதார ரீதியான சவால்களை வாடிக்கையாளர்களும் மற்றும் வர்த்தக நிறுவனங்களும் எதிர்கொண்ட நிலையிலும் கூட ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி துறைகளில் இத்தகைய செயலாற்றுகைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. வரிக்கு முன்னரான இலாபம் ரூபாய் 11,725 மில்லியனாகும். 2020 ஆம் ஆண்டில் இது ரூபாய் 7,972 மில்லியனாக காணப்பட்டது. அதனுடன் ஒப்பிடுகையில் இவ்வளர்ச்சியானது 47மூ அதிகரிப்பாகும்.

இகாகூ இன் கூட்டிணைக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணம் 2021 இல் 43.23 பில்லியனாகும். கூட்டிணைக்கப்பட்ட மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுத் தொகை வளர்ச்சி வீதம் 9.7% ஆகும். கடந்த 5 வருடங்களாக இகாகூ ஆனது கூட்டிணைக்கப்பட்ட எழுதப்பட்ட காப்பீட்டுத் தொகை இல் கூட்டிணைக்கப்பட்ட சராசரி வளர்ச்சி வீதமானது (CAGR) 8.3% ஆகும். ஆயுட் காப்புறுதி வியாபாரமானது எழுதப்பட்ட காப்பீட்டுத் தொகையில் இல் 51% பங்களிப்பை வழங்கியது மற்றும் எஞ்சிய 49% பங்களிப்பினை பொது வியாபாரங்கள் வழங்கின. ஆயுட் காப்புறுதி மொத்த காப்பீட்டு கட்டணமானது 14.1% வளர்ச்சி கண்டது. ஆயுள் நிதியத்தின் கூட்டுத்தொகையான 152.5 பில்லியனில் இது ரூபாய் 21,976 மில்லியன் பங்களிப்பு செய்தது. இகாகூ இன் பொது காப்புறுதி காப்பீட்டுக் கட்டணங்களானது 5.4% வளர்ச்சியை பதிவு செய்ததுடன் 2021 இல் மொத்த காப்பீட்டுக் கட்டண பெறுமதியானது 21,255 மில்லியன் ஆகும்.

பொதுக் காப்புறுதிக்கு முக்கிய பங்களிப்பை வழங்கும் மோட்டார் வாகன காப்புறுதி துறையானது வாகன இறக்குமதியில் மேற்கொள்ளப்பட்ட தடை, வாகனங்களுக்கான செலவு அதிகரித்தமை, சிக்கலான சூழலில் வாகனங்களை பேணுவதற்கான செலவு அதிகரித்தமை ஆகியவற்றின் காரணமாக ஒட்டுமொத்த மோட்டார் காப்புறுதி துறையானது பெருமளவில் பாதிக்கப்பட்டது.

தொழில்நுட்பத்தை இணைத்தல்

எமது முன்னோக்கிய பயணத்திற்கு டிஜிட்டல் மாற்றம் அவசியம் என இகாகூ பரிசீலித்தது. காப்புறுதியுடன் தொடர்புடைய செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்கும், வாடிக்கையாளர் சேவைக்கான கருவியாகவும், தொழிற்துறையின்

தராதரத்தை உயர்த்துதல் ஆகியவற்றுக்கான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினோம். பெருந்தொற்று முடக்க காலப்பகுதியில் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக டிஜிட்டல் செயலி மற்றும் ஏனைய டிஜிட்டல் சார் செயன்முறைகள் முக்கிய வகிபாகத்தை வகித்தன.
எமது டிஜிட்டல் ஆற்றல்களை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்தமையினால் புதிய டிஜிட்டல் சேவைகளை மேலும் மேம்படுத்தி அவற்றை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இகாகூ மேற்கொண்டது. வருட காலப் பகுதியின் பொழுது மோட்டார் வாகனம் தொடர்பான கோரிக்கைகளுக்கு அர்ப்பணிப்புமிக்க தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் வாடிக்கையாளர்களின் பின்னூட்டலின் அடிப்படையில் வாடிக்கையாளர் செயலிகள் தரம் உயர்த்தப்பட்டன.

எமது உள்ளார்ந்த செயன்முறைகளின் வினைத்திறனை மேம்படுத்தும் முகமாக தொழில்நுட்பம் சார்ந்த புத்தாக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பொழுது தொழிற்படை முகாமைத்துவம், செயன்முறைகளை தானியங்கிப்படுத்தல், விற்பனை சார் கண்டறிதல்கள், வியாபார பகுப்பாய்வுகளை பயன்படுத்தி சிறப்பான அறிவிக்கப்பட்ட தீர்மானங்கள் மேற்கொள்ளகின்றன போன்றவற்றிற்காக கட்டுப்பாட்டு சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

எமது உற்பத்தி சார் பட்டியலை மேம்படுத்தல்

நீண்டகாலமாக சேவையாற்றி வரும் காப்புறுதிக் கம்பனி என்ற வகையில் இகாகூ ஆனது கடந்த 06 தசாப்தங்களாக பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களை அறிமுகம் செய்தது. எமது பல்வேறு வகையான உற்பத்தி முதலீட்டுப் பட்டியலே இகாகூ இன் பிரதான பலமாகும். எமது போட்டியாளர்களிடமிருந்து எம்மை இதுவே வேறுபடுத்திக் காட்டுகின்றது. சந்தைப் போக்குகள் மற்றும் வாடிக்கையாளர் தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப எமது தற்போதைய உற்பத்தி வகைகளை நாம் தொடர்ச்சியாக புத்தாக்க முறையில் அணுகுவதுடன் அவற்றை மீள் வடிவமைக்கின்றோம். வருட காலப் பகுதியின் பொழுது ஆயுட் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி சந்தைகள் ஆகியவற்றுக்கு புதிய காப்புறுதி உற்பத்திப் பொருட்களை நாம் அறிமுகம் செய்தோம். வளர்ந்து வருகின்ற வாடிக்கையாளர் தேவைகளுக்கு ஏற்ப சிறப்பாக பொருந்தக்கூடிய விதத்தில் உபாயரீதியாக ஒத்துப் போகக்கூடிய விடயங்களை இனங் காணும் முகமாக தற்போதைய உற்பத்திப் பொருட்கள் தொடர்பில் நாம் மேலும் பல மதிப்பீடுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தோம். இதன் காரணமாக எமது பல்வேறு வகையான உற்பத்திப் பொருட்களினால் கிடைக்கின்ற நன்மைகள் மற்றும் அம்சங்கள் மீள் வடிவமைக்கப்பட்டன. அத்தோடு சில உற்பத்திப் பொருட்கள் உறுதிப்படுத்தப்பட்டதுடன் சீர் செய்யப்பட்டன.

"பிரகூனா" காப்புறுதித் திட்டமானது ஒரு துரித முதலீடாக மீள் நிலைக்கு உட்படுத்தப்பட்டது. அதேவேளை "யஸஇசுறு" என்ற காப்புறுதித் திட்டமானது மீள் ஆரம்பிக்கப்பட்டது. எமது இளம் வாடிக்கையாளர்களது கல்வி சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் முகமாக "மினிமுது" அறிமுகப்படுத்தப்பட்டது. அதனோடு "சுபபெதும்" என்ற புலமைப் பரிசில் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. "தசரக்ஷய" என்ற எமது கடமைகளை நிறைவேற்றும் முகமாக இகாகூ ஆனது நாட்டில் அதிகூடிய போனஸினை வழங்கும் எமது மரபினை பேணியது. இதன் மூலம் 2021 ஆம் ஆண்டில் ரூபாய் 9.8 பில்லியன் போனஸாக பிரகடனப்படுத்தப்பட்டது.

மதகுருமார் அவர்களது குடும்பம் ஆகியவற்றினை பாதுகாக்கும் முகமாக "நாகராஜா" போன்ற காப்புறுதிப் பத்திரங்கள் விசேடமாக ஏனையவற்றுடன் அறிமுகம் செய்யப்பட்டன. சகல பாடசாலை மாணவர்களுக்கும் கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்பட்ட "சுரக்ஷ" என்ற தேசிய மாணவர்களுக்கான சுகாதார காப்புறுதி காப்பீட்டு பத்திரத்திற்கு இகாகூ உம் தொடர்ச்சியாக காப்புறுதி பங்காளராக திகழ்ந்தது. சிறிய மற்றும் மத்திய தொழில் முயற்சியாளர்களுக்கு பூரணத்துவமிக்க வியாபார காப்புறுதியை வழங்கும் முகமாக இகாகூ ஆனது தனது வியாபார கழக காப்புறுதியை மீள் நிலைக்கு உட்படுத்தியது.

எமது வாழ்கின்ற விழுமியங்கள்

எமது வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுமானங்களை வழங்குவது இகாகூ இன் முக்கிய பண்பாகும். நாம் தொடர்ச்சியாக எமது ஊழியர்களின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டு செயற்பட்டோம். எமது ஊழியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காகவும் நாடெங்கிலும் காணப்படுகின்ற முகவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் முகமாகவும் கோவிட்-19 பாதுகாப்பு நடைமுறைகள் அமுல்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்யும் முகமாக எமது விசேட செயலணி தொடர்ச்சியாக செயற்பட்டது. கோவிட்-19 முடக்கங்கள் மற்றும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட சவால்கள் போன்ற காலப் பகுதியில் தொடர்ச்சியாக எமது ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கியதுடன் சகல பணியாளர்களும் எம்முடன் இருப்பதற்கான வழிமுறைகளை மேற்கொண்டதோடு தொடர்ச்சியாக அவர்களை உற்சாகப்படுத்தி வந்தோம். மேலும் கோவிட்-19 காலப் பகுதியில் காணப்பட்ட முடக்கங்களினால் எமது முகவர்களது நகர்வுகளுக்கு மட்டுப்பாடுகள் காணப்பட்டன. இவற்றை தணிக்கும் முகமாக எமது முகவர்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

வருட காலப் பகுதியின் பொழுது தொடர்ச்சியாக பல நிகழ்ச்சித் திட்டங்களை அனுராதபுரம், களுத்துறை, மாத்தறை, கிரிஉல்ல, தம்புள்ளை, நுவரெலியா, பிபிளை போன்ற பிரதேசங்களில் நடத்தினோம். புதிய சாதாரண காலப் பகுதியின் பொழுது ஏற்படுகின்ற மாற்றங்கள்

"எதிர்வரும் காலங்களில் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களிலும் எமது பிரசன்னத்தை விரிவாக்கும் செய்து அவர்களுக்கே உரிய தீர்வுகளை வழங்கும் முகமாக சமூகங்களின் காப்புறுதி சார்ந்த தேவைகளை இனங் காண உள்ளோம்"

பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

தொடர்பில் தம்மை எவ்வாறு இசைவாக்கப்படுத்தி அதற்கு ஏற்ப நடந்து கொள்ளுதல் என்பது தொடர்பில் எமது மக்களை அறிவூட்டும் முகமாக இத்தகைய நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

கோவிட்-19 உடன் தொடர்புடைய புதிய வகை கிருமி தொற்றுகள் அவை அதிகமாக பரவிக் காணப்பட்ட சூழ்நிலையில் 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான PCR இயந்திரம் ஒன்றினை இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு வழங்கும் முகமாக எமது ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்கினர் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஐக்கிய நாடுகளின் வீதி பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட வீதி பாதுகாப்பு தொடர்பிலான "மோட்டார் பிளஸ் வீதி பாதுகாப்பு வீரர்கள்" மற்றும் "உயிர் பாதுகாத்தல் 30" போன்றன தொடர்பில் பல முன்னெடுப்புகளை நாம் மேற்கொண்டோம்.

எதிர்கால தோற்றம்

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் பல்வேறு விதமான முக்கிய விடயங்களை எமக்கு கற்றுத் தந்தன. அவற்றுள் தாக்குப் பிடித்தல், இசைவாக்கம், சவால்மிக்க காலப்பகுதியில் எவ்வாறு முன்னோக்கி பயணிப்பது போன்றன.
வருட காலப் பகுதியின் பொழுது ஏற்பட்ட சவால்களிலிருந்து கற்றுக் கொண்டதன் படி எதிர்காலத்திற்கு முகங் கொடுப்பதற்காக இகாகூ ஆனது உறுதியான மற்றும் மிகவும் இசைவாக்கம்மிக்க உபாயமுறைகளை விருத்தி செய்தது. எழுகின்ற புதிய வாய்ப்புகளை கண்டறியும் முகமாக நாம் எமது சௌகரியமான வலயத்திற்கு வெளியிலேயும் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டோம்.

எதிர்வரும் காலப்பகுதிகளில் நாம் எமது பிரசன்னத்தை பின்தங்கிய பிரதேசங்களிலும் மேற்கொள்ள இருக்கின்றோம். அதன் மூலம் தணித்துவமான தீர்வுகளை எமது சமூகங்களுக்கு வழங்கி அச்சமூகங்களின் காப்புறுதி சார்ந்த தேவைகளை இனங் காணவுள்ளோம். அதேவேளை எமது புத்தாக்க முறைகளை வழங்கி மேலும் வாடிக்கையாளர்களது மாறுகின்ற தேவைகளுக்கு ஏற்ப புதிய உற்பத்திப் பொருட்களை வழங்கி எமது சந்தையை விரிவாக்கம் செய்ய உள்ளோம். அதிகரித்து வரும் போட்டி ரீதியான காப்புறுதி சந்தை தேவைப்பாடுகள், ஏற்ப எமது விரிவாக்கல் திட்டங்களை மேம்படுத்தும் முகமாக எமது முதலீடுகளை அதிகரிக்கச் செய்து தொழில்நுட்பத்தை மேம்படுத்தி எமது உள்ளக ஆற்றல்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

நன்றி நவிழல்

இகாகூ இன் சாதகமான செயலாற்றுகைகள் எமது பணியாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவைக்கான சான்றாதாரமாகும். சோதனைமிக்க இக்காலப் பகுதியில் எமது ஊழியர்களது தொழில்வாண்மை மற்றும் அர்ப்பணிப்புமிக்க சேவை ஆகியவற்றுக்காக முதலாவதாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தை தமக்கு விருப்பமான காப்புறுதியாக தெரிவு செய்த எமது பெறுமதியான வாடிக்கையாளர்களுக்கு உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களுக்கான சேவைகளை கரிசனையுடன் எமது அவதானத்தை செலுத்தி வழங்குவோம் என்பதை மீள் உறுதி செய்து கொள்கின்றேன்.
வருட காலப் பகுதியின் பொழுது சிறப்பான உதவிகளை எமக்கு வழங்கிய எமது வியாபார முகவர்கள், காப்புறுதி தரகர்கள், மீள் காப்புறுதி பங்காளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்கீட்டுப்பாட்டாளர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வருடம் முழுதும் எமக்கு உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கிய நிதி அமைச்சு மற்றும் அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் ஆகியவற்றுக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனை நிறைவு செய்வதற்கு முன்னர் அறிவார்ந்த வழிகாட்டி மற்றுமொரு நிதியாண்டில் வெற்றிகரமாக இகாகூ பயணிப்பதற்காக தமது வழிகாட்டிகள் மற்றும் திடமான தலைமைத்துவத்தை வழங்கிய தவிசாளர் மற்றும் ஏனைய சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சந்தன எல் அளுத்கம
பிரதான நிறைவேற்று அதிகாரி

24 மே 2022

அறிக்கைசார் விபரங்கள்

STRENGTH

பலங்கள்

அசைக்க முடியாத எமது பெறுமானங்கள் மற்றும் நேர்மை ஆகியவற்றில் எமது பலம் தங்கியுள்ளது

அறிக்கைசார் விபரங்கள்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டின் (SLIC) நான்காவது ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கைக்கு உங்களை நாம் வரவேற்கின்றோம். இது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரைவுச் சட்டகத்தின் (IIRC) முக்கிய வழிகாட்டிகளை பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், முதலீட்டாளர்கள், அரசாங்கம், இலங்கையின் ஒழுங்கமைப்பு அதிகார அமைப்புகள், வேறு ஏனைய பங்கேற்றுபாட்டாளர்கள் மற்றும் இகாகூ நலனில் ஆர்வமுடைய பங்கேற்றுப்பாட்டாளர்கள் மற்றும் நிலைபேறான பெறுமதி உருவாக்கத்திற்கு முக்கிய பாகங்களை வகிக்கின்ற ஏனையவர்கள் உள்ளடங்கலாக பல விடயங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமே அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப் பெரிய காப்புறுதி கம்பனியாகும் (இலங்கையில்). இது தொடர்ச்சியாக ஆக்கபூர்வமான காப்புறுதி தீர்வுகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதுடன் விரிவான கிளை வலையமைப்புகளுடன் நாடெங்கிலும் காணப்படுகின்ற சேவை நிலையங்கள் மூலம் சேவையாற்றி வருகின்றது. இகாகூ கடந்த ஒருங்கிணைக்கப்பட்ட வருடாந்த அறிக்கையானது 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது மற்றும் எங்களது சகல விதமான வருடாந்த அறிக்கைகளையும் எமது கூட்டுறவு இணையத்தளமான www.srilankainsurance.com என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

நோக்கெல்லை மற்றும் எல்லை

இந்த அறிக்கையானது 2021 சனவரி 01 ஆம் திகதி முதல் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியை உள்ளடக்கியதாகும் மற்றும் இகாகூ வியாபார செயற்பாடுகள், நிதி மற்றும் தொழிற்பாட்டு செயலாற்றுகைகள், எதிர்பார்ப்புகள், ஆளுகை, தொழிற்பாட்டு சூழலுக்கு எதிரான இடர் முகாமைத்துவம், அத்தோடு 2021 ஆம் நிதியாண்டு காலப்பகுதியில் இகாகூ இன் செயலாற்றுகை தொடர்பான முழுமையான விபரங்களை பங்கீட்டுபாட்டாளர்களுக்கு வழங்குகின்றது. ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் வரைவு சட்டகத்தின் 06 பிரதான விடயங்களை உள்ளடக்கிய அளவு சார்ந்த மற்றும் தன்மை சார்ந்த தரவுகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடல் வரைவுச்சட்டகம்

இந்த அறிக்கையை தொகுக்கின்ற பொழுது இகாகூ ஆனது பின்வரும் வழிகாட்டிகளை கருத்திற் கொண்டது.

- இலங்கை கணக்கீட்டு தராதரங்கள்
- IIRC (சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சபை) வரைவுச்சட்டகம்
- அரசாங்கத்திற்கு சொந்தமான காப்புறுதிக் கம்பனிகள், கூட்டுறவு ஆளுகை குறியீடு 2017 ஆகியவற்றுக்கு எற்புடைய சட்ட வரைவுச் சட்டகம்
- உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சி தராதரங்கள்
- ஐநா வின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG's)

கடந்த அறிக்கையிடல் காலப் பகுதிக்கும் இதற்கும் நோக்கெல்லை மற்றும் எல்லைகள் தொடர்பில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் எதுவும் இல்லை என்பதை கருத்திற் கொள்ளவும். கடந்த அறிக்கையிடல் வருடத்தில் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையுடன் ஒப்பிடுகையில் எத்தகைய மீள் கூற்றுகளும் காணப்படவில்லை.

பொருள்சார்ந்தவை

பொருள் சார்ந்த கோட்பாடுகள் - பொருளாதாரம், சுற்றாடல், குறுகிய காலம், மத்திய காலம், நீண்ட கால அடிப்படையில் பெறுமதிகளை தோற்றுவிப்பதற்கான கம்பனியின் ஆற்றலில் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சமூக அம்சங்கள் - இவ்வறிக்கையின் நிதிசாரா பொருளடக்கங்களை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது. பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கு பொருந்ததாக காணப்படக்கூடிய நிலைபேறான தகவல்கள் (நிதி சாரா உள்ளடக்கம்) சமர்ப்பிப்பதற்காக பூகோள அறிக்கையிடல் முன்னெடுப்பினால் (புகஐ) இந்த எண்ணக்கரு மேம்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் எமது பொருள் சார் விடயங்கள் என நாம் கருதுகின்ற சூழமைவுகளை இங்கே தந்துள்ளோம் - குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால அடிப்படையில் பெறுமதிகளை சேர்ப்பதற்கான எமது ஆற்றல்கள் தொடர்பில் செல்வாக்கு செலுத்தியவைகள் அல்லது செல்வாக்கு செலுத்தக்கூடியவைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அமைப்பிற்கு பெறுமதிகளை உருவாக்குதல் மற்றும் எமது பங்கீட்டுபாட்டாளர்களுக்கு சாதகமான பெறுபேறுகளை வழங்குதல் எமது 06 வகையான மூலதனங்கள் மூலம் எமது உபாயங்களை மேம்படுத்தி மற்றும் மீள் பொருந்துகின்ற எமது வளங்கள் ஆகியவற்றின் மூலம் இந்த பொருள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் நாம் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பது தொடர்பில் இந்த அறிக்கை கலந்துரையாடுகின்றது.

பொருள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் எமது மூலதனங்கள் மூலம் வளங்களை நாம் எவ்வாறு ஒதுக்குகிறோம்.

பொருள் சார்ந்த விடயங்கள்	நிதி	உற்பத்தி செய்யப்பட்டவை	புலமை சார்ந்தவை	மனிதன்	சமூகம்	இயற்கை
பொருளாதார செயலாற்றுகைகள்	✓	✓	✓			
சந்தை பிரசன்னம்	✓	✓		✓	✓	
ஊழலுக்கு எதிரானது			✓		✓	
போட்டிக்கு எதிரான நடத்தை			✓		✓	
வேலை வாய்ப்பு	✓			✓		
தொழில் சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	✓			✓		
பயிற்சி மற்றும் அபிவிருத்து	✓			✓		
பல்வகைமை உள்ளடக்கம்			✓	✓		
பாரபட்சம் காட்டாமை			✓	✓		
ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசல்				✓		
உள்ளூர் சமுதாயங்கள்	✓				✓	✓
வாடிக்கையாளர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு					✓	
சந்தைப்படுத்தல் மற்றும் விவரச் சீட்டு ஒட்டுதல்					✓	
சமூக பொருளாதார இணக்கப்பாடு					✓	✓

முன்னோக்கிய கூற்றுகள்

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நிதி நிலை மற்றும் தொழிற்பாட்டு பெறுபேறுகள் ஆகியன தொடர்பிலான சில "முன்னோக்கிய கூற்றுகளை" இவ்வறிக்கை உள்ளடக்கியுள்ளது. இவற்றின் தன்மையின் அடிப்படையில் இடர்களையும் நிச்சயமற்ற தன்மைகளையும் உள்ளடக்கியுள்ளது. ஏனெனில் இவை நிகழ்வுகள் பற்றி குறிப்பிடுவதுடன் சுற்றாடலில் தங்கியுள்ளது, எதிர்காலத்தில் சிலவேளை இவை ஏற்படலாம், ஏற்படாமலும் இருக்கலாம். உண்மையான விளைவுகளை ஏற்படுத்துகின்ற காரணிகள் பொருள் அளவில் மாறுபடலாம். அதாவது முன்னோக்கிய கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிலிருந்து இவை மாறுபடலாம். இவற்றுள் தேசிய பொருளாதார நிலைகள், காப்புறுதி ஒழுங்குவிதிகள், போட்டித் தன்மைமிக்க ஒழுங்கமைப்பு காரணிகள் மற்றும் ஏனைய சிலவும் உள்ளடங்குகின்றன. இதன் அடிப்படையில்ல இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னோக்கிய கூற்றுகளானது அவை குறிப்பிடப்பட்ட திகதியில் ஏற்புடையதாக கருதப்படுகின்றது, இவற்றை இற்றைப்படுத்துவதற்கோ அல்லது மீளாய்வு செய்வதற்கோ எத்தகைய கடப்பாடுகளையும் இகாகூ பொறுப்பேற்காது. இவை புதிய தகவல்கள், எதிர்கால நிகழ்வுகள் அல்லது வேறு விதமாகவும் இருக்கலாம்.

பின்னூட்டல்

எமது வருடாந்த அறிக்கையின் தன்மையை மேம்படுத்துவதற்கு உங்களிடமிருந்து கேள்விகளையோ அல்லது ஆலோசனைகளையோ நாம் வரவேற்கின்றோம். உங்களது சகல பின்னூட்டல்களும் கீழ்வருமாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பி.ஏ. ருவனி தர்மவர்தன,
பிரதி பொது முகாமையாளர் - இணக்கப்பாடு மற்றும் இடர்
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்.
"ரக்ஷன மந்திரய",
இல. 21, வொக்ஸ்ஹோல் வீதி, கொழும்பு 02.
தொலைபேசி: 94 11 235 7741

உபாய முறை மற்றும் கவனம் செலுத்துதல்

40 - வியாபார மாதிரி
42 - பொருள் சார்ந்த விடயங்கள்
43 - பங்கீட்டுப்பாட்டாளர் தொடர்பு முறைகள்
45 - உபாயமுறை முன்னுரிமைகள்

TRANSFOR-MATION

மாற்றம்

எமது மாற்றமானது எவ்வித சந்தேகமுமின்றி மிக உயர்வானது வர வேண்டிய மிகச் சிறப்பானது

வியாபார மாதிரி


பங்கேற்றுபாட்டாளர்கள் உள்ளீடுகளை வழங்குதல்
ஆயுள் மற்றும் பொது காப்புறுதி
பங்கேற்றுபாட்டாளர்கள்:
99.97%
திறைசேரியின் செயலாளர
காப்பீடுகளை பெற்றுக் கொண்டவர்கள்:
1,025,621
ஆயுள் காப்புறுதிகளைப் பெற்றுக் கொண்டவர்கள்
1,259,483
பொது காப்பீடுகளை பெற்றுக் கொண்டவர்கள்
ஊழியர்கள்:
46% பெண்
54% ஆண்
மொத்தம் 2,767
வியாபார பங்காளர்கள்:
மீள் காப்புறுதியாளர்கள்
முகவர்கள்
தரகர்கள்
வங்கிகள்
ஒழுங்குபடுத்துபவர்கள்:
IRCSL
DROC
FIU – மத்திய வங்கி விநியோகத்தர்கள்
தொலைநோக்கு
பணிநோக்கு
தீர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்
உள்ளீடுகள்
பங்காளர் நிதி
முதலீடு
ஆயுள் நிதி
பொது நிதி
சொத்துகள், பொறித்தொகுதி, உபகரணம்
தகவல் மற்றும் தொலைத் தொடர்பாடல் தொழில்நுட்பம்
நிருவக மயப்பட்ட அறிவு
சிறந்த நடைமுறைகள்
தரவு பகுப்பாய்வுகள்
சேவைகள் மற்றும் விநியோகங்கள்
தொடர்பு முறைகள்
கூட்டுறவுகள் மற்றும் கூட்டணிகள்
ஆய்வு கண்டறிதல்கள்
காப்புறுதி சேவைகள்
பயன்பாடுகள்
செயற்பாடுகள்
காப்பீட்டு இடர் மதிப்பீடு
சேவைகள் மற்றும் கொள்கை நிருவாகம்
கோரிக்கைகள் முகாமைத்துவம்
முதலீட்டு செயற்பாடுகள்
சந்தைப்படுத்தல், வியாபாரங்கள், விநியோகம்
ஆளுகை வரைவுச் சட்டகம்
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் ஒழுங்குபடுத்தல் அதிகார அமைப்புகள்
தொழிற்பாட்டு சூழல்

இந்த வியாபார மாதிரி வரைபடமானது இகாகூ இல் செயற்பாடுகள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன மற்றும் நாம் தொழிற்படுகின்ற சுற்றாடலினால் அவை எவ்வாறு செல்வாக்குச் செலுத்தப்படுகின்றன மற்றும் எமது தொலைநோக்கு, பணிநோக்கு பற்றிய மேலோட்டமான பார்வையை தருகின்றது. சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றினுள் நாம் தொழிற்படுவதன் காரணமாக: எமது பணிநோக்கு, தொலைநோக்கு, விழுமியங்கள் ஆகியன நாம் அடைவதற்கு எதிர்பார்க்கின்ற எமது நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்காக நாம் எவ்வாறு எமது உபாயமுறைகளை வகுக்கின்றோம் என்பதை வரைவிலக்கணப்படுத்துகின்றன. இத்தகைய வெளிநிலை மற்றும் உள்ளக செல்வாக்குகள் எமது நோக்கங்களை அடைவதற்கான இகாகூ இன் சகல செயற்பாடுகளிலும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. எமது பெறுமானம் சேர்த்தல் செயற்பாடுகள் மூலம் எமது நோக்கங்களும் வடிவமைக்கப்படுகின்றன. இத்தகைய வட்டம் தொடர்வதுடன், இகாகூ யானது தொடர்ச்சியாக இயங்கி வருகின்ற சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன்னை தகவமைத்துக் கொள்வதுடன் தொழிற்பாட்டு சூழ்நிலைக்கு ஏற்ப இசைவாக்கம் பெறுகின்றது.

பொருள் சார்ந்த விடயங்கள்

பொருட்கள்

பொருள் சார்ந்த எண்ணக்கருவானது உலகளாவிய அறிக்கையிடல் முன்முயற்சி GRI (புகோள அறிக்கையிடல் முன்னெடுப்புகள்) தராதரங்களிலிந்து தோன்றியதாகும்). இகாகூ இன் நிதிசாராத விடயங்கள் எவ்வாறு சாதகமான பங்கீட்டுபாட்டாளர்களை தாக்குகின்றன மற்றும் இகாகூ இற்கு அவற்றின் முக்கியத்துவம் பற்றி இது காட்டுகிறது. இவ்வறிக்கை மூலம், எமது உபாயமுறைகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றை தூய்மைப்படுத்துவதன் மூலம் பொருள் சார்ந்த விடயங்களை நாம் எவ்வாறு வெற்றி பெறுகின்றோம் என்பதை இது காட்டுகின்றது.

பொருள் சார்ந்த விடயங்கள்

இகாகூ ஆனது எப்பொழுதும் கம்பனியின் வளர்ச்சி மற்றும் பங்கீட்டுபாட்டாளர்களின் பெறுமதி தோற்றம் ஆகியவற்றைக் கருத்திற் கொள்கின்றது. பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பெறுமானங்களை தோற்றுவிப்பதற்காக இகாகூ ஆனது வினைத்திறன்மிக்க முறையில் பல்வேறு வகையில் பங்கீட்டுபாட்டாளர்களுடன் ஈடுபாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

இல.	தலைப்பு இல.	இகாகூ இற்கான முக்கியத்துவம்	பங்கீட்டுப்பாட்டாளருக்கான முக்கியத்துவம்
1	பொருளாதார செயலாற்றுகைகள்	மிக உயர்வானது	மிக உயர்வானது
2	சந்தை சார் அழுத்தங்கள்	மிக உயர்வானது	மிக உயர்வானது
3	ஊழலுக்கு எதிரானது	உயர்வானது	உயர்வானது
4	போட்டிக்கு எதிரான நடத்தை	உயர்வானது	உயர்வானது
5	வேலை வாய்ப்பு	மிக உயர்வானது	மிக உயர்வானது
6	தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு	உயர்வானது	உயர்வானது
7	பயிற்சி மற்றும் பல்வகைமை	மிக உயர்வானது	மிக உயர்வானது
8	பல்வகைமை மற்றும் சமவாய்ப்புகள்	மிக உயர்வானது	மிக உயர்வானது
9	பாரபட்சம் காட்டாமை	உயர்வானது	உயர்வானது
10	ஒன்று கூடுவதற்கும் மற்றும் கூட்டு பேரம் பேசலுக்கான சுதந்திரம்	உயர்வானது	உயர்வானது
11	உள்ளூர் சமுதாயங்கள்	உயர்வானது	உயர்வானது
12	வாடிக்கையாளர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு	உயர்வானது	உயர்வானது
13	சந்தைப்படுத்தல் மற்றும் சிட்டைகளை ஒட்டுதல்	உயர்வானது	நடுத்தரமானது
14	சமூக பொருளாதார இணக்கப்பாடு	உயர்வானது	உயர்வானது



பங்கீட்டுபாட்டாளர் தொடர்பு முறைகள்

நாட்டின் முன்னணி காப்புறுதியாளராக திகழ்வதற்கான எமது முயற்சிகள் அத்தோடு இலங்கையில் அதிகமானவர்களினால் நம்பப்படுகின்ற நிறுவனம் என்ற முறையில் நீண்டகால அடிப்படையில் எமது பங்கீட்டுபாட்டாளர்களுடனான தொடர்பு முறைகளை வலுப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். உறுதியான தொடர்பு முறைகளை விருத்தி செய்வதற்கு ஈடுபாடு என்பது முக்கியமான பாகமாகும்.

எமது வியாபாரத்தை தாக்குகின்ற விடயங்கள் தொடர்பில் எமது பல்வகையான பங்கீட்டுபாட்டாளர் குழுக்கள் பல்வேறு வகையான கருத்துக்களை கொண்டிருக்கின்றனர், மாறுபட்ட இத்தகைய கண்ணோட்டங்களுக்கு செவிமடுப்பதன் மூலம் இகாகூ இன் நீண்ட கால வெற்றி மற்றும் நிலைபேற தன்மை ஆகியன தொடர்பிலான புரிந்துணர்வு மற்றும் பெறுமதிகளை இவை வழங்கும் என்பதை நாம் அறிவோம். பங்கீட்டுபாட்டாளர் ஈடுபாட்டிற்காக முறையான அணுகுமுறையொன்றினை நாம் பின்பற்றுகின்றோம். உயர்வான சீர் செய்யப்பட்ட பங்கீட்டுபாட்டாளர் இனங் காணும் செயன்முறைகளை நாம் ஆரம்பித்துள்ளோம்.

பங்கீட்டுபாட்டாளர்களை இனங் காணல்

இகாகூ இன் செயற்பாடுகளின் காரணமாக தாக்கமடையக்கூடிய மற்றும் / அல்லது தனிப்பட்ட நபர்கள், குழுக்கள் அல்லது அமைப்புகள் ஆகியன பங்கீட்டுபாட்டாளர்கள் என அழைக்கப்படும். இவற்றினால் தாக்கமுறக்கூடிய உற்பத்திகள் அல்லது சேவைகள் அல்லது அமைப்பு ரீதியான செயலாற்றுகைகளும் இவற்றில் உள்ளடங்கும். இவ்வாறு இனங்காணப்பட்ட பங்கீட்டுபாட்டாளர்கள் இகாகூ உடன் அவர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கின் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தப்படுவர்.

ஈடுபாட்டு முறைகள் மற்றும் ஈடுபாட்டு கோட்பாடுகள்

மாறுபட்ட பங்கீட்டாளர்களுக்காக நாம் மாறுபட்ட ஈடுபாடுகளை பிரயோகித்து வருகின்றோம். பங்கீட்டுபாட்டாளர்களின் செல்வாக்கு / இகாகூ தொடர்பான தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஈடுபாட்டு முறைகள் தீர்மானிக்கப்படுவதுடன், சகல ஈடுபாட்டு முறைகளுக்கும் பின்வரும் கோட்பாடுகள் ஏற்புடையதாகும்.

- ஆலோசனை சார் கலந்துரையாடல்களை மேம்படுத்தும் முகமாக வெளிப்படைத் தன்மை மற்றும் பகிரங்கத்தன்மை
- கால அளவு மற்றும் சம்பந்தப்பட்ட தகவல்
- பதிலளிப்புகளை மேம்படுத்தும் முகமாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீளாய்வு

உடைமை உரிமை மற்றும் பொறுப்புக் கூறல

பங்கீட்டுபாட்டாளர் ஈடுபாடானது இகாகூ இல் அதிகாரப் பரவலாக்கப்பட்ட விடயமாகக் காணப்படுகின்றது. சகல விதமான தொடர்பு முறைகள், கேள்விகள், பங்கீட்டுபாட்டாளர்களின் அக்கறைகள் போன்றவற்றை தனி, குழு மாத்திரம் முகாமை செய்வதில்லை. தொடர்பு முறைகளை முகாமைத்துவம் செய்தல், தமது பொறுப்பு பிரதேசத்தினுள் வருகின்ற உள்ளக மற்றும் வெளிநிலை சார்ந்த பங்கீட்டுபாட்டாளர்களின் தொடர்பு முறைகளை முகாமைத்துவம் செய்தல், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கு எல்லா ஊழியர்களும் பொறுப்பாக இருக்கின்றனர்.

அமைப்பினுள் காணப்படுகின்ற இறுதி ஆளுகை அமைப்பு என்ற முறையில் உபாய ரீதியான உள்ளீட்டை திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பில் வழங்குகின்ற பங்கீட்டுபாட்டாளர்களின் தொடர்பு முறைகளின் தன்மை மற்றும் பங்கீட்டுபாட்டாளர்களின் தேவைகள், நலன்கள், எதிர்பார்ப்புகள் போன்றன பற்றி இகாகூ இன் பணிப்பாளர்கள் சபைக்கு முறையாக எடுத்துரைக்கப்படுகின்றன.



பங்கீட்டுபாட்டாளர் தொடர்பு முறைகள்

பங்கீட்டுபாட்டாளர்களுடன் தொடர்புடைய பொருள் சார் விடயங்கள்	இகாகூ இற்கான தாக்கம்	ஈடுபாடு	ஈடுபாட்டு காலஅளவு
இலங்கை அரசாங்கத்தின் முதலீடு, வியாபார அபிவிருத்தி, வருவாய்கள், புத்தாக்கம், தொழிற்துறை வளர்ச்சி, இணக்கப்பாடுகள்	உயர்வானது	வருடாந்த அறிக்கை	வருடாந்தம்
		ஊடக அறிக்கைகள்	தேவையின் அடிப்படையில்
		சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்துடனான கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள்	தேவையின் அடிப்படையில்
ஏனைய ஒழுங்குபடுத்துநர்கள் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் தேவையின் அடிப்படையில் இணக்கப்பாடு, சிறந்த கூட்டுறவு ஆளுகை, தொழிற்துறையின் நிலைபேறு தன்மை, ஒழுக்கம் சார் நடத்தை	உயர்வானது	ஒழுங்கமைப்பு அதிகாரிகளுடனான கூட்டங்கள்	தேவையின் அடிப்படையில்
		வருடாந்த அறிக்கை	வருடாந்தம்
		தொழிற்துறை அமைப்புகள்	தேவையின் அடிப்படையில்
		நியாயாதிக்க பதில்கள் மற்றும் அந்தஸ்து அறிக்கைகள்	காலாண்டு, வருடாந்தம்
		ஊடக அறிக்கைகள்	தேவையின் அடிப்படையில்
வாடிக்கையாளர்கள் வாடிக்கையாளர் தொடர்பு முறை, தங்க வைத்தல், சம்பந்தப்பட்ட உற்பத்திகள், உற்பத்தி சார் தகவல்கள், காப்பீட்டுப் பத்திர போனஸ்கள், காப்பீட்டுப் பத்திர கோரிக்கைகள், ஏனைய ஒழுங்குபடுத்துநர்கள்	உயர்வானது	அழைப்பு நிலையம்	முறையாக
		வாடிக்கையாளர் திருப்தி ஆய்வு	தேவையின் அடிப்படையில்
		நேருக்கு நேரான ஊடாட்டங்கள்	ஒழுங்காக
		இணையத்தளம், சமூக ஊடகம்	ஒழுங்காக
		வாடிக்கையாளர் பின்னூட்டல்	ஒழுங்காக
வியாபார பங்காளர்கள்	மத்திமம்	கூட்டங்கள்	தேவையின் அடிப்படையில்
வளர்ச்சிக்கான ஆற்றல்கள், உரிய நேர கொடுப்பனவுகள்		மின்னஞ்சல், தொலைபேசி போன்றன மூலமான தொடர்பாடல்	தேவையின் அடிப்படையில்
ஊழியர்கள் ஊழியர்களது நலனோம்புகை, திருப்தி, தங்க வைத்தல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி, அங்கீகாரம் மற்றும் விருதுகள், தொழில் முன்னேற்றம், தொழில் பாதுகாப்பு	உயர்வானது	கூட்டங்கள்	ஒழுங்காக
		மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி மூலமான தொடர்பாடல்	தேவையின் அடிப்படையில்
		அடுத்துவரும் திட்டமிடல்	வருடாந்த தேவை அடிப்படையில்
		பயிற்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்	தேவையின் அடிப்படையில்
		விருது வழங்கும் வைபவங்கள்	வருடாந்தம்
		சமூக கருத்திட்டங்களில் ஈடுபாடு	தேவையின் அடிப்படையில்
		துன்பங்களை கையாளுதல்	வருடத்திற்கு இருமுறை
		இணையம் மற்றும் B-Connect செயலி மூலம் தகவல்களை பகிர்தல்	முறையாக
		நோக்கங்கள் / KPI தெரிவுகள்	வருடாந்தம்
		செயலாற்றுகை மதிப்பீடு	வருடத்திற்கு இரு முறை
சமுதாயம் மற்றும் சுற்றாடல் சமுதாய முதலீடு, கூட்டுறவு சமூகப் பொறுப்பு முன்னெடுப்புகள்	மத்திமம்	சமுதாய கருத்திட்டங்கள்	முறையாக
		ஊடக வெளியீடுகள்	தேவையின் அடிப்படையில்
		இணையத்தளம், சமூக வலைதளம்	ஒழுங்காக
		நிகழ்வுகள்	தேவையின் அடிப்படையில்
		கூட்டுறவு சமூக பொறுப்பு கருத்திட்டங்கள்	ஒழுங்காக
		நிலைபேறுதன்மை முன்னெடுப்புகள்	ஒழுங்காக

உபாய ரீதியான முன்னுரிமைகள்

உபாய ரீதியான முன்னுரிமைகள்

2021 நிதியாண்டின் பொழுது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது மிகவும் இயங்காற்றல் மிக்க துரிதமாக மாறக்கூடிய சூழ்நிலையில் பணியாற்றியது. எதிர்பாராத வெளிநிலை காரணிகளின் காரணமாக சில உபாய ரீதியான முன்னுரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் நாம் பல சவால்களை எதிர்கொண்டோம்.

எமது உபாய ரீதியான முன்னுரிமைகளை இனங்காண்கின்ற பொழுது, எமது வாடிக்கையாளர் தளத்தை தாக்குகின்ற பேரண்ட பொருளாதார காரணிகள், இகாகூ இன் பலம் மற்றும் உற்பத்தி சார் விளக்கங்கள், போட்டியாளர் உற்பத்தி விடயங்கள் ஆகியவற்றை நாம் கருத்திற் கொண்டோம்.

பொது வியாபாரம்

	வியாபாரங்கள்	சந்தைப்படுத்தல்	வினைத்திறன் மேம்பாடு
செயல்படுத்தக்கூடிய முன்னெடுப்புகள்	• மிகவும் அர்ப்பணிப்புமிக்க தொழிற்படை ஒன்றை விருத்தி செய்தல் • "நாம் செய்கின்ற சகல விடயங்களிலும் வாடிக்கையாளர்களுக்கு முதலிடம்" என அழைக்கப்படுகின்ற இகாகூ இன் தன்மை காப்பீட்டுப் பத்திர தத்துவத்தின் பிரகாரம் விற்பனை சேவைகளின் தரத்தினை அதிகரிக்கச் செய்தல் • வழிமுறை சார்ந்த விற்பனை கட்டமைப்புகளை விருத்தி செய்து பேணல் • அனைவருக்கும் காப்புறுதியை மேம்படுத்தல் • கோவிட்-19 காலப் பகுதியில் எமது அன்றாட தொழிற்பாடுகள் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் உபாய முறை உதவியுடன் நடைபெற்றது.: இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி • விற்பனை சார்ந்த செயலாற்றுகைகளை மேம்படுத்தும் முகமாக மொபைல் தொலைபேசி தீர்வுகளை விருத்தி செய்து பேணுதல்	• வாடிக்கையாளர் மைய உற்பத்தி முறைகள் மோட்டார் பிளஸை பெயர் நாமத்தை நிலைப்படுத்தல் மற்றும் மோட்டார் உப பெயர் நாமங்கள் ஆகியவற்றின் மூலம் பெயர் நாம செயலாற்றுகைகளை மேம்படுத்தல் • Tlie – UPS மூலமாக பாரிய காப்புறுதி கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தல் • வியாபார அபிவிருத்திகளுக்கு உதவும் முகமாக வினைத்திறன்மிக்க பங்கீட்டுப்பாட்டாளர்கள் ஈடுபாட்டு பொறிமுறைகளை விருத்தி செய்தல் • சிறப்பான பயன்பாட்டாளர் அனுபவங்களை வழங்குகின்ற மோட்டார் சாரா உற்பத்தி வகைகளுக்கான செயன்முறை புத்தாக்கங்களுக்காக சந்தைப்படுத்தல் உதவி • தாம் விரும்பிய வியாபார இலக்குகளை வினைத்திறன் மிக்க முறையில் அடையும் முகமாக தனிப்பட்ட அம்சங்கள் மற்றும் கூட்டுறவு விநியோக முறைகள் ஆகியவற்றை இலகுபடுத்துவதற்கு அவசியமானவற்றை வழங்குதல்	• எங்களது வாடிக்கையாளர்களது தேவைகளை துரிதமாக நிறைவேற்றும் முகமாக நாடளாவிய எமது அணுகல்களை வலுப்படுத்தல் • ஒட்டுமொத்த வியாபாரத் தொழிற்பாடுகளின் வினைத்திறனை விருத்தி செய்தல்: கொடுப்பனவு தெரிவுகள், சுய தெரிவுகள், இகாகூ இல் காணப்படுகின்ற பல்வேறு விதமான தகவல்களை அணுகிப் பெறுவதை இலகுபடுத்தல் • மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் ஈடுபாடு
2021 இல் முன்னேற்றம்	• எமது தொழிற்படையின் தன்மையை வலுப்படுத்தும் முகமாக ரூபாய் 2.4 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. • சகல விதமான ஊழியர்களுக்கும் இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் வழங்கப்படுவதை உதவும் முகமாக தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் உபாய முறை	• வர்த்தக ரீதியான வாகன உரிமையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக மேலதிக நன்மைகளை வழங்கும் முகமாக வர்த்தக ரீதியான வாகனங்களை பயன்படுத்துபவர்களுக்காக "மோட்டார் பிளஸ் வர்த்தகம்" அறிமுகம் செய்தல் • வாடிக்கையாளர்களது தேவைகளை மேலும் சிறப்பாக வழங்கும் முகமாக "வியாபார கழகம்" உற்பத்தியின் கீழ் தற்போது காணப்படுகின்ற நன்மைகளை மேலும் மேம்படுத்தல் • கோவிட்-19 இன் காரணமாக எமது வாடிக்கையாளர்களின் புதிதாக விருத்தி செய்யப்பட்ட தேவைப்பாடுகளை உள்ளடக்கும் முகமாக சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் தங்கல் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நன்மைகளை மேம்படுத்தல் • பௌத்த மதகுருமார் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரது தேவைகளை நிறைவேற்றும் முகமாக நாகராஜா என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் தங்குதல் தொடர்பான உற்பத்தியை ஆரம்பித்தல் • விற்பனைசார் படைகளின் உற்சாகத்தை அதிகரிக்கும் முகமாக போட்டிகளை நடாத்துதல் • மோட்டார் வாகனம் சாராத வியாபாரங்களுக்காக பல்வேறு விற்பனை சார் முன்னெடுப்புகளை ஆரம்பித்தல் • சமூக வலைதளங்கள் மூலம் துரிதமாக இணைப்புகளை ஏற்படுத்தி வியாபார தொழிற்படை மற்றும் விற்பனை முகாமைத்துவங்களை முன்னெடுக்கும் முகமாக இணையம் மூலமாக உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தலைமுறை சார்ந்த பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல்	• 16 பொதுச் சேவை மையங்கள் இன் கிளை ஆளுகை கட்டமைப்பு மீளாய்வுகள் 2021 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்டது. • வியாபார தொழிற்பாடுகளில் வினைத்திறனை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன • எமது வியாபாரங்களின் சகல அம்சங்களிலும் ஆகக் குறைந்த தொழிற்பாட்டு தராதரங்களை பேணும் முகமாக: கோரிக்கைகளை தீர்த்தல் மற்றும் உதவிச் சேவைகள் • மோட்டார் கோரிக்கை செயன்முறைகளை டிஜிட்டல் மயப்படுத்தியமை
2022 ஆம் ஆண்டிற்கான இலக்குகள்	• குறைவாக சேவைகள் கிடைக்கின்ற பிரதேசங்களுக்கு இகாகூ இன் கிளை வலையமைப்பை விருத்தி செய்யும் முகமாக முதலீடுகளை மேற்கொள்ளல் • குறைவான செலவு கிளை மாதிரிக்கு செல்லல் • எமது வாடிக்கையாளர்களுக்கு மாறுபட்ட பெறுமானங்களை வழங்குகின்ற அதேவேளை பெயர் நாம அங்கீகாரத்தை பேணல்		

உபாய ரீதியான முன்னுரிமைகள்

ஆயுள் வியாபாரம்

	வியாபாரங்கள்	சந்தைப்படுத்தல்	வினைத்திறன் மேம்பாடு
செயல்படுத்தக்கூடிய முன்னெடுப்புகள்	• பொதுவான வழிமுறைகளை பயன்படுத்தி எந்த இடத்திலும் எங்கும் காணப்படுகின்ற எமது விற்பனை தொழிற்படையுடன் இணைக்கும் முகமாக தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் உபாயமுறைகளுக்கு உதவுதல் • அதிக விற்பனை வளர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக முகவர்களுடனான ஈடுபாட்டினை அதிகரித்தல்	• ஆயுட் கால குடை பெயர் நாமம் மற்றும் உற்பத்தி பெயர் நாமங்களை வலுப்படுத்தல் • ஆயுட் கால உற்பத்தி பொதிகளை மீளாய்வு செய்தல் மற்றும் புதிய வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் அவற்றோடு சார்ந்த அம்சங்களை மீள் ஒழுங்கமைத்தல் • விநியோக முறைகளுக்கு உதவுதல் மற்றும் டிஜிட்டல் பயன்பாட்டினை விருத்தி செய்தல்	• எமது சேவைகளின் தன்மை மற்றும் செயன்முறை தானியங்கிப்படுத்தலை மேம்படுத்தும் முகமாக வாடிக்கையாளர் தொடு தளங்களை டிஜிட்டல் மயப்படுத்தல் • விற்பனைகளுடன் தொடர்புடைய விடயங்களை வெற்றி கொள்ளும் முகமாக எமது தொழிற்படையின் சேவையாற்றும் வினைத்திறன்களை மேம்படுத்துவது தொடர்பான முதலீடுகள் • டிஜிட்டல் மயப்பட்ட ஆயுட்காப்புறுதி பிரேரணை படிவங்களை அறிமுகம் செய்தல் • இடர் காப்பீடு தொடர்பான விடயங்களை புதுப்பித்தல் • கோரிக்கை செயன்முறைகளை புதுப்பித்தல்
2021 ஆம் வருடத்திற்கான முன்னேற்றங்கள்	• துரித வளர்ச்சியினை உறுதிப்படுத்தும் முகமாக எதிர்பார்க்கப்பட்ட FP மற்றும் FYP இனை உருவாக்குதல் • மாதத்திற்கு 03 என்ற முறையில் ஆகக் குறைந்த உற்பத்திகளை பேணும் முகமாக செயற்படுத்தல்கள் மூலம் FP மற்றும் NOP நோக்கங்களை அடைதல் • விற்பனை தொழிற்படையை முன்னெடுக்கும் முகமாக முகவர் ஈடுபாடுகளை அதிகரித்தல்	• ஏற்கனவே அறியப்பட்ட பிரகுன மற்றும் சயஇசுறு ஆகியவற்றை பிரதான சந்தை அம்சங்களுடன் இணங்கச் செய்தல் மற்றும் தேவையை அடிப்படையாகக் கொண்ட விற்பனை இலகுபடுத்தல் ஆகியவற்றுக்காக முன்னதாக பணம் மற்றும் துரித முதலீடுகள் ஆகியவற்றை மீள் பெயர் நாமமிடல் மற்றும் மீள் ஆரம்பித்தல் • குறுகிய கால முதலீட்டு தேவைப்பாடுகளை இனங்காணல் மற்றும் 02 வருட காப்புறுதி திட்டமான யஸாஸ் இனை ஆரம்பித்து வினைத்திறன்மிக்க சந்தைப்படுத்தலை மேற்கொள்ளல் • பிரதான உற்பத்தி பொருட்களை டிஜிட்டல் பிரேரணை முறை மூலம் ஆரம்பித்தல், அதன் மூலம் இணைய மூலமான விற்பனைகளை இயலச் செய்தல் மற்றும் வாடிக்கையாளர் மற்றும் ஆலோசகர் சௌகரியங்களையும் மேற்கொள்ளல்	• இடர் காப்பீடு, சேவைகள், கோரிக்கைகள் தொடர்பில் online செயன்முறைகளை விருத்தி செய்தல் • வாடிக்கையாளர் செயலி மூலம் ஆயுள் போனஸ் சான்றிதழ்களை தரமிறக்கம் செய்வதற்கான வசதிகளை வழங்குதல் • ஆயுட் காப்புறுதி பிரேரணைகளை டிஜிட்டல் மூலம் சமர்ப்பித்தல் • இடர் காப்பீடு சேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான செயன்முறைகளை மேம்படுத்தல் • இடர் காப்பீடு, காப்புறுதியைப் பெற்றுக் கொண்டவர் தொடர்பான சேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் மேம்பட்ட சேவை தராதரங்களை அறிமுகம் செய்தல்
இலக்குகள் 2022	• எமது வியாபாரங்களின் உற்பத்தி மற்றும் தன்மை மேம்பாட்டினை மேலும் சிறப்பாக்கும் முகமாக புதிய டிஜிட்டல் தீர்வுகளை இனங்கண்டு துரித டிஜிட்டல் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல் • பங்குலாபத்தை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதித் திட்டத்தினை விருத்தி செய்தல் • மீள் காப்புறுதி தொழிற்பாடுகளை மீள் பார்வைக்கு உட்படுத்தல் • டிஜிட்டல் பிரேரணை படிவ பயன்பாட்டினை மேம்படுத்துதல் • காப்பீட்டு பத்திரம் தொடர்பான ஆவணங்களை டிஜிட்டல் படிவம் மூலம் அனுப்புதல் (e-policy) • டிஜிட்டல் மீடியா மூலம் வாடிக்கையாளர்களுக்கான அறிவுறுத்தல்களை அனுப்புதல் • வாடிக்கையாளர் செயலியில் காணப்படும் அம்சங்களை மேம்படுத்தல்		

முகாமைத்துவ கருத்துகள்

48 - தொழிற்பாட்டு சூழல்
49 - நிதி சார் மூலதனம்
54 - உற்பத்தி மூலதனம்
58 - புலமை மூலதனம்
62 - மனித மூலதனம்
70 - சமூக மற்றும் தொடர்பு முறை மூலதனம்
87 - இயற்கை மூலதனம்

WIN

நாம் வெற்றிகளையும் மற்றும்
எமது கூட்டு வளர்ச்சிக்கு
மூலக் காரணமாக
இருந்த மக்களையும்
கொண்டாடுகின்றோம்.

தொழிற்பாட்டு சூழல்

இலங்கைப் பொருளாதாரம்

கடந்த வருடத்தில் பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட அனுபவக் குறைவுகள் காணப்பட்ட பொழுதிலும் கூட இலங்கைப் பொருளாதாரமானது வருடத்தின் முதல் அரையாண்டு காலப் பகுதியில் உறுதியாக மீட்சி பெற்றது. பிரதான பொருளாதார துறைகளில் காணப்பட்ட பரந்ளவிலான வளர்ச்சியின் உதவியுடன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் உண்மையான பொருளாதார வளர்ச்சி 8% இனால் அதிகரித்தது. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மற்றும் கொள்கை ரீதியான தூ ண்டுதல்கள் மற்றும் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உதவிகள், நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி பிரச்சாரங்களின் காரணமாக ஒட்டுமொத்தத்தில் ஏற்பட்ட "புதிய சாதாரண நிலை" ஆகியனவும் இவற்றிற்கு காரணிகளாக அமைந்தன.

வருடத்தின் இரண்டாவது அரையாண்டு காலப் பகுதியில் கோவிட்-19 அதிகரித்து காணப்பட்டமையின் காரணமாக நாட்டில் முடக்கங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டது. இதன் காரணமாக கோவிட்-19 பெருந்தொற்று பரவுவதை தடுக்கும் முகமாக நடமாட்டம் தொடர்பான மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பெருந்தொற்று இக்காலப்பகுதியில் தீவிரமாகக் காணப்பட்டது. அன்றாட வாழ்க்கை மற்றும் வியாபார செயற்பாடுகள் போன்றன மீண்டும் பாதிக்கப்பட்டன, ஏற்கனவே முதலாவது தாக்குதலினால் பாதிக்கப்பட்ட பொருளாதாரமானது மீண்டும் பல தாக்கங்களை எதிர்கொண்டது. இதன் காரணமாக வியாபாரப் பற்றாக்குறை அதிகரித்தது. உள்ளாசப் பயணத்துறை மற்றும் வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புதல் ஆகியவற்றிலிருந்து ஏற்பட்ட பின்னடைவுகளின் காரணமாக டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி கண்டது. வெளிநிலை துறைகளில் பாதிப்புறும் தன்மை அதிகமாகக் காணப்பட்டதன் காரணமாக நிதிசார் முறைகளில் பல அழுத்தங்கள் ஏற்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. உள்நாட்டில் பண வீக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்தன. வேலை வாய்ப்பின்மையும் சாதாரண சராசரிக்கு மேல் காணப்பட்டதுடன் தொழிற்சந்தையிலும் நிச்சயமற்ற தன்மை காணப்பட்டன. இத்தகைய நிலைமைகளுக்கு மத்தியில் முதலீட்டாளர்களின் நம்பிக்கையும் கணிசமான அளவு வீழ்ச்சி கண்டது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தேசிய கணக்குகள் மதிப்பீட்டு ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஆண்டில் இலங்கை பொருளாதாரம் 3.7% இனால் வளர்ச்சி கண்டது. ஆனால் 2020 ஆம் ஆண்டில் இது உண்மையில் 3.6% ஆக காணப்பட்டது. விவாசயம், கைத்தொழில்துறை, சேவைகள், காடுகள் மற்றும் மீன்பிடித்துறை உள்ளடங்கலாக சகல விதமான பிரதான துறைகளும் இதற்கு பங்களிப்பு செய்தன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

காப்புறுதித் துறை

இலங்கையில் காப்புறுதித் துறையானது 27 கம்பனிகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இவற்றுள் 13 நீண்ட கால அடிப்படையிலான காப்புறுதி கம்பனிகள், 12 பொது காப்புறுதி கம்பனிகள், 02 கம்பனிகள் நீண்ட கால அடிப்படையிலும் பொது காப்புறுதி வியாபாரங்களிலும் ஈடுபட்டு வருகின்றன. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சொத்துக்களின் அடிப்படையில் துறை சார்ந்த பதிவுகள் மத்திமமாக காணப்பட்டன. மொத்த சொத்துக்கள் 11.4% ஆக வளர்ச்சி கண்டது. இது ரூபாய் 879.8 பில்லியனை அடைந்தது. வருட இறுதியில் காணப்பட்ட வளர்ச்சி இதுவாகும். மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணமானது 12.2% இனால் அதிகரித்தது. இது 233.8 பில்லியன் ஆகும். ஏற்கனவே 208.2 பில்லியனாக காணப்பட்டது. மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதிக்கான புரீ நீண்ட கால காப்புறுதி உப பிரிவு மற்றும் பொது காப்புறுதி உப பிரிவு ஆகியன முறையே 21.1% இனாலும் 3.6% இனாலும் அதிகரித்தன.

வருட காலப் பகுதியின் பொழுது இத்துறையின் இலாபமானது குறைவடைந்தது. வரிக்கு முன்னரான இலாபம் 4.9% இனால் குறைவடைந்தது. நீண்ட கால காப்புறுதி உப பிரிவின் வரிக்கு முன்னரான இலாபம் 16.1% இனால் அதிகரித்தது. அதேவேளை பொது காப்புறுதி உப பிரிவில் இது 20.7% இனால் வீழ்ச்சி கண்டது.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுழுயு மற்றும் சுழுநு நீண்ட கால காப்புறுதி உப துறை அதிகரித்து காணப்பட்டது. அதேவேளை சுழுயு மற்றும் சுழுநு பொது காப்புறுதி உப பிரிவானது மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் வீழ்ச்சி கண்டது.

2021 ஆம் ஆண்டின் நீண்ட கால காப்புறுதி உப பிரிவின் மூலதனம் தொடர்பான மொத்த சொத்துக்கள் 20.9மூ இனால் வீழ்ச்சி கண்டது. 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுயில் இது 22.1% ஆக காணப்பட்டது, பொது காப்புறுதியின் உப பிரிவு பற்றிய முதலீடு தொடர்பான மொத்த சொத்துக்கள் 50.4% இனால் 2021 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அதிகரித்தது. 2020 ஆம் ஆண்டில் 48.3% ஆக காணப்பட்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

காப்புறுதித் துறையினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளானது தொடர்ச்சியாக அரசாங்க பிணையங்களை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க பிணையங்கள் தொடர்பான நீண்ட கால காப்புறுதி உப பிரிவு சொத்துக்களானது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருட காலப் பகுதியின் பொழுது 46.1% இனால் வீழ்ச்சி கண்டது. அதேவேளை 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அரசாங்க பிணையங்கள் தொடர்பான பொது காப்புறுதி உப பிரிவு சொத்துக்களின் பங்கு 45.7% இனால் அதிகரித்தது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை

நிதிசார் மூலதனம்



நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- 21.8% இனால் வருமான வளர்ச்சி
- 9.7% இனால் புரீ வளர்ச்சி
- நிதிசார் மூலதனம் வருமான வளர்ச்சி 41.7%
- வரி அடிப்படையில் அரசாங்கத்திற்கான பங்களிப்பு வளர்ச்சி 61%

- உள்ளூர் காப்புறுதித் துறை அதிகூடிய போனஸ் விநியோகம் 9,836 மில்லியன்
- கம்பனியின் மொத்த சொத்துக்கள் வளர்ச்சி 14%

- "சுரக்ஷா" சிறுவர்களுக்கான காப்புறுதி காப்பீட்டு பத்திரத்தின் இலகுபடுத்துநர்
- மோட்டார் காப்புறுதியின் சந்தைப்படுத்தல் தலைமை
- மதகுருமார்களுக்கான நாகராஜா விசேட சுகாதார காப்புறுதி

மீளாய்விற்கு உட்பட்ட வருட காலப் பகுதியின் பொழுது கம்பனியின் நிதி ரீதியான செயலாற்றுகை மற்றும் நிதிசார் நிலை ஆகியவற்றை இகாகூ இன் நிதிசார் மூலதனம் சமர்ப்பிக்கின்றது. நிதி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்படும் கம்பனி என்ற முறையில் அரசு மற்றும் ஒழுங்கமைப்பு அதிகாரசபைகளினால் குறிப்பிடப்பட்ட பொறுப்புக் கூறல் மற்றும் நிதி ரீதியான ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இணங்க இகாகூ நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேலும், நிதி ரீதியான இடர்கள், நிதி ரீதியான அறிக்கையிடல், பொறுப்புக் கூறல் ஆகியவற்றை முகாமைத்துவம் செய்யும் முகமாக நிதி சார் ஆளுகை தொடர்பான முறையான முறைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இகாகூ பேணுகின்றது.

பிரதான புள்ளிவிபரம் முக்கிய விடயங்கள்

	2021	2020	மாற்றம் %
GWP (ரூபாய்)	43,231	39,421	9.7
PAT (ரூபாய்)	10,041	5,788	73.5

நிதிசார் மூலதனம்

மோலோட்டப் பார்வை

மூலதனம் தொடர்பில் கவர்ச்சிகரமான வருமானத்தை பெற்றுக் கொள்ளும் முகமாக கம்பனியின் நிதிசார் மூலதன குழுமத்தை அறிவார்ந்த முறையில் முகாமைத்துவம் செய்ததன் மூலம் எமது பிரதான பங்கீட்டுப்பாட்டாளர்கள் மற்றும் காப்புறுதிப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர்கள் ஆகியோரது நலநன ஆரம்பத்திலிருந்தே இகாகூ இனால் பாதுகாக்க முடிந்தது. வியாபாரத்தை மேம்படுத்தல் மற்றும் பங்கீட்டுப்பாட்டளர்களது பங்களிப்பை ஒழுக்கம் சார் மற்றும் அறிவார்ந்த முறையில் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலம் வியாபாரத்தை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்ததன் மூலம் கம்பனியின் இறுதி இலக்கை அடைவதை உறுதி செய்யும் முகமாக நிதிசார் மூலதனத்தில் ஏற்பட்ட நிலைபேறான வளர்ச்சி மிகவும் முக்கியமான அம்சமாகும்.

நிதி ரீதியான பெறுபேறுகள் - கூட்டிணைந்த வியாபார செயலாற்றுகை

2021 ஆம் நிதி ஆண்டில் இகாகூ ஆனது காத்திரமான பெறுபேறுகளை அடைந்தது. வருமானம் மற்றும் மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணம் ஆகியன முறையே ரூபாய் 64,062 மில்லியன் (52,616 மில்லியன் - 2020 இல்) மற்றும் ரூபாய் 43,231 மில்லியன் (39,421 மில்லியன் - 2020 இல்) 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது முறையே 21.8%, 9.7% வளர்ச்சியைக் காட்டுக்கின்றது. நிதிசார் முதலீடுகளிலிருந்தான முதலீட்டு வருமானமானது வருடத்திலிருந்து வருடத்திற்கு 41.7% ஆக அதிகரித்ததுடன் 2021 ஆம் நிதியாண்டில் 23,392 மில்லியன் ஆகும் (2020 இல் ரூபாய் 14,511 மில்லியன்). 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உரிமை முதல் சந்தையில் ஏற்பட்ட மிகச் சிறப்பான செயலாற்றுகைகளே இத்தகைய அதிகரிப்பிற்கான பிரதான காரணியாகும். 2021 டிசம்பர் 31 இல் வருடத்திலிருந்து வருத்திற்கான கம்பனியின் மொத்த சொத்துக்கள் 13.9% இனால் அதிகரித்தது. இது ரூபாய் 268,436 மில்லியன் ஆகும் (235,630 மில்லியன் - 2020 இல்). 2021 ஆம் ஆண்டில் இகாகூ ஆனது வரிக்கு முன்னரான இலாபமாக ரூபாய் 11,725 மில்லியனை பதிவு செய்தது. இது வருடத்திலிருந்து வருத்திற்கான வளர்ச்சி 47.1% ஆகும். 2020 ஆம் ஆண்டில் 7,972 மில்லியன் பதிவானது. அதேவேளை வரிக்கு பின்னரான இலாபம் 2021 ஆம் நிதியாண்டில் 10,041 மில்லியன் (5,788 மில்லியன் - 2020 இல்) ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வளர்ச்சியானது 73.5% ஆகும். கடந்த வருடம் 9.2% ஆக காணப்பட்ட உரிமை முதல் தொடர்பான இலாபமானது பங்களிப்பின் மீதான வருமானம் இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் உரிமை முதலுடன் தொடர்புடைய இலாபமானது பங்களிப்பின் மீதான வருமானம் 13.4% ஆகும். வரி என்ற அடிப்படையில் இகாகூ இன் அரசாங்கத்திற்கான பங்களிப்பு ரூபாய் 3,846 மில்லியன் ஆகும் (2021 இல்) (2020 இல் 2,388 மில்லியன்).

வரிக்கு பின்னரான இலாபம் (PAT)

ரூபாய் மில்.



நிதி ரீதியான முதலீடுகளிலிருந்து முதலீட்டு வருமானம்

ரூபாய் மில்.



கூட்டிணைந்த மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம்

ரூபாய் மில்.



மொத்த சொத்துகள்

ரூபாய் மில்.



ஆயுட் காப்புறுதி வியாபாரம்

நாட்டில் நிலவிய குறைவான பொருளாதார செயற்பாடுகள் உள்ளடங்கலாக கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பாதகமான பொருளாதார ரீதியான தாக்கங்களுக்கு மத்தியிலும், உள்ளூர் காப்புறுதித் துறையில் மிகப் பெரிய முன்னெப்போதும் இல்லாத போனஸ் தொகையை பிரகடனப்படுத்தியதன் மூலம் இகாகூ ஆனது வரலாற்று ரீதியான சாதனையை பதிவு செய்தது. 2021 ஆம் நிதியாண்டு தொடர்பில் ஆயுட் காப்புறுதியில் பங்குபற்றிய காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட மொத்த போனஸ் தொகை ரூபாய் 9,836 மில்லியன் ஆகும். கடந்த வருடங்களில் இகாகூ பதிவு செய்த 8,694 மில்லியனை விட இத்தொகை அதிகமாகும்.

2021 ஆம் நிதியாண்டில் இகாகூ இன் ஆயுட் காப்புறுதி வியாபாரமானது மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணமாக மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ரூபாய் 21,976 மில்லியன் ஆகும் (2020 இல் ரூபாய் 19,257 மில்லியன்). இது வருடத்திலிருந்து வருடத்திற்கான வளர்ச்சியாக 14.1% இனை காட்டுவதுடன் 05 வருட அடிப்படையில் 15.1% ஆகும். நிதிசார் முதலீடுகளிலிருந்தான முதலீட்டு வருமானமானது ஆயுட் காப்புறுதி வியாபார துறையில் வருடத்திலிருந்து வருடத்திற்கு 43.7% இனால் அதிகரித்தது. 2021 ஆம் நிதியாண்டில் 19,988 மில்லியன் ஆகும். கடந்த நிதியாண்டில் இது 13,910 மில்லியன் ஆகும். மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் ஆயுள் நிதியானது 18,572 மில்லியனாக வளர்ச்சி கண்டது. 2021 டிசம்பர் 31 இல் இது ரூபாய் 152,585 மில்லியன் ஆகும் (2020 இல் 134,014 மில்லியன்). வருடத்திலிருந்து வருடத்திற்கான வளர்ச்சி 13.9% ஆகும். வரிக்கு பின்னரான ஆயுட் காப்புறுதி வியாபார இலாபமானது (ஆயுள் நிதியத்திற்கு மாற்றுவதற்கு முன்னர்) 2021 ஆம் நிதியாண்டில் ரூபாய் 23,833 மில்லியன் ஆகும் (2020 இல் ரூபாய் 18,264 மில்லியன்). வருடத்திலிருந்து வருடத்துக்கான இந்த பாராட்டத்தக்க அதிகரிப்பு 30.5% ஆகும்.

மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் - ஆயுள்

ரூபாய் மில்.



வரிக்கு பின்னரான இலாபம் (ஆயுள் நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னர்)

ரூபாய் மில்.



நிதி ரீதியான முதலீடுகளிலிருந்து முதலீட்டு வருமானம் - ஆயுள்

ரூபாய் மில்.



நிதிசார் மூலதனம்

பொதுக் காப்புறுதி வியாபாரம

இலங்கையின் தேசிய காப்புறுதி சேவைகளின் வழங்குநர் என்ற முறையிலும் பல விடயங்களில் முன்னணியாளர் என்ற முறையிலும் இகாகூ இற்கு மீண்டும் "சுரக்ஷ" சிறுவர்களுக்கான காப்புறுதி காப்பீட்டு பத்திரத்தின் இலகுபடுத்துநர் அந்தஸ்து வழங்கப்பட்டது, இதன் மூலம் இலங்கையில் உள்ள சகல மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்பட்ட காப்புறுதி திட்டத்தினை கம்பனியினால் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தன.

பெருந்தொற்றுடன் தொடர்புடைய சவால்களினால் பாதிக்கப்பட்டமையின் காரணமாக பொது காப்புறுதி வியாபாரமானது 2021 ஆம் நிதியாண்டில் மத்திம வளர்ச்சியை பதிவு செய்தது. மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணமானது வருடத்திற்கு வருடம் 5.4% இனால் வளர்ச்சி கண்டது. 2020 ஆம் ஆண்டில் இது 20,163 மில்லியன் ஆகும். அத்தோடு 2021 ஆம் நிதியாண்டில் இது 21,255 மில்லியன் ஆகும். கடந்த 05 வருடங்களாக (2017-2021), மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணமானது அதாவது பொது காப்புறுதி வியாபாரங்களின் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆனது தொடர்ச்சியாக மூலதன போதுநிலை விகிதாசாரம் 2.9% ஆக பேண முடிந்தது. பொது வியாபாரங்களின் நிதி முதலீடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற முதலீட்டு வருமானமானது ரூபாய் 3,404 மில்லியன் ஆகும் (ரூபாய் 2,601 - 2020). வருடத்திலிருந்து வருடத்திற்கான அதிகரிப்பு 30.9மூ ஆகும். உரிமை முதல் சந்தையில் காணப்பட்ட அதிஉயர்வான செயலாற்றுகையே இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும். பொது காப்புறுதி தொடர்பான வரிக்கு பின்னரான இலாபம் 2021 ஆம் நிதியாண்டில் 5,057 மில்லியன் ஆகும். இது 38.8% வருடத்திலிருந்து வருடத்திற்கான அதிகரிப்பாகும். 2020 ஆம் ஆண்டில் ரூபாய் 3,643 மில்லியன் பதிவு செய்யப்பட்டது.

பல தொடர் வருடங்களாக மோட்டார் வாகன காப்புறுதியின் சந்தை தலைவர் என்ற முறையில் இகாகூ ஆனது 2021 ஆம் நிதியாண்டில் மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் பெறுமதியாக 11,673 மில்லியனை பதிவு செய்தது. அதற்கு முந்திய வருடங்களில் ரூபாய் 11,806 மில்லியன் காணப்பட்டது, மோட்டார் காப்புறுதியில் காணப்பட்ட 1.1% வளர்ச்சி குறைவானது பொருளாதார செயற்பாடுகளின் முடக்கம் மற்றும் பெருந்தொற்றின் காரணமாக காணப்பட்ட பலவீனமான வியாபார உணர்வுகள் ஆகும்.

மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் - பொது

ரூபாய் மில்.



வரிக்கு பின்னரான இலாபம் - பொது

ரூபாய் மில்.



நிதி ரீதியான முதலீடுகளிலிருந்து முதலீட்டு வருமானம் - பொது

ரூபாய் மில்.



ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களின் நிலைபேறு தன்மை

RII சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் பிரகாரம் காப்புறுதியாளர்கள் காத்திரமான கடனிறுக்கும் ஆற்றல் / இடர் மைய மூலதன போதியளவு விகிதங்கள் ஆகியவற்றை ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களில் பேணுதல் அவசியமாகும்.

பல தொடர் வருடங்களாக இகாகூ இனால் இடர் அடிப்படை மூலதன போதியளவு விகிதத்தை தேவைப்பட்ட அளவை விட அதிகமாக பேண முடிந்தது. 2020 ஆம் நிதியாண்டில் 459% ஆக காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் இடர் அடிப்படை மூலதன போதியளவு விகிதமானது ஆயுள் காப்புறுதி வியாபாரம் தொடர்பில் 501% ஆக காணப்பட்டது. 2020 ஆம் நிதியாண்டில் 223% ஆக காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் நிதியாண்டில் இடர் அடிப்படையிலான மூலதன போதியளவு வீதமானது பொது காப்புறுதி வியாபாரங்கள் தொடர்பில் 244% ஆக பதிவு செய்தது.

தயாரிப்பு மூலதனம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- வேறிடத்தில் அமைக்கப்பட்ட கிளைகள் - 04
- புதுப்பிக்கப்பட்ட கிளைகள் - 05

- நாடெங்கிலும் பரந்து காணப்படுகின்ற உறுதியான கிளை வலையமைப்பு

இகாகூ இன் தயாரிப்பு மூலதனத்தை தோற்றுவிக்கின்ற உணரக்கூடிய நிலையான சொத்துக்களானது எமது அலுவலகங்கள், கிளைகள், டிஜிட்டல் தளங்கள் மற்றும் ஏனைய வலையமைப்புகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இதன் மூலம் நாடெங்கிலும் பரவிக் காணப்படுகின்ற எமது வாடிக்கையாளர்கள் இகாகூ இன் உற்பத்திகள் மற்றும் சேவைகளை இலகுவாக பெற்றுக் கொள்ள முடியும்.

முக்கிய புள்ளிவிபரம் சார்ந்த விடயங்கள

நிலையான சொத்துக்களில் முதலீடு (ரூபாய் '000)	2021 ஆம் நிதியாண்டு	2020 ஆம் நிதியாண்டு	மாற்றம்
நிலையான சொத்துக்களுக்கு மேலதிகமாக சேர்க்கப்பட்டவைகள்	256,145	231,437	11%
நிரந்தர சொத்துக்களின் NBV	12,737,635	10,867,358	17%

எமது தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பெறுமான உருவாக்கம்

143 கிளைகள்	நாடு முழுவதிலும் இகாகூ ஆனது உறுதியான கிளை வலையமைப்புகளை பேணி வருகின்றது.
55 முகவர் வியாபாரங்கள் அபிவிருத்தி நிலையங்கள் (யுடீனுஊள) / 2 வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் (CSCs)	நாடு முழுவதிலும் உறுதியான வெளிக்கள வசதிகளை நாம் தாபித்துள்ளோம்.
லங்கா ஹொஸ்பிடலில் ஒரு கருமபீடம்	அணுகிப் பெறலை நாம் மேலும் வலுப்படுத்தியுள்ளோம்.
ஒரு அழைப்பு நிலையம்	காப்புறுதியுடன் தொடர்புடைய விடயங்களில் வாடிக்கையாளர்களுக்கு உதவும் முகமாக எம்முடன் தொடர்பு கொள்ளும் முகமாக அர்ப்பணிக்கப்பட்ட தொலைபேசி வசதி
www.srilankainsurance.com	எமது கூட்டுறவு இணையத்தளம் மூலம் 24 மணித்தியாலங்களும் பல்வேறு வகையான சேவைகள் மற்றும் உற்பத்திகளை பெற்றுக் கொள்ள முடியும்.
கலப்பு முறைகள்	இகாகூ இன் ஒட்டுமொத்த சந்தை வாய்ப்புகளை கலப்பு முறைகள் அதிகரிப்பதற்கு உதவுகின்றன.
தொலைபேசி மூலமாக கட்டணம் செலுத்தல்	பல்வேறு வகையான கொடுப்பனவுகளை மொபைல் மூலமாக இலகுவாக வழங்குவதற்கான வாய்ப்புகளை எமது உற்பத்தி சார் மூலதனத்திற்கு எங்களுடைய பங்காளர் வலையமைப்புகள் வழங்கி வலுப்படுத்தியுள்ளன.
வாடிக்கையாளர் செயலி	எமது உற்பத்திகளை இலகுவாக அணுகுவதற்கும் 24 மணித்தியாலமும் சேவைகளை வழங்குவதற்கான வாய்ப்புகளை எமது வாடிக்கையாள் செயலி இலகுபடுத்துகின்றது.

எமது கிளை வலையமைப்புகள்

2017 இற்கு முன்னர் கிளைகள்	123
2017 இல் புதிய கிளைகள்	7
2018 இல் புதிய கிளைகள்	5
2019 இல் புதிய கிளைகள்	6
2021 இல் புதிய கிளைகள்	1
2021 இல் புதிய ABDC	38
2022 இல் புதிய ABDC	1
2022 இல் புதிய கிளைகள்	1
2022 இல் ABDC ஆக மாற்றப்பட்ட CSC கள்	16
CSC கள்	2
கருமபீடங்கள்	1
மொத்தம்	**201**

தயாரிப்பு மூலதனம்



மாகாணம்	கிளைகளின் எண்ணிக்கை	கிளைகள்
வட மத்திய	14	அனுராதபுரம், ஹொரவபொதான, பாதவிய, கெகிராவ, ஹிக்குரக்கொட, தெஹியத்தகண்டிய, கதுருவெல, அரலகன்வில, பகமூன, மதவாச்சி
		ABDC - மெதிரிகிரிய, நொச்சியாகம, ஹபரன, மஹஒய
ஊவா	12	பதுளை, வெளிமடை, பண்டாரவெல, மஹியங்கனை, நுவரெலியா, ஹட்டன், வெல்லவாய, மொனராகல, அம்பாரை, பிபிளை
		ABDC - பஸ்ஸர, சியபலாண்டுவ
கிழக்கு	7	மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, அக்கரைபற்று, கந்தளை
		ABDC - பொத்துவில், களுவான்சிகுடி
தென் 1	19	காலி, அம்பலங்கொடை, எல்பிட்டி, தல்கஸ்வெல, உடுகம, பத்தேகம, களுத்துறை, ஹொரணை, மதுகம, பண்டாரகம, பாணதுரை, அளுத்கம
		ABDC - தனிபொல்கஹ, ஹபராதுவ, ஹிக்கடுவ, கராபிட்டிய, பிடிகல, ஊரகஹ, பதுரெலிய

மாகாணம்	கிளைகளின் எண்ணிக்கை	கிளைகள்
தென் 2	21	ஹம்பந்தோட்டை, பெலிஅத்த, அம்பலந்தோட்டை, திஸ்ஸமஹாராம, தங்காலை, மாத்தறை, அக்குரெஸ்ஸ, திக்வெல்ல, வெலிகாமம், தெனியாய, ஹக்மன, நெலுவ
		ABDC - இமதுவ, மித்தெனிய, ஊருபொக்க, கம்புறுபிட்டிய, கெகனுதுர, தெய்யந்தர, சூரியவெவ, வலஸ்முல்ல, மொரவக்க
இரத்தினபுரி	12	இரத்தினபுரி, அவிஸ்ஸாவெல்ல - ஆயுள், அவிஸ்ஸாவெல்ல - பொது, பலங்கொடை, கஹவத்த, எம்பிலிபிட்டிய, கலவான, எஹலியகொட, பல்லேபெத்த, குவன்வெல்ல
		ABDC - தெரனியகல, ஹங்வெல்ல
வயம்ப 1	16	குருணாகல், குருணாகல் நகர், மல்சிறிபுர, நாரம்மல, ரிதிகம, ரம்புக்கன, வரகபொல, கிரிஉல்ல, பொல்கஹவெல, குளியாபிட்டிய
		ABDC - அலவ்வ, பன்னல, இப்பாகமுவ, பொல்பிதிகம, கடுபொல, ஹெட்டிபொல
வயம்ப 2	11	சிலாபம், புத்தளம், நிக்கவெரட்டிய, மஹோ, தம்புள்ளை, கலேவல, கல்கமுவ, வாரியபொல, தம்மட்டேகம, ஆனமடுவ
		ABDC - ஹிரிபிட்டிய
மேல் 1	9	பிட்டகோட்டே, பத்தரமுல்ல, நுகேகொட, கிருலபன, நகர் காரியாலயம், இரத்மலான, தெஹிவளை, மொரட்டுவ
		ABDC - மொரட்டுமுல்ல
மேல் 2	12	கடவத, கிரிபத்கொட, கொழும்பு மெட்ரோ - 1,2,3,4,5,6,7,10,11
		ABDC - களனி, தெல்கொட
மேல் 3	9	ஹோமாகம, கொட்டாவ, மாலபே, பிலியந்தல, அத்துருகிரிய, கடுவெல, மஹரகம, இங்கிரிய
		ABDC - பாதுக்க
மேல் 4	8	பொரல்லை, பெட்டா, கொடஹேன, பம்பலப்பிட்டி, வத்தளை, ராகம, கொடிகாவத்த
		ABDC - வெள்ளவத்த
மேல் வட பகுதி	22	கம்பஹ, வெயங்கொட, மினுவங்கொட, நிட்டம்புவ, யக்கல, நீர்கொழும்பு, கந்தானை, வெண்ணப்புவ, ஜாஎல, கொச்சிகடே, மாரவில
		ABDC - திவுல்பிட்டிய, பூகொட, கனேமுல்ல, கிரிந்திவெல, மீரிகம, மஹபாகே, தங்கொட்டுவ, வெலிவேரிய, உடுகம்பொல, ஊரபொல, கிரகில்லவெல
மத்திய	16	கண்டி, திகன, கண்டி நகர், மாத்தளை, கம்பளை, கட்டுகொஸ்தொட, மாவத்தகம, கேகாலை, பிலிமிதலாவ, ரிகிட்டகஸ்கட, மாவனெல்ல, நாவலப்பிட்டி
		ABCD - கலகெதர, புலத்கொஹுபிட்டி, அரநாயக்க, பேராதனை
வடக்கு	10	யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நெல்லியடி, முல்லைதீவு, மன்னார், சன்கனை, வவுனியா, சாவகச்சேரி
		ABDC - மல்லவி, சுன்னாகம்

மூலதன மேம்பாட்டு முன்னெடுப்புகள்

- **கிளைகளை விரிவாக்கி வேறு இடங்களில் அமைத்தல்**

இலங்கையிலுள்ள சகல முக்கிய நகரங்களிலும் தற்பொழுது இகாகூ காணப்படுகின்றது என்பதை கருத்திற் கொண்டு, எமது கிளைகளை விரிவாக்குவதற்கான உபாயமுறைகளை மிக துரிதமாக நகரமயமாகும் நகரங்களை மையமாகக் கொண்டு செயற்பட்டோம். இதன் அடிப்படையில் குறிப்பிட்ட பிரதேசம் ஒன்றில் காணப்படும் சனத்தொகை வீதத்தை கருத்திற் கொண்டு புதிய கிளைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை நிலையங்களை ஆரம்பிக்கின்ற பொழுது பொருத்தமான இடங்களில் கிளைகள் உருவாக்கப்பட்டன. இந்த அணுகுமுறையை வெற்றிகரமாக மேற்கொள்ளும் முகமாக கிளைகளை புதிய இடங்களில் அமைப்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக இகாகூ ஆனது அதே வகையான நெறிமுறைகளைப் பயன்படுத்தும்.

புதிய கிளைகள் - 2021

கிளை	முகவரி
அவிஸ்ஸாவெல-ஆயுள்	இல. 31, குடாகம வீதி, அவிஸ்ஸாவெல

புதிய கிளைகள் - 2022

கிளை	முகவரி
மதவாச்சி	வைத்தியசாலை முன் பக்கம், மதவாச்சி

கிளை புதிய இடம் - 2021

கிளை	முகவரி
தெனியாய	இல. 6, 1ஆம் மாடி, தெனியாய
களுத்துறை	இல. 326/2, பொடோபைன் கட்டிடம், களுத்துஜுற
பலங்கொடை	இல. 115/A, பென்ஸ் ரத்வத்தே மாவத்தை, பலங்கொட
பண்டாரவெல	இல. 393-2/1, ஜகொனிக் லேன்ட்மார்க் கட்டிடம், பதுளை வீதி, பண்டாரவெல

- **கிளை தொழிற்பாடுகளின் வினைத்திறனை மேம்படுத்தல்**

எம்மிடம் தற்சமயம் காணப்படுகின்ற கிளைகளின் வினைத்திறன் மற்றும் உரிமை முதல் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக இகாகூ ஆனது தொடர்ச்சியாக பல்வேறு விதமான சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. எமது கிளை வலையமைப்புகளின் பௌதீக ரீதியான உட்கட்டமைப்பை பேணுவதற்கான முன்னேற்றகரமான நிகழ்ச்சி திட்டமாக எமது கிளை "புத்துயிர்பளித்தல்" நிகழ்ச்சித் திட்டம் காணப்பட்டது

புதுப்பித்தல் - 2021

மாத்தளை
மாவத்தகம
மொனராகல
குருணாகல்
இல்லாகஸ்கந்த

- **டிஜிட்டல் பிரச்சன்னத்தை அதிகரித்தல்**

அண்மைக் காலங்களாக இகாகூ ஆனது தனது டிஜிட்டல் தளங்களை துரிதமாக விரிவாக்கியது, இதற்காக கூட்டுறவு இணையத்தளத்தில் இகாகூ வாடிக்கையாளர் தளம் ஒன்றினை ஆரம்பம் செய்தது. 2019 இல் இகாகூ இன் மொபைல் செயலி ஒன்றை ஆரம்பித்ததன் பின்னர் இது மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு முறைகளும் முறையாக தரம் உயர்த்தப்படுகின்ற அதேவேளையில் இவற்றின் ஒட்டுமொத்த பயன்பாடுகளும் மேம்படுத்தப்பட்டன, எமது டிஜிட்டல் அணுகலை விரிவாக்கம் செய்வதற்காக ஏனைய தெரிவுகளையும் எதிர்பார்த்திருக்கின்றோம். இகாகூ ஆனது பல்வேறு விதமான தொலைபேசி மூலமாக கொடுப்பனவு சார் தீர்வுகளை நோக்கி பயணித்ததுடன் ஏனைய கலப்பு தளங்களையும் உருவாக்கியது. இவற்றின் காரணமாக முக்கியமான வங்கிகள் மற்றும் டெலிகாஸ் ஆகியவற்றுடன் பெறுமதி சேர் உபாயமுறை தொடர்புகளை மேம்படுத்த முடிந்தது.

வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன்மிக்க சிறப்பான சேவைகளை வழங்கும் முகமாக சகல டிஜிட்டல் வசதிகளுடன் கூடிய இகாகூ சிறப்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

எதிர்கால திட்டம்

- குறைவாக சேவைகள் வழங்கப்படுகின்ற பிரதேசங்களை கருத்திற் கொண்டு இகாகூ கிளை வலையமைப்புகளை விரிவாக்குவதற்கான முதலீடுகள்
- செலவு குறைவான மாதிரி ஒன்றுக்கு மாறுதல்: நாம் வெற்றிகரமாக 16 CSC ஐ மேற்கொண்டோம். இதன் நிமித்தம் CSC ஐ முகவர் வியாபார அபிவிருத்தி நிலையங்களாக (ABDCs) மாற்றினோம். எதிர்காலத்தில் ஏனைய ஊளுஊகளையும் இவ்வாறு மாற்றுவதை நோக்காகக் கொண்டுள்ளோம்.
- ABDCs அதிகரித்தல்: இகாகூ இன் நாடளாவிய சேவைகளை அதிகரிக்கும் முகமாக திட்டவட்டமான முறையியல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட இடங்களில் புதிய நிறுவன வியாபார அபிவிருத்தி நிலையங்களை மேலும் தாபிப்பதன் மூலம் எமது கிளை வலையமைப்புகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.
- துரித டிஜிட்டல் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல்: குறைந்த செலவில் துரிதமாக வினைத்திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்தக்கூடிய டிஜிட்டல் தீர்வுகளை அடையாளம் காண்பதன் மூலம், எமது வியாபாரங்களின் உற்பத்தித்திறன் மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

புலமை சார் மூலதனம்

இகாகூ இன் புலமைசார் மூலதனமானது அதனது பல தசாப்த அனுபவம் மற்றும் அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் விரிவாக்கம் பெறுகின்றது. மேலும், எமது புலமை சார் மூலதனமானது தொழில்நுட்பம், காப்பீட்டு பத்திரங்கள், முறைகள், செயன்முறைகள், பெயர் நாமம் உரிமை முதல், இகாகூ இன் பெறுமதிகளை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற அறிவு மைய வளங்கள், தனது போட்டியாளர்களுக்கு எதிராக கம்பனிக்கு போட்டி சார்ந்த சாதகமான விடயங்களை வழங்கக்கூடியவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் விருத்தி செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைகளுக்கான முதலீடுகள் 21% இனால் வளர்ச்சியடைந்தது.

- மிகவும் பெறுமதியான பொது காப்புறுதி பெயர் நாமம்
- மிகவும் நேசிக்கப்படுகின்ற காப்புறுதி பெயர் நாமம்

புள்ளிவிபரம் சார்ந்த முக்கிய விடயங்கள்

முதலீடுகள்	2021	2020	மாற்றம்
தகவல் தொடர்பாடல் முறைகளில் விருத்தி	142.5 மில்லியன்	116.9 மில்லியன்	21.8%
அறிவு சார் தளத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	9.7 மில்லியன்	2.4 மில்லியன்	292%

எமது புலமை சார் மூலதனம்



உறுதியான பெயர் நாம உரிமை முதல்

1962 இல் தாபிக்கப்பட்டது என்ற முறையில் இகாகூ யே இலங்கையில் உள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப் பெரிய காப்புறுதிக் கம்பனியாகும், இதனால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற சொத்து தளமானது ரூபாய் 235 பில்லியன் ஆகும். உள்ளூர் காப்புறுதித் துறையில் மிகப் பெரிய ஆயுட் காப்புறுதியையும் கொண்டுள்ளது. வாடிக்கையாளர் மைய கம்பனியாக திகழ வேண்டும் என்பது இதன் பணி நோக்கங்களில் ஒன்றாகும். தனது 201 வலையமைப்புகள் மூலமும் ABDC மூலமும் எல்லா சந்தர்ப்பங்களிலும் புத்தாக்க ரீதியான காப்புறுதி சேவைகளை வழங்கி வருகின்றது.

பெயர் நாம் அடைவுகள

- தொடர்ச்சியாக நான்கு வருடங்களாக இலங்கை காப்புறுதித் துறையில் மிகவும் பெறுமதியான பொது காப்புறுதி பெயர் நாம நிதி வழங்கியது.
- பாரிய சிறு வியாபார கம்பனிகளுக்கு எதிராக போட்டியிட்டு "இலங்கையில் அதிகமாக நேசிக்கப்படும் காப்புறுதி பெயர் நாமம்" என்ற தரப்படுத்தலை இகாகூ பெற்றுக் கொண்டது.
- "இலங்கையில் வேலை செய்வதற்கு சிறப்பான இடம்" என்ற அங்கீகாரத்தை இகாகூ பெற்றுக் கொண்டது.

தனது சகல பங்கீட்டுபாட்டாளர்களுக்கும் எமது பெயர் நாம வாக்குறுதிகளை சிறப்பாக வழங்குவதற்கான நிலையில் இகாகூ காணப்படுகின்றது. இதன் நம்பகத்தகுந்த கண்டறிதல் பதிவுகள் மற்றும் உறுதியான பெயர் நாமம் இவற்றுக்கான காரணமாகும். உள்ளூர் சந்தை அறிவு அவற்றுடன் இணைந்த எமது அளவு ஆகியன மாறுபட்ட பெறுமானங்களை சேர்ப்பதன் மூலம் மற்றும் தனித்துவமான உற்பத்தி முதலீட்டுப் பட்டியல் மற்றும் சிறந்த வகையிலான சேவைகள் ஆகியவற்றை வழங்கியதன் மூலம் மாறுபட்ட வாடிக்கையாளர்களை இகாகூ இனால் வெல்லக் கூடியதாக காணப்பட்டது.

ISO 9001:2015 இனால் வலிப்படுத்தப்பட்டது. இகாகூ இன் தன்மை காப்பீட்டு பத்திரத்திற்கான அடிப்படையாக சேவையாற்றும் தன்மை முகாமைத்துவ முறைக்கான 2015, பிரகாரம் எமது வியாபாரங்களின் சகல அம்சங்களிலும் ஆகக் குறைந்த தொழிற்பாட்டு தராதரங்களை இகாகூ அறிமுகம் செய்தது. ஆயுள் மற்றும் ஆயுள் சாரா இடர் காப்பு கோரிக்கைகள், தீர்வுகள் மற்றும் இகாகூ தலைமை அலுவலகத்தில் உதவிச் சேவைகள், மற்றும் எமது 201 கிளைகள் மற்றும் ABDC நிலையங்களில் காணப்படுகின்ற எமது வலையமைப்புகள்.

கம்பனியின் இலக்கினை இகாகூ இன் தன்மை காப்பீட்டுப் பத்திரம் வலியுறுத்திக் கூறுகின்றது. "எல்லாவற்றிலும் வாடிக்கையாளர் முதன்மை" காணப்படுகின்றது. ஆகவே இந்த தன்மை காப்பீட்டு பத்திர முறையை எல்லாக் குழுக்களும் உள்வாங்கி அவற்றை நடைமுறைப்படுத்தி வருவதோடு இவற்றையே தமது ஆரம்ப தொழிற்பாட்டு தத்துவமாக கருதுகின்றன.

நவீன தகவல் தொடர்பாடல் முறைகளை வினைத்திறனுடன் பயன்படுத்துதல்

வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் மற்றும் வியாபாரங்களை நடத்துதல் ஆகியவற்றை வித்தியாசமான முறையில் மேற்கொண்டு எமது போட்டித்தன்மையை மேம்படுத்தும் நோக்கில் எமது தொழில்நுட்ப முதலீடு காணப்படுகின்றது. இயங்காற்றல் மிக்க மற்றும் நன்கு கருத்திற் கொள்ளப்பட்ட தகவல் தொடர்பாடல் உபாய முறைகளை ஏற்படுத்தியதன் மூலம் இதற்கான உதவிகள் கம்பனிக்கு முகவரியிடப்பட்ட வாடிக்கையாளர்கள் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று காலப் பகுதியில் கம்பனி தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. அன்றாட தொழிற்பாடுகள் மற்றும் எதிர்கால வளர்ச்சி ஆகியவற்றுக்கு உதவுகின்ற காத்திரமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வரைவுச் சட்டகத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தமையின் காரணமாக இத்தகைய பல்வேறு வகையான தொழில்நுட்பம் சார்ந்த தேவைகளை நிறைவேற்றும் முகமாக உபாயமுறையொன்று தாபிக்கப்பட்டது.

04 பிரதான கவனக் குவிப்பு பிரதேசங்களை சூழக் காணப்படுகின்ற இகாகூ இன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபாயமுறை நிலையங்கள்:

இகாகூ இன் தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் உபாயமுறை

டிஜிட்டல் மயப்படுத்தல்	மொபைல் தொலைபேசி உபாயமுறை வியாபார செயன்முறை தானியங்கப்படுத்தல் விற்பனை படை தானியங்கி முறை பெறுமதி சங்கிலி ஒருங்கிணைப்பு
வாடிக்கையாளர் அனுபவம்	சௌகரியமான கொடுப்பனவு தெரிவுகள் சுய சேவை டிஜிட்டல் அனுபவம்
உட்கட்டமைப்பு வசதிகள்	மிக நவீன வன்பொருள்/ மென்பொருள் தீர்வுகள் காணப்படுகின்றன பாதுகாப்பு
முக்கிய வியாபார முறைகள்	முக்கிய காப்புறுதி தீர்வுகள் SAP ERP தளங்கள் வியாபார பகுப்பாய்வுகள்

புலமை சார் மூலதனம்

செயலாற்றுகைகள்

- **ஆயுள் காப்புறுதி செயன்முறைகளை டிஜிட்டல் மயப்படுத்தல**
  மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியினுள் வினைத்திறன், சேவை, தராதரங்கள் ஆகியவற்றை மேம்படுத்தும் இலக்குடனும் கூட்டிணைந்த தொழிற்பாட்டு சுற்றாடலொன்றை தோற்றுவிக்கும் முகமாகவும் மீளாய்விற்கு உட்பட்ட வருட காலப் பகுதியின் பொழுது எமது டிஜிட்டல் உபாயமுறைகளை நாம் துரிதப்படுத்தினோம்.

  எமது வாடிக்கையாளர்களது சௌகரியத்தை அதிகரிக்கும் முகமாக தற்போது காணப்படுகின்ற பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்ட ஆயுள் காப்புறுதி பிரேரணை செயன்முறைகளுக்கு மேலதிகமாக ஆயுள் காப்புறுதி தொடர்பான விபரங்களை வாடிக்கையாளர்கள் ஒன்லைன் மூலம் சமர்ப்பிப்பதை மேற்கொள்ளும் முகமாக எமது கம்பனியானது டிஜிட்டல் பிரேரணை படிவத்தினை அறிமுகம் செய்தது.

- **இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி முறை**
  புதிய இணையத்தள அடிப்படையிலான பயிற்சி முறைகளானது திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அதிக சிரமங்கள் இன்றி மேற்கொள்வதற்கும் பொதுவாக கோவிட்-19 பெருந்தொற்று காலப் பகுதியில் மேற்கொள்வதற்குமான வாய்ப்பினை இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய பயிற்சி முறை வழங்கியது. இணையத்தளத்தை பயன்படுத்தி நாடெங்கிலும் சமகாலத்தில் பல்வேறு வகையான இடங்களில் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை இம்முறை வழங்கியதுடன் பயிற்சி சார்ந்த செலவுகளை கணிசமான அளவு குறைப்பதற்கும் அத்தோடு வினைத்திறன்மிக்க முறையாகவும் இது காணப்பட்டது.

  இவ்வருட காலப் பகுதியின் பொழுது இந்த முறைகள் விருத்தி செய்யப்பட்டன. இதனால் வீடுகளிலிருந்து தமது வேலைகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளை இது கம்பனிக்கு வழங்கியதுடன் ஆகக் குறைவான தடைகளையே ஏற்படுத்தியதோடு கம்பனியின் அன்றாட செயற்பாடுகளை தடைகளின்றி மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

2021 இல் முக்கிய முன்னுரிமைகள

தகவல் பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகள்

வாடிக்கையாளர் நம்பிக்கையை தக்கவைப்பதில் தரவு பாதுகாப்பு மற்றும் ஆளுகை ஆகியன முக்கிய அம்சங்களாகும். 2.2 மில்லியனுக்கு அதிகமான வாடிக்கையாளர் கணக்குகுள் காணப்படுகின்ற நிலையில் இகாகூ யை பொறுத்தவரையில் தரவு பாதுகாப்பிற்கு அதிகூடிய முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. வாடிக்கையாளர் தரவு அந்கரங்கத் தன்மையைப் பேணுதல் மற்றும் தனிப்பட்ட தகவல்களுக்கு அதிகூடிய முக்கியத்துவத்தினை வழங்குதல் ஆகியவற்றிற்கு அவற்றை பாதுகாப்பது தொடர்பில் நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். தரவு அந்தரங்கத் தன்மை தொடர்பான சட்டத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நாம் கடுமையாக முயற்சிக்கின்றோம். அத்தோடு வாடிக்கையாளர் தொடர்பான தகவல்களின் இரகசியத் தன்மை பேணப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வதற்காக பல்வேறு வகையான தொழில்நுட்ப மற்றும் தொழிற்பாடு சார்ந்த பாதுகாப்பு முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இணைய ரீதியான அபாயங்களை (சைபர்) அபாயங்கள் தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கும் முகமாக அவர்களை அறிவூட்டும் முகமாக எமது ஊழியர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றோம்.

நிபுணத்துவ அறிவு மற்றும் அனுபவம்

எமது மனித மூலதனமே இகாகூ இன் முக்கிய போட்டி சாதகத் தன்மைகளில் ஒன்றாகும். எமது 2,767 ஊழியர்களின் அனுபவமும் திறனும் இவர்களுள் சுமார் 59% ஆனவர்கள் சுமார் 10 வருடங்களுக்கு மேற்படியான சேவைகளை கொண்டிருப்பதும் இத்துறையில் நாம் முன்னணியாளர்களாக திகழ்வதற்கு சிறந்த பலமாகக் காணப்படுகின்றது. காப்புறுதித் துறையில் இவர்களது பரந்துபட்ட அறிவானது மிக முக்கியமான சாதகத்தன்மைமிக்க விடயமாகும்.

இகாகூ ஆனது தொடர்ந்தும் மனித மூலதனத்தில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. இகாகூ இன் இலக்குகள் மற்றும் அவர்களது தனிப்பட்ட விருத்தி, இலக்குகள் ஆகியன தொடர்பில் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. அமைப்பின் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் பின்வருவன தொடர்பில் எமது ஊழியர்கள் ஆகியவற்றுக்காக மனித முதலீடு தொடர்பான உபாயமுறைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

- உபாய ரீதியான ஆட்சேர்ப்பு
- செயலாற்றுகை முகாமைத்துவம்
- தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் திறமைசார் குழு முகாமைத்துவம்
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி

எமது அமைப்பின் அறிவு மற்றும் அனுபவ தளம் ஆகியவற்றுக்கு இகாகூ இன் பணிப்பாளர்கள் சபையின் தலைமைத்துவம் முக்கிய அம்சமாக காணப்படுகின்றது. ஒவ்வொரு சபை உறுப்பினரும் தனித்துவமான திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை கொண்டிருக்கின்றனர். உபாய ரீதியான தொலைநோக்கு மற்றும் வினைத்திறன்மிக்க தீர்மானம் மேற்கொள்ளளுக்கான தலைமைத்துவம் ஆகியன தொடர்பில் பெறுமதிகளை சேர்ப்பதற்காக இவை பங்களிப்பு செய்கின்றன.

மனித மூலதனம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- ஊழியர்களது உடல் சார்ந்த நலன்கள் - விசேடமாக ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு கொள்கை
- ஊழியர்களது உளநலம் - துன்பங்கள் தொடர்பில் கையாள்வதற்காக விசேட காப்பீட்டுப் பத்திரம்

- ஊழியர்களது வயதை பேணல் பல்வகைமை தன்மை
- தொழிற்படையில் உறுதியான பிராந்திய பிரதிநிதித்துவத்தைப் பேணல்
- ஆட்சேர்ப்பு செயன்முறைகளின் பொழுது வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை

- ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன

- பால் சமநிலையை பேணல் - 54% - 46% (ஆ:பெ)

- தொழிற்படையில் பல்வகைமை மற்றும் உள்ளடக்கம்

இகாகூ இன் மனித மூலதனங்களே எமது அமைப்பின் மிகவும் பெறுமதியான வளங்களாகும். இதுவே எமது வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இட்டுச் செல்கின்ற முக்கிய உந்துதலாகும். ஒரு அமைப்பிற்கு பெறுமதியான மற்றும் சக்தி படைத்த அர்ப்பணிப்புமிக்க குழுவின் சேவையானது அளவிட முடியா பெறுமதியுடைய சொத்தாகும். இகாகூ இன் ஊழியர்களது மிகுந்த ஆர்வம் மற்றும் கடுமையான உழைப்பு ஆகியன இலங்கையின் எல்லா பாகங்களிலும் எமது உற்பத்திகளையும் சேவைகளையும் சென்றடைவதற்கு உதவியது.

புள்ளிவிபரம் சார்ந்த முக்கிய விடயங்கள்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	2021	2020
நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	70	85
மணித்தியாலங்களின் எண்ணிக்கை	625	680

ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள்	2021	2020
நிரந்தர பணியாளர்கள்	2,535	2,517
ஒப்பந்த பணியாளர்கள்	232	109
மொத்தம்	2,767	2,626

வயது தொடர்பான பகுப்பாய்வு

வயது குழு	ஆண்	பெண்	%
18-24	47	35	3.0%
25-29	186	214	14.5%
30-34	231	235	16.8%
35-39	269	141	14.8%
40-44	262	61	11.7%
45-49	218	178	14.3%
50-54	193	247	15.9%
55 வயது அதற்கு மேல்	91	159	9.0%
மொத்தம்	1497	1270	2767

சேவை தொடர்பான பகுப்பாய்வுகள்

இகாகூ இல் பணியாற்றும் வருடங்களின் எண்ணிக்கை	ஆண்	பெண்	%
0-5	504	355	33%
6-10	235	128	14%
11-15	388	196	22%
16-20	123	37	6%
21 வயது அதற்கு மேல்	247	554	31%

தரம் மற்றும் பால்நிலையின் அடிப்படையில் வேலைவாய்ப்பு

	இலக்கம்			கலவை %	
தரம்	ஆண்	பெண்	மொத்தம	ஆண்	பெண்
சிரேஷ்ட முகாமைத்துவம்	74	18	92	80%	20%
முகாமைத்துவம்	251	101	352	71%	29%
உதவி முகாமையாள்	105	46	151	70%	30%
நிறைவேற்று அதிகாரி	273	524	797	34%	66%
இலிகிதர்கள்	426	540	966	44%	56%
தொழில்நுட்பம்	188	0	188	100%	0%
இலிகிதர்கள் சாராதவை	108	15	123	88%	12%
சிற்றூழியர்	72	26	98	73%	27%
மொத்தம்	1497	1270	2767	54%	46%

மனித மூலதனம்

மனித வளங்கள் தொடர்பான சிறப்பான நடைமுறைகள்

அடிப்படை கோட்பாடுகள் மற்றும் வேலை தொடர்பான உரிமைகள் பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பிரகடனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் பூகோள தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நேர்மையான தொழில் வழங்குதல் நடைமுறைகளை அமுல்படுத்தியதன் மூலம் தனது ஊழியர்களுக்கு மகிழ்ச்சிகரமாக வேலை செய்யும் சூழலை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்புகளை இகாகூ மீள் உறுதிப்படுத்தியது. இவை குறிப்பிடப்பட்ட விடயங்களும் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக எமது மனித மூலதன அபிவிருத்தி முன்னெடுப்புகளானது பின்வரும் கோட்பாடுகளின் அடிப்படையில் வழிப்படுத்தப்படுகின்றன.

கொள்கை	நடைமுறைப்படுத்தல்
வேலை வாய்ப்பில் பாரபட்சம் காட்டாமை மற்றும் சம வாய்ப்புகள்	ஆட்சேர்ப்பு முதல் ஓய்வு பெறும் வரை தொழில் வாழ்க்கையின் சகல கட்டங்களிலும் பாரபட்சம் காட்டாமை மனப்பாங்கு மற்றும் சம வாய்ப்புகளை உற்சாகப்படுத்தல் ஆகியவற்றை நாம் பேணி வருகின்றோம்.
எமது தொழிற்படையில் பல்வகைமை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை மேம்படுத்தி வருகின்றோம்.	எல்லா ஊழியர்களும் ஒழுக்கத்துடனும் மதிப்புடனும் நடத்தப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும் முகமாக இகாகூ ஆனது பல்வகைமை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தொழிற்படை ஆகியவற்றை உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.
	தமது சாதி, சமயம், பால்நிலை, பால், வயது, திருமண நிலை, வேறு ஏதாவது சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட்ட அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் ஊழியர்களுக்கு பாரபட்சம் காட்டப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
	வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் மாற்றத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் இவ்விலக்கை நிறைவேற்றுகின்றோம்.
சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை இல்லாதொழித்தல் மற்றும் பலவந்தமான மற்றும் கட்டாயமாக உழைப்பை சுரண்டுதல் ஆகியவற்றுக்காக நாம் உதவி வருகின்றோம்	ஒரு பொறுப்பு வாய்ந்த கூட்டுறவு பிரசை என்ற முறையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், பலவந்தமான உழைப்பு, கட்டாய உழைப்பு ஆகியவற்றுக்கு எதிராக கடும் கொள்கைகள் இகாகூ இடம் காணப்படுகின்றன.
ஊழியர்களது ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை முன்னுரிமைப்படுத்தல்	இகாகூ ஊழியர்கள் சேவை துறையில் பணியாற்றுவதன் காரணமாக அவர்கள் எத்தகைய முக்கியத்துவமிக்க தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான இடர்களை எதிர்கொள்வதில்லை. இருப்பினும் கூட எமது ஊழியர்கள் பாதுகாப்பான சுற்றாடலில் பணியாற்றுகின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்காக கடுமையான நடைமுறைகளை அமுல்படுத்தி வருகின்றோம்.
	மேலும், இகாகூ இன் இடர் முகாமைத்துவக் குழுவானது முறையாக ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த இடர்களை மதிப்பீடு செய்து வருகின்றது. அத்தோடு அவசியமான தடுப்பு மற்றும் சீர்திருத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது, மேலும் ஊழியர்கள் மத்தியில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மனிதவளங்கள் திணைக்களமானது ஏனைய திணைக்களங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் அவசியமான பயிற்சி மற்றும் விழிப்பூட்டல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.
	தொழிலாற்றும் இடத்தின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை முகாமைத்துவம் செய்வதற்காக முறையான வரைவுச் சட்டகம் ஒன்றை தாபிக்கும் முகமாக நாம் தற்சமயம் முழுமையான பூரணத்துவமிக்க சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கியுள்ளோம்
நன்னெறி மற்றும் நேர்மை ஆகியவற்றை பேணுதல்	வாடிக்கையாளர்கள், எதிர்கால வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், ஏனைய வெளிநிலை பங்கீட்டுபாட்டாளர்கள், வேலை செய்யும் சக ஊழியர்கள், மேல் அதிகாரிகள், கனிஷ்ட ஊழியர்கள் ஆகிய சகலருடனான ஊடாட்டங்களின் பொழுது எமது ஊழியர்கள் மிகவும் நேர்மையுடனும், நன்னெறியுடனும், தொழில்வாண்மைமிக்க முறையிலும் ஈடுபட வேண்டும் என்பதை நாம் தேவைப்படுத்தியுள்ளோம்.
	சகல இகாகூ ஊழியர்களும் எவ்வித விதிவிலக்கும் இல்லாமல் இகாகூ ஊழியர் ஒழுக்கக்கோவையை அறிந்து நன்கு அறிந்து புரிந்து பின்பற்ற வேண்டும். யாராவது ஊழியர் அதற்கேற்ற விதத்தில் இணங்காத பட்சத்தில் அவர்கள் இழைத்த தவறின் தன்மையின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
	மேலும், ஊழியர்கள் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விதமான நிபந்தனைகள் மற்றும் நியதிகள் ஆகியவற்றை சகல ஊழியர்களும் தவறாமல் பின்பற்றப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
ஊழியர்களது துன்பங்களை கலைந்தெறிவதற்கான தெளிவான நடைமுறை	ஊழியர்களது துன்பங்களை கையாளுதல், சாத்தியப்பாடுள்ள வரை அவற்றை தீர்ப்பதற்கான இலக்கு, பிணக்குகள், நெருக்கடி நிலைகளை தவிர்த்தல், மனத்திடத்தை அதிகரித்தல், திருப்தி, அர்ப்பணிப்பு, சிறப்பான புரிதல் மூலம் தொழில் வழங்குநருக்கும் ஊழியர்களுக்கும் இடையில் சுமுகமான உறவை பேணுதல் ஆகியவற்றுக்காக இகாகூ இடம் தெளிவான நடைமுறைகள் காணப்படுகின்றன.
	விரிவான துன்பம் கலைதல் முகாமைத்துவ பொறிமுறையொன்று நடைமுறையில் உள்ளது. இதனை பயன்படுத்தி எந்த இகாகூ ஊழியரும் வேலையுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

கொள்கை	நடைமுறைப்படுத்தல்
ஊழியர் துன்பங்களை கையாளுவது தொடர்பான தெளிவான நடைமுறை	துன்பங்களை எவ்வாறு பதிவு செய்து கோவைப்படுத்துவது என்பது தொடர்பான திட்டவட்டமான தகவல்களை கொள்கை உள்ளடக்கியுள்ளது மற்றும் பல்வேறு வகையான துன்பங்கள் தொடர்பான தகவல்களையும் இது உள்ளடக்கியுள்ளது. இவை உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட துன்பங்கள் என பிரிக்கப்பட்டுள்ளன, இவை ஊழியர் ஒருவரது செயலாற்றுகையை அல்லது நடத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கலாம். துன்பங்களை கையாளுகின்ற பல்வேறு வகையான படிமுறைகள் பற்றியும் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் துன்பங்களை கையாளுதல் குழுவின் தொழிற்பாடு, மனித வளங்கள் சபையின் உபகுழுவின் வகிபாகம், துன்பங்களை தீர்த்தல் தொடர்பான நேர வரையுச் சட்டகம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது. தனிப்பட்ட அல்லது குழு தொடர்பான விடயங்களாக காணப்படுகின்ற பொழுது இந்த தராதரத்தினை நாம் பின்பற்றுகின்றோம்.
	துன்பங்களை கையாளுதல் கொள்கை சரியாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை உறுதி செய்து கொள்வதற்கு பொறுப்பாக இகாகூ இன் மனித வளங்கள் திணைக்களம் காணப்படுகின்றது.

ஆட்சேர்த்தல் மற்றும் தங்க வைத்தல்

ஆட்சேர்ப்பு உபாயமுறை	இகாகூ இன் தெளிவாக வரையறை செய்யப்பட்ட ஆட்சேர்ப்பு கொள்கையானது தேவையான தகைமைகள், பொருத்தமான அறிவு மற்றும் அனுபவம், போதியளவு ஆற்றல்கள், பொருத்தமான மனப்பாங்கு ஆகியவற்றை கொண்டவர்களை வேலைக்கு அமர்த்துகின்றது.
	பகிரங்க பதவிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்படும் பட்சத்தில் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு முதலிடம் வழங்கப்படுகின்றது, உள்ளக வேலை செய்பவர்களிடமிருந்து பொருத்தமான விண்ணப்பதாரிகளை தெரிவு செய்ய முடியாத பட்சத்தில் வெளியிலிருந்து ஆட்சேர்ப்பு பரிசீலிக்கப்படுகின்றது.
	புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்றவர்கள் கடுமையான தெரிவு முறைக்கு உட்படல் வேண்டும். அதன் அடிப்படையில் புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற அனைவரும் தொடர்ச்சியாக பல நுண்ணறிவு சோதனைகளுக்கு தோன்ற வேண்டும். இதன் மூலம் இவர்கள் வேலைக்கு பொருத்தமானவர்களா என்பதை அறிய முடியும்.
	விண்ணப்பிக்கின்ற பதவி மற்றும்/ அல்லது தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப இகாகூ இன் தேர்வுகளை நடாத்துகின்ற குழுவின் ஆக்கஅமைவு வேறுபடும், சகல இத்தகைய உறுப்பினர்களும் துறை சார்ந்த நிபுணர்களாக இருப்பதுடன் இகாகூ இல் சிரேஷ்ட பதவிகளை வகிப்பவர்களாகவும் இருப்பர்.
	ஆட்சேர்ப்பு செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை ஆகியவற்றை பேணும் முகமாக, சகல தேர்வு முறைகளின் பொழுதும் மனித வளங்கள் திணைக்களத்தின் பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும் என எமது ஆட்சேர்ப்பு கொள்கை தேவைப்படுத்தியுள்ளது. சகல விதமான தேர்வு முறைகளையும் தொடர்ந்து சில மதிப்பீட்டு தராதரங்கள் பின்பற்றப்படும்.
	புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்றவர்கள் கம்பனி பற்றிய விடயங்களை தெரிந்து கொள்ளும் முகமாகவும் இகாகூ கலாசாரத்துடன் சிறப்பாக ஒருங்கிணைந்து கொள்ளும் முகமாகவும் திசை முகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றுக்கு பங்குபற்றுதல் வேண்டும்.
தங்க வைத்தல் உபாயமுறை	இலங்கையில் காப்புறுதித் துறையானது மிகவும் போட்டிமிக்க தன்மையுடன் காணப்படுவதன் காரணமாக திறமையான நபர்களை எம்முடன் வைத்திருப்பது முக்கியமாகும். இகாகூ இன் போட்டி முறைகள் மற்றும் பெயர் நாம அங்கீகாரம் ஆகியவற்றை பேணுவதற்கு இவை அவசியமாகும்.
	திறமையான ஆளணியினரை எம்முடன் வைத்திருப்பதற்கான எமது உபாயமுறையானது முறையான தொடர் திட்டம் ஒன்றின் அடிப்படையில் காணப்படுகின்றது. ஊழியர்களை இனங் கண்டு அவர்களை கம்பனியின் எதிர்கால தலைவர்களாக திகழ்வதை நோக்காகக் கொண்டு காணப்படுகின்றது.
	எமது செயலாற்றுகை மதிப்பீட்டு முறையின் படி இகாகூ இன் திறமை குழுவில் உள்ளடக்குவதற்காக சிறப்பாக செயலாற்றியவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.
	முக்கியமான பதவிகளுக்கு வெற்றிடங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவற்றிற்கு பொருத்தமான நபர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக வியாபாரத்துடன் போட்டிமிக்க வெற்றிகரமான திட்டத்தினை உருவாக்குவதே "இகாகூ இன் திறமை குழு" வின் இலக்காகும்.
	"இகாகூ இன் திறமை குழு" வில் காணப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தமது மென் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த திறன்களை விருத்தி செய்து கொள்ளும் முகமாக பல்வேறு விதமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்ற முடியும். அத்தோடு மேலும் தமது தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக அறிவுரையாளர் நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றி நன்மையடைய முடியும்.

மனித மூலதனம்

ஊழியர் திருப்தியை மேம்படுத்துவது தொடர்பான நன்மைகள்

நியாயமான ஊதியம்

இகாகூ இன் ஒட்டுமொத்த் மனித மூலதன அபிவிருத்தி உபாயமுறையில் அதிகூடிய சந்தை-போட்டித் தன்மை சார் நன்மைகள் கட்டமைப்பானது முக்கிய பாகமாகும். இகாகூ இன் சகல ஊழியர்களுக்கும் நேர்மையாகவும் நியாயமாகவும் சந்தை நிலைமைகள் மற்றும் எமது துறைக்கு பொருத்தமான ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப ஊதியம் செலுத்தப்படுகின்றது.

நன்மை தொடர்பான திட்டங்கள்

"மகிழ்ச்சியான ஊழியர்கள் தரமான உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குகின்றனர்" ஆகியவற்றின் அடிப்படையில் எமது சகல ஊழியர்களும் பின்வரும் சிறப்புரிமைகளை அனுபவித்து தமது வாழ்க்கையின் தன்மையை மேம்படுத்துவதற்கு நாம் உதவுகின்றோம்

வேலை சார் நன்மைகள்	
நெகிழ்ச்சியான வேலை ஏற்பாடுகள்	நாம் மிகவும் நெகிழ்ச்சிகரமான வேலை நேர ஏற்பாடுகளை அண்மையில் அறிமுகம் செய்துள்ளோம். குறிப்பாக நாடு இன்று எதிர்கொண்டுள்ள சக்தி தொடர்பான (மின் வலு) நெருக்கடி நிலைமையில் இதனைப் பயன்படுத்துகின்றோம்
குடும்ப விடுமுறை	**பிரசவ கால விடுமுறை** எமது ஊழியர்களின் பாதுகாப்பையும் நலனையும் உறுதிப்படுத்தும் முகமாக இகாகூ ஆனது சகல விதமான தொழில் சட்டங்கள் மற்றும் அத்தகைய தேவைகளுக்கு அப்பாலும் உதவிகளை வழங்கும் முகமாக கடுமையாக இவற்றை பின்பற்றி வருகின்றது. அதன் பிரகாரம் பிரசவ நன்மைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் எமது சகல பின் ஊழியர்களும் பிரசவ கால விடுமுறையை அனுபவிப்பதற்கு அருகதையுடையவர்கள், பிரசவ கால நன்மைகள் கட்டளைச் சட்ட விதிமுறைகளுக்கு மேலதிகமாக சம்பளம் செலுத்தாத மேலதிகமாக இரண்டு மாத கால விடுமுறைகளை எடுப்பதற்கும் இகாகூ அனுமதிக்கின்றது.
	தந்தைமார்களுக்கான விடுமுறை தொடர்பிலும் சாதகமாக பரீசிலிக்கப்படுகின்றது. இதற்கான உரிமைகளின் அடிப்படையில் இவற்றை பயன்படுத்த முடியும்.
உணவு மற்றும் குடிபானங்கள்	சகல விதமான உணவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் பணியாளர்களுக்கான சிற்றுண்டிச் சாலையில் சலுகையின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது
நலனோம்புகை	சகல விதமான பொருட்களையும் மலிவு விலையில் விற்பனை செய்யக்கூடிய தனித்துவமான நலனோம்புகை கடையொன்று காணப்படுகின்றது. இதில் ஏனைய நலனோம்புகை செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சுகாதார ரீதியான நன்மைகள	
நலன்கள்	முழுமையாக உபகரணங்களைக் கொண்ட உடற்பயிற்சி கூடமொன்று காணப்படுகின்றது. இவர்களது உடல் ஆரோக்கயத்தைப் பேணக் கூடிய விதத்தில் அதற்கு உதவக்கூடிய விதத்தில் தகைமை பெற்ற போதானா ஆசிரியர் ஒருவரும் காணப்படுகின்றார். இந்த வசதிகளை ஊழியர்கள் பெற்றுக் கொள்ள முடியம்.
	மேலும் தமது உள மற்றும் ஆன்மீக நன்மைகளை பேணும் விதமாக இத்துறையில் விருப்பமானவர்களுக்கு வாராந்தம் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
சுகாதார பராமரிப்பு	சுகாதாரம் மற்றும் நலன் சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. இவை வேலை செய்வதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதுடன் சுகாதாரக் கல்வியும் வழங்கப்படுகின்றது.

நிதி ரீதியான பாதுகாப்பு நன்மைகள்	
மருத்துவ வசதிகள்	இகாகூ பணியாளர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் கம்பனி மருத்துவ காப்புறுதி உதவிகள் வழங்கப்படுகின்றன.
கல்வி சார்ந்த ஊக்குவிப்புகள்	மனித வளங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப பரீட்சை கட்டணங்கள் மீள் செலுத்தப்படுகின்றன.

வாழ்க்கை முறை நன்மைகள்	
தொழில்-வாழ்க்கை சமநிலை	நூலகம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கின்றன. புனைக்கதைகள், கல்விசார் விடயங்கள், காப்புறுதி துறை சார்ந்த விடயங்கள், முகாமைத்துவம், நிதி, சந்தைப்படுத்தல், விற்பனைகள் போன்ற துறை சார்ந்த 1800 இற்கும் அதிகமான புத்தகங்கள் காணப்படுகின்றன. போதியளவு விடுமுறை உரித்துகள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல்களும் இடம்பெறுகின்றன
போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகள்	ஒவ்வொரு ஊழியரும் நுவரெலியா, அனுராதபுரம், கதிர்காமம் ஆகிய இடங்களில் காணப்படுகின்ற விடுமுறை இல்லங்களுக்கு செல்வதற்கான அருகதையுடையவர்கள். இவை சமகாலத்திற்கு அவசியமான சௌகரிய வசதிகளை கொண்டிருப்பதுடன் நன்கு பயிற்றப்பட்ட பராமரிப்பாளர்களும் இங்கு பணியாற்றுகின்றனர்.
	இகாகூ இல் பணியாற்றும் ஊழியர்களும் அவர்களது குடும்பத்தினரும் இகாகூ இன் போக்குவரத்து வசதிகளை நீண்ட விடுமுறை பயணங்களுக்காக பயன்படுத்த முடியும்.
ஊழியர்களது குடும்ப உறுப்பினர்களுக்கான சிறப்பு வசதிகள்	ஊழியர்களது பிள்ளைகளுக்கு கல்வி சார்ந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பங்குபற்றுகின்ற மாணவர்களுக்கான கருத்தரங்குகளை நாம் நடாத்துகின்றோம். அத்தோடு பரீட்சையில் சித்தியடைபவர்களுக்க பணப் பரிசில்களையும் வழங்குகின்றோம்.
	ஊழியர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் மரணம் தொடர்பான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அருகதையுடையவர்கள். மேலும் அவசர தேவைகளின் பொழுது ஊழியர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் உணர்வு ரீதியான மற்றும் உளவியல் ரீதியான உதவிகளையும் நாம் வழங்கி வருகின்றோம். இவர்களுடன் "ஒரு தந்தையைப் போல். ஒரு தாயைப் போல்" இருப்போம் என்ற உறுதி மொழிக்கு ஏற்ப இவை இடம்பெறுகின்றன.

தொழிற்படை உற்பத்தித்திறனை மேம்படுத்தும் முகமாக தொழில்சார் அபிவிருத்திகள்

இகாகூ இன் விரிவாக்க இலக்குகளுக்கு உதவுகின்ற வகையில் ஊழியர்களது திறன்கள் மற்றும் அவர்களது தேர்ச்சிகள் ஆகியவற்றை மேம்படுத்தும் விதத்தில் எமது பயிற்சிகளும் அபிவிருத்தி சார்ந்த உபாய முறைகளும் காணப்படுகின்றன. செயலாற்றுகை மதிப்பீட்டு முறையின் மூலம் இனங்காணப்பட்ட பயிற்சி சார்ந்த தேவைகளை முன்னுரிமைப்படுத்தும் முகமாக (PAS) நன்கு கட்டமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி வரைவுச் சட்டகம் ஆகியவற்றை நாம் நடைமுறைப்படுத்துகின்றோம். காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக பயிற்சி சார்ந்த வாய்ப்புகளை வழங்குகின்ற அதேவேளை அவசியமான திறன்கள் மற்றும் தேர்ச்சி சார்ந்த விருத்திகள் ஆகியவற்றை பயிற்சி சார்ந்த முதலீடுகள் வழங்குகின்றன என்பதை உறுதி செய்யும் முகமாக நாம் முறையாக பங்குபற்றுதல் மற்றும் முன்னேற்றங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்கின்றோம்.

பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடுகள்

பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் முதலீடுகள் வகை	2021 (ரூபாய்)	2020 (ரூபாய்)
வதிவிட பயிற்சி	477,840	302,824
வெளிநிலை பயிற்சி	2,769,290	556,229
மாநாடுகள்	365,000	25,500
காப்புறுதி மற்றும் தொழில்வாண்மை கல்வி	4,182,678	27,134
தொழில்வாண்மை உறுப்புரிமை	1,981,787	1,583,682

எமது தொடர்ச்சியான திட்டமிடல் மற்றும் திறமை குழு முகாமைத்துவ திட்டம் ஆகியவற்றின் பிரகாரம் ஒவ்வொரு திணைக்களத்தையும் சேர்ந்த ஆற்றல்மிக்க தலைவர்களது தலைமைத்துவ திறன்களை விருத்தி செய்யும் முகமாக அர்ப்பணிப்புமிக்க பயிற்சி மொடியுள் ஒன்று எம்மிடம் காணப்படுகின்றது. அமைப்பின் உபாயரீதியான வியாபார நோக்கங்களுக்கு பங்களிப்பு செய்கின்ற மற்றுமொரு கருத்திட்டமாக இது காணப்படுகின்றது.

தமது தகைமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள விரும்புகின்ற எமது ஊழியர்களுக்கு நிதி ரீதியான உதவிகளை வழங்கும் முகமாக தொழில்வாண்மை விருத்தி பணம் மீளளித்தல் திட்டம் ஒன்றினை நாம் அறிமுகம் செய்துள்ளோம். இது அவர்களது சம்பந்தப்பட்ட தொழில்சார்ந்த விடயங்களை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன் தொடர்ச்சியாக கற்கின்ற சூழலை உருவாக்குவதுடன் ஊழியர்கள் தமது திறன்களை தொடர்ச்சியான முறையில் விருத்தி செய்வதற்கும் உற்சாகப்படுத்துகின்றது. மேலும் தொடர்ச்சியான தொழில்சார் வளர்ச்சியை உற்சாகப்படுத்தும் முகமாக இகாகூ ஆனது தொழில்வாண்மை அமைப்பு உறுப்புரிமை செலவுகளையும் மீள் செலுத்துகின்றது.

மனித மூலதனம்

பரீட்சை சார்ந்த செலவுகளை மீளச் செலுத்துதல

	2021 (ரூபாய்)	2020 (ரூபாய்)
ஊழியர்கள் தொடர்பான மொத்த முதலீடு	3,247,130	3,050,559

2021 ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட பிரதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	2021	2020
நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை	70	85
மணித்தியாலங்களின் எண்ணிக்கை	625	680

அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள்

செயலாற்றுகையை மையமாகக் கொண்ட கம்பனி என்ற முறையில் எமது கூட்டுறவு உபாயமுறை இலக்குகளை அடைவதற்கு வெற்றிகரமான மதிப்பீட்டு முறையானது அடிப்படையாக அமைகின்றது. என்பதை நாம் நம்புகின்றோம். இது ஊழியர்களின் மேம்பாட்டிற்கும் உதவுகின்றது.

"சிறப்புக்காக முயற்சித்தல்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு முறையானது எமது ஊழியர்களின் செயலாற்றுகைகளை நேர்மையாகவும், வெளிப்படைதன்மையுடனும், நம்பகத்தகுந்த முறையில் மதிப்பீடு செய்கின்றது.

இந்த செயன்முறையில் ஓர் அங்கமாக நிதியாண்டின் ஆரம்பத்தில் முன் இணங்கப்பட்ட KPIs உடன் பொருந்துகின்றதா என்பதை அறிவதற்காக தமது சொந்த செயலாற்றுகைகளை மதிப்பீடு செய்யும் முகமாக நிரந்தரமான சகல ஊழியர்களும் வருடத்திற்கு இரு முறையிலான சுய மதிப்பீடு ஒன்றினை பூரணப்படுத்துதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து ஊழியர் மதிப்பீட்டு கூட்டம் ஒன்று நடைபெறும். இதன் போது ஊழியர்கள் தமது செயலாற்றுகை, பயிற்சி சார்ந்த தேவைகள், நீண்ட கால தொழில் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை சம்பந்தப்பட்ட தமது முகாமையாளருடன் கலந்துரையாட முடியும்.

இரண்டு புள்ளிகளை விட குறைவான தரப்படுத்தலை பெற்றுக் கொண்ட ஊழியர்களுக்கு தமது தனித்துவமான அபிவிருத்தி திட்டங்கள் மூலம் மேலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. தமது மேல் அதிகாரிகளின் உதவியுடன் மனித வளங்களினால் இது தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த PAS ஆனது முழுமையாக எமது HRIS உடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊழியர்கள் தமது முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கும் தமது குழுக்களைப் பற்றிய விடயங்களை சம்பந்தப்பட்ட முகாமையாளர்கள் மதிப்பீடு செய்வதற்குமான வாய்ப்புகள் கிடைப்பதோடு வருடம் முழுவதும் இத்தகைய மதிப்பீடுகள் தொடருகின்ற நிலையில் சகல ஊழியர்களும் சிறப்பாக கூட்டிணைந்து பணியாற்றுவதை இது உற்சாகப்படுத்துகின்றது.

ஏனைய முக்கியமான பிரதான புள்ளிவிபரங்கள்

பிராந்திய அடிப்படையில் ஊழியர்கள்

பிராந்தியம்	நம்பிக்கை
மத்திய	175
கிழக்கு	48
வடமத்திய	78
வட	55
இரத்தினபுரி	96
தென் 1	159
தென் 2	121
மேல் வட பகுதி	160
ஊவா	97
வடமேல் 1	111
வடமேல் 2	77
மேல் 1	109
மேல் 2	60
மேல் 3	85
மேல் 4	62
பிரதான அலுவலகம்	1274
மொத்தம்	**2767**

ஊழியர் ஆட்சேர்ப்பு

வயதுப் பிரிவு	ஆண்	பெண்	மொத்தம்	%
18-24	36	13	49	19%
25-29	46	12	58	23%
30-34	43	1	44	17%
35-39	54	2	56	22%
40-44	30	4	34	13%
45-49	12	0	12	5%
50-54	1	0	1	0%
55 மற்றும் மேல்	1	0	1	0%
மொத்தம்	**223**	**32**	**255**	**100%**

ஊழியர் விகிதம்

வயதுப் பிரிவு	ஆண்	பெண்	மொத்தம்	%
18-24	8	3	11	11%
25-29	8	3	11	11%
30-34	7	5	12	12%
35-39	9	1	10	10%
40-44	10	0	10	10%
45-49	1	2	3	3%
50-54	1		1	1%
55 மற்றும் மேல்	20	22	42	42%
மொத்தம்	**64**	**36**	**100**	**100%**

ஊழியர் தங்கவைத்தல் வீதம்

	2021	2020
பணியாற்தொகுதி எண்ணிக்கை	2,767	2,626
ஊழியர் தங்கவைத்தல் %	96.20%	98.0%

எதிர்கால அக்கறைகள

- **செயலாற்றுகை மைய கலாசாரம்**

செயலாற்றுகையை மையமாகக் கொண்ட முழுமையான கலாசாரம் ஒன்றினை தோற்றுவிப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம். முழு அமைப்பும் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதற்கு என்ற வகையில் உந்தப்படுவதுடன் அமைப்பு சாந்த வெற்றிகளை அடைவதற்கும் உந்தப்படுகின்றது.

- **அடுத்தடுத்த திட்டங்கள் தொடர்பான செயன்முறையை மேம்படுத்தல்**

ஓய்வுபெறுகின்றவர்கள் அல்லது வெளியேறுகிறவர்களினால் ஏற்படுகின்ற வேலைவாய்ப்புகளை நிரப்பும் முகமாக அமைப்பினுள் முக்கியமான பதவிகளை இனங்கண்டு பயிற்சிகளை வழங்குவதன் மூலம் பயிற்றப்பட்ட குழுவொன்றினை அமைப்பினுள் விருத்தி செய்து மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- பல்வேறு வகையான இடர் தொகுதிகளின் பாதுகாப்பு மற்றும் ஆயுட் காப்புறுதி தீர்வுகள்

- சுகாதார தேவைகளுக்கான முழுமையான காப்பீடு

- முகவர் சார் தொழில் முறை

- முறையாக தொழிற்படும் முகவர்களுக்கான அபிவிருத்தி மாதிரி

- புத்தாக்கம்மிக்க தனித்துவமிக்க காப்புறுதி தீர்வுகள்
- மொபைல் மற்றும் ஏனைய கொடுப்பனவு தீர்வுகள்
- கலப்பு வழிமுறைகள்

- "சகல விதமான காப்புறுதி" எண்ணக்கருக்க -ளுக்குமான பூரணத்துவமிக்க முழுமையான காப்புறுதி

- "மோட்டார் பிளஸ் வீதி பாதுகாப்பு வீரர்கள்"
- சிறுவர்களுக்கான "மினி முத்து லந்தய"
- "புதிய மரபு எழுச்சி" விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

- இலங்கை முழுவதும் 2 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள்
- இலங்கை காப்புறுதி மோட்டார் பிளஸ் நம்பர் 1 வாகனக் காப்புறுதி
- விசேட வாடிக்காயளர் முறைப்பாட்டு முகாமைத்துவ முறை

- கொடுப்பனவு முறைகளை வலுப்படுத்தும் முகமகா மொபிடல், மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றுடன் பங்காண்மைகள்
- SLMA மற்றும் PIMA உடன் உபாயரீதியிலான பங்காண்மைகள்
- மோட்மார் பிளஸ் காப்பீடுகளை பெற்றுக் கொண்டவர்களுக்கான நன்மைகளை வழங்கும் முகமாக முன்னணி பங்காளர்களுடன் இணைதல்

எமது பங்காளர்கள் இகாகூ மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் அடிப்படையாகக் காணப்படுவது எமது சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனமாகும். எமது மூலதனமானது ஈடுபாடுகளை அடையாளம் காண்பதுடன் பல்வேறு வகையான பங்கீட்டாளர்களுடனான தொடர்பு முறைகளையும் அடையாளம் காண்கின்றது. இவற்றுள் பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், துறைசார் ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் ஏனையவர்கள் உள்ளடங்குகின்றனர் மற்றும் பங்கீட்டுபாட்டாளர்கள் மற்றும் இகாகூ ஆகியவற்றுக்காக உருவாக்கப்பட்ட இந்த பெறுமானங்களை அங்கீகரிக்கின்றது. இரு தரப்பினர்களுக்கும் நன்மையளிக்கக்கூடிய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட தொடர்புமுறைகளை உருவாக்கும் முகமாக பங்கீட்டுபாட்டாளர்களுடனான தொடர்பு முறைகளை விருத்தி செய்து வலுப்படுத்தும் முகமாக இகாகூ சாதகமான அணுகுமுறைகளை மேற்கொண்டு வருகின்றது.

முக்கிய புள்ளிவிபர ரீதியான விடயங்கள்

சந்தை பங்கு	2021	2020	மாற்றம்
இகாகூ சந்தைப் பங்கு (ஆயுள் காப்புறுதி)	17.62 %	18.69 %	-1.07 %
இகாகூ சந்தைப் பங்கு (ஆயுள் காப்புறுதி சாராத வியாபாரங்கள்)	20.77%	20.26 %	0.51 %

எமது சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்



வாடிக்கையாளர் மூலதனத்திற்கு பெறுமதி சேர்த்தல்

பெறுமானம் சேர்த்தலை நோக்கி வாடிக்கையாளர் மூலதனத்தை இட்டுச் செல்லல்

நேர்மையாக வெற்றி பெற வேண்டுமெனில், முதலாவதாக எமது வாடிக்கையாளர்களை புரிந்து கொண்டு, அவர்களது தேவைகளுக்கும் அவசியமான விடயங்களுக்கும் பதிலளித்தல் வேண்டும். அடுத்ததாக இலங்கையில் உள்ள ஏனைய காப்புறுதியாளர்கள் வழங்குகின்ற சேவையை விட மேம்பட்ட முழுமையை நோக்கிய வாடிக்கையாளர் அனுபவங்களை விருத்தி செய்து அதனை வழங்க வேண்டும் என நாம் நம்புகின்றோம். நாம் தற்போதைய வாடிக்கையாளர்களை தக்க வைக்கின்ற அதேவேளை புதிய வாடிக்கையாளர்களை கவரும் முகமாகவும் இன்றும் நாளையும் சிறப்பான வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்பதால் எங்களுடைய சகல விதமான உபாய ரீதியான முன்னெடுப்புகளின் பொழுதும் இந்த அணுகுமுறை முக்கியத்துவம் பெறுகின்றது. பின்வரும் வழிகாட்டிகளை இணங்கி நடப்பதன் மூலம் வாடிக்கையாளர் தொடர்பான எமது அர்ப்பணிப்புகளை இகாகூ உறுதிப்படுத்துகின்றது:

பல்வேறு வகையான தனித்துவமிக்க உற்பத்தி முதலீட்டுப் பட்டியல்கள்

“ஒரு தந்தையைப் போல் - ஒரு தாயைப் போல்” உதவிகரமாக இருப்போம் என்ற எமது வாக்குறுதியின் பிரகாரம் தனி நபர்கள் முதல் சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்கள் மற்றும் நுண் தொழில் முயற்சியாளர்கள் முதல் பாரிய பெரு நிறுவனங்கள் உள்ளடங்கலாக எமது சகல வாடிக்கையாளர்களுக்கும் பல்வேறு வகையான இடர் பாதுகாப்புகள் மற்றும் ஆயுட் காப்புறுதி உற்பத்திகள் ஆகியவற்றை இகாகூ வழங்கி வருகின்றது. எமது உற்பத்திகளானது தனித்துவமிக்கவையாக திகழ்கின்றன. எமது ஒவ்வொரு விடயங்களும் நாட்டின் முன்னணி வழங்குநர் மற்றும் சகல இலங்கையர்களுக்குமான செலவு குறைந்த மற்றும் முழுமையான காப்புறுதி நிறுவனம் என்ற விடயத்தை பெறுமதி சேர்க்கின்ற விடயங்களை உறுதிப்படுத்துகின்றது.

SLIC Sri Lanka Insurance
Like a father - Like a mother
LIFE

பாதுகாப்பு தீர்வுகள்	முதலீட்டுத் தீர்வுகள்	பிள்ளைகளுக்கான காப்புறுதி தீர்வுகள்	ஓய்வூதிய காப்புறுதி தீர்வுகள்	சுகாதார காப்புறுதி தீர்வுகள்
Sri Lanka Insurance Janadiri Two year relief plan	Sri Lanka Insurance EarlyCash	Sri Lanka Insurance Mini Muthu Children's Plan	Sri Lanka Insurance Freedom RETIREMENT PLAN	SLIC Comprehensive Health Plus
Sri Lanka Insurance Divi Thilina Protection Plan	Sri Lanka Insurance Wealth Plus Limited Premium Plan	Sri Lanka Insurance Mini Muthu Dayada	Sri Lanka Insurance Freedom LIFESTYLE PLUS RETIREMENT PLAN	Sri Lanka Insurance Comprehensive The Health and Life Insurance Cover for Diabetics
	Sri Lanka Insurance SPEED INVESTMENT	Sri Lanka Insurance Mini Muthu Parithyaga		
	Sri Lanka Insurance YASAS FULL AMOUNT - BENEFITS - PROTECTION	Sri Lanka Insurance EarlyCash		

ஆயுள் முதலீட்டுப் பட்டியல்

உற்பத்தி வகை	இலக்கு வாடிக்கையாளர்கள்	தீர்வுகள்	விளக்கம்
பாதுகாப்பு/ முதலீடு	பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நன்மைகளை எதிர்பார்க்கின்ற வாடிக்கையாளர்கள்	திவி திலின பாதுகாப்பு திட்டம் திவிசவி பாதுகாப்பு திட்டம் துரித முதலீட்டு திட்டம் முற்பண நன்மை திட்டம் சுவர்ண தஜ ஜன திரி - இரு வருட நிவாரண திட்டம் இலங்கை காப்புறுதி செல்வம் பிளஸ்	இத்தகைய உற்பத்திகள் பாதுகாப்பு மற்றும் சிறப்பான நன்மை வருவாய்களைத் தருகின்றன
ஓய்வூதியம்	பாதுகாப்பு மற்றும் முதலீட்டு நன்மைகளை எதிர்பார்க்கின்ற வாடிக்கையாளர்கள்	சுயாதீன ஓய்வூதிய திட்டம் சுயாதீன தனி காப்பீட்டு கட்டண திட்டம் சுயாதீன வாழ்க்கை முறை பிளஸ்	குறிப்பிடப்பட்ட உற்பத்திப் பொருட்கள் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு உத்தரவாதமளிக்கப்பட்ட மாதாந்த வருமானத்தை வழங்குகின்றது
சிறுவர் திட்டம்	15 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளையுடைய வாடிக்கையாளர்கள்	மினிமுது தயாத மினிமுது சிறுவர்களுக்கான காப்பீட்டுப் பத்திரம் மினிமுது பரித்யாக	இத்திட்டமானது முதிர்ச்சியின் பொழுது பிள்ளைக்கு நிதி ஒன்றை உத்தரவாதப்படுத்துவதுடன் பெற்றோர்களுக்கு பாதுகாப்பினையும் வழங்குகின்றது.
அடமானம் தொடர்பான பாதுகாப்பு	வங்கிகள்/ நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களை பெற்றுக் கொண்டவர்கள்	அடமானம் பாதுகாப்பு திட்டம்	வீட்டுக் கடன் அல்லது வேறு ஏதாவது கடன்களைப் பெற்றுக் கொண்டவர் இறக்கின்ற அல்லது கடன் காலப் பகுதியின் பொழுது முழுமையாக அல்லது நிரந்தரமாக அங்கவீனமாகின்ற சந்தர்ப்பங்களில் இது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட அடமானத்தை பாதுகாக்கும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டது
சுகாதாரம்	பொது மக்கள்	சத்திர சிகிச்சை திட்டம்	ஏற்கனவே முன்கூட்டி திட்டமிடப்பட்ட ஆகக் கூடிய தொகையொன்றின் அடிப்படையில் சத்திரசிகிச்சைக்கான செலவை உள்ளடக்கிய முழுமையான காப்பீடு ஒன்றினை வழங்குகின்றது
	பொது மக்கள்	பூரணத்துமிக்க சுகாதார பிளஸ்	இலங்கையிலும் வெளிநாட்டிலும் சத்திரசிகிச்சை, மருத்துவ, வைத்தியசாலையில் தங்கியிருத்தல் தொடர்பான செலவுகளை உள்ளடக்கியது
	நீரிழிவினால் பாதிக்கப்பட்ட நபர்கள்	விரிவான D+ திட்டம்	நீரிழிவு நோயினால் பாதிக்கபட்டவருக்கு சிறந்த வைத்தியசாலைகளில் தங்குதல் மற்றும் மருத்துவ சிகிச்சை முறைகளை வழங்குவதன் காரணமாக இக்காப்புறுதியைப் பெற்றுக் கொண்டவர் நிதி உதவிகளை பெற்று மன ஆறுதலுடன் இருப்பதற்கு வாய்ப்பளிக்கின்றது
தனிப்பட்டவை	பொது மக்கள்	வைத்தியசாலை மற்றும் பணம் திட்டம்	உண்மையான வைத்தியசாலை கட்டணங்கள் செலவுகள் எவ்வாறு இருந்த பொழுதிலும் கூட வைத்தியசாலையில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளைக்கும் குறிப்பிட்ட தொகை வழங்கப்படுகின்றது
	சிரேஷ்ட பிரசைகள் (60-70 வருடங்கள்)	மெடி 60	சிரேஷ்ட பிரசைகளுக்கான சுகாதார ஆரோக்கிய தேவைகள் பலவற்றை உள்ளடக்கிய சுகாதார காப்புறுதி காப்பீட்டுத் திட்டமே மெடி 60 ஆகும். அவர்களது நிதிசார் முதலீட்டின் அடிப்படையில் 3 பொதிகளிலிருந்து அவர்களுக்கு விருப்பமான பொதியை தெரிவு செய்ய முடியும்.
	இலங்கை பிரசைகள் 18-59 வயதிற்கு உட்பட்டவர்கள்	வருடாந்த மருத்துவ திட்டம்	நோயாளியின் ஆரோக்கியம் சார்ந்த பல்வேறு வகையான காப்புறுதி சார் அபாயங்களை உள்ளடக்கிய தனிப்பட்ட சுகாதார காப்புறுதி காப்பீட்டு பத்திரம். இந்தக் காப்பீட்டுப் பத்திரத்தை வருடாந்தம் புதுப்பிக்க முடியும் மற்றும் போனஸ் பெறாதவர்களுக்கான விசேட திட்டம் ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது. பணத்தை கோரிப் பெறாத ஒவ்வொரு வருடத்திற்கும் போனஸாக குறிப்பிட்ட தொகை அதிகரிக்கப்படுகின்றது
ஊழியர்களுடன் தொடர்புடையது	கம்பனி பணியாளர்கள்	பாதுகாப்பு - குழு நியதிக் கொள்கை	கம்பனியினுள் சிறப்பான பாதுகாப்பு மற்றும் உடைமை உணர்வினை ஏற்படுத்தும் முகமாக ஒரே காப்புறுதியின் கீழ் உங்களது சகல பணியாளர்களையும் உள்ளடக்குகின்றது.

SLIC GENERAL

Sri Lanka Insurance
Like a father - Like a mother

சுகாதார காப்புறுதி தீர்வுகள்

- Sri Lanka Insurance MEDI 60 – Senior Citizen Health Insurance Plan
- Sri Lanka Insurance MEDI PLUS – Health Insurance Plan
- Sri Lanka Insurance HEALTH PLUS
- ශ්‍රී ලංකා ඉන්සුවරන්ස් නාගරාජ – ගෘහස්ථ පුද්ගල, ආදාහි වෛද්‍ය රක්ෂණාවරණය

வியாபார காப்புறுதி தீர்வுகள்

- Sri Lanka Insurance Business Club – TRADE INSURANCE POLICY
- Sri Lanka Insurance MARINE CARGO
- Sri Lanka Insurance HULL INSURANCE
- Sri Lanka Insurance WORKMEN'S COMPENSATION INSURANCE
- Sri Lanka Insurance TEA FACTORY INSURANCE

மோட்டார் காப்புறுதி தீர்வுகள்

- Sri Lanka Insurance MOTOR PLUS – The Best Option
- MOTOR PLUS PINNACLE
- Sri Lanka Insurance MOTOR PLUS Ladies Only
- Sri Lanka Insurance MOTOR PLUS COMMERCIAL
- Sri Lanka Insurance MOTOR PLUS TUK
- Sri Lanka Insurance MOTOR PLUS RIDER

வீட்டுக் காப்புறுதி தீர்வுகள்

- Sri Lanka Insurance HOME PROTECT
- Sri Lanka Insurance HOME PROTECT LITE
- Sri Lanka Insurance FIRE INSURANCE

போக்குவரத்து காப்புறுதி தீர்வுகள்

- Sri Lanka Insurance TRAVEL PROTECT

தனிப்பட்ட விபத்து தீர்வுகள்

- Sri Lanka Insurance PERSONAL ACCIDENT COVER
- Sri Lanka Insurance Jana Rekuma – Individual Personal Accident Cover

பொது முதலீட்டுப் பட்டியல்

உற்பத்தி வகை	இலக்கு வாடிக்கையாளர்கள்	தீர்வுகள்	விளக்கம்
மோட்டார்	தனிப்பட்ட கார்கள், தனிப்பட்ட இரு நோக்க வாகனங்கள் ஆகியவற்றை சொந்தமாக வைத்திருக்கும் பெண்கள்	மோட்டார் பிளஸ் பெண்களுக்கு மாத்திரம்	கார்கள் மற்றும் இரு நோக்க வாகனங்களை செலுத்துகின்ற பெண்களின் தேவைகளை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட விசேட அம்சங்களைக் கொண்ட திட்டம்
	டக் சாரதிகள்	மோட்டார் பிளஸ் டக்	சகல விதமான முக்கிய உற்பத்தி அம்சங்கள் மற்றும் தனித்துவமான பெறுமதி சேர்க்கைகளை உள்ளடக்கியுள்ளது
	மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்	மோட்டார் பிளஸ் ரைடர்	மோட்டார் சைக்கிள்களை ஓட்டுபவர்கள் விசேட காப்புறுதி காப்பீட்டத் பத்திரத்தினை பெற்றுக் கொள்ள முடியும்
	வர்த்தக வாகன சொந்தக்காரர்கள்	மோட்டார் பிளஸ் கொமர்ஷல்	நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கின்ற உங்களது வர்த்தக ரீதியான வாகனங்களுக்கு முழுமையான மோட்டார் வாகன காப்புறுதி திட்டங்கள் வழங்கப்படுகின்றன (வாடகை கார்கள், இரு நோக்க வாகனங்கள், தனியார் மற்றும் வாடகை லொறிகள்)
வீடுகள்	வீட்டு சொந்தக்காரர்கள்	வீடுடைத்தல் தொடர்பான காப்புறுதி	வீடுடைப்பதனால் ஏற்படுகின்ற சொத்து இழப்பு மற்றும் ஏனைய பாதிப்புகளிலிருந்து உங்கள் வீட்டையும் குடும்பத்தையும் பாதுகாக்கின்றது
		மக்கள் வசிக்கின்ற வீடுகளுக்கான தீ தொடர்பான காப்புறுதி	உங்களது வீடு பூரணப்படுத்தப்பட்டிருந்தால் என்ன குடியிருந்தால் என்ன அல்லது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நிலையில் தீ மற்றும் அதனோடு தொடர்புடைய பல்வேறு விதமான இடர்களிலிருந்து காப்புறுதி அளிக்கப்படுகின்றது
		வீட்டு பாதுகாப்பு காப்புறுதி	அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உங்களது வீடு, குடும்பம், பெறுமதியான பொருட்கள், வீட்டிலுள்ள பணியாட்கள் போன்றவர்களை பாதுகாக்கின்றது
		வீடு பாதுகாப்பு லைட்	தீ மற்றும் வீடுடைத்தல் ஆகியவற்றை கொண்ட காப்புறுதி திட்டங்கள்
பயணம்	சகல விதமான பயணிகளுக்கும்	பயணப் பாதுகாப்பு	சுகாதார நன்மைகள், விபத்து நன்மைகள், தனிப்பட்ட சொத்து பாதுகாப்பு, பயண பாதுகாப்புகள் யாவும் இந்த காப்பீட்டுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பொறுப்புகள், விமானக் கடத்தல் இடர்கள், வீட்டு பாதுகாப்பு காப்புறுதி ஆகியன மேலதிகமாக கிடைக்கின்ற நன்மைகள்
தனிப்பட்ட விபத்து	இலங்கை தொழிற்படை	ஜன ரெகும	எந்த நேரத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்படுகின்ற விபத்துகள் தொடர்பில் பூரணத்துமிக்க காப்புறுதியை வழங்குகின்றது.

சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்

உற்பத்தி வகை	இலக்கு வாடிக்கையாளர்கள்	தீர்வுகள்	விளக்கம்
வியாபாரம்			
சொத்து	வியாபார உரிமையாளர்	வியாபார தளங்களுக்கான காப்புறுதி	உங்களது கைத்தொழில் அல்லது வர்த்தக ரீதியான சொத்துகளுக்கு ஏற்படுகின்ற இழப்புகள் அல்லது பாதிப்புகளுக்கு காப்பீடுகளை வழங்குகின்றது
	சிறிய மற்றும் மத்திய தொழிற்முயற்சி துறை	இலங்கை காப்புறுதி வியாபார கழக வியாபாரிகள் கூட்டிணைந்த காப்புறுதி காப்பீட்டுத் திட்டம்	தீ, கூட்டிணைந்த அபாயங்கள், கண்ணாடிகள், பணம், மின்னியல் உபகரணங்கள், கையிருப்பு பாதிப்புகள் போன்றன உள்ளடங்கலாக ஒரே காப்பீட்டு பத்திரத்தின் கீழ் முழுமையான மற்றும் பூரணத்துவமிக்க தீர்வுகளை அவர்களுக்கு வழங்குகின்றது
	இலங்கையில் தேயிலை துறை	தேயிலை தொழிற்சாலை காப்புறுதி	தேயிலை பெருந்தோட்டங்கள், தொழிற்சாலைகள், களஞ்சியசாலைகள், உபகரணங்கள், கட்டமைப்புகள், கையிருப்புகள் ஆகியவற்றுக்கு ஏற்படுகின்ற இடர்கள், தற்போது செயல் சார்ந்த இடர்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது
	இலங்கையில் உள்ள ஹோட்டல்காரர்கள்	ஹோட்டல்காரர்களுக்கான பூரணத்துவமிக்க காப்புறுதி	உள்ளாசப் பயணத்துறை சார்ந்த விபரங்கள் தனித்துவமான தடைகளை எதிர்கொள்வதன் காரணமாக ஹோட்டல்காரர்களுக்கான பூரணத்துவமிக்க காப்புறுதி காப்பீடுகள்
	ஒப்பந்தக்காரர்கள், சிவில் நிர்மாணப் பணிகளை பொறுப்பேற்கின்ற கருத்திட்டங்கள், நிர்மாணக் கருத்திட்டங்கள்	ஒப்பந்தக்காரர்களுக்கான சகல இடர்கள் தொடர்பான காப்புறுதி	இன்று வேகமாக வளர்ந்து வருகின்ற அதிகூடிய கேள்விகளையுடைய நிர்மாணத்துறை சார்ந்த வியாபாரங்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு விதமான இடர்கள் தொடர்பில் ஒப்பந்தக்காரர்களுக்காக வழங்கப்படும் பூரணத்துவமிக்க காப்புறுதி
	நிர்மாணத்துறை கருத்திட்டங்கள்	கட்டியெழுப்பவதோடு தொடர்பான இடர் காப்புறுதிகள்	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பொருத்துவதுடன் தொடர்புடையது
	வியாபார இடங்கள் மற்றும் தொழிற்சாலைகள்	மின்னியல் உபகரணக் காப்புறுதி	உங்களுடைய மின்னியல் மற்றும் மின்சாரம் சார்ந்த பொருட்கள் மற்றும் கருவிகளுக்கு ஏற்படும் இடர்களிலிருந்து கம்பனியை பாதுகாக்கும் முகமாக சுங்கம் தொடர்பான காப்பீடுகள்
	வியாபார இடங்கள் மற்றும் தொழிற்சாலைகள்	இயந்திரங்கள் பழுதடைதல் தொடர்பான காப்புறுதி	காப்புறுதி செய்யப்பட்ட பொருட்களுக்கு எதிர்பாராமல் திடீரென ஏற்படும் பௌதீக ரீதியான இழப்புகள் மற்றும் பாதிப்புகளுக்கான காப்பீடு, உடனடி திருத்தம் மற்றும் / அல்லது பிரதியீடு செய்தல் சம்பந்தமானது
	நிர்மாணக் கருத்திட்டங்கள்	ஒப்பந்தக்காரர்களுக்கான பொறித்தொகுதி மற்றும் இயந்திர காப்புறுதி	வேலை செய்கின்ற தளங்களில் ஏற்படுகின்ற சகல விதமான இடர்களிலிருந்தும் ஒப்பந்தக்காரர்களது பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றது
	வியாபாரத் தளங்கள் மற்றும் தொழிற்சாலைகள்	கையிருப்பு பொருட்கள் பாதிப்பு தொடர்பான காப்பீடு	இயந்திர கோளாறு மற்றும் பிரச்சினைகளின் காரணமாக குளிரறைகளில் வைக்கப்பட்டிருக்கின்ற உணவு, மருந்துப் பொருட்கள், பூக்கள் போன்றவற்றிற்கு வெப்பநிலை மாற்றத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கான காப்பீடுகள் மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளில் அத்தகைய பொருட்களுக்கு ஏற்படுகின்ற துரித பாதிப்புகள் போன்றவற்றையும் உள்ளடக்குகின்றது
	வியாபாரத் தளங்கள் மற்றும் தொழிற்சாலைகள்	இயந்திரங்களுக்கு ஏற்படும் இழப்பீடு தொடர்பான காப்புறுதி சார் நன்மைகள்	இயந்திரங்களில் ஏற்படுகின்ற கோளாறுகளின் விளைவாக மொத்த இலாபத்தில் ஏற்படுகின்ற பாதிப்பின் காரணமாக காப்பீடுகள் (ஏதாவது உற்பத்தி அல்லது கைத்தொழில் சார் வசதிகளில் ஏற்படுகின்ற பாதிப்புகளின் விளைவாக இலாபத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறிப்பாக இயந்திர செயலின்மையின் காரணமாக)
கடல் சார்	மீன் பிடி வள்ளங்கள் மற்றும் ஏனைய வள்ளங்களின் சொந்தக்காரர்கள்	கடல் சார் இயந்திர காப்புறுதி	கடலுக்கு செல்கின்ற வள்ளங்கள் மற்றும் கடலில் தொழிற்படுகின்ற ஏனைய வள்ளங்களுக்கு பல்வேறு வகையான இடர்களின் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகளிலிருந்து மொத்த பாதுகாப்பினை வழங்குகின்றது
	ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள்	கப்பல் சரக்கு காப்புறுதி	ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு அவசியப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் சார்ந்த தேவைகளை கருத்திற் கொண்டு விசேடமாக வடிவமைக்கப்பட்டது

உற்பத்தி வகை	இலக்கு வாடிக்கையாளர்கள்	தீர்வுகள்	விளக்கம்
பணியாளர் தொடர்பான			
	தொழிற்சாலைகள், உற்பத்தி செய்யும் கம்பனிகள் மற்றும் அலுவலகங்கள்	தொழிலாளர்களுக்கான நட்டஈடு காப்புறுதி	அண்மையில் இற்றைப்படுத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க தொழிலாளர் நட்டஈடு சட்டத்தின் பிரகாரம் தொழில் வழங்குநர்களுக்கான பொறுப்பு பற்றி குறிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் கடமையில் இருக்கின்ற பொழுது காயமடைந்த தொழிலாளர்களுக்காக நட்டஈடு வழங்குதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
	தொழிற்சாலைகள், உற்பத்தி செய்யும் கம்பனிகள் மற்றும் அலுவலகங்கள்	தனிப்பட்ட விபத்து காப்பீடு	தாக்குதல், விபத்து, ஏனைய வெளிநிலை காரணிகள், புலப்படுகின்ற முறைகள் ஆகியவற்றினால் ஏற்படுகின்ற மரணம், உடல் ரீதியான காயங்களுக்கு நட்டஈடு வழங்கப்படுகின்றது. அத்தகை எதிர்பாராத நிகழ்வுகளின் பொழுது காப்புறுதியை பெற்றுக் கொண்டவருக்கு பாதுகாப்பு வழங்கப்படுகின்றது.
விசேட மோட்டார் வாகன வகைகள்	கம்பனிகள்/ தனியாருக்கு சொந்தமான வாகனங்கள்	மோட்டார் வாகனம் தொடர்பான தீர்வுகள	பெறுநிறுவனங்களுக்கு சொந்தமான கார் மற்றும் வாகனத் தொகுதிகளுக்கு விபத்தினால் ஏற்படும் இடர் மற்றும் ஏனைய பாதிப்புகளுக்காக காப்பீடு
	தனிநபர்கள் மற்றும் கம்பனிகளுக்கு சொந்தமான விவசாய அல்லது விசேட வகையான வாகனங்கள்	விவசாய வாகனங்கள் மற்றும் விசேட வாகனங்கள்	வாகனத்தைப் பயன்படுத்தும் தன்மை, வாகனத்தின் வகை ஆகியவற்றை கருத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட வகையின் தனித்துவமான தேவையை உள்வாங்கி விவசாய மற்றும் விசேட வாகன காப்புறுதி தீர்வுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய காப்பீட்டுப் பத்திரங்கள்

- வங்கியாளர் இழப்பீடு
- இறப்பர் தொழிற்சாலை
- தொழில்வாண்மைமிக்கவர்களுக்கான இழப்பீடு
- விமானங்களுக்கான காப்பீடு
- பொது பொறுப்புகள்
- உற்பத்தி சார் பொறுப்புகள்

2021 ஆம் நிதியாண்டில் சந்தைக்கு புதிய உற்பத்திப் பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டன

எமது சேவைகளை விரிவுபடுத்தும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் பின்வரும் உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டன.

ශ්‍රී ලංකා ඉන්සුවරන්ස්
නාගරාජ
ශාක්‍ය පුත්‍ර, ඥාති වෛද්‍ය රක්ෂණාවරණය

"நாகராஜா" - பௌத்த மதகுருமாருக்கான தனித்துவமான மருத்துவ காப்புறுதி

"நாகராஜா" என்பது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் பௌத்த மதகுருமாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் முழுமையாக வழங்கப்படும் மருத்துவக் காப்புறுதி காப்பீடாகும்

நாடெங்கிலும் காணப்படும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளைகளிலிருந்து இந்த நாகராஜா என்ற காப்புறுதித் திட்டத்தை கொள்வனவு செய்து அதனையோர் "பிரிகம" தானமாக பௌத்த குருமார்களுக்கு அன்பளிப்பு செய்ய முடியும். இலங்கையிலுள்ள அனைத்து பிரசைகளையும் பாதுகாக்கும் முகமாக அனைவருக்கும் காப்புறுதி என்ற எண்ணக்கருவின் கீழ் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே நாகராஜா ஆகும்.

பௌத்த மதகுருமார் அராசாங்க அல்லது தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுகின்ற பொழுது ஒரு நாளைக்கு ரூபாய் 1,500 இனைப் பெற்றுக் கொள்ள முடியும் (15 நாட்கள் வரை). இதற்கான வசதியை இந்தக் காப்புறுதித் திட்டம் வழங்குகின்றது. மேலும் அரசாங்க அல்லது தனியார் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுகின்ற பொழுது மருந்துகள், சோதனைகள், எஸ்கேன் செய்தல், எக்ஸ்-ரே ஆகியவற்றுக்காக ஏற்படுகின்ற செலவுகளாக இந்தக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் ரூபாய் 25,000 ஐப் பெற்றுக் கொள்ள முடியும்.

சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்

முன்கூட்டிய பணம், துரித முதலீடு எனற் பெயருடைய இரண்டு ஆயுள் காப்புறுதி உற்பத்திகளை கம்பனியானது மீள் பெயர் நாமம் செய்துள்ளது.

முன்கூட்டிய பணம்	துரித முதலீடு
முன்கூட்டிய பணம் ஆயுள் காப்புறுதி தீர்வுகளானது வாடிக்கையாளர்களுக்கு பூரணத்துவமிக்க பாதுகாப்பினை வழங்குகின்ற அதேவேளை முன்கூட்டிய இலாபங்களையும் வழங்குகின்றது. "முன்கூட்டிய பணம்" திட்டமானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் காப்புறுதியின் நீண்ட கால அடிப்படையிலான திட்டமாகும். காப்பீட்டுக் காலம் முடிவடைவதற்கு முன்னர் காப்பீட்டு பெறுமதியின் 50% இனை இரண்டு தவணை முறைகளில் இது வழங்குகின்றது (10 வருட திட்டத்தில் 50%, 15 முதல் 20 வருட திட்டத்தில் 40%). காப்பீட்டைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு முன்கூட்டிய கொடுப்பனவு வழங்கப்பட்ட பொழுதிலும் ஒட்டுமொத்த கொள்கை பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு போனஸ் தொகையொன்றும் வழங்கப்படுகின்றது. ஆகவே சந்தையில் தனித்துவமான காப்புறுதி தீர்வுகளாக இது காணப்படுகின்றது.	இன்றைய போட்டிச் சந்தையில் மாறி வருகின்ற வாடிக்கையாளர்களது தேவைகளை கருத்திற் கொண்டு காப்பீட்டுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்களை பாதுகாக்கின்ற அதேவேளை வாடிக்கையாளர்களது நீண்ட கால முதலீடுகள் சார்ந்த நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக இகாகூ இன் ஆயுட் காப்புறுதியானது புதிய ஆயுள் காப்புறுதி தீர்வுகளை அறிமுகம் செய்துள்ளது. இலங்கை காப்புறுதியின் ஆயுள் உற்பத்தி விடயங்களில் மிக அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது "துரித முதலீடாகும்". காப்பீட்டுப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு அதிகமான நன்மைகள் இதன் மூலம் கிடைக்கின்றது. புதிய "துரித முதலீடு" காப்புறுதியானது ஒரு நீண்ட கால காப்புறுதி திட்டமாகும். காப்பீட்டு கட்டணம் எவ்வித மாற்றமும் இன்றி இருக்கின்ற அதேவேளை உறுதிப்படுத்தப்பட்ட தொகையானது வருடாந்தம் 5% இனால் அதிகரித்து செல்கின்றது. 20 வருடங்களின் பின்னர் காப்பீட்டுப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை தொகையின் 2 மடங்கினை போனஸ் தொகையுடன் சேர்த்து பெற்றுக் கொள்கின்றனர். சந்தையில் முன் எப்போதும் காணப்படாத சிறப்பான காப்புறுதித் தீர்வுகளாக இவை இருக்கின்றன.

இடர் காப்பீடு மற்றும் கோரிக்கை தீர்வு மேன்மைகள்

பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனம் என்ற முறையில் போட்டித் தன்மைக்கு எதிரான செயற்பாடுகளில் நாம் ஈடுபடுவதில்லை. எமது முறை சார்ந்த விலையிடல் கொள்கைகளானது முறையான தொடர்ச்சியான மற்றும் தொடர் அணுகுமுறையின் அடிப்படையில் எமது இடர் காப்பீட்டு உற்பத்திப் பொருள்களுக்கான விலையை தீர்மானிக்கின்றது. காப்பீட்டுக் கட்டண விலையிடல் மற்றும் கோரிக்கை தீர்வு சார்ந்த இடர்கள் ஆகியவற்றுக்கு இடையில் சமநிலையை பேணுவதே எமது இலக்காகும். இதன் மூலம் எமது வாடிக்கையாளர்கள் நியாயமான சந்தை விலையில் இடர் காப்பீட்டு சேவைகளைப் பெற்றுக் கொள்வதுடன் அதனுடன் தொடர்புடைய நன்மைகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

சகல சந்தர்ப்பங்களிலும் எமது கோரிக்கை முகாமைத்துவ செயன்முறையின் வினைத்திறனை பேணும் முகமாக வாடிக்கையாளர்களது நலன்களை முன்னுரிமைப்படுத்துவதன் அடிப்படையில் தெளிவான மரபுகளையும் கடமைகளையும் பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் நாம் வகுத்துள்ளோம்:

- கோரிக்கைகளானது சமத்துவமாகவும் துரிதமாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
- கோரிக்கைகளை கையாளுகின்ற செயன்முறையானது முழுமையாக வெளிப்படை தன்மைமிக்கதாகும். இதன் மூலம் தமது கோரிக்கைகளின் தற்போதைய நிலை பற்றி எல்லா சந்தர்ப்பங்களிலும் இவர்களுக்கு அறிவிக்கப்படும்.
- இத்தகைய கோரிக்கைகள் பகுதியளவில் செலுத்தப்படும் பொழுது அல்லது மறதளிக்கப்படுகின்ற பொழுது அது தொடர்பில் உடனடியாக எழுத்து மூலம் அறிவிக்கப்படும்.

சகல விதமான கோரிக்கைகளும் இகாகூ இன் மத்திய கோரிக்கை செயன்முறை பிரிவினால் கையாளப்படும், அதேவேளை முரண்பட்ட மற்றும் அதிக தொகை சார்ந்த கோரிக்கைகள் ஆகியன விசேட கோரிக்கை குழுவினால் கையாளப்படும். தீர்க்கப்படாத கோரிக்கைகள் தொடர்பான விடயங்கள் மாற்றீட்டு முரண்பாட்டு தீர்வு செயன்முறைக்கு நாட்டிலுள்ள காப்புறுதி சட்ட வரைவுச்சட்டகத்தின் பிரகாரம் ஆற்றுப்படுத்தப்படும்.

அதிகூடிய பெறுமதி மற்றும் ஆகக் கூடிய வாடிக்கையாளர் சௌகரியம்

வாடிக்கையாளர்கள் அதிகமாக ஸ்மார்ட் கருவிகளையும் சமூக வலைதளங்களையும் பின்பற்றி வருவதன் காரணமாக வாடிக்கையாளர்களது நடத்தைகள் மற்றும் சிந்தனைகள் அடிக்கடி மாறுபடுபவையாக காணப்படுகின்றன. ஆகவே போட்டிச் சந்தையில் முன்னணியில் திகழ வேண்டுமெனில் புத்தாக்க ரீதியான தேவைப்பாடுகள் அவசியம் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். இத்தகைய சூழ்நிலையில் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான பெறுமதி சேர் சேவைகளையும் எமது வாடிக்கையாளர்களுக்கு எந்தளவுக்கு சௌகரியத்தை வழங்குகின்றதோ அத்தகைய சேவைகளையும் வழங்குவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இகாகூ வாடிக்கையாளர் செயலி		காப்பீட்டுப் பத்திரம் மற்றும் உற்பத்தி சார் விபரங்களை பார்வையிடல்
		ஆயுள் மற்றும் பொது காப்புறுதி காப்பீட்டுப் பத்திரங்கள் சார்ந்த காப்பீட்டு கட்டணங்களை செலுத்துதல்
		தமது பொது காப்புறுதி காப்பீட்டு பத்திரங்களை ஒன்லைன் மூலமாக புதுப்பித்தல்
		மோட்டார் காப்பீடு கோரிக்கைகளை சினேகபூர்வமாக சமர்ப்பித்தல்
		கூகுள் வரைபடங்கள் மூலம் இகாகூ கிளைகளை கண்டறிதல்
		வீதி மற்றும் அவசரகால சேவைகளை 24/7 மணித்தியாலமும் அணுகிப் பெறல்
		மோட்டார் வாகன பிளஸ் விருதுகள் பங்காண்மையை கண்டறிந்து அனுபவித்தல்
எமது கூட்டாண்மை இணையத்தளம் (www.srilankainsurance.com)		பல்வேறு வகையான உற்பத்திகள் மற்றும் சேவைகளை அணுகிப் பெறல்
மொபைல் மற்றும் ஏனைய கொடுப்பனவு தீர்வுகள்	**மொபிடலுடனான பங்காண்மை**	m-cash ஐ பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் தமது காப்பீட்டு கட்டணங்களை சிரமமின்றி சௌகரியமாக செலுத்துதல்
	மக்கள் வங்கியுடனான பங்காண்மை	நாடெங்கிலும் காணப்படுகின்ற மக்கள் வங்கியின் ATM இயந்திரங்கள் மூலமும் சுய வங்கி நிலையங்கள் மூலமும் காப்பீட்டு கட்டணங்களை செலுத்துதல்
	இலங்கை வங்கியுடனான பங்காண்மை	BOC Smart Pay முறைகளைப் பயன்படுத்தி QR அடிப்படையிலான ஆயுள் காப்புறுதி காப்பீட்டுக் கட்டணங்களைச் செலுத்துதல்
	லங்கா ஹொஸ்பிடலில் சேவை கரும பீடம்	காப்புறுதி காப்பீட்டு பத்திரங்களை கொள்வனவு செய்தல், காப்புறுதி திட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல், காப்பீட்டு கட்டணங்களை செலுத்துதல் ஆகியவற்றை இலகுபடுத்தல்

பொறுப்பு வாய்ந்த சந்தைப்படுத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க தொடர்பாடல்

எமது வாடிக்கையாளர் ஊடாட்ட உபாயமுறையானது வாடிக்கையாளர்களுக்கு தெளிவான மற்றும் நேரடியான தகவல்கள் வழங்கப்படுவதை இலக்காகக் கொண்டுள்ளது. இது தொடர்பில் ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் சார்ந்த விடயங்களை

வடிவமைக்கையில் சகல விதமான ஒழுங்குபடுத்தல் வெளிப்படுத்தல் கடப்பாடுகளையும் நாம் பின்பற்றுகின்றோம். எமது வாடிக்கையாளர்களுக்கு சகல விதமான அவசியமான பொருத்தமான தகவல்களை வழங்குவதன் மூலம் துறை சார்ந்த தராதரங்களை நாம் பேணுவதற்கு முற்படுகின்ற அதேவேளை எம்முடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்களிலல் வாடிக்கையாளர்கள் அறிவார்ந்த தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பான விபரங்களை எமது வாடிக்கையாளர்கள் பல்வேறு விதமான ஊடகங்கள் மூலம் தெரிந்து கொள்கின்றனர். ஏதாவது தகவல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்ற பொழுது எமது சகல கிளைகளையும் சேர்ந்த ஊழியர்கள் தொழில்வாண்மைமிக்க முறையில் பதிலளிப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்டிருக்கின்றனர். அத்தோடு எமது சேவைகள் மற்றும் உற்பத்திகளுடன் தொடர்புடைய இடர்கள், வாடிக்கையாளர்களது தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு எமது உற்பத்திகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய இடர்கள் பற்றி தெளிவாக எடுத்துக் கூறுவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வாடிக்கையாளர் முறைப்பாடுகளை உடனடியாக வினைத்திறன்மிக்க முறையில் கையாளுதல்

இகாகூ ஆனது வாடிக்கையாளர்களது பின்னூட்டல்களை பெரிதும் மதிக்கின்றது. இதற்கென பல்வேறு விதமான தளங்களை அமைத்துள்ளது. அதன் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் நேரடியாக எமது கம்பனியுடன் தொடர்பாட முடியும். இவற்றுள் எமது 24 மணித்தியால அழைப்பு நிலையம், கூட்டாண்மை இணையத்தளம், சமூக வலைதளங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

எமது சேவையின் தன்மை பற்றிய வாடிக்கையாளர்களது அக்கறைகள் மற்றும் கருத்துக்களானது எமது சேவைகளை மேம்படுத்துவதற்கும் வியாபாரத்தை சௌகரியமான முறையில் நம்பத்தகுந்த முறையில் மேற்கொள்வதற்குமான வாய்ப்பாக கருதப்படுகின்றது. வாடிக்கையாளர் பிரச்சினைகள் உடனடியாக பார்க்கப்பட்டு அவை ஆராயப்பட்டு மிக முக்கியமாக துரிதமாக அவை தொடர்பில் செயலாற்றப்பட்டுள்ளன என்பதை எமது நன்கு பயிற்றப்பட்ட வளவாளர் பணியாளர்கள் உறுதி செய்து கொள்கின்றனர். வாடிக்கையாளர் முறைப்பாடுகள் முகாமைத்துவ முறையொன்று எம்மிடம் காணப்படுகின்றது. வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றது முதல் அவை தீர்க்கப்படும் வரை மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளும் கம்பனியின் இணையத்தளத்தில் பதிவிடுவதற்கான சிறப்பான செயன்முறைகள் காணப்படுகின்றன.

மோட்டார் பிளஸ் விசுவாச விருதுகள்

வாடிக்கையாளர்கள் எம்மீது வைத்திருக்கின்ற விசுவாசத்திற்காக அவர்களுக்கு விருதளித்தல் உள்ளடங்கலாக இகாகூ இன் வாடிக்கையாளர் பெறுமானம் காணப்படுகின்றது. இகாகூ இன் மோட்டார் பிளஸ் விசுவாச விருதளித்தல் நிகழ்ச்சித்திட்டம் மூலம் மோட்டார் பிளஸ் காப்பீட்டுப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர்கள் பல்வேறு விதமான பரிசில்கள் மற்றும் சிறப்புச் சலுகைகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியும். இவற்றுள் வியாபார பங்காளர்களுடான முழுமையான ஈடுபாடுகள், பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் தொடர்பான வளர்ந்து வரும் பட்டியல் ஆகியன உள்ளடங்குகின்றன. இகாகூ இன் பங்காண்மையுடன் 2021 இல் விவரிக்கப்பட்டதன் பிரகாரம் மோட்டார் பிளஸ் விசுவாச விருதுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் பல்வேறு விதமான அமைப்புகளிலிருந்து இகாகூ பங்காண்மையுடையவர்களிடமிருந்து காப்பீடுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் கழிவுகளை பெற்றுக் கொள்ள முடியும்.

வியாபார பங்காளர் மூலதனத்திற்கு சேர்க்கப்பட்ட பெறுமானங்கள்

இகாகூ இன் போட்டித்தன்மை மற்றும் கம்பனியின் நீண்டகால சாத்தியப்பாட்டினை உறுதி செய்தல் ஆகியன தொடர்பில் எமது வியாபார பங்காளர்கள் முக்கிய கரிசனையுடையவர்கள். காப்புறுதி முகவர்கள், தரகர்கள், மீள் காப்புறுதியாளர்கள், வழிமுறை பங்காளர்கள், பொது விநியோக வியாபாரிகள், ஏனைய சேவை வழங்குநர்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான வியாபார பங்காளர் கொடுக்கலுடனான வியாபார கூட்டாண்மை தேவைப்பாடுகளுடன் தொடர்புடைய இகாகூ இன் தன்மையானது முக்கியமாகும். இந்த சகல பங்கீட்டுபாட்டாளர்களதும் முக்கியத்துமானது எமது வெற்றிக்கு அவசியம் என்பதை கருத்திற் கொண்டு பகிரப்பட்ட பெறுமதி எண்ணக்கருவின் அடிப்படையில் உறுதியான தங்கியிருக்கக்கூடிய பங்காண்மையின் உறுதிப்பாட்டை கட்டியெழுப்பும் நோக்குடன் சரியான கூட்டாண்மையை கட்டியெழுப்புவதற்கான நிலைபேறு தன்மையை நாம் உருவாக்கி வருகின்றோம். அதேபோல் வெளிகளத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கான கொள்கையும் நடைமுறையில் உள்ளது.

நம்பிக்கை மற்றும் நீண்டகால தொடர்பு முறைகள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்காக எமது வியாபார பங்காளர் மூலதனத்தினை முகாமைத்துவம் செய்வதற்காக மிக உயர்வாக சீர் செய்யப்பட்ட அணுகுமுறையொன்றினை நாம் பின்பற்றி வருகின்றோம்.

காப்புறுதி முகவர்கள்

எமது காப்புறுதி முகவர்கள் இகாகூ பெயர் நாமத்தினை போல் உயர்வான ஒழுக்கத் தராதரங்கள் மற்றும் நன்மதிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கின்றனர் என்பதை நாம் உறுதி செய்து கொள்ளல் வேண்டும். ஏனென்றால் அவர்களே நன்கு புலப்படுகின்ற பெயர் நாம தூதர்களாக காணப்படுகின்றனர்.

இகாகூ இன் விற்பனை உடன்பாட்டிற்கு ஏற்ப சகல முகவர்களும் நடந்து கொள்ளல் வேண்டும் சகல இகாகூ முகவர்களும் தாம் முகவர்களாக பணியாற்றுகின்ற காலப் பகுதியில் பின்பற்ற வேண்டிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், இகாகூ இன் தொழில் வழிமுறைகள் மூலமாக, அதிஉயர்வாக சீர் செய்யப்பட்ட பெறுமான முறையொன்று காணப்படுகின்றது. எமது முகவர்கள் முறையாக வளர்ந்து வருவதற்கான உதவிகளையும் அமைப்புடன் இணைந்து அவர்களும் முன்னேறுவதற்கான வாய்ப்புகளையும் இது வழங்குகின்றது. அத்தோடு எமது சகல முகவர்களும் மேலதிகமாக வளர்ந்து வருவதற்கான வாய்ப்புகளை நாம் வழங்குகின்றோம். முகவர் தொழில் வழிமுறை நிகழ்ச்சித்திட்டம் மூலம் இனங்காணப்பட்ட அதிகூடிய செயலாற்றுகையுடையவர்களை இகாகூ இன் உள்ளக விருது தளங்கள் அங்கீகரிக்கின்றன.

மேலும், இகாகூ இன் டிஜிட்டல் மயப்படுத்தல் தொடர்பான முன்னெடுப்புகளானது தொடர்ச்சியாக எமது முகவர் ஆளணியினருக்கு நன்மையளிக்கின்றது என்பதை நாம் உறுதி செய்து கொள்கின்றோம்.

இகாகூ இன் முகவர் ஒப்பந்தக்காரர்கள் விற்பனை ஊழியர்களுக்கான தொழிற்பாட்டு கட்டமைப்பு மற்றும் ஆகியன மிகவும் ஆக்கபூர்வமான மற்றும் நேர்த்தியான அபிவிருத்திகளை வழங்குவதற்கு ஏற்ற விதத்தில் முகவர் அபிவிருத்தி மாதிரிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. கம்பனியின் முகவர் ஆட்சேர்ப்பு பயணத்திற்கு இந்த கட்டமைப்பானது உதவிகரமான கருவியாக காணப்படுகின்றது, புதிதாக ஆட்சேர்க்கப்படுபவர்கள் மற்றும் தற்போது செயலாற்றுபவர்கள் முறையான முறையில் நிலைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இதுவோர் தெளிவான முன்னேற்றப் பாதையை வழங்குகின்றது.

காப்பீட்டு கணிப்பாளர் ஆலோசகர்கள்

இகாகூ இன் காப்பீட்டு கணிப்பாளர் ஆலோசகர்களாக ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகியவற்றிற்கு மிசர்ஸ் வில்ஸ் டவர்ஸ் வட்சன் இந்தியா பிரைவேட் லிமிட்டெட் மற்றும் மிசர்ஸ் என்எம்ஜீ நிதி சேவைகள் ஆலோசனை நிறுவனம் ஆகியன காணப்படுகின்றன. நிபுணத்துவம் சார் ஆலோசனைகள் தேவைப்படுகின்ற பிரச்சினைகளுக்கு இவர்கள் எமக்கு உதவுகின்றனர்.

மீள் காப்புறுதியாளர்கள்

மீள் காப்புறுதியாளர்கள் எமது வியாபாரம் தொடர்பில் முக்கிய உதவிகளை வழங்கி வருகின்றனர். நிகழக்கூடிய அதிகூடிய இடர்கள் தொடர்பில் மேலதிக பாதுகாப்பினை இவர்கள் வழங்குகின்றனர். இதன் மூலம் இகாகூ ஆனது தனது வளர்ச்சி சார் இலக்குகளை அடைவதற்கு உதவுகின்றனர்.

சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்

மீள் காப்புறுதியாளர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் பொழுது அவர்களது பாதுகாப்பு சார்ந்த பொறுப்புகளின் காரணமாக தெரிவு செய்யப்பட்ட அணுகுமுறையொன்றினை நாம் பேணி வருகின்றோம். காப்புறுதி தொடர்பான இடர்கள் பரந்த காணப்படுவதன் விளைவாக அதனை உத்தரவதப்படுத்துவதற்காக 103 தரப்படுத்தப்பட்ட மீள் காப்புறுதியாளர்களுடன் உடன்படிக்கைகளை நாம் பேணி வருகின்றோம்.

மீள் காப்புறுதியினால் கிடைக்கின்ற நேரடி நன்மைகளுக்கு மேலதிகமாக இத்துறையில் மீள் காப்புறுதியாளர்களுக்கு காணப்படுகின்ற ஆழமான அறிவு, இடர் காப்புறுதி தொடர்பான முறையான அணுகுமுறைகள், சமகால பூகோளப் போக்குகள் தொடர்பான ஆழமான புரிதல்கள் எமது நீண்ட கால உறவுகள் ஆகியவற்றின் காரணமாக முன்னணி தரமிடப்பட்ட பூகோள மீள் காப்புறுதியாளர்கள் புத்தாக்க முறையான உபாயமுறைகளுக்கு உதவுதல் போன்றவற்றின் காரணமாக அவர்களிடமிருந்து இகாகூ நன்மையடைந்துள்ளது.

வழிமுறை பங்காளர்கள்

இகாகூ இன் பெறுமான சங்கிலியானது பாரியளவிலான வழிமுறை பங்காளர்களை உள்ளடக்கியுள்ளது. இவற்றுள் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் காப்புறுதி தரகர்கள் வலையமைப்பு, வங்கி பங்காளர்கள், சுகாதார பங்காளர்கள், வாகன முகவர்கள், சேவை தொழில் நிலையங்கள், கொடுப்பனவு இலகுபடுத்துநர்கள், போன்றவர்கள் உள்ளடங்குகின்றனர், இவர்கள் அனைவரும் இகாகூ இன் சந்தைக்கு பெறுமதி சேர்க்கின்ற விடயங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மூலம் இத்தகைய உடன்படிக்கைகளை நாம் உருவாக்கியுள்ளோம், இகாகூ இன் தொழிற்பாட்டு தராதரங்கள், ஒழுக்கநெறி கோவைகள் ஆகியவற்றுக்கு பங்காளர்கள் இணங்கி நடப்பதற்கு இவை உதவுகின்றன. இதன் விளைவாக இத்தகைய வியாபார பங்காளர்கள் நேர்மையாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படுகின்றனர். நீண்ட கால அடிப்படையில் பரஸ்பர நன்மைகளை பெறக் கூடிய ஒத்துழைப்பாளர்களாக இணைக்கப்பட்டிருக்கின்றனர் என்பதை உறுதி செய்வதற்கு இத்தகைய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் உதவுகின்றன.

ஏனைய வியாபாரிகள் மற்றும் சேவை வழங்குநர்கள்

இகாகூ இன் கொள்வனவு வழிகாட்டிகளின் பிரகாரம் ஏனைய வியாபாரிகள் மற்றும் சேவை வழங்குநர்கள் ஆகியோர் வாடகைக்கு அமர்த்தப்படுகின்றனர். இது நேர்மையான சமத்துவமான வியாபார நிலைகளை மேம்படுத்துவதுடன் சேவை வழங்குநர் தெரிவு பட்டியலையும் தயாரிக்க உதவுகிறது. நேர்மையான ஒழுக்க நிலை சார்ந்த வியாபார நடைமுறைகளின் உறுதியான உதவியாளர்கள் என்ற முறையில் ஏதாவது அக்கறைகள் அல்லது ஆலோசனைகள் தொடர்பான விடயங்களை மேம்படுத்துவதற்காக வியாபாரிகள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு தெளிவான வழிமுறையொன்றினை நாம் விருத்தி செய்துள்ளோம். இவ்வாறு கிடைக்கப் பெறுகின்ற சகல விதமான முறைப்பாடுகள் மற்றும் கருத்துகள் ஆகியன கொள்வனவு வழிகாட்டிகள் தராதர தொழிற்பாட்டு செயன்முறையின் பிரகாரம் தீர்க்கப்படுகின்றன.

முகவர் தொழிற்படை

2017 முதல் 2021 வரை MDRT உறுப்பினர்கள்

வருடத்தில் அடையப்பட்ட உருக்கள்	2021	2020	2019	2018	2017	2016
உறுப்பாண்மை வருடம்	2022	2021	2020	2019	2018	2017
மொத்த உறுப்பினர்கள்	187	93	64	63	52	60

சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள்

1. போனஸ் பிரகடனங்கள்

நாட்டில் அதிகூடிய போனஸ் தொகையை ஆயுட் காப்புறுதி போனஸாக இலங்கை காப்புறுதி பிரகடனப்படுத்தியது. 2020 ஆம் ஆண்டில் இது 9.8 பில்லியனாகும். இதனை இலங்கை காப்புறுதியின் ஆயுள் காப்புறுதி காப்பீட்டினை பெற்றுக் கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டது. இலங்கை காப்புறுதி வரலாற்றில் வழங்கப்பட்ட மிகக் கூடிய தொகை இதுவாகும். 2005 முதல் இதுவரையிலான காலப்பகுதியில் காப்பீட்டினை பெற்றுக் கொண்டவர்களுக்காக வழங்கப்பட்ட மொத்த ஆயுள் காப்புறுதி போனஸ் தொகையானது 73.2 பில்லியன் ஆகும்.

முதல் முறையாக இந்த போனஸ் சான்றிதழ்களை இகாகூ இன் மொபைல் செயலியான செயலியிலிருந்து e-Bonus சான்றிதழ்களை தரவிறக்கம் செய்ய முடியும்.

2. இகாகூ இன் மோட்டார் பிளஸானது இலங்கை நீதித் துறை சேவைகள் சங்கத்திற்கு பூரணத்துவமிக்க பாதுகாப்பினை வழங்குகின்றது

இலங்கை காப்புறுதி மோட்டார் பிளஸானது இலங்கை நீதித் துறை சேவைகள் சங்கத்திற்கு (JSASL) விசேட மோட்டார் காப்புறுதி பொதிகளை வழங்கி வருகின்றது. சகல மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான் நீதிபதிகள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு முன்னணி அமைப்பாகும். இவர்களது வாகனங்களுக்கு பூரணத்துவமிக்க பாதுகாப்பினை இது வழங்குகின்றது.

தனித்துவமான காப்புறுதி திட்டமானது தனியார் பாவனை மற்றம் மூன்றாம் தரப்பு பொறுப்புகள் தொடர்பில் பல்வேறு வகையான ஏனைய அபாயங்கள் தொடர்பிலான காப்பீடுகளை வழங்குகின்றது. இவற்றுள் விபத்து சார்ந்த பாதிப்புகளும் உள்ளடங்குகின்றன.

3. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது இலங்கை மருத்துவ சங்கத்துடன் உபாய ரீதியான தொடர்பொன்றை மேற்கொண்டது

சுகாதார பராமரிப்பு சார்ந்த அறிவை மேம்படுத்தல், இலங்கையில் இருக்கின்ற சுகாதார பராமரிப்பு, தொழில்வாண்மையாளர்களின் பாதுகாப்பினை மேம்படுத்தி சிறப்பான காப்புறுதி சேவைகள் வழங்கப்படுவதனை உறுதி செய்யும் முகமாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது இலங்கை மருத்துவ சங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டது.

இலங்கை மருத்துவச் சங்கத்தில் பதிவு செய்து கொண்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்துவமான காப்புறுதித் திட்டத்தினை வழங்கும் முகமாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பகிரப்பட்ட மற்றும் தனிப்பட்ட அர்ப்பணிப்புகளை இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பூரணத்துவமிக்க மோட்டார் காப்புறுதி தீர்வுகள் உள்ளடங்கலாக சுகாதார பராமரிப்பு தொழில்வாண்மைமிக்கவர்களுக்காக பூரணத்துவமிக்க முறையில் வழங்கக்கூடிய பல்வேறு வகையான நன்மைகளை உள்ளடக்கியதாக இந்த காப்புறுதித் திட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கையர்களுக்கான பாதுகாப்பான சுற்றாடலை தோற்றுவிக்கும் முகமாக வீதி பாதுகாப்பு, ஊடக கருத்தரங்குகளை நடாத்துதல், சமூக வலைதள நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி கல்வி சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்களை இலகுபடுத்தும் முகமாக இலங்கை மருத்துவ சங்கம் (SLMA) மற்றும் இலங்கை காப்புறுதி மோட்டார் பிளஸ் ஆகியன கூட்டிணைந்து செயற்பட்டன.

4. சிறுவுர் தினத்தில் 'மினிமுதுலந்தய' இலங்கை காப்புறுதி நடத்தியது

2021 ஆம் ஆண்டில் உலக சிறுவுர் தினத்தை கொண்டாடும் முகமாக பிள்ளைகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் ஆகியோருக்காக அறிவார்ந்த மற்றும் மகிழ்ச்சியளிக்கின்ற அமர்வுகளை மினிமுதுலந்தய என்ற பெயரில் இலங்கை காப்புறுதி நடாத்தியது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2021 ஒக்டோபர் 01 முதல் 03 ஆம் திகதி வரையில் இலங்கை காப்புறுதியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொழுது நாடு முழுவதிலிருந்து ஆர்வமிக்க 10,000 இற்கும் அதிகமான பிள்ளைகளை இது கவர்ந்தது.

"சிறப்பான பெற்றோர்கள்" என்ற பெயரில் முதலாவது அமர்வு நடைபெற்றது. இது ஓர் அறிவார்ந்த அமர்வாகும். இதன் பொழுது பிள்ளைகளது கல்வி, உள சுகாதாரம், போசாக்கு போன்ற விடயங்கள் பெற்றோர்களுடன் கலந்துரையாடப்பட்டன. அத்தோடு பெற்றோர்களது பங்குபற்றுதல் காணப்பட்டதுடன் கேள்வி பதில் அமர்வொன்றும் இடம்பெற்றது. இந்த கேள்வி பதில் அமர்வின் பொழுது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், நலன்கள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

'மினிமுதுலந்தய' என்ற மற்றுமொரு அமர்வு இடம்பெற்றது. பிள்ளைகளும் பெற்றோர்களும் தமது நேரத்தை சுவாரஸ்யமாக கழித்ததுடன் கல்வி மற்றும் மகிழ்வளிப்பு சார்ந்த அமர்வுகளாக இவை காணப்பட்டன. அத்தோடு சிறப்பான மூளைசாலி அமர்வு, கணினி வித்துவான் அமர்வு, ஓவியர் அமர்வு, மகிழ்வளிப்பு அமர்வு போன்றனவும் இடம்பெற்றன. இதன் பொழுது பிள்ளைகள் தமது மாறுபட்ட திறமைகளை வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட்டதுடன் பங்குபற்றுநர்கள் தமது சொந்த ஆக்கபூர்வ வேலைகளை சமர்ப்பிப்பதற்குமான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. இதன் பொழுது இலங்கை காப்புறுதியினால் அவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து பாரியளவில் சிறப்பான பதிலளிப்புகளும் கிடைக்கப் பெற்றன.

சமூக மற்றும் தொடர்புமுறை மூலதனம்

5. ஆயுள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு லங்கா QR கொடுப்பனவு தீர்வுகளை வழங்கும் முகமாக இலங்கை வங்கியுடன் இகாகூ கைகோர்த்தது

நாட்டில் நிலவி வந்த பெருந்தொற்று காலப் பகுதியை கருத்திற் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு தங்குதடையற்ற காப்புறுதி சேவை வழங்கப்படுவதன் முக்கியத்துவத்தை புரிந்தமையின் காரணமாக இலங்கை வங்கியின் QR கொடுப்பனவு மூலமாக பணம் அற்ற தீர்வுகளை BOC smart pay மூலம் வழங்கும் நோக்குடன் இகாகூ ஆனது இலங்கை வங்கியுடன் கைகோர்த்தது. இது வாடிக்கையாளர்களுக்கு பல சௌகரியங்களை வழங்கக் கூடிய கொடுப்பனவு முறையாகும்.

இலங்கை வங்கியின் ஞசு கொடுப்பனவு தீர்வுகள் மூலம் இகாகூ ஆயுட் காப்புறுதி காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்கள் டிஜிட்டல் மூலமாக கொடுப்பனவுகளை இலகுவாக மேற்கொண்டு அவற்றை பெற்றுக் கொள்ளவும் முடியும். அத்தோடு சீரான கொடுப்பனவு அனுபவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

புத்தாக்க ரீதியான தொழில்நுட்ப தீர்வுகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை மேம்படுத்தும் முகமாக இலங்கை காப்புறுதியானது தொடர்ச்சியாக முயன்று வருகின்றது. அத்தோடு இவர்களுக்கு பல்வேறு வகையான டிஜிட்டல் வழிமுறைகளை வழங்கி இலகுவாக அணுகிப் பெற்றுக் கொள்வதற்கு உதவுவதன் மூலம் இலங்கை காப்புறுதியின் பெரும் நிறுவனமான எமது நிறுவனம் காப்புறுதியை மக்களுக்கு மிக நெருக்கமாக கொண்டு வருவதுடன் இத்தகைய முயற்சிகளை தொடர்ந்தும் விரிவாக்கம் செய்து வருகின்றது.

6. இலங்கை இன்சூரன்ஸ் மோட்டார் பிளஸ் நிறுவனத்திடமிருந்து 'ரூட் பெர்மிட் வைத்திருப்பவர்களுக்கான பிரத்தியேக மோட்டார் காப்புறுதிப் பொதி

நாட்டின் பேரூந்து போக்குவரத்து முறையானது மிகவும் பிரபல்யமான போக்குவரத்து முறையாக காணப்பட்ட போதிலும் கூட பெருந்தொற்று காலப்பகுதியில் மிக சிக்கலான நிலைமைகளை எதிர்கொண்டது. இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முடக்கங்கள் மற்றும் போக்குவரத்து மட்டுப்பாடுகள் பொது போக்குவரத்தை தடை செய்தன.

பஸ் சொந்தக்காரர்கள் இந்த பெருந்தொற்று காலப் பகுதியில் தமது வருமானத்தில் வீழ்ச்சி கண்டமையின் காரணமாக பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இவர்களது அன்றாட போக்குவரத்து தொழிற்பாடுகளின் சுமுகத் தன்மையின் அவசியத்தை கருத்திற் கொண்டு இலங்கை காப்புறுதியானது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கூட்டிணைந்து வீதி அனுமதியை வைத்திருப்பவர்கள் (Route permit holders) நன்மையைக் கருதி சலுகை காலம் ஒன்றினை அறிமுகம் செய்தது.

7. உறுப்பினர்களுக்கு முழுமையான வாகன காப்புறுதி ஒன்றினை வழங்கும் முகமாக PIMA உடன் உபாய ரீதியான ஒருங்கிணைப்பு ஒன்றினை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையில் இகாகூ ஈடுபட்டது

இலங்கையின் முன்னணி தொழில்வாண்மை அமைப்புகளில் ஒன்றான முகாமைத்துவ மாணவர்களுக்கான பட்டப் பின் படிப்பு நிறுவகத்துடன் (PIMA) புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் கையொப்பமிட்டது. இதன் அடிப்படையில் PIMA உறுப்பினரகள் முழுமையான வாகன காப்புறுதி பொதியொன்றினை பெற்றுக் கொள்ள முடியும்.

இரண்டு அமைப்புகளுக்கிடையிலான உபாய ரீதியான ஒருங்கிணைப்பானது துறை சார்ந்த பங்காண்மையின் கீழ் PIMA இன் 3000 இற்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு தனித்துவமான வாடிக்கையாளர்களை கருத்திற் கொண்ட பூரணத்துவமிக்க மோட்டார் காப்புறுதி தீர்வுகள் வழங்கப்படுவதை இலகுபடுத்துகின்றது. இரண்டு அமைப்புகளுக்கிடையில் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் ஒரு அங்கமாக இலங்கையின் முன்னணி தொழில்வாண்மை அமைப்பான PIMA இன் தலைமைத்துவத்துடன் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் மற்றும் முகாமைத்துவ மாணவர்களுக்கான பட்டப் பின் படிப்பு நிறுவகம் ஆகியன கூட்டிணைந்து பல்வேறு வகையான துறை சார்ந்த முன்னெடுப்புகளை முன்னெடுக்கும்.

சமூக பிரச்சாரங்கள்

1. நாகராஜா காப்புறுதி

மதகுருமார் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பினை வழங்கும் முகமாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது "நாகராஜா" என்ற பூரணத்துவமிக்க மருத்துவ காப்புறுதி காப்பீட்டு ஒன்றினை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பித்தது.

தனித்துவமான நாகராஜா என்ற இந்த திட்டமானது நாடெங்கிலும் உள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கிளைகளில் கிடைக்கப் பெறுவதுடன் பொது மக்கள் இவற்றினை கொள்வனவு செய்து ஒரு தர்ம காரியமாக (பிரிக்கார) மதகுருமார்களுக்கு வழங்க முடியும். இலங்கையில் இருக்கின்ற ஒவ்வொரு பிரசைக்கும் பாதுகாப்பினை வழங்கும் நோக்குடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் "அனைவருக்கும் காப்புறுதி" என்ற எண்ணக்கருவின் கீழ் நாகராஜா காப்புறுதி திட்டமும் வருகின்றது.

2. சிறுவர்களுக்கான காப்புறுதி காப்பீட்டு பத்திரமான சுரக்ஷாவை இகாகூ இலகுபடுத்துகின்றது

பாடசாலைக்கு செல்கின்ற சகல மாணவர்களுக்கும் கல்வி அமைச்சினால் இலவசமாக வழங்கப்பட்ட "சுரக்ஷா" என்ற சிறுவர்களுக்கான காப்புறுதி காப்பீட்டு பத்திரத்தை வழங்கியது. இலங்கையின் காப்புறுதித் துறையில் ஜாம்பவனாக காணப்படும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மீண்டும் ஒரு முறை இதனை இலகுபடுத்துவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் நோய் வாய்ப்படும் பொழுது, பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் விபத்துகள் மற்றும் அங்கவீனங்களை எதிர்கொள்கின்ற பொழுது அவர்கள் தங்குதடையற்ற விதத்தில் தமது கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பினை உறுதிப்படுத்தும் முகமாக நிதி ரீதியான உதவிகளை வழங்குவதற்காக அத்தோடு இம்மாணவர்களது உடல் மற்றும் உள ரீதியான நலன்களை பாதுகாக்கும் முகமாக சுரக்ஷா காப்புறுதி உதவுகின்றது.

2017 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு மற்றும் இகாகூ ஆகியவற்றின் கூட்டாண்மையுடன் சுரக்ஷா என்ற தனித்துவமான திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இகாகூ இன் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் 158 கிளைகள் மூலம் அரசாங்கம், தனியார் துறை மற்றும் சர்வதேச பாடசாலைகள் ஆகியவற்றில் கல்வி பயிலுகின்ற 4.5 மில்லியன் பாடசாலை மாணவர்கள் இந்த காப்பீட்டு பத்திரம் மூலம் நன்மை அடைவதற்கான இலகுபடுத்தல்களை இகாகூ ஆரம்பித்தது. மேலும் பிரிவெனா கல்வியை தொடர்கின்ற மதகுரு மாணவர்களும் இந்த வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும்.

3. புதிய வழக்கமுறை எழுச்சி பெறல்

கோவிட்-19 காலப் பகுதியில் சுகாதார ரீதியான நடவடிக்கைகளை பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது நாடெங்கிலும் பல்வேறு வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. குறிப்பிட்ட பிரதேசத்தில் சுகாதார அதிகாரிகளின் கூட்டாண்மையுடன் இவை மேற்கொள்ளப்பட்டன.

புதிய சாதாரண நிலைமைகளின் கீழ் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பில் மக்களை விழிப்பூட்டும் முகமாக களுத்துறை, மாத்தறை, கிரிஉல்ல, தம்புள்ளை, நுவரெலியா, பிபிளை, அனுராதபுரம், கேகாலை ஆகிய பிரதேசங்களில் பல்வேறு வகையான நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் பொழுது பல்வேறு விதமான தகவல்களை தெரிவிக்கும் அமர்வுகள் இடம்பெற்றன. இதன் பொழுது சுகாதாரத் துறை, பாதுகாப்புத் துறை போன்றவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான ஆளணியினர் பங்குபற்றினர். சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப தமது அன்றாட செயற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது தொடர்பில் இவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டன. இந்த அமர்வுகளைத் தொடர்ந்து கேள்வி பதில் தொடர்பான அமர்வுகளும் இடம்பெற்றன. இதன் பொழுது இகாகூ இன் சமூக ஊடக பக்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு மக்களிடமிருந்து காத்திரமான பதில்கள் கிடைக்கப்பெற்றன.

4. மோட்டார் பிளஸ் வீதி பாதுகாப்பு வீரர்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் பூகோள வீதி பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இலங்கையில் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் மற்றும் அதனால் ஏற்படும் மரணங்கள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு இவை தொடர்பிலான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் முகமாக ஐநாவின் நிகழ்வுகளுக்கு சமாந்தரமாக இலங்கையின் காப்புறுதியானது மோட்டார் பிளஸ் ஆனது மோட்டார் பிளஸ் வீதி பாதுகாப்பு வீரர்கள் என்ற நிகழ்வை ஆரம்பித்தது.

பூகோள வீதி பாதுகாப்பு வாரத்திற்கு சமாந்தரமாக இலங்கை காப்புறுதி மோட்டார் பிளஸ் ஆனது "உயிர் பாதுகாப்பு 30" என்ற முன்னெடுப்பினை மேற்கொண்டது. வீதி தொடர்பான பாதுகாப்புகளை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும். "உயிர் பாதுகாப்பு 30" என்ற முன்னெடுப்பின் மூலம் சாரதிகள் நகர் மற்றும் மக்கள் குடியிருக்கின்ற பிரதேசங்களில் வாகனத்தின் வேகத்தை 30 கிலோ மீற்றர்.'.மணித்தியாலமாக குறைக்கும் படி உற்சாகப்படுத்தப்பட்டனர். மேலும் இந்த பிரச்சார பணியின் பொழுது வீதி பாதுகாப்பு தொடர்பான 30 முக்கிய அம்சங்கள் சாரதிகளுக்காகவும் பாதசாரிகளுக்காகவும் அவர்கள் பின்பற்றவதற்காக எடுத்துரைக்கப்பட்டது.

சமூக வலைதளங்களில் மோட்டார் பிளஸ் வீதி பாதுகாப்பு வீரர்கள் தொண்டர் சமுதாய குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் தொண்டர்கள் சமுதாயத்துடன் இணைந்து கொண்டதுடன் வீதிகளை பாதுகாப்பாகவும் உயிர் அச்சுறுத்தல் அற்ற நிலையில் திகழ்வதற்கும் தமது வாக்குறுதிகளை வழங்கினர்.

CSR

PCR இயந்திரத்திற்கான நன்கொடைகள்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு அவசியமான ஊசு இயந்திரம் ஒன்றை நன்கொடையாக வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன பணியாளர்கள் கரம் கோர்த்து தமது பங்களிப்புகளை வழங்கினர்.

சுகாதார, போசாக்கு, சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பெரிய பராமரிப்பு வைத்தியசாலையாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலை காணப்படுகின்றது. சப்ரகமுவ பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு விசேட சுகாதார பராமரிப்பு சேவைகளை இது வழங்குகின்றது. இது இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களை உள்ளடக்கியதாக காணப்படுவதுடன் சுமார் 2,009,000 சனத்தொகையை உள்ளடக்கியதாகவும் இதன் பரப்பளவு 4,968 சதுர கிலோமீற்றராகவும் காணப்படுகின்றது மற்றும் ஊவா, தென் மாகாணம், கிழக்கு மாகாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து வருகை தருகின்ற மக்கள் விசேட மருத்துவ சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த வைத்தியசாலையில் PCR சோதனைகளை முறையாக மேற்கொள்வதற்காக PCR இயந்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தமையின் காரணமாக சுமார் இலங்கை ரூபாய் 5 மில்லியன் பெறுமதியான PCR இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக இகாகூ பணியாளர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை வழங்குவதற்கு தாமாக முன்வந்தனர்.

எதிர்கால அக்கறைகள்

- 2022 இற்காக புதிய உற்பத்தி திட்டமிடல்

எமது உற்பத்தி முதலீட்டுப் பட்டியலை பல்வகைமையுடன் மேலும் விரிவாக்குவதற்காக 2022 இல் பங்கிலாபத்தை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதி திட்டம் ஒன்றினை விருத்தி செய்வதற்கு எமது கம்பனி திட்டமிட்டுள்ளது.

சமூக மற்றும் தொடர்பாடல் மூலதனத்தை விருத்தி செய்வதற்கான எதிர்கால திட்டங்கள்

மாறுபட்ட வாடிக்கையாளர் பிரிவுகள் மூலம் வீதி பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை கட்டியெழுப்புவதற்காக காத்திரமான ஈடுபாடுகள்	நீண்ட கால பங்காண்மை மூலம் சிரேஷ்ட பிரசைகளுக்கான சந்தை சார் துறை மூலம் மேலும் பெறுமதிகளை மேம்படுத்தல்
வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக மேலதிக பெறுமானங்களை வழங்குதல்	வியாபாரத்துடன் தொடர்புடைய சகல பங்கீட்டுப்பாட்டாளர்கள் மத்தியிலும் ஈடுபாட்டினையும் ஊடாட்டத்தினையும் அதிகரித்தல்

இயற்கை மூலதனம்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்பு

- வீடுகள் மூலமாக
- தனியார் துறை மூலமாக
- பொதுமக்கள் மூலமாக

- தேசிய சுற்றாடல் கொள்கையுடன் இணக்கம்

பிரதான புள்ளிவிபரம் சார்ந்த முக்கிய விடயங்கள்

முதலீடுகள்	2021	2020	மாற்றம் %
மின்சார நுகர்வு (அலகுகள்/kWh)	5,045,349	4,817,121	4.74%
நீர் நுகர்வு (அலகுகள்/m3)	55,325	52,047	6.30%
காகித பாவனை (அலகுகள்/1000kg)	85	39	117.95%

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனமானது காப்புறுதி சேவைகளை வழங்கும் நிறுவனம் என்ற முறையில் எமது அன்றாட வியாபாரம் சார்ந்த தொழிற்பாடுகளை மேற்கொள்வதை தவிர ஏனைய விடயங்களுக்கு இயற்கை வளங்களில் தங்கியிருக்க வேண்டிய வாய்ப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இருப்பினும் எமது வியாபார செயற்பாடுகள் சுற்றாடல்களில் மறைமுக தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதை அறிவோம். மின் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற இயற்கை வளங்களின் மூலமாகவே எமது கட்டிடங்கள் ஒளிரூட்டப்படுகின்றன. அதேபோல் ஊழியர்களினால் பயன்படுத்தப்படுகின்ற காகிதங்கள், நீர், எமது அன்றாட செயற்பாடுகளின் காரணமாக மின் கழிவுகள் ஏற்படுகின்றன என்பதையும் நாம் அறிவோம்.

இகாகூ இன் வியாபார செயற்பாடுகள் சுற்றாடல் நேயமிக்கதாக மேற்கொள்ளப்படுகின்றன என்பது முக்கியமானதாகும். எமது வியாபாரத்தின் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் குறைக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக காபன் வெளியேற்றத்தை குறைப்பதற்காக நாம் தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம்.

மேலும் எமது டிஜிட்டல் ரீதியான உபாயமுறைகள் இகாகூ இன் இயற்கை மூலதன பாதுகாப்பு முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்கின்றது. கணனி மயப்பட்ட செயற்பாடுகளை விரிவாக்குதல் மற்றும் தானியங்கி வசதிகள் மூலம் எமது வியாபாரத்தை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக காகிதமற்ற தொழில் சூழலை இறுதியில் உருவாக்குவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். இகாகூ ஆனது தனது வள பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரித்துள்ளதுடன் கழிவுகளையும் குறைத்துள்ளது.

இயற்கை மூலதனம்

வரையறுக்கப்பட்ட சுற்றாடல் சார்ந்த தாக்கங்கள் எவ்வாறு இருந்த பொழுதிலும் கூட எமது மின்சாரம், நீர் நுகர்வுகள் எமது வியாபாரம் விரிவாகின்ற பொழுது படிப்படியாக அதிகரிக்கின்றன என்பதை நாம் அறிவோம். கழிவு உற்பத்தியும் இவ்வாறே காணப்படுகின்றது.

பின்வரும் அணுகுமுறைகள் மூலம் நாம் எமது இயற்கை மூலதனத்தை மேம்படுத்துவதற்கு முயல்கின்றோம்.

1) **சுற்றாடலுடனான இணக்கம்**
இகாகூ ஆனது நேரடியாக இத்தகைய சுற்றாடல் சார்ந்த ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்ட விடயமாக காணப்படாத போதிலும் தேசிய சுற்றாடல் கொள்கைக்கு ஏற்ப எமது தெழிற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை நாம் உறுதி செய்து கொள்கின்றோம். இதன் காரணமாக சுற்றாடல் சட்டத்திற்கு இணங்காமல் நடந்தது என்ற எத்தகைய முறைப்பாடுகளும் எமது கம்பனிக்கு எதிராக பதிவு செய்யப்படவில்லை.

2) **நுகர்வு கண்டறிதல் மற்றும் மேற்பார்வை**
வியாபாரம் முழுவதும் வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தல் என்பது தொடர்பான எமது முயற்சிகள் எமது மின் பாவனை, நீர் பாவனை, உருவாக்கப்படுகின்ற பத்திரிகை கழிவுகளின் அளவு ஆகியவற்றை கண்டறிந்து மேற்பார்வை செய்தல் என்பதன் அடிப்படையில் தங்கியுள்ளது. இவ்வாறு கண்டறிது மேற்பார்வை செய்வதானது எமது கம்பனிக்கு காபன் பயன்பாட்டை குறைப்பதற்கும் இயற்கை வளங்கள் பயன்பாட்டை குறைப்பதற்கும் படிப்படியாக உதவின.

3) **காகிதமற்ற தொழிற்பாடுகள்**
எமது டிஜிட்டல் பயன்பாட்டு முறையை நாம் துரிதப்படுத்தியதும் அதேபோல் தானியங்கி செயற்பாட்டு முறைகளை மேம்படுத்தியதும் முக்கிய காரணமாக காணப்படுவது எமது அமைப்பின் சகல மட்டங்களிலும் காகிதம் அல்லாத சூழலை உருவாக்குவதாகும். எமது வேலை செய்யும் சுற்றாடலில் குறைந்த அளவே காகிதம் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் உறுதி செய்துள்ளோம். டிஜிட்டல் மூலமாகவே ஆவணங்களை பெரும்பாலும் பரிமாறிக்கொள்கின்றோம். இத்தகைய செயற்பாடுகளின் காரணமாக அண்மைக் காலங்களில் காகிதப் பாவனை மாதாந்த அடிப்படையில் சராசரியாக வீழ்ச்சி கண்டுள்ளது. எமது சபை கூட்டங்கள் மற்றும் சபை உப குழு கூட்டங்கள் ஆகியவற்றின் பொழுது காகிதப் பயன்பாடு அற்ற கூட்டங்களாகவே இடம்பெற்றன. அத்தோடு சபைக் கூட்டங்களின் பொழுது தானியங்கி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினோம்.

எதிர்கால அக்கறைகள்

- **சகல விதமான பிரதான வியாபார செயன்முறைகளையும் டிஜிட்டல் மயப்படுத்தல்**

விற்பனை தொழிற்படை தானியங்கி செயன்முறைகள், இகாகூ இன் வாடிக்கையாளர் செயலி மேலும் மேம்படுத்தல்கள், முகாமைத்துவம் சார்ந்த விடயங்களை ஆரம்பித்தல், உள்ளக செயன்முறை தானியங்கி முறைகளை மேம்படுத்துவதற்கான தொழிற்படை முகாமைத்துவத்தை ஆரம்பித்தல், ஆயுள் காப்புறுதி டிஜிட்டல் பிரேரணை தளங்கள், வினைத்திறன்மிக்க வியாபாரம்/ தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றுக்காக வியாபார பகுப்பாய்வுகளை ஏற்படுத்தல் அகியவற்றில் ஏற்கனவே டிஜிட்டல் மயப்படுத்தல் செயன்முறைகளை நாம் மேற்கொண்டு விட்டோம். அதேவேளை மோட்டார் கோரிக்கைகள் டிஜிட்டல் தளத்தினை டிஜிட்டல் மயப்படுத்தலை துரிதப்படுத்துகின்ற அதேவேளை ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிகளில் புதிய உற்பத்திகளை விருத்தி செய்தல் ஆகியவற்றில் டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் இயற்கை வளங்களை பொறுப்பு வாய்ந்த முறையில் நுகர்கின்றோம் என்ற எமது பயணத்தை மேலும் காகிதமற்ற சுற்றாடலை வலுப்படுத்தும் நோக்குடன் மேற்கொண்டு வருகின்றோம்.

- **புத்தாக்கம் செய்ய முடியாத வளங்களில் தங்கியிருப்பதை குறைக்கும் முகமாக புத்தாக்க சக்தியை மேம்படுத்துவதற்காக முதலீடு செய்தல்**

புத்தாக்க சக்தியை நோக்கி இகாகூ பயணிப்பதன் காரணமாக புத்தாக்கம் செய்ய முடியாத சக்தி பயன்பாட்டினை இது குறைக்கின்றது. மேலும் இந்த செயற்பாடானது இகாகூ இன் காபன் பயன்பாட்டினை குறைப்பதற்கும் பங்களிப்பு செய்கின்றது.

முதல் முறையாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பான GHG மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் எமது கம்பனியானது GHG தனிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது. மேலும் காலநிலை தாக்கம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக கம்பனியின் தொழிற்பாடுகளின் காரணமாக GHG கழிவுகளை குறைத்தல் மற்றும் எதிர்காலத்தில் காபன் நடுநிலை தன்மையை அடைவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பிரகாரம் எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்காக உயர் முகாமைத்துவத்தினால் பின்வரும் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

காலத்திற்கு காலம் சக்தி தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொள்ளல், GHG மேலும் வெளிப்படுவதை குறைப்பதற்காக சாத்தியப்பாடுகளை ஆராய்தல் போன்றன. இகாகூ இன் செயற்பாடுகளின் பொழுது மின் பாவனையின் காரணமாக அதிகளவில் GHG வெளிப்படுவதனால் இதனால் ஏற்படுகின்ற காபன் சார்ந்த தாக்கங்களை குறைக்கும் முகமாக சக்தி சார்ந்த வினைத்திறனை அதிகரிக்கக்கூடிய விடயங்களை எமது கம்பனி மேம்படுத்தும்.

இவ்விடயம் தொடர்பில் எமது ஊழியர்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாக ஊழியர் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு கம்பனி திட்டமிட்டுள்ளது. புர்பு தணிப்பு முன்னெடுப்புகள் தொடர்பில் எமது ஊழியர்களது அதிகூடிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளும். இதன் மூலம் எதிர்காலத்தின் காபன் பயன்பாட்டு நடுநிலையை அடைய முடியும்.

உயர் முகாமைத்துவத்தில் காபன் அற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக பின்பவரும் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.:

- சூரிய சக்தி பனல்களை பொருத்துதல்
- மரம் நடல் பிரச்சாரப் பணிகள்
- காபன் தணிப்பு நடவடிக்கைகள்

ஆளுகை மற்றும் இடர் மேற்பார்வை

88 - கூட்டுறவு ஆளுகை அறிக்கை
92 - கணக்காய்வு மற்றும் இணக்கக்குழு அறிக்கை
94 - முதலீட்டுக் குழு அறிக்கை 2021
96 - இடர் முகாமைத்துவ அறிக்கை
107 - இணக்க அறிக்கை
114 - உள்ளக கட்டுப்பாடு கூற்று

SOLIDITY

உறுதி

எமது பங்கீட்டுப்பாட்டாளர் மீதான நம்பிக்கையில் கட்டியெழுப்பப்பட்ட பலமான எமது அத்திவாரமானது எமது உறுதியை புலப்படுத்துகிறது

கூட்டுறவு ஆளுகை அறிக்கை

தவிசாளரின் அறிமுகம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட் ஆனது (SLIC) அரசாங்கத்திற்கு சொந்தமான தொழில்முயற்சி என்ற முறையில் காத்திரமான ஆளுகை நடைமுறைகளை பின்பற்றுவதுடன் தனது வியாபாரம் முழுவதும் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஒழுக்கவியல் முகாமைத்துவம் மற்றும் நேர்மை ஆகியவற்றை பேணுகிறது. அதேவேளை விவேகமான, வேகமான தீர்மானங்களையும் மேற்கொள்கின்றது. பல்வேறு வகையான பங்கீட்டுபாட்டாளர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய பொறுப்பு சபையிடம் காணப்படுகின்றது என்பதை நாம் பரிசீலிக்கின்றோம். குறிப்பாக இலங்கை அரசாங்கம், விசேடமாக அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனி என்ற முறையில்: ஒழுங்குபடுத்துநர்கள், நிதிசார் நிறுவனங்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், அத்தோடு இகாகூ இன் ஒட்டுமொத்த நோக்கமாக தேசிய பொருளாதாரம் மற்றும் உபாய ரீதியான நலன்கள், சுற்றாடல் ஆகியவற்றுக்கு உதவுவது ஒட்டுமொத்த நோக்காகக் காணப்படுகின்றது.

கூட்டுறவு ஆளுகையின் 04 தூண்களின் அடிப்படையில் கம்பனி தொழிற்பட்டு எவ்வாறு பெறுமானங்களை பகிர்ந்து கொள்கின்றது என்பதை சபை நிர்ணயம் செய்கின்றது. 04 தூண்களாக, பொறுப்பு, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நேர்மை ஆகியன காணப்படுகின்றன. காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 17 ஆவது பணிப்புரையில் பிரகாரம் "2017 - கூட்டுறவு ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகள் கோவைக்கு" ஏற்பாடுகளுக்கு ஏற்ப இணங்கி நடக்கின்றோம். இதனை இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் விநியோகத்தது. மேலும், 2021.11.17 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் கூட்டுறவு ஆளுகை மற்றும் தொழிற்பாடு கையேடு தொடர்பான COE ஐ நிதி அமைச்சு வெளியிட்டது. ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இந்த கோவைகளை நாம் பின்பற்றி வருகின்ற அதேவேளை குறிப்பிடப்பட்ட கோவையின் பிரகாரம் அரசாங்கத்தின் வரைவுச் சட்டகங்களை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

சுருக்கமாக கூறின், கூட்டுறவு ஆளுகை தொடர்பான எமது அணுகுமுறை இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது: சபை மற்றும் சபை உப குழுக்கள் ஆகியவற்றிற்கு கூட்டிணைந்த திறன்கள், அனுபவம், அறிவு ஆகியன காணப்படுவதுடன் கம்பனியின் கூட்டுறவு ஆளுகை செயன்முறைகளை அதற்கான தொணியை உருவாக்குவதற்கான மூலகாரணமாகவும் காணப்படுகின்றது. சபையானது ஒழுங்காக கூடுவதுடன் பெரும்பாலும் மாதாந்தம் கூடுகின்றது. அத்தோடு நிறைவேற்று முகாமைத்துவத்தின் செயலாற்றுகைகளை கண்காணித்து வருகின்றது. நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர்கள் ஆக்கபூர்வமான சவால்கள் தொடர்பில் விசேட அறிவுரைகளை வழங்குகின்றனர். கம்பனியை வினைத்திறன்மிக்க முறையில் நடாத்துவதற்கு காத்திரமான ஆளுகையின் பங்களிப்பினையும் அதன் முக்கியத்துவத்தினையும் நாம் முழுமையாக பாராட்டுகின்றோம். நாம் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதை பின்வரும் அறிக்கைகள் காட்டுகின்றன.



பொறியியலாளர் விஜித ஹேரத்
தவிசாளர்
24 மே 2022

வரைவுச் சட்டகம்

கம்பனியானது தனது பணிப்பாளர்கள் சபை மூலமாகவும் மற்றும் உப சபை குழுக்கள் மூலமாகவும் தனது சகல தொழிற்பாடுகளின் பொழுதும் ஆளுகை வரைவுச் சட்டகத்தை பேணி வருகின்றது. இவற்றுள் முறை சார்ந்த கொள்கைகள், செயன்முறைகள், வழிகாட்டிகள், சம்பந்தப்பட்ட முகாமைத்துவ அறிக்கைகள் ஆகியன உள்ளடங்குகின்றன.



சபை ஆக்கஅமைவு மற்றும் சபையின் பொறுப்பு

அறிக்கையிடும் திகதியில் சபையானது 07 பணிப்பாளர்களை கொண்டிருந்தது. நிறைவேற்ற அதிகாரம் சாராத பணிப்பாளர்கள் தமது துறையில் சிறப்புவாண்மைமிக்கவர்களாக காணப்பட்டனர். சபையின் ஆக்கஅமைவானது கம்பனியின் தொழிற்பாடுகளை வினைத்திறன்மிக்க முறையில் மேற்பார்வை செய்வதற்கான சம்பந்தப்பட்ட வியாபார அனுபவங்களை வழங்குவதாக சபை கருதுகின்றது. அதேவேளை தனிப்பட்ட முறையில் பணிப்பாளர்கள் பல்வேறு வகையான திறன்கள், அறிவு, அனுபவம் ஆகியவற்றை கொண்டிருக்கின்றனர். அராசாங்கத்திற்கு சொந்தமான தொழில் முயற்சி என்ற முறையில் பணிப்பாளர்கள் சபையானது அரசாங்கத்திற்கும் பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கும் இடையில் இடைத் தரகர்கள் போல் செயற்படுகின்றனர். இவர்களே பிரதான பங்கீட்டுப்பாட்டாளர், கம்பனி, அதன் முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு இடையில் இடைத் தரகர்கள் போல் செயற்படுகின்றனர். ஒட்டுமொத்த தலைமைத்துவத்திற்கு சபையே பொறுப்பாக இருக்கின்ற அதேவேளை சபை உப குழுக்கள் மூலம் நேரடியாகவும் மறைமுகமாகவும் தலைமைத்துவத்தை வழங்குகின்றனர். பங்கீட்டுபாட்டாளர்களுக்கு நீண்ட கால அடிப்படையில் பெறுமானங்களை வழங்குவதற்காக இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களது பிரதான வகிபாகமானது மேற்பார்வை செய்தல், திட்டமிடல் ஆகும். கம்பனியின் நிதி சார்ந்த மற்றும் வர்த்தக ரீதியான செயலாற்றுகைகள் முறையாக பணிப்பாளர் சபையினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. மேலும் கம்பனி எதிர்கொள்ளக்கூடிய சகல விதமான இடர்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் போதுமை தொடர்பில் மீளாய்வு செய்து மதிப்பீடுகளை சபை வெளியிடுகின்றது.

கம்பனி செயலாளர்

ஆளுகை வரைவுச் சட்டகத்தின் நாணயத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கம்பனி செயலாளர் பொறுப்பாக இருக்கின்றார். இவரது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் பற்றி கம்பனிகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கம்பனியின் சிறப்பான ஆளுகைக்கு ஆளுகை கோட்பாடானது மிக முக்கியமான வகிபாகத்தை வகித்து வருகின்றது. சகல பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரிடமிருந்து ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். சபை தொடர்பான செயன்முறைகளுக்கு ஏற்ப விடயங்கள் நடைபெறுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வதற்கு கம்பனி செயலாளரே பொறுப்பாக இருக்கின்றார்.

சபை மற்றும் குழு செயன்முறைகள்

சபையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு முக்கிய காரணியாக காணப்படுவது சபை குழுக்களை தாபிக்கப்பட்டமையாகும். மேலும், கணக்காய்வு, இணக்கப்பாட்டு முதலீடு, மனித வளங்கள், இடர் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு சபைக்கான பெறுமானங்களை இது சேர்க்கின்றது. சபையின் மேற்பார்வை பணிகளுக்கு உதவுவதற்காக, திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் சம்பந்தப்பட்ட விடயங்களில் சபையானது 05 உப குழுக்களை தாபித்துள்ளது.: கணக்காய்வு மற்றும் இணக்க குழு, இடர் முகாமைத்துவ குழு, முதலீட்டுக் குழு, உபாய ரீதியான குழு, மனித வளங்கள் குழு ஆகும். சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள், கொள்கைகள், செயன்முறைகள் ஆகியவற்றின் மூலமாக குழுக்கள் ஆட்சி செய்யப்படுகின்றன மற்றும் குறிப்பிட்ட காலப் பகுதியின் பொழுது நடைபெறுகின்ற சபை குழுக்களின் பொழுது அறிக்கையிடுகின்றனர்.

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற சபை கூட்டங்கள் மற்றும் சபை உப குழு கூட்டங்கள் எண்ணிக்கை தொடர்பான விடயங்கள் மற்றும் ஒவ்வொரு பணிப்பாளரும் இத்தகைய கூட்டங்களில் எவ்வாறு பங்குபற்றினார் என்பது தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.:

சபை கூட்டங்கள் - 2021

சபையின் சகல கடமைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்வதற்காக ஒழுங்கான முறையில் போதியளவில் சபை கூடுகின்றது. ஏதாவது தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் சபை உறுப்பனர் ஒருவரினால் சபை கூட்டங்களுக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து நிகழ்ச்சி நிரலில் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் பணிப்பாளர் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அது தொடர்பான கருத்துக்களை தவிசாளர், பிரதான நிறைவேற்று அதிகாரி அல்லது கம்பனி செயலாளர் ஆகியோரிடம் கூட்டத்திற்கு முன்னரே கலந்துரையாட முடியும். 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 17 சபை கூட்டங்கள் இடம்பெற்றன.

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 17 சபை கூட்டங்கள் இடம்பெற்றன. 10 சபை கூட்டங்கள் திரு. ஜகத் வெல்லவத்த அவர்கள் தலைமை தாங்கினார். 2021 ஆகஸ்ட் 03 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் பதவியிலிருந்து விலகினார் மற்றும் 07 கூட்டங்களுக்கு பொறியியலாளர் விஜித ஹேரத் தலைமை தாங்கினார். 2021 ஆகஸ்ட் 03 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் சபைக்கு இவர் நியமிக்கப்பட்டார்.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
பொறியியலாளர் விஜித ஹேரத் *(2021.08.03 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)*	07
திரு. ஜகத் வெல்லவத்த (2021.08.03 இல் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்)	10
திரு. கே.ஏ. விமலேந்திராஜா *(2022.03.14 இல் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்)*	17
திரு. அனில் மீகஹகெதர	17
திரு. அனில் கொஸ்வத்த	17
திரு. நிஷாந்த தயானந்த	17
திருமதி. சுரேக்கா அலஸ்	17
திரு. டப்ளியு.ஏ. சமந்த உபனந்த *(2021.02.24 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)*	16

கூட்டுறவு ஆளுகை அறிக்கை

கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு கூட்டங்கள் (ACCM) - 2021

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 04 கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு கூட்டங்கள் இடம்பெற்றன. 02 கூட்டங்களுக்கு நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரான, திரு. கே.ஏ. விமலேந்திரராஜா அவர்கள் தலைமை தாங்கினார். 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் பின்னர் இவர் ACC உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். அதனைத் தொடர்ந்து சபையானது திரு. டப்ளியு.ஏ. சமந்த உபனந்த அவர்களை நியமித்தது. இவர் நிறைவேற்று சாராத பணிப்பாளராவார். அத்தோடு 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் திரு. விமலேந்திரராஜா அவர்களுக்கு பதிலாக தவிசாளராக நியமிக்கப்பட்டார்.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. டப்ளியு.ஏ. சமந்த உபனந்த. *(குழுவின் தவிசாளர் - NED) (2021.08.05 இல் செல்லுபடியாகும் வகையில் தவிசாளராக நியமிக்கப்பட்டார்)*	02
திரு. கே.ஏ. விமலெந்திராஜா *(2022.03.14 இல் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் பதவியை இராஜினாமா செய்தார்)*	02
திரு. அனில் மீகஹகெதர	04
திரு. நிஷாந்த தயானந்த	04

முதலீட்டுக் குழு கூட்டங்கள் - 2021

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 18 முதலீட்டுக் குழு கூட்டங்கள் இடம்பெற்றன. இந்த குழுக் கூட்டங்களுக்கு நிறைவேற்று சாரா பணிப்பாளர் தலைமை தாங்கினார்.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. கே.ஏ. விமலெந்திராஜா *(குழுவின் தவிசாளர் - NED)*	18
பொறியியலாளர் விஜித ஹேரத் *(03.08.2021 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)*	06
திரு. ஜகத் வெல்லவத்த *(03.08.2021 இல் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்)*	09
திரு. அனில் மீகஹகெதர	17
திருமதி. சுரேக்கா அலஸ்	18

இடர் முகாமைத்துவ குழு கூட்டங்கள் - 2021

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 03 இடர் முகாமைத்துவ குழு கூட்டங்கள் இடம்பெற்றன. நிதி, முதலீடுகள், காப்பீடு, மறுகாப்பீடு, இணக்கம், உள் தணிக்கை, மனித வள முகாமைத்துவம் மற்றும் தகவல் தொடர்புத் துறைகள் ஆகியவற்றிலிருந்து பல்வேறு இடர் முகாமையாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பரந்த உறுப்பினர் குழுவைக் கொண்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. சுரேக்கா அலஸ் *(குழுவின் தவிசாளர் - NED)*	03
திரு. அனில் மீகஹகெதர	03

மனித வளங்கள் குழு கூட்டங்கள் - 2021

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 09 மனித வளங்கள் குழு கூட்டங்கள் இடம்பெற்றன. இந்த குழுக் கூட்டங்களுக்கு நிறைவேற்று சாரா பணிப்பாளர் தலைமை தாங்கினார்.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. நிஷாந்த தயானந்த *(குழுவின் தவிசாளர் - NED)*	09
திரு. ஜகத் வெல்லவத்த *(2021.08.03 இல் செல்லுபடியாகும் வகையில் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகினார்)*	05
திரு. அனில் கொஸ்வத்த	09
பொறியியலாளர் விஜித ஹேரத் *(2021.08.03 இல் செல்லுபடியாகும் வகையில் நியமிக்கப்பட்டார்)*	03

ஏனைய தொழிற்பாட்டு குழுக்கள்

மேற்குறிப்பிடப்பட்ட சபை உபகுழுக்களுக்கு மேலதிகமாக, பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு உதவும் முகமாக ஏனைய தொழிற்பாட்டு குழுக்களாக, நிறைவேற்று குழு (EXCO), மீள் காப்புறுதி குழு, கணக்காய்வு பின்னூட்டல் குழு, கிளை முகாமைத்துவ தோற்றப்பாட்டு குழு, சட்டக் குழு மற்றும் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மீளாய்வு குழு ஆகியன உள்ளடங்குகின்றன. இவை யாவும் ஆளுகை கட்டமைப்பில் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றன. உறுப்பினர்கள் கம்பனியிலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அனுபவங்களின் அடிப்படையிலும் இணைக்கப்படுகின்றனர். உபாயங்களை விருத்தி செய்து நடைமுறைப்படுத்தல், தொழிற்பாட்டு திட்டங்கள், கொள்கைகள், செயன்முறைகள், வரவு செலவுத் திட்டங்கள் போன்ற வியாபாரத்துடன் தொடர்புடைய அன்றாட செயற்பாடுகளை நிறைவேற்றுக் குழு முகாமைத்துவம் செய்கின்றது. கூட்டுறவு உபாயமுறையை விருத்தி செய்து நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்களை EXCO மற்றும் சபை இணைந்து மேற்கொள்கின்றது. இக்குழுவானது மாதாந்தம் அல்லது தேவையின் அடிப்படையில் கூடுகின்றது. இந்த குழுக் கூட்டங்களை குழுவின் தவிசாளர் கூட்டுகின்றார். இவரே கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார், தமது செயலாற்றுகை நியதியின் கீழ் வருகின்ற எந்த விடயத்தையும் எந்த நேரத்திலும் பரிசீலிக்க முடியும்.

தகவல் பாய்ச்சல்

சகல சபை கூட்டங்கள் மற்றும் உபகுழு கூட்டங்கள் ஆகியவை நடைபெறுவதற்கு முன்னரே விரிவான தகவல்கள் சகல பணிப்பாளர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் அவசியமான தகவல்களை முன்கூட்டியே பெறுவதன் காரணமாக சபை மற்றும் உபகுழு கூட்டங்களின் பொழுது அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. நிறைவேற்று முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் மற்றும் ஏனைய முக்கியமான ஊழியர்கள் ஆகியோர் பொருத்தமான கூட்டங்களில் கலந்து கொண்டு தமது பங்களிப்புகளை வழங்குகின்றனர். பணிப்பாளர்கள் தமது கடமைகளை ஆற்றுகின்ற சந்தர்ப்பங்களில் கம்பனியின் செலவில் சுயாதீன தொழில்வாண்மைமிக்கவர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான அதிகாரங்கள் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சகல பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரை அணுகி சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும். சபையின் செயன்முறைகள் அவதானிக்கப்பட்டு கூட்டுறவு ஆளுகை தொடர்பான விடயங்களில் சபைக்கு ஆலோசனை வழங்கக்கூடியவராக கம்பனி செயலாளர் இருக்கின்றார். சபை மற்றும் சம்பந்தப்பட்ட உபகுழு தொடர்பான ஆவணங்களை சகல பணிப்பாளர்களும் பெற்றுக் கொள்ள முடியும். இவை மின்னியல் மூலமாக வழங்கப்படுகின்றன. சபை மற்றும் குழுக் கூட்டங்களின் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறைக்கப்படுவதுடன் இத்தகவல்கள் உரிய நேரத்தில் அவர்களை சென்றடைகின்றன. சகல உபகுழுக்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகள் காலத்திற்கு காலம் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிசார் அறிக்கையிடல்

ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்கான பொறுப்பு பணிப்பாளர்களிடம் காணப்படுகின்றது.

இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள்

இடர் முகாமைத்துவ முறைகள் தொடர்பான பயனுறுதித்தன்மையை மீளாய்வு செய்துள்ளோம் மற்றும் இந்த நிதிக்கூற்று காலப் பகுதி முதல் இற்றை வரை தொழிற்பட்டு வருகின்ற உள்ளக கட்டுப்பாடுகள் ஆகியவற்றை மீள் பார்வைக்கு உட்படுத்தியுள்ளோம் பணிப்பாளர்கள் உறுதி செய்தல் வேண்டும். கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு வரைவுச் சட்டகமானது கம்பனியின் கொள்கைகள், செயன்முறைகள், தொடர் செயற்பாடுகள், செயற்பணிகள், நடத்தைகள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளன. கம்பனியிடம் உள்ளக கணக்காய்வு செயற்பாடொன்று காணப்படுகின்றது. இது சபையின் தவிசாளர் மற்றும் கணக்காய்வு மற்றும் இணக்கக் குழுவின் தவிசாளர் ஆகியோருக்கு அறிக்கையிடல் வேண்டும். கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு ஆனது ஒவ்வொரு குழுக் கூட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையை பெற்றுக் கொள்கின்றது. மேலும் 04 பிரதான இடர்கள் தொடர்பிலான தொழில்முயற்சி இடர் முகாமைத்துவம் தொடர்பான முழுமையை நோக்கிய பார்வையை கம்பனி ஏற்றுக் கொள்கின்றது. அவையாவன, உபாய ரீதியானவை, நிதி ரீதியானவை (சந்தை இடர் உள்ளடங்கலாக), தொழிற்பாடுகள் (நற்பெயர் சார் இடர் உள்ளடங்கலாக), மற்றும் "GRC - ஆளுகை, இடர் மற்றும் இணக்கப்பாடு" வரைவுச் சட்டகத்தின் கீழ் உபாயங்கள்.

ஆளுகை வரைவுச் சட்டகத்தில் கோவிட்-19 இன் தாக்கம்

கோவிட்-19 ஆனது பொது சுகாதார பிரச்சினையாக ஆரம்பித்த பொழுதிலும் கூட பின்னர் நிதி, பொருளாதார ரீதியான பிரச்சினைகளாக மாறியது. மேற்படி நிதி மற்றும் பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக தனித்துவமான பல சிக்கல்கள் ஏற்பட்ட பொழுதிலும் கூட கோவிட்-19 தொடர்பான பிரச்சினைகளை சபையானது காத்திரமாக கலந்துரையாடி அவற்றின் தாக்கத்தை ஆராய்ந்து இது தொடர்பான பல பரிசீலனைகளை மேற்கொண்டது.

கோவிட்-19 ஆனது பொருளாதாரத்தை தாக்கி நிச்சயமற்ற தன்மைகளை ஏற்படுத்தி பல சிக்கலான இடர்களை உருவாக்கிய பொழுதிலும் பல்வேறு வகையான விடயங்கள் தொடர்பில் சமநிலையை பேணுவதில் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையானது முக்கியத்துவமிக்கதாக காணப்பட்டது. கோவிட்-19 இன் காரணமாக ஏற்பட்ட வியாபாரம் சார்ந்த இடர்கள் மற்றும் வேலைத்தள சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகள் போன்றன பற்றி EXCO குழுவானது கம்பனி முகாமைத்துவத்துடன் முக்கிய விடயங்கள் தொடர்பில் பகிரங்க கலந்துரையாடல்களை மேற்கொண்டது. கம்பனியானது டிஜிட்டல் மூலமாக அதாவது டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சபை கூட்டங்களை தொலை தூரத்திலிருந்து மேற்கொண்டமையின் காரணமாக மற்றும் இதன் பொழுது ஒடியோ மற்றும் வீடியோ ரீதியான கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் காரணமாக பெருந்தொற்றின் காரணமாக பிரயோகிக்கப்பட்ட போக்குவரத்து மட்டுப்பாடுகள் மற்றும் முடக்கங்கள் பெருமளவில் பாதிக்கவில்லை. பிரதான நிறைவேற்று அதிகாரியின் தலைமையின் கீழ் இயங்குகின்ற சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகளை உள்ளடக்கிய வியாபார தொடர்ச்சி வழிப்படுத்தல் குழுவானது வியாபாரம் தொடர்ச்சியாக இடம்பெறுவதை உறுதி செய்கின்றது. ஆகவே வியாபாரத்தை பாதுகாக்கின்ற அதேவேளை எமது ஊழியர்களதும் பங்கீட்டுபாட்டாளர்களினதும் பாதுகாப்பினை உறுதி செய்ய முடியும். இதன் மூலம் நெருக்கடிகளை கையாளக்கூடியதாக இருந்தது.

கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கை

கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கை ஒரு மேற்பார்வை குழுவாகும். நிதிக் கூற்றுகளானது கம்பனியின் உண்மையான நேர்மையான அலுவல்களை புலப்படுத்துகின்றன என்பதை சபை உறுதி செய்து கொள்வதற்கு இது உதவுகின்றது. மேலும், கம்பனியானது உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பில் பலமான வினைத்திறன்மிக்க முறைகள் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வதற்கும் உதவுகின்றது. இந்த குழுவிற்கு நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர் தலைமை தாங்குகின்றார். இவரே திறைசேரி பிரதிநிதியாக காணப்படுவதுடன் நிறைவேற்று சாராத பணிப்பாளர்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர். கம்பனியின் செயலாளர் அவர்களே கூட்டங்களுக்கும் செயலாளராக இருக்கின்றார். இணக்கப்பாடு மற்றும் கணக்காய்வு செயற்பாடுகள் ஆகியன கணக்காய்வு இணக்கப்பாட்டு குழுவிற்கு அறிக்கையிட்ட பொழுதிலும் கூட இவை இரண்டும் சுயாதீனமாக செயற்படுவதுடன் இவை இரண்டும் தனித் தனியாகவே செயற்பட்டு வருகின்றன.

இந்த குழுவுக்கு பெறுமதியான சேவைகளை சிரேஷ்ட பணியாளர்கள் வழங்கிய பொழுதிலும் இவர்கள் நிதி, கணக்காய்வு, காப்புறுதி நிபுணத்துவம் போன்றவற்றை கொண்டிருக்கின்றனர். இதன்மூலம் கணக்காய்வு மற்றும் இணக்கக் குழுவின் கடமைகளை வினைத்திறன்மிக்க முறையில் முன்னெடுக்க முடியும்.

செயலாற்றுகை நியதி

கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழுவின் செயலாற்றுகை நியதியானது சபையின் கணக்காய்வு சமவாயம் மற்றும் இணக்கப்பாட்டு குழு ஆகியவற்றில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளன. "கூட்டுறவு ஆளுகை தொடர்பான சிறப்பான நடைமுறைகள்" இதனை இலங்கை பிணையங்கள் மற்றும் நாணய மாற்று ஆணைக்குழு, 2027 இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஆகியன கூட்டிணைந்து வழங்கின. இதில் கணக்காய்வு குழுக்கள் தொடர்பான வழிகாட்டல் கொள்கைகள் மற்றும் சிறப்பான முறைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதன் அடிப்படையிலேயே இவ்விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த சமவாயத்தின் நோக்கெல்லையானது கம்பனியின் முறைகளை வெளியிடல், கட்டுப்பாடுகள், நிதி தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைகள், கணக்கீடுகள், கொள்வனவு, சட்ட ரீதியான இணக்கப்பாடு, முகாமைத்துவம் சார்ந்த ஒழுக்க நெறிகள் ஆகிய தொடர்பான மேம்பட்ட மேற்பார்வைகளை கொண்டிருக்கின்றன. அத்தோடு வியாபார இடர்கள் தொடர்பான மேற்பார்வை முகாமைத்துவம் சார்ந்த விடயங்களையும் சபை தாபித்துள்ளது. இந்த குழுவானது பணிப்பாளர் சபைக்கு பொறுப்புக் கூற வேண்டும். மேலும் இதனது செயற்பாடுகள் தொடர்பாக சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

குழுக் கூட்டங்கள்

2021 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த நிதியாண்டு காலப் பகுதியில் நான்கு குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இந்த குழுக் கூட்ட செயற்பாடுகள் தொடர்பில் போதியளவு விபரங்களுடன் பதியப்படுவதுடன் இது சம்பந்தமான விபரங்கள் முறையாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிவிக்கப்படுகின்றது. அழைப்பின் பேரில் கணக்காய்வு தலைமை அதிபதியின் பிரிதிநிதிகள் கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

2021 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களது வரவு தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளரின் பெயர்	பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு. டப்ளியு.ஏ. சமந்த உபனந்த *(குழுவின் செயலாளர் - நிறைவேற்று சாரா பணிப்பாளர்)* *(2021.08.05 இல் செல்லுபடியாகும் வகையில் தவிசாளராக நியமிக்கப்பட்டார்)*	02
திரு. கே.ஏ. விமலெந்திராஜா *(2021.08.05 இல் செல்லுபடியாகும் வகையில் குழு உறுப்பினர் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்)*	02
திரு. அனில் மீகஹகெதர	04
திரு. நிஷாந்த தயானந்த	04

உள்ளக கணக்காய்வு

கம்பனியிடம் அதற்கு சொந்தமான உள்ளக கணக்காய்வு திணைக்களம் காணப்படுகின்றது. உள்ளக கணக்காய்வு திணைக்களத்திற்கு தகைமை படைத்த பட்டயக் கணக்காளர் தலைமை தாங்குகின்றார். உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களானது சமர்ப்பிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு மற்றும் குழுவினால் முறையாக ஒப்புதல் அளிக்கப்படுகின்றன. அத்தோடு உள்ளக கணக்காய்வு மற்றும் சோதனை செயற்பாடுகள் ஆகியன முறையாக மீளாய்வு செய்யப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்றன. உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளானது சுயாதீன செயற்பாடுகளாகும். இவை தொழில்வாண்மைமிக்க முறையில் கணக்காய்வுகளை மேற்கொண்டு தமது கடமைகளை நிறைவேற்றுகின்றன. இத்திணைக்களத்திற்கு தமது கடமைகளை மேற்கொள்வதற்கான அவசியமான அதிகாரங்கள் மற்றும் போதிய வளங்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் குழு திருப்தியடைகின்றது. தனது காலப் பகுதிக்கான கூட்டங்களின் பொழுது உள்ளக கணக்காய்வு தலைவரிடமிருந்து கிடைக்கின்ற அறிக்கைகளை குழு மீளாய்வு செய்கின்றது. இதன் மூலம் உள்ளக கணக்காய்வு திட்டம் மற்றும் பிரதான கண்டறிதல்கள் ஆகியவற்றின் முன்னேற்றங்கள் பற்றிய மேற்பார்வைகளை குழுவினால் மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

வெளிநிலை கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் வெளிநிலை கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (4) ஆம் உறுப்புரையில் பிரகாரம் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகள் தொடர்பான வருடாந்த கணக்காய்விற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உதவும் முகமாக தகைமை பெற்ற கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களினால் ஆநளளசள டீனுழு பங்காளர்கள் நியமிக்கப்பட்டனர். வெளிநிலை கணக்காய்வாளர்களது கண்டறிதல்கள் மற்றும் விதப்புரைகள் தொடர்பான முகாமைத்துவக் கடிதம் மற்றும் முகாமைத்துவத்தின் பதிலளிப்புகள் ஆகியவற்றை குழு மீளாய்வு செய்தது.

கணக்காய்வு குழுவுக்கு கிடைக்கின்ற தகவல்கள்

தனது பொறுப்புகளை வெற்றிகரமாக நிறைவேற்றவதை இலகுபடுத்துவதற்கு அவசியமான தகவல்கள் போதியளவு நம்பத்தகுந்த முறையில் முகாமைத்துவம் மற்றும் வெளிநிலை கணக்காய்வாளர்களிடமிருந்து கிடைக்கப் பெற்றன என்பதை யுஊஊ உறுதிப்படுத்துகின்றது.

சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் பொறுப்புகள் மற்றும் தேய்மானம்

நேர்மை பெறுமதி கணக்கீட்டுகள் அதிகரிக்கப்பட்ட பயன்பாடு மற்றும் அதனது முக்கியத்துவம், ஆகியவற்றை நோக்குகையில் நேர்மையான விடயங்களை ஊகிக்கின்றன தொடர்பில் அவசியமான புலப்படுத்தப்பட்டுள்ளன, கூர்ந்து ஆராயப்பட்டுள்ளன, பொருத்தமான சவால்கள் போன்றன கணக்காய்வு குழுவினால் ஆராயப்பட்டுள்ளன என்பதை கணக்காய்வு குழு உறுதிப்படுத்துகின்றது. தேய்மானம் தொடர்பான செயன்முறைகள் போதியளவு காணப்படுகின்றன என்ற கருத்தை குழு கொண்டுள்ளது.

IFRS ஐ ஏற்றுக் கொள்ளல்

IFRS ஐ ஏற்றுக் கொள்ளுதலின் முன்னேற்றம், பற்றி குழு மேற்பார்வை செய்வதுடன் காலத்திற்கு ஒரு முறையான சபைக் கூட்டங்களின் முன்னேற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டமை தொடர்பாக சபைக்கு அறிவிக்கின்றது.

சுயாதீன வெளிநிலை ஆலோசனை

பொருத்தமான சந்தர்ப்பங்களில் சுயாதீன வெளிநிலை ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை கணக்காய்வு குழுவின் சமவாயம் அனுமதிக்கின்றது.

ACC இன் கூட்டங்களுக்கு உள்ளக கணக்காய்வு சமூகமளித்தல் மற்றும் இணக்கப்பாடு மற்றும் இடர் குழு தலைவர்கள் கூட்டங்களில் பங்குபற்றுதல்

உள்ளக கணக்காய்வு மற்றும் இணக்கப்பாடு, இடர் குழு தலைவர்கள், கணக்காய்வுக் கூட்டங்களில் நேரடியாக பங்குபற்ற முடியும். இவர்கள் நேரடியாக சபைக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

கணக்காய்வு சாராத சேவைகள்

மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் வெளிநிலை கணக்காய்வாளர்களினால் கணக்காய்வு சாராத சேவைகள் வழங்கப்பட்டன.

இணக்கப்பாட்டு செயல்கள்

கூட்டுறவு இணக்கப்பாட்டு செயற்பாடானது இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகள் மற்றும் உதவி கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை சொந்தமாக கொண்டுள்ளது. கம்பனியின் இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது ஒவ்வொரு திணைக்களத்தையும் சேர்ந்த இணக்கப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடன் இணக்கப்பாடு மற்றும் இடர் மற்றும் நிதி உதவி பொது முகாமையாளரான பிரதி பொது முகாமையாளரினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இணக்கப்பாட்டு அதிகாரி, கணக்காய்வுக் ஆகியவற்றுக்கிடையிலான அறிக்கையிடல் ஒழுங்கு மறவானது குறிப்பிட்ட திட்டவட்டமான விடயங்கள் மற்றும் வருட காலத்தின் பொழுது எழக்கூடிய இடர்கள் ஆகியன தொடர்பில் செயற்படுகின்றது. தொழிற்பாட்டு பிரதேசங்களுடன் தொடர்புடைய இணக்கப்பாட்டு பொறுப்புகளானது தொழிற்பாட்டு திணைக்கள தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமக்கு வழங்கப்பட்ட திட்டவட்டமான கடப்பாடுகள் தொடர்பிலான இணக்கப்பாட்டினை உறுதி செய்து கொள்வதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளாக இவர்கள் திகழ்கின்றனர். பண துய்தாக்கலுக்கு எதிரான செயற்பாடுகளானது வருடாந்தம் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது. இத்தகைய இணக்கப்பாட்டு கலாசாரமானது செலவுகள் அதிகரிக்கப்படாத நிலையில் அமைப்பினுள் அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளது. பிரதான கட்டுப்பாட்டு செயன்முறைகள், இணக்கப்பாட்டு செயல் தொடர்பரில் அதிகரித்து வரும் சிக்கல்கள் தொடர்பில் உரிய இணக்கப்பாடுகள், போன்றவற்றில் கவனம் செலுத்துவதுடன் இணக்கப்பாட்டிற்காக கம்பனியானது "தனியாக நிற்போம்" என்ற மாதிரியை ஏற்றுக் கொண்டுள்ளது (Stand Alone). இணக்கப்பாட்டு செயலின் உறுதியான சுயாதீனத்தை இது உறுதி செய்கின்ற அதேவேளை வினைதிறன் வியாபார ஈடுபாட்டினை உறுதி செய்யும் முகமாக ஒவ்வொரு திணைக்களத்திற்கும் இணக்கப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களை நியமித்ததன் மூலம் செலவுச் சிக்கன முறையை பேணி வருகின்றது. பிரதான தொழிற்பாட்டு பிரதேசங்களுடன் சம்பந்தப்பட்ட சிறப்பான நடைமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பதை உறுதி செய்யும் முகமாக மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் இணக்கப்பாட்டு செயற்பாடானது மேலும் வலுப்படுத்தப்பட்டது.

ஒழுக்க நெறிக் கோவை, தகவல் அம்பலப்படுத்துபவர், மோசடி முகாமைத்துவம்

சகல ஊழியர்களுக்கும் ஏற்புடைய வகையில் கம்பனியிடம் சபை ஒப்புதல் அளித்த "ஒழுக்கநெறிக் கோவை", "தகவல் பகிரங்கப்படுத்தல் கொள்கை", "மோசடி முகாமைத்துவக் கொள்கை" ஆகியன காணப்படுகின்றன. ஏதாவது முறைகேடான அல்லது சட்டவிரோதமான செயற்பாட்டினை அல்லது கம்பனியில் ஏதாவது ஒழுக்கத்திற்கு முரணான நடைமுறைகள் காணப்படும் பட்சத்தில் அவற்றை ஊழியர் ஒருவர் அவதானித்தால் அது தொடர்பில் அவர் கம்பனியின் விடயங்களை பகிரங்கப்படுத்தல் அதிகாரிக்கு அறிவிக்க முடியும். விடயங்களை பகிரங்கப்படுத்தல் கொள்கைக்கு ஏற்ப அவசியமான நடவடிக்கைகளை இவ்வதிகாரி மேற்கொள்வார். மேலும் மோசடி தொடர்பான முகாமைத்துவ குழுவின் நடைமுறைப்படுத்தல்கள் மூலம் கம்பனிக்கு எதிரான சகல விதமான மோசடி நடவடிக்கைகளையும் தடுத்தல், இனங்காணல், அவை தொடர்பில் செயற்படல் ஆகியவற்றை அர்ப்பணிப்புடன் மேற்கொள்கின்றோம்.

இடர் முகாமைத்துவம்

இடர் முகாமைத்துவ குழு இடர் முகாமைத்துவக் குழு (BRMC) என்ற பெயரில் தனியான சபை உபகுழுவொன்று காணப்படுகின்றது. இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான அதிகாரம் இதற்கு சபையினால் வழங்கப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ குழுவின் உறுப்பினராக உள்ளக கணக்காய்வு தலைவர் காணப்படுகின்றார். அதேபோல் உள்ளக கணக்காய்வின் இடர் முகாமைத்துவ குழுவும் காணப்படுகின்றது. குறிப்பிட்ட பாசல் வரைவுச் சட்டகத்தை அடிப்படையாகத் தழுவியுள்ளது என்பதன் பிரகாரம் இடர் முகாமைத்துவ வரைவுச் சட்டகத்திற்கு ஏற்ப உள்ளக கட்டுப்பாடுகள், முறைகள் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக 1988 செப்டெம்பர் 21 இல் வெளியிடப்பட்ட "வங்கி அமைப்புகளுக்கான உள்ளக கட்டுப்பாடு முறைகள் தொடர்பான வரைவுச் சட்டகம்" இற்கு ஏற்ப கம்பனியின் உள்ளக கட்டுப்பாடுகள் வரைவுச் சட்டகத்தை தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ திணைக்களம் மீளாய்வு செய்கின்றது. இவற்றுள் முகாமைத்துவ மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு கலாசாரம், இடர் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடு, கட்டுப்பாட்டு செயற்பாடுகள், கடமைகளை பிரித்தல், தகவல் மற்றும் தொடர்பாடல், மேற்பார்வை செயற்பாடுகள் மற்றும் பிழை திருத்த குறைபாடுகள், மேற்பார்வை அதிகாரிகளினால் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடு செய்தல் ஆகியன உள்ளடங்கும். இத்தகைய மீளாய்வுகள் காலப் பகுதியில் இடர் முகாமைத்துவக் குழு இற்கு சமர்ப்பிக்கப்படும். வினைத்திறன்மிக்க முறையில் உள்ளக கட்டுப்பாடுகள் இடம்பெறுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வதற்காக பொருத்தமான கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் நடைமுறையில் உள்ளன.

முடிவு

உள்ளக கணக்காய்வு திணைக்களம் மற்றும் வெளிநிலை கணக்காய்வாளர்கள் ஆகியோர் வருடம் முழுவதும் வினைத்திறனுடன் சுயாதீனமாகவும் செயற்பட்டனர் குழு திருப்தியடைகின்றது. மேலும் கணக்கீட்டு முறைகளை முறையாக பிரயோகித்தமை தொடர்பிலும் குழு திருப்தியடைகின்றது. அத்தோடு கம்பனியின் நிதி கூற்றுக்களானது நியாயபூர்வமான முறையில் நம்பகத்தன்மைமிக்கதாக காணப்படுகின்றது. மீளாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட இணக்கமின்மை தொடர்பான விடயங்களில் சகல விதமான ஏற்புடைய சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குமுறைகள், சீர்திருத்த, தடுத்தல் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு ஏற்ப கம்பனி இணங்கி நடந்துள்ளதாக மற்றும் கம்பனியின் இணக்கப்பாட்டு வரைவுச் சட்டகம் உறுதிப்படுத்துகின்றது என்பதை குழு திருப்தியடைகின்றது.

2022 மே 24 ஆம் திகதி இவ்வறிக்கைக்கு சபை ஒப்புதலளித்தது.

டப்ளியு.ஏ. சமந்த உபனந்த
தவிசாளர் - கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு

24 மே 2022

முதலீட்டுக் குழு அறிக்கை 2021

2022 மார்ச் 14 இல் இருந்து செல்லுபடியாகும் வகையில் முதலீட்டுக் குழு தவிசாளராக நான் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டேன் இருப்பினும் 2021 ஆம் ஆண்டிற்கான முதலீட்டு செயலாற்றுகை தொடர்பான அறிக்கையை விரிவான தகவல்களுடன் சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

முதலீட்டுக் குழுவின் நோக்கங்கள்

ஒழுங்கமைப்பாளர் மற்றும் கம்பனியின் இடர் தாங்கி மற்றும் நாட்டத்தினால் வழங்கப்பட்ட வரைவுச் சட்டகத்தினுள் முதலீட்டுச் செயல்களிலிருந்து அதிகூடிய வருமானத்தை அடைவதே முதலீட்டுக் குழுக்கு வழங்கப்பட்ட ஆணையாகும். மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் வினைத்திறன்மிக்க முறையில் செயற்படுத்தப்படுகின்றன. ஒழுங்குநெறி மற்றும் ஒழுங்குபடுத்தல் இணக்கத்திற்கு ஏற்ப தொழிற்துறையில் இடம்பெறுகின்ற சிறப்பான நடைமுறைகளுக்கு ஏற்ப முதலீட்டுச் செயன்முறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்து கொள்வது முதலீட்டுக் குழுவின் பணியாகும்.

முதலீட்டு உபாய முறைகள்

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய நிலைமைகளானது குறிப்பிடக்கூடிய சவால்களை ஏற்படுத்தியது. ஏனெனில் கோவிட்-19 பெருந்தொற்று தொடர்ச்சியாக காணப்பட்டது. அத்தோடு இக்காலப் பகுதியில் பல புதிய புறழ்வுகளும் அவதானிக்கப்பட்டன. கோவிட்-19 இற்கு முற்பட்ட காலப் பகுதியில் கவர்ச்சிகரமான நிரந்தர வருமானங்கள் கிடைக்கப் பெற்றன மற்றும் குறைவான மீள் முதலீடுகளும் பல தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதன் காரணமாக எதிர்காலத்தில் நிரந்தர வருமானத்தை பேணுவது எதிர்மறையாகவே காணப்பட்டது. இக்காலப் பகுதியில் வட்டி வீதங்கள் குறைவாக காணப்பட்டதன் காரணமாக இகாகூ ஆனது குறுகிய கால நிரந்தர வருமான முதலீடுகளில் கவனம் செலுத்தியது. இருப்பினும், முதலீட்டுப் பட்டியல் வியாபாரத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஏனெனில், இக்காலப் பகுதியில் இலங்கையில் முதலீட்டுப் பட்டியல் சார்ந்த விடயங்கள் அதிக நன்மைகளை வழங்கியமையாகும்.

திரவத்தன்மை, வட்டி வீதம், கடன் சார் இடர் போன்ற முதலீட்டு இடர்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஏனென்றால் பெருந்தொற்று காலப்பகுதியில் இவற்றின் தொழிற்பாட்டு சூழலில் பல சிக்கல்கள் ஏற்பட்டன. சகல முதலீடுகள் தொடர்பிலும் முதலீட்டுக் குழுவானது மிகவும் கவனமாக நுணுகி ஆராய்ந்ததன் பின்னரே அவற்றை நிறைவேற்றியது.

குறைவான வட்டி வீத சூழலானது கவர்ச்சிகரமான உரிமை முதல் முதலீடுகளுக்கு வழிவகுத்தது. இவ்வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் முதலீட்டுக் குழு அக்கறை செலுத்தியதுடன் வியாபாரம் சார்ந்த நன்மைகளை பெற்றுக் கொள்ளும் முகமாக உரிமை முதல் சந்தையை பயன்படுத்தியது. மிகவும் கவனமாக முதலீட்டு சார் வாய்ப்புகளை முதலீட்டுக் குழு ஆராய்ந்ததன் பின்னர் துரிதமான மேற்கொண்ட தீர்மானங்களின் பின்னர், துல்லியமாக, வினைத்திறன்மிக்க முறையில் அவற்றை நடைமுறைப்படுத்தியமை ஆகியவற்றின் காரணமாக கணிசமான உரிமை முதல் வியாபார நன்மைகளை பெற்றுக் கொள்ள முடிந்தது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் முதலீட்டுக் குழுவானது அனுபவமிக்க தொழில்வாண்மையாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம்மிக்க தொழிற்துறை நிபுணர்கள் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. இவர்கள் முதலீடு சார்ந்த தீர்மானம் மேற்கொள்ளல் செயற்பாடுகளின் பொழுது பல்வேறு வகையான நிபுணத்துவங்களையும், பரந்த நோக்கெல்லையும் கொண்டு வந்தனர். முதலீடு தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறைகளின் பொழுது பிரிதொன்றை விற்றல் தொடர்பான செயன்முறைக்கு உரிய பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் முதலீட்டு ஆற்றல்கள் மேம்படுத்தப்பட்டன.

மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு

முதலீட்டு செயற்பாடுகளை குழுவானது முறையாக மேற்பார்வை செய்ததுடன் முதலீட்டு இலக்குகளை அடைவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தியது. முதலீட்டு காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டோர்களது நிதி பாதுகாப்பான மற்றும் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை இலகுபடுத்துவதற்காக முதலீட்டு முன் அலுவலகம், மத்திய அலுவலகம், பின் அலுவலகம் ஆகியவற்றினால் அறிவார்ந்த மற்றும் தீர்க்கமான முறையில் ஐந்தொகை சார் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன, இந்த நிதிகளிலிருந்து சந்தை நன்மைக்கு அதிகமான தொகையை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் முதலீட்டுக் குழுவும் ஈடுபட்டு வருகின்றது.

மீளாய்விற்கு உட்பட்ட வருடம் - முதலீட்டு செயற்பாடுகள் சுருக்கம்

2021 ஆம் ஆண்டின் இறுதியில் நீண்ட கால காப்புறுதி நிதி சொத்துக்களின் பெறுமதி ரூபாய் 177.0 பில்லியன் ஆகும். அதேவேளை பொது காப்புறுதி சொத்துக்களின் பெறுமதி ரூபாய 57 பில்லியன் ஆகும்.

முதலீடுகளின் பாதுகாப்பு மற்றும் திரவத்தன்மை

சொத்துக்களின் தன்மையை போதியளவு சிறப்பாக வகைப்படுத்துவதன் காரணமாக முறை இல்லாத இடர்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை முதலீட்டுக் குழு மேற்கொள்கின்றது. முதலீடுகளானது காத்திரமான கடன் தாங்கு தன்மைகளுடன் திரவத்தன்மை முதலீடுகளாக மட்டுப்படுத்தப்படுகின்றன.

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட கால காப்புறுதி நிதி சொத்துக்கள், பொது காப்புறுதி நிதி சொத்துக்கள், மொத்த முதலீட்டுப் பட்டியல் தொடர்பான முதலீட்டு சொத்துக்கள் ஒதுக்கங்கள் பற்றிய விளக்கத்தினை பின்வரும் வரைவு காட்டுகின்றது (சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் பெறுமானங்கள் தரப்பட்டுள்ளன).

நீண்ட கால காப்புறுதி நிதி சொத்துக்கள்

%



அரசாங்க பிணையங்கள	44.8%
உரிமை முதல	17.5%
பருவ கால வைப்புகள்	4.5%
கூட்டுறவு கடன்	31.6%
பிரிவு நம்பிக்கைகள்	1.6%

பொதுக் காப்புறுதி நிதி சொத்துக்கள்

%



அரசாங்க பிணையங்கள்	23.9%
உரிமை முதல்	55.3%
பருவ கால வைப்புகள்	6.4%
கூட்டுறவு கடன்	9.8%
பிரிவு நம்பிக்கைகள்	4.6%

முதலீட்டு வருமானம்

வருடத்திற்கான மொத்த முதலீட்டு வருமானம் அதிகளவில் உயர்ந்து காணப்பட்டது. ஆயுள் காப்புறுதி ரூபாய் 19.9 பில்லியனாகவும் பொதுக் காப்புறுதி ரூபாய் 3.2 பில்லியனாகவும் காணப்பட்டன. அறிக்கையிடும் காலப்பகுதியில் கம்பனி வருமானத்தில் முதலீட்டு வருமானமானது 35மூ ஆக காணப்பட்டது. ஆயுள் காப்புறுதிக்கான மொத்த வருமானத்தின் 47.6மூ மற்றும் பொதுக் காப்புறுதி மொத்த வருமானத்தின் 13.4மூ ஆகியன முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்டவை.

மொத்த வருமானத்தின் வீதமாக முதலீட்டு வருமானம்

%



சொத்துக்கள் பொறுப்பு முகாமைத்துவ பரிசீலனைகள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

வருட காலப் பகுதியின் பொழுது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவம் ஆகியனவும் முக்கிய கவனத்திற்குரிய விடயங்களாக காணப்பட்டன. வருட காலப் பகுதியின் பொழுது வட்டி வீதங்களானது மிகவும் குறைவாக காணப்பட்டதன் காரணமாக முதலீட்டு குழுவானது குறுகிய கால சொத்துக்கள் தொடர்பில் முதலீடுகளை மேற்கொள்ள தீர்மானித்தது. கடந்த வருடங்களில் காணப்பட்ட உயர்வான நிரந்தர வருமான கருவிகளானது 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் நிரந்தர வருமான நன்மைகள் நிலைத்திருக்க உதவின. அதிகரித்து வரும் வட்டி மற்றும் பண வீக்கம் ஆகியன எதிர்காலத்தில் சவால்களை ஏற்படுத்தும் என நாம் நினைக்கிறோம். இருப்பினும் அவை தற்காலிகமானதே. உரிமை முதல் சந்தைகளுக்கு பாரியளவு ஆற்றல்கள் இருப்பதாக நாம் உணர்கின்றோம். பண வீக்கத்திற்கு நிகரான விடயங்கள் தொடரும் என நினைக்கின்றோம்.

சந்தை வட்டி வீதங்கள் குறைவாக காணப்பட்ட பொழுதிலும் கூட தனி காப்புறுதி கட்டண முதலீட்டு உற்பத்தியான "யஸாஸ்" கேள்விகள் அதிகமாகவே காணப்பட்டன. ஏனெனில் குறைவான இடர் மட்டங்களில் காத்திரமான இலாபங்களை வழங்கிய சொத்துக்கள் இவற்றிற்கு பின்புலமாக காணப்பட்டன.

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முதலீட்டு நிதியமானது சாதனைமிக்க செயலாற்றுகைகளை மேற்கொண்டது. இது தொடர்பில் முதலீட்டு குடு திருப்தியடைகின்றது. அதேவேளை 2022 ஆம் ஆண்டில் மேலும் செயலாற்றுகைகளை மேம்படுத்துவதற்கு முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

ஆர்.ஏ. லக்மினி உதய குமார
தவிசாளர் - முதலீட்டுக் குழு

24 மே 2022

இடர் முகாமைத்துவ அறிக்கை

அறிமுகம்

சாதாரண நிதி ஆளுகைக்கு அப்பால் விரிவாக்கம் செய்து, பாதுகாப்பினை அடைதல், தகவல் தொழில்நுட்பம், மூன்றாம் தரப்பு தொடர்பு முறைகள், ஆளுகை இடர், இணக்கப்பாடு, ஆகியவற்றை அடைவதற்காக இகாகூ ஆனது இடர் முகாமைத்துவ வரைவுச் சட்டகத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. உபாய ரீதியான, வியபாரம் மற்றும் தொழிற்பாட்டு நோக்கங்கள், உண்மையான வியாபார பெறுமானங்களை உருவாக்கல் ஆகியவற்றை அடைவதற்கு வினைத்திறன்மிக்க இடர் முகாமைத்துவம் முக்கியமான அம்சம் என பரிசீலிக்கின்றது.

தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்துகின்ற தாகத்திற்கு ஏற்ப, பிரதான வியபாரர மற்றும் உபாய ரீதியான இடர்களை குறைப்பதற்காக ISO 31000 இடர் வரைவுச் சட்டகத்திற்கு ஏற்ப காத்திரமான இடர் முகாமைத்துவ வரைவுச் சட்டகம் ஒன்றினை இகாகூ விருத்தி செய்துள்ளது. இந்த வரைவுச் சட்டகமானது வரைபடமாக கீழே தரப்பட்டுள்ளது



மதிப்பீட்டு படிமுறையானது நிகழ்வுத் தன்மையை மதிப்பீடு செய்தல் / நிகழக்கூடிய விடயங்கள் மற்றும் பின்விளைவுகள் / இடர் தாக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. நிகழ்தகவு/ நிகழக்கூடிய சாத்தியப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தாக்கம் மற்றும் பின்விளைவுகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு ஒட்டுமொத்தமாக ஏற்படக்கூடிய இடர் வகையை தீர்மானிக்க முடியும். அத்தோடு இதனை மேற்கொள்வதற்கான முறையானது இடர் மெட்ரிக்ஸ் மூலம் காட்டப்படலாம்.

இடர் ஆளுகை

இடர்களை மேற்பார்வை செய்வது தொடர்பில் இகாகூ இன் பணிப்பாளர்கள் சபையின் இடர் முகாமைத்துவ உபகுழு உதவுகின்றது. சபையின் இடர் முகாமைத்துவ உபகுழுவானது முக்கிய வகிபாகத்தை வகிப்பதுடன் இடர் முகாமைத்துவ முறைகளை வினைத்திறனாக செயற்படுத்துகின்றது. அமைப்பின் உபாய முறைகளில் இது ஒரு முக்கிய அங்கமாகும். இகாகூ இன் இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியன இகாகூ இன் உபாயமுறைகள் மற்றும் இடர் நம்பகத்தன்மை ஆகியவற்றுக்கு ஏற்புடையதாக இருக்கின்றதா என்பதை உறுதி செய்து கொள்வதற்கு சபையின் இடர் முகாமைத்துவ உபகுழு பொறுப்பாக இருக்கின்றது.

சபையானது குறிப்பிட்ட பிரதேசங்களில் அதன் இடர் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக சபைக்கு உதவும் வகையில் இடர் முகாமைத்துவ உபகுழுவிற்கு மேலதிகமாக ஏனைய பல உபகுழுக்களையும் சபை நியமித்துள்ளது. அவற்றுள் பிரதானமாக கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு மற்றும் முதலீட்டுக் குழு ஆகியன உள்ளடங்கும்.

மேற்பார்வை கட்டமைப்பு

நான்கு தனியான தெளிவான வியாபாரம் சார்ந்த விடயங்கள் அடையாளம் காணப்படும் பொழுது இடர் முகாமைத்துவமானது உறுதியான கட்டத்தில் இருக்கின்றது. அவையாவன பின்வருமாறு:

அ. "உண்மையான இடர் உரிமையாளர்களினால் தொழிற்பாட்டு முகாமைத்துவம்" இதுவே முதல் பாதுகாப்பு வலயமாகும். (இடர்களை அறிந்து முகாமைத்துவம் செய்தல்)

ஆ. "நிதி ரீதியான கட்டுப்பாடுகள், இடர் கட்டுப்பாடுகள், இணக்கப்பாடு" இரண்டாம் வகை பாதுகாப்பு. (இடர்களை மேற்பார்வை செய்தல்)

இ. "உள்ளக கணக்காய்வு" மூன்றாம் வகை பாதுகாப்பு (சுயாதீன காப்புறுதி)

ஈ. "வெளிநிலை கணக்காய்வாளர்கள் மற்றும் ஒழுங்குபடுத்துநர்கள்" இது நான்காம் வகை பாதுகாப்பு. (முறையான தொடர்பாடல்)

நான்காம் வகை பாதுகாப்பானது உள்ளக கணக்காய்வாளர், வெளிநிலை கணக்காய்வாளர், மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கிடையிலான சிறப்பான ஊடாட்டமாகும். காப்புறுதி துறையின் பிரதான ஒழுங்குபடுத்துநராக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு காணப்படுகின்றது.

கணக்காய்வு குழுவுக்கு அறிக்கையிடுவதானது சுயாதீனத்தை உறுதிப்படுத்துகின்றது. அதேவேளை இடர் முகாமைத்துவ குழுவிற்கு அறிக்கையிடுவதானது இடர் சார்ந்த நிகழ்ச்சிநிரலானது கணக்காய்வு நிகழ்ச்சி நிரலை விட குறைந்தது என அர்த்தப்படுத்திக் கொள்ள தேவையில்லை.



இடர் முகாமைத்துவ அறிக்கை

உள்ளக கட்டுப்பாட்டு வரைவுச் சட்டகத்தின் இடர் மதிப்பீடு

காத்திரமான இடர் முகாமைத்துவ நடைமுறைகளை உற்சாகப்படுத்துவதற்கான எமது தொடர் முயற்சியின் ஓர் அங்கமாக எமது உள்ளக கட்டுப்பாடுகள் வரைவுச் சட்டகத்தை 1998 செப்டெம்பர் 21 இல் விநியோகிக்கப்பட்ட வங்கி அமைப்புகளுக்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் தொடர்பான 13வது கோட்பாட்டு கொள்கை வரைவுச் சட்டகத்திற்கு ஏற்ப எமது உள்ளக கட்டுப்பாட்டு வரைவுச் சட்டகத்தின் அடிப்படைகளை தழுவி மேற்கொண்டு வருகின்றோம்.

கடனிறுக்குமாற்றல் நிலை

இகாகூ இன் உறுதியான இடர் முகாமைத்துவ அடிப்படைகளானது 2021 ஆம் ஆண்டில் இடர்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தியது இகாகூ ஆனது தனது இடர்களை அடிப்படையாகக் கொண்ட மூலதன போதுமை விகிதத்தை 2021 இல் தேவைப்பட்ட மட்டங்களை விட அதிகமாக பேணியது. 2021 ஆம் நிதியாண்டிற்கான ஆயுள் காப்புறுதி வியாபாரங்களுக்கான இடர் அடிப்படையிலான மூலதன போதுமை விகிதமானது 501% ஆகும். 2020 ஆம் நிதியாண்டில் இது 459% ஆகும். அதேபோல் 2021 ஆம் நிதியாண்டில் பொது காப்புறுதி வியாபாரங்களுக்கான இடரை அடிப்படையாகக் கொண்ட மூலதன போதுமை விகிதம் 244% ஆகும். 2020 ஆம் நிதியாண்டில் இது 223% ஆகும்.

கோவிட்-19 இன் தாக்கம்

2021 ஆம் ஆண்டில் குறுகிய கால ஒமிக்ரோன் தாக்கத்தின் பின்னர் கோவிட்-19 பெருந்தொற்று தொடர்பான தாக்கங்கள் பல இடங்களில் குறைவடைந்ததை அவதானிக்க முடிந்தது. வேறு ஏதாவது புதிய திரிபுகள் ஏற்படாத வகையில் இது குறைவாகவே காணப்பட்டது. இருப்பினும், கோவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முகமாக இடர் தணிப்பு உபாயமுறைகளை நாம் மேற்கொண்டோம். இவற்றுள் பிரதானமாக பிரதான நிறைவேற்று அதிகாரியின் தலைமையின் கீழ் சிரேஷ்ட முகாமைத்துவத்தை தன்னகத்தே கொண்ட வியாபார தொடர் வழிப்படுத்தல் குழு (BCSC) பிரதானமாக காணப்படுகின்றது. வியாபாரம் தொடர்வதை இது உறுதிப்படுத்துகின்றது. ஆகவே ஊழியர்களையும் பங்கீட்டுப்பாட்டாளர்களையும் பாதுகாக்கின்ற அதேவேளை நெருக்குதலிலிருந்து மீளுவதற்கும் இது உதவுகின்றது. இதன் காரணமாக வியாபாரம் தொடர்வதை உறுதிப்படுத்துகின்றது.

பிரதான தொழில்முயற்சி இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள்

1. சொத்துக்கள் - பொறுப்பகள் முகாமைத்துவ கொள்கையினை மீளாய்வு செய்தல்
2. தற்போதைய வருடத்திற்கான இடர் நம்பகத்தன்மை மற்றும் தாங்குதன்மை கூற்றுக்களை விருத்தி செய்தல் மற்றும் கடந்த வருடத்திற்கான இடர் நம்பகத்தன்மை மற்றும் தாங்குதன்மை கூற்றுக்களை மீளாய்வு செய்தல்
3. நிதி சார் மற்றும் நிதி சாரா விடயங்கள் தொடர்பான இடர்களை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவை தொடர்பான வியாபார தாக்கம்
4. வாடிக்கையாளர் திருப்தி என்ற கண்ணோட்டத்தில் நற்பெயர் இடர் பகுப்பாய்வுகள்
5. இடர் முகாமைத்துவ வரைவுச் சட்டகத்திற்கு ஏற்ப உள்ளக கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்தல்
6. நுசுஆ செயற்பாடுகளினுள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் - டிஜிட்டல் சார் இடர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் இணைய பாதுகாப்பு உபாயமுறை ஒன்றை கட்டியெழுப்புதல்
7. தரவுகளை பாதுகாத்தல் தொடர்பான சட்டம் உள்ளடங்கலாக புதிய சட்டம் சார் இடர்களுக்கு தயாராகுதல்

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம்

அண்மைக் கால பொருளாதார அவதானிப்புகள் தொடர்பான விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. இவை காப்புறுதி வியாபாரத்தில் முன்னெப்போதும் இல்லாத தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.: அதிகரித்த பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை அதிகரித்தமை, அதிகரித்த சந்தை வட்டி வீதங்கள், அரசாங்க பிணையங்கள் தொடர்பான விளைவுகள், நிதி பற்றாக்குறை அதிகரித்தல், அரசாங்க கடன்கள் அதிகரித்தமை, கடன் சேவை கொடுப்பனவுகள், பிரதான நாணயங்களுக்கு எதிராக ரூபாயின் வீழ்ச்சி, வளர்ந்து வரும் ஏற்றுமதி ஈட்டல்கள் ஆனால் அதிகரித்து வரும் சென்மதி நிலுவை, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் பாரிய வீழ்ச்சி, உள்ளாசப் பயணத்துறை வருமான வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் வீழ்ச்சி, கடன் தரப்படுத்தல் வீழ்ச்சி போன்றன. இடர் முகாமைத்துவ கண்ணோட்டத்தில் பிரதான பிரிவுகளுடன் கூட்டிணைந்து நாம் செயற்படுகின்றோம். அவையாவன, நிதி, முதலீடு, ஆயுள், ஆயுள் சாராதவை, மற்றும் ஏனைய பிரிவுகள். இவற்றுடன் சேர்ந்து அத்தகைய இடர் அம்சங்களில் செயற்படுவதற்கான உபாயமுறைகளை உருவாக்குதல்.

ஆயுள் காப்புறுதி இடர்

ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய பல இடர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.

இடர் வகை	விளக்கம்	இடர் நம்பகம்
மரணம் சார்ந்த இடர்	காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொண்டவர் உண்மையில் இறப்பது தொடர்பான அனுபவங்கள் ஆயுள் காப்புறுதி காப்பீட்டு பத்திரம் தொடர்பில் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகும்	குறைவான இடர்
ஆயுட் காலம் தொடர்பான இடர்	நீண்ட காலம் வாழ்பவர் தொடர்பான இடர் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகும்	குறைவான இடர்
நோயுற்ற நிலை இடர்	காப்பீட்டு பத்திரமொன்றை பெற்றுக் கொண்டவர் தொடர்பான சுகாதாரம் மற்றும் விபத்துடன் தொடர்புடைய கோரிக்கை தொடர்பான இடர்கள் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகும்	குறைவான இடர்
காப்பீட்டுப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர் நடத்தை தொடர்பான இடர்	காப்பீட்டுப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவரது நடத்தை தொடர்பான இடர்கள் தொடரவில்லை மற்றும் குறைகிறது அல்லது ஒப்பந்தக்காலம் முதிர்ச்சியடைவதற்கு முன்னர் வாபஸ் பெறுகின்ற நிலைமைகள் ஆகியன எதிர்பார்த்ததை விட மோசமானதாக காணப்படுகின்றது. ஒழுங்கான முறையில் நிலையான வீதங்கள் இன்மையின் காரணமாக சில காப்பீட்டு பத்திரங்களே புத்தகங்களில் காணப்படுகின்றன. எதிர்கால நிரந்தர செலவுகள் தாக்கப்படுவதனால் எழுதப்பட்ட வியாபாரங்களின் பாதகமான பணப் பாய்ச்சல் தாக்கமுறுவதுடன் பிற்போடப்பட்ட செலவுகளை மீளப் பெற்றுக் கொள்வதில் தாக்கம் ஏற்படுகின்றது	குறைவான இடர்
செலவு தொடர்பான இடர்	காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டு அவற்றை நிர்வகிப்பது தொடர்பான செலவு சார்ந்த இடர்கள் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமாகும்.	குறைவான இடர்

மேற்படி இடர்களை மதிப்பீடு செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை கம்பனி தாபித்துள்ளது. இவை இல்லாத பட்சத்தில் முறையாக கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ஆகியன தொழிற்பாடுகளை தாக்கும். உற்பத்தி விருத்தி முதல் நிருவாகம் சார்ந்த நன்மைகள் வரையிலான சகல முக்கிய கட்டங்களையும் உள்ளடக்கியதாக இந்த செயன்முறைகள் காணப்படுகின்றன.

மேலும், ஆயுள் காப்புறுதி நிதியுடன் தொடர்புடைய விடயங்கள் மாதிரியாக அவற்றின் இலாபம் தொடர்பான சோதனைனகளும் மேற்கொள்ளப்பட்டன. இவற்றை காப்பீட்டு கணிப்பாளர் மேற்கொண்டதுடன் உற்பத்தி வடிவமைப்பை தணித்ததோடு விலையிடல் தொடர்பான இடர்களும் குறைக்கப்பட்டன. அத்தோடு இகாகூ ஆனது சில பொறுப்புகள் காணப்படும் பட்சத்தில் அவை தொடர்பில் ஒப்பீட்டுக் கருவிகளையும் பயன்படுத்தியது.

இடர் அடிப்படையிலான மூலதன வரைவுச் சட்டகம் கீழ் இகாகூ ஆனது மொத்த காப்பீட்டுக் கட்டணம் மதிப்பீட்டு பொறிமுறையை ஏற்றுக் கொண்டது. பொறுப்பு மதிப்பீட்டு நோக்கங்களுக்கு இது தேவைப்படுகின்றது. சந்தை நிலைமைக்கு ஏற்ப பொறுப்புகள் இங்கே கணிப்பிடப்படுகின்றன அதாவது மொத்தக் காப்பீட்டுக் கட்டண மதிப்பீடு ஆனது இறப்பு, நோய் வாய்ப்படல், செலவுகள், காலவதியாதல், இடர் அற்ற வட்டி வீத கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தில் போனஸ் வழங்கும் நோக்கங்களுக்காகவும் இந்த பொறுப்புக் கூறல் தொடர்பான விடயங்கள் மதிப்பிடப்படுகின்றன. இதனை மொத்த நன்மை சார் பொறுப்பு என அழைக்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் எதிர்கால போனஸானது சிறப்பான மதிப்பீட்டு ஊகங்கள் மூலம் பாதுகாக்கப்படுகின்றது. அவ்வவ் காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் உள்ளக அனுபவ ஆய்வுகளின் அடிப்படையில் பொறுப்புக் கூறல் மதிப்பீடுகளுக்காக இகாகூ ஆனது சிறப்பான மதிப்பீட்டு ஊகங்களை மேற்கொண்டு வருகின்றது. இதன் காரணமாக இகாகூ ஆனது கடந்த பல வருடங்களாக காப்பீட்டு பத்திரத்தை பெற்றவர்கள் சார்பான பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்ற முடிகின்றது.

மேலும், மொத்த நன்மை சார் பொறுப்பு கணிப்பீட்டிற்காக பரிசீலிக்கப்படுகின்ற சிறந்த மதிப்பிடப்பட்ட அளவுகோல்களானது மேலும் வலுப்படுத்தப்படுவதுடன் இடர் எல்லை தொடர்பான விண்ணப்பங்களையும் கோருகின்றன. இதனை இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு இனால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு ஏற்பவே மேற்கொள்ளப்படுகின்றன மற்றும் சிறந்த மதிப்பீடுகளிலிருந்து பாதகமான விலகல் எல்லைகளை கணிப்பீடு செய்வதற்காக வுடீடு மேற்கொள்ளப்படுகின்றது. இடர் எல்லை இன் பயன்பாடானது காப்பீட்டு பத்திர பொறுப்புகள் தொடர்பான புள்ளிவிபரவியல் சார் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது மற்றும் காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பான பாதுகாப்பினையும் மேம்படுத்துகின்றது. காப்பீட்டு பத்திர பொறுப்புகளை இது அதிகரிக்கச் செய்கின்றது. இகாகூ இனால் பயன்படுத்தப்படும் இடர் எல்லை ஆனது இடர் அடிப்படையிலான மூலதன வரைவுச் சட்டகம் வரைவுச் சட்டகத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட காரணிகளுக்கு ஏற்ப காணப்படுகின்றது மற்றும் பொறுப்பு சார் கணிப்பீட்டின் கீழ் சாத்தியப்பாடுள்ள விளைவுகள் தொடர்பான முக்கியமான நிகழ்தகவு விநியோகம் தொடர்பான புள்ளிவிபரவியல் ரீதியாக 75% நம்பிக்கை இடைவெளியை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இதன் பிரகாரம் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகளை தீர்மானிப்பது தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற பிரதான ஊகங்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன

ஊகங்கள்	விளக்கம்
இறப்பு	- A67/70 விடயமானது ஆண்டு தொகை சாராத வியாபாரங்களுக்கானது சிறப்பான மதிப்பீட்டு அனுபவ வீதத்தை அனுமதிக்கிறது - வருடாந்த ஆண்டு சுமார் 1% இறப்பு தொடர்பில் சராசரியாக (90)m மற்றும் a(90)f ஒரு வருட வயது அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது
முதலீட்டு வருவாய்	2021.12.31 இல் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அறிவுறுத்தப்பட்டதன் பிரகாரம் இடர் இல்லா விகித கட்டமைப்பு

இடர் இல்லாத விகிதம்



இடர் முகாமைத்துவ அறிக்கை

2021 ஆம் ஆண்டில் இகாகூ ஆனது தனது ஆயுட் காப்புறுதி வியாபாரம் தொடர்பில் காத்திரமான மற்றும் உறுதியான கடனிறுக்கும் ஆற்றலை கொண்டிருந்தது மற்றும் 2021.12.31 ஆம் திகதியில் இடர் மைய மூலதன போதுமை விகிதம், மூலதன போதுநிலை விகிதாசாரம் ஆகியன முறையே 501% ஆகும். அதேவேளை 2020.12.31 இல் இது 459% ஆகும். ஆகக் குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவையை விட இது மிக அதிகமாகும். குறைந்தது 120% ஆகும்.

மூலதன போதுமை விகிதம்

%



நோக்கங்கள்

- ஐசுஊளுடு வழிகாட்டிகளை நிறைவேற்றுதல்
- தரப்படுத்தல் அளவீடுகளை நிறைவேற்றுதல்
- காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களது நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுதல்

அடைவுகள்

- மூலதன போதுநிலை விகிதாசாரம்: 501%
- பிட்ச் தரப்படுத்தல்கள்: AA (lka)
- ஆயுள் போனஸ்: இலங்கை ரூபாய் 9.8 பில்லியன்

ஆயுள் காப்புறுதி இடர்களுக்கான கூருணர்வு பகுப்பாய்வுகள்

ஊகங்கள்	ஊக மாற்றம்	சிறப்பான மதிப்பீட்டு பொறுப்பின் தாக்கம் (ரூபாய்)
இறப்பு	+10%	845 மில்
	-10%	(848) மில்
கழிவு வீதம்	இடர் அடிப்படையிலான மூலதனத்தின் இன் கீழ் மேல் நோக்கிய நிகழ்வு	(16,434) மில்
	இடர் அடிப்படையிலான மூலதனத்தின் இன் கீழ் கீழ் நோக்கிய நிகழ்வு	23,010 மில்

உற்பத்தி வகையை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டு பத்திர பொறுப்புகள் தொடர்பாக தனியாக பிரித்தல்

2021 டிசம்பர் 31 இல் ரூபாய் '000	காப்பீட்டு பொறுப்புகள் (இலாபங்களுடன் கூடியது)	காப்பீட்டு பொறுப்புகள் (இலாபங்கள் அற்ற நிலையில்)	மொத்த நன்மைசார் பொறுப்புகள்
ஆயுள் முழுவதற்கும்	18,698	4,052	22,750
நன்கொடை காப்புறுதி	60,885,389	4,297,782	65,183,170
பருவகால காப்புறுதி	0	3,905,620	3,905,620
ஆண்டு தொகை	10,868,079	4,340,973	15,209,052
ஓட்டுநர் நன்மைகள்	93,286	3,381,027	3,474,313
மொத்தம்	71,865,452	15,929,454	87,794,905

கம்பனியின் பங்குபற்றுதல் மற்றும் பங்குபற்றாத நிதி நிலை தொடர்பான விபரங்களை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

	பங்குபற்றுதல் ரூபாய் '000	பங்குபற்றாமை ரூபாய் '000	மொத்தம் ரூபாய் '000
2021	136,647,210	15,937,849	152,585,059
வீதம்	89.55%	10.45%	

பொதுக் காப்புறுதி இடர்

2016.01.01 முதல் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கட்டாயத் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இகாகூ இடர் மைய மூலதன கடனிறுக்கும் ஆற்றல் வரைவுச் சட்டகத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியது. சுஉஊ இன் கீழ் இது தேவைப்பாடாகும்.

இதன் கீழ் கோரிக்கை சார்ந்த பொறுப்பானது மத்திய மதிப்பீட் கோரிக்கை பொறுப்பு மற்றும் இடர் எல்லை ஆகியவற்றின் தொகுப்பாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. காப்பீட்டுக் கட்டண பொறுப்பானது காலலவதியாகாத இடர் ஒதுக்கத்தின் மத்திய மதிப்பீடு அதனோடு சேர்ந்த இடர் எல்லை என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

ஒதுக்கங்களை உருவாக்குவதில் அறிவார்ந்த தன்மை

பொதுக் காப்புறுதி கணக்கர் ஒதுக்கங்களில் இரண்டு பிரதான அம்சங்கள் காணப்படுகின்றன. அவையாவன, காப்பீட்டு கட்டண பொறுப்பு மற்றும் கோரிக்கை பொறுப்பு. இகாகூ ஆனது கோரிக்கை பொறுப்பு (நிலுவையிலுள்ள கோரிக்கை ஒதுக்கங்கள் சக ஏற்பட்டவைகள் போதுமானவை) அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகள் (IBNER) 75% நம்பிக்கை மட்டத்தில் காணப்பட்டன. இவையாவன கோரிக்கை பொறுப்புகள் தொடர்பான மத்திய மதிப்பீடு கோரிக்கைகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கான அதனோடு தொடர்புடைய கோரிக்கை கையாளுகை செலவுகள் மற்றும் மத்திய மதிப்பீட்டு பொறுப்புகளில் காணப்படுகின்ற பாதகமான விலகலுக்கான ஏற்பாடுகள் மற்றும் உரிமைக் கோரல் செலவுகள். காப்பீட்டு கட்டண பொறுப்புகளும் 75% நம்பிக்கை மட்டத்தில் தாபிக்கப்பட்டது. இது மத்திய மதிப்பீட்டு மேல் காலாவதி இடர் ஒதுக்கத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. கடந்த இரண்டு அல்லது மூன்று விபத்து வருடங்களுக்கான மத்திய மதிப்பீட்டு இறுதி இழப்பு வீதத்தின் சராசரியை கருத்திற் கொண்டும் மற்றும் இத்தகைய விடயம் நிகழக்கூடியதாக இருப்பதனால் மேலதிக பாதிப்புறும் நிலையை பிரதிபலிக்குமம் முகமாக பாதகமான விலகலுக்கான ஏற்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது.



இடர் முகாமைத்துவ அறிக்கை

கோரிக்கைகள் விருத்தி தகவல்கள்

வரலாற்று ரீதியான ஆயுள் சாராத ஒதுக்கங்கள், தேறிய மீள் காப்புறுதி தொடர்பில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இந்த அட்டவணையின் மேல் வரியில் செலுத்தப்படாத இழப்புகளுக்கான மதிப்பிடப்பட்ட மொத்த ஒதுக்கங்கள் மற்றும் ஒவ்வொரு ஐந்தொகை திகதியின் பொழுதும் இழப்பு சீர் செய்தல் செலவுகள், ஆகியன காட்டப்பட்டுள்ளன. இவை இந்த வருடம் மற்றும் கடந்த வருடங்களில் ஏற்பட்ட இழப்புகளுக்காக எதிர்கால கொடுப்பனவுக்காக மதிப்பிடப்பட்ட தொகை இவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள திரளாக செலுத்தப்பட்ட பகுதியானது ஒவ்வொரு வருட இறுதியிலும் தாபிக்கப்பட்ட ஒதுக்கங்கள் தொடர்பான ஒவ்வொரு அடுத்த வருடத்திலும் செலுத்தப்பட்ட திரளான தொகையாகும். அதேபோல் திரள் அறிக்கையிடப்பட்ட இழப்பு பிரிவானது மேற்படி முக்கோணத்தில் காட்டப்பட்ட செலுத்தப்பட்ட கூட்டிணைந்த தொகையாகும். மற்றும் நிதியாண்டின் இறுதியில் உள்ள தேறிய நிலுவைத் தொகை தொடர்பான நிலைமைகளும் காட்டப்பட்டுள்ளன.

	2016	2017	2018	2019	2020	2021
இழப்புகள் மற்றும் இழப்புகள் சீர் செய்தல் செலவுகளுக்கான மொத்த ஒதுக்கங்கள்	8,664	8,549	8,776	7,311	7,862	9,549
மீள் அறவிடக்கூடிய மீள் காப்புறுதி	(1,434)	(1,451)	(1,590)	(1,061)	(1,395)	(1,888)
இழப்புகள் மற்றும் இழப்பகள் சீர் செய்தல் செலவுகளுக்கான தேறிய ஒதுக்கங்கள்	7,230	7,098	7,186	6,250	6,466	7,661
டிசம்பர் 31 இல் செலுத்தப்பட்ட திரளான தொகை:						
ஒரு வருடத்தின் பின்னர்	6,637	6,849	7,590	7,723	5,371	6,995
இரு வருடங்களின் பின்னர்	8,392	9,004	9,632	9,451	7,043	
மூன்று வருடங்களின் பின்னர்	8,539	9,185	9,772	9,589		
நான்கு வருடங்களின் பின்னர்	8,722	9,242	9,996			
ஐந்து வருடங்களின் பின்னர்	8,801	9,315				
ஆறு வருடங்களின் பின்னர்	8,830					
டிசம்பர் 31 இல் அறிக்கையிடப்பட்ட திரள் தொகை:						
ஒரு வருடத்தின் பின்னர்	7,913	8,297	9,467	9,153	6,493	8,980
இரு வருடங்களின் பின்னர்	8,531	9,184	9,907	9,718	7,255	
மூன்று வருடங்களின் பின்னர்	8,717	9,414	10,288	9,852		
நான்கு வருடங்களின் பின்னர்	8,883	9,526	10,200			
ஐந்து வருடங்களின் பின்னர்	8,943	9,479				
ஆறு வருடங்களின் பின்னர்	8,927					

* ரூபாய் மில்லியன்

பொது காப்புறுதி இடர்களுக்கான கூருணர்வு பகுப்பாய்வுகள்

1% புள்ளி அடிப்படையில் அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகளில் பாதகமான அபிவிருத்திகளின் காரணமாக வரிக்கு முன்னரான தேறிய வருமானம் மற்றும் தேறிய சொத்துக்களின் கூருணர்வுத் தன்மை ஆகியவற்றை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது. இத்தகைய அதிகரிப்பானது காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வுகளின் அடிக்கடி நிகழும் தன்மை அல்லது கோரிக்கைகளின் விளைவான கடும் தாக்கத்தினால் ஏற்பட்ட அதிகரிப்புகள் அல்லது கால அளவு மற்றும் கடும் தன்மை ஆகியவற்றினால் எழலாம். அத்தகைய நிகழ்வுகளின் நிகழ்தகவு பற்றி கூருணர்வுகள் குறிப்பிடுவதில்லை மற்றும் மீள் காப்புறுதி தொடர்பான நேர் சாராதவைகள் பரிசீலிக்கப்படவில்லை.

கோரிக்கைகள் நிலுவைத் தொகை மற்றும் 1% புள்ளியுடன் சேர்த்து மத்திய மதிப்பீட்டு ஏற்பட்டவை (போதுமானவை) அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் ஊகிக்கின்றோம். அதேவேளை உரிமைக் கோரல் செலவுகள் பாதிக்கப்படவில்லை. கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள கூருணர்வு பகுப்பாய்வுகளில் சமர்ப்பணத்தில் பிரயோகிக்கப்பட்ட ஊகங்களின் அடிப்படையில் அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான நிலுவை வரிக்கு முன்னரான தேறிய வருமானம் மற்றும் தேறிய சொத்துக்கள் ஆகியவற்றில் நேர் தாக்கத்திற்கு இட்டுச் செல்கின்றன. மேலும் மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பான நேர் சாராத தாக்கங்களை கருத்திற் கொண்டு கடுமையான நிலைமைகளை மதிப்பீடு செய்து காப்புறுதி இடர்களை கம்பனி மேற்பார்வை செய்கிறது.

	ஊகங்களில் மாற்றம்	அறிக்கையிடப்பட்ட மொத்த கோரிக்கை நிலுவை ரூ.	அறிக்கையிடப்பட்ட தேறிய கோரிக்கை நிலுவை ரூ.	மொத்த பொறுப்புகளின் தாக்கம் ரூ.	தேறிய பொறுப்புகளின் தாக்கம் ரூ.	வரிக்கு முன்னரான இலாபத்தில் தாக்கம் ரூ.	உரிமை முதல் தாக்கம் (வரிக்கு பின்னர்) ரூ.
2021 டிசம்பர் 31 இல்	+1%	6,678 மில்	4,877 மில்	89 மில்	70 மில்	(70) மில்	(53) மில்

முதலீட்டு இடர் முகாமைத்துவம்

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கோவிட்-19 ஆனது தொடர்ச்சியாக முக்கியமான பல சவால்களை ஏற்படுத்தியது. இந்நிலைமை 2020 இலும் தொடர்ந்தது. இருப்பினும் பாரிய சவால்களுக்கு மத்தியிலும் பாரிய வாய்ப்புகளும் கிடைக்கின்றன. இகாகூ இனால் இவ்வாறு பல்வேறு விதமான சவால்களை வெற்றி கொள்ள முடிந்தது. இந்த வாய்ப்புகளை நாம் பயன்படுத்தியமைக்கான சான்றாதாரங்களை முதலீடுகள் தொடர்பான வருவாய்களிலிருந்து அவதானிக்க முடியும்.

முதலீடு சார்ந்த தீர்மானங்களை காத்திரமாகவும் வினைத்திறன்மிக்க முறையிலும் மேற்கொண்டு அவற்றை செயற்படுத்துவதில் இயங்காற்றல் மிக்கதாக தொடர்ச்சியாகவும் முதலீட்டுக் குழு திகழ்ந்தது. மரபு சார்ந்த வியாபார உபாயமுறைகள் தொடர்ச்சியாகவும் இடம்பெற்றன. அதேவேளை பெருந்தொற்று காலப் பகுதியில் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் செயலாற்றுகைகளை ஏற்படுத்தக்கூடிய முதலீடுகள் தொடர்பில்ல முன்னோக்கி பார்ப்பதற்கான கவனம் செலுத்தப்பட்டது.

உலகளாவிய ரீதியில் காணப்படும் மத்திய வங்கிகள் உள்ளடக்க நிதி சார் கொள்கைகளை ஏற்றுக் கொண்டதன் காரணமாகவும் நிரந்தர வருமான பிணையங்களுக்கான வட்டி விகிதங்கள் குறைவாக காணப்பட்டதன் காரணமாகவும் 2020 ஆம் ஆண்டு கால பகுதியில் இகாகூ இற்கு மீள் முதலீட்டு இடர்கள் தொடர்ச்சியாகவும் சவால்மிக்கதாக காணப்பட்டன.

மீள் முதலீடுகளானது பிரதானமாக உரிமை முதல் அல்லது குறுகிய கால நிரந்தர வருமான கருவிகளில் கவனம் செலுத்தியமையின் காரணமாக இகாகூ இன் முதலீட்டு பட்டியலானது பல்வகைமைமிக்கதாக காணப்பட்டதனால் குறைவான மீள் முதலீட்டு விகிதங்களினால் ஏற்படும் எதிர்மறையான தாக்கங்களை குறைப்பதற்கு உதவியது. அதேவேளை திரவத்தன்மை மற்றும் கடன் சார் இடர்கள் ஆகியன தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டது.

காத்திரமான முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் முதலீட்டுக் குழுவினால் இனால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை ஆகியன நிதியின் முதலீட்டு செயலாற்றுகை தொடர்பான இகாகூ இன் எதிர்பார்ப்புகளை விட அதிகமாக மேற்கொள்வதற்கு உதவியது. இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் ஏற்புடைய ஐசுஊளுடு வழிகாட்டிகள் ஆகியவற்றை கடுமையாக பின்பற்றியதன் காரணமாக ஒழுங்கமைப்பு சார்ந்த இடர்களை இல்லாதொழிக்க முடிந்தது.

சந்தை இடர்

வட்டி வீத இடர்

வட்டி வீதங்களில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் விளைவு வலைவில் ஏற்படுகின்ற உரு மாற்றங்கள் ஆகியவற்றினால் ஏற்படக்கூடிய இழப்புகள் தொடர்பான இடர்கள் வட்டி வீத இடர்கள் என அழைக்கப்படுகின்றன. குறுகிய கால கடன் கருவிகளில் முதலீடு செய்வதன் காரணமாக இத்தகைய இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன. வருட இறுதியில் வட்டி வீதங்கள் அதிகரித்தமையின் காரணமாக இது சாதகமான செயற்பாடு என நிரூபனமாகியது.

முன்னோக்கி எடுத்துச் செல்லப்படுகின்ற மீள் முதலீட்டு இடர்களானது பாரியளவில் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் வட்டி வீதங்கள் அதிகரித்த நிலையில் உள்ளன. வட்டி வீதங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழாத நிலையில் வருடத்தின் இரண்டாவது அரைப் பகுதியில் வியாபார வாய்ப்புகளை எதிர்பார்ப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

அன்னியச் செலாவணி இடர்கள்

அன்னியச் செலாவணியில் ஏற்படக்கூடிய பாதகமான மாற்றங்களினால் ஏற்படக்கூடிய இழப்புகளை அன்னியச் செலாவணி வீத இடர் என அழைக்கின்றோம். 2021 ஆம் ஆண்டில் ரூபாய்க்கு எதிரான டொலரின் பெறுமதி அதிகரித்துச் சென்றது. இருப்பினும் இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அறிவார்ந்த உரிய நேர செயன்முறைகளின் காரணமாக ரூபாய் தொடர்பான இழப்புகளை சீர் செய்ய முடிந்ததுடன் நியாயபூர்வமான மட்டத்திற்கு பொருளாதார வளர்ச்சியை பேண முடிந்தது.

இடர் முகாமைத்துவ அறிக்கை

உரிமை முதல் சார் இடர்கள

கையிருப்பு விலைகளில் பாதகமான பாதிப்புறு தன்மைகளின் காரணமாக எழுகின்ற இடர்களே உரிமை முதல் சார் இடர்களாகும்.

சகல பங்கு குறியீடுகள் மற்றும் அதிக திரவத் தன்மை SGP SL20 ஆகியன 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அதிகரித்தது. இருப்பினும் மேல் நோக்கிய பயணமானது சவல்மிக்கது. ஏனெனில் கோவிட்-19 முடக்கங்களின் பின்னர் நாட்டின் பொருளாதாரத்தில் நிலவிய சகல விதமான நிச்சயமற்ற தன்மைகளாகும். இகாகூ இன் உரிமை முதல் முதலீட்டுப் பட்டியலானது முறையான இடர்களை எதிர்கொண்டது. இது ஒட்டுமொத்த சந்தையிலும் ஏற்படுத்திய நிச்சயமற்ற தன்மையாகும்.

உரிமை முதல் சந்தைகளில் ஏற்பட்ட பாதிப்புறும் தன்மைகளின் தாக்கத்தை தணிப்பதற்கு இகாகூ இன் உரிமை முதல் முதலீட்டு பட்டியலில் காணப்பட்ட பல்வகைத்தன்மை உதவியது. இருப்பினும் பங்குகளை உரிய நேரத்தில் கொள்வனவு செய்வதற்கான மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக கவர்ச்சிகரமான பல்வேறு பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றதுடன் வியாபார ரீதியான நன்மைகளும் கணிசமான அளவு அதிகரித்தது.

2021.12.31 இல் துறை சார் ஒதுக்கீடுகள் - பட்டியலிடப்பட்ட உரிமை முதல், ஆயுள் நிதி

%



நிதி சார்ந்தவை	52.19%
வாடிக்கையாளர் விருப்புரிமை	6.04%
கைத்தொழில்கள்	28.53%
சுகாதார பராமரிப்பு	5.36%
தொலைத் தொடர்பாடல்	2.41%
பொருட்கள்	2.68%
வாடிக்கையாளர் தரப்படுத்தல்	1.11%
நிலம், வீடு விற்பனை	0.30%
சக்தி	0.52%
பயன்பாட்டு பொருட்கள்	0.86%

2021.12.31 இல் துறை சார் ஒதுக்கீடுகள் - பட்டியலிடப்பட்ட உரிமை முதல், பொது நிதி

%



நிதி சார்ந்தவை	68.65%
சுகாதார பராமரிப்பு	12.37%
கைத்தொழில்கள்	11.62%
பயன்பாட்டு பொருட்கள்	5.51%
தொலைத் தொடர்பாடல்	0.60%
பொருட்கள்	0.47%
வாடிக்கையாளர் விருப்புரிமை	0.07%
சக்தி	0.71%

திரவத்தன்மை சார் இடர்கள்

கொள்வனவு செயன்முறைகளில் அல்லது முதலீட்டு சொத்துக்களை விற்பனை செய்கையில் ஏற்படக்கூடிய இழப்புகளை நாம் திரவத்தன்மை சார் இடர்கள் என வகைப்படுத்தியுள்ளோம். இகாகூ ஆனது தனது அதிகமான நிதியை திரவத்தன்மை அதிகமாக காணப்படும் சொத்துக்களில் முதலீடு செய்துள்ளது. உதாரணமாக, திறைசேரி முறிகள். ஆயுள் நிதி மற்றும் பொது நிதி ஆகியன திரவத் தன்மை தேவைகள் மற்றும் முதலீட்டுத் தேவைகளைக் கொண்டுள்ளன. சம்பந்தப்பட்ட நிதிகளின் திரவத்தன்மை சார்ந்த தேவைகளுக்கு ஏற்ப முதிர்ச்சியை கட்டமைக்கின்ற பொழுது இகாகூ ஆனது உரிய கவனத்தை செலுத்தியது. முதலீட்டு செறிவுகள் தொடர்பில் உள்ளக ரீதியாக விருத்தி செய்யப்பட்ட ஆரம்ப நிலைகள் திரவத்தன்மையற்ற கருவிகளில் மேற்கொள்கின்ற முதலீடுகளை மட்டுப்படுத்தியது. இதன் காரணமாக திரவத்தன்மை சார்ந்த இடர்களை தணிக்க முடிந்தது.

கடன் இடர்

வட்டியை அல்லது / மற்றும் மூலதனத்தை செலுத்தாமையினால் ஏற்படுகின்ற இழப்பானது கடன் இடர் என அழைக்கப்படும். இகாகூ இன்னால் தெரிவு செய்யப்பட்ட முதலீட்டு சார்ந்த தெரிவுகளானது இந்த இடர்களை குறைக்கின்றது. முதலீட்டு சொத்தின் தன்மை அதிகூடிய தராதரத்துடன் பேணப்படுகின்றது என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக முதலீடுகளில் காணப்படுகின்ற கடன் சார்ந்த இடர்கள் மிகவும் கவனமாக மேற்பார்வை செய்யப்படுவதுடன் ஆராயப்படுகின்றன. அதிகூடிய இடர்களை எதிர்கொள்ளப்படுவதை தவிர்க்கும் முகமாகவும் நிச்சயமற்ற காலப் பகுதியின் பொழுதும் இவை விசேடமாக மேற்கொள்ளப்படுகின்றன.

செறிவுசார் இடர்கள்

முதலீட்டுப் பட்டியல்கள் போதியளவு உரிய முறையில் தனியாக பிரிக்கப்படாத பட்சத்தில் உத்தரவாதமற்ற இடர்களை எதிர்கொள்கின்ற பொழுது நிச்சயமற்ற தன்மைகள் அதிகமாக இருக்கின்றன. இந்த முதலீட்டு பட்டியலானது அதிகூடிய செறிவுத் தன்மையுடன் காணப்படுகின்ற பொழுது இவற்றின் குறைவான செயலாற்றுகைகள் காரணமாக தாமதங்கள் ஏற்படலாம். ஏதாவது ஒட்டுமொத்த முதலீட்டுப் பட்டியலில் தாமதம் நிகழலாம். இத்தகைய செறிவு சார்ந்த இடர்களை குறைக்கும் முகமாக இகாகூ இல் முதலீடுகள் பல்வகைமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற்பாட்டு இடர்

மனித பிழைகள், மோசடிகள் உள்ளடங்கலாக தொழிற்பாட்டு செயன்முறைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக ஏற்படுகின்ற இடர்கள் தொழிற்பாட்டு இடர்கள் ஆகும். இத்தகைய தொழிற்பாட்டு இடர்களை குறைக்கும் முகமாக கடமைகளை பிரித்தளித்தல், இரு முறை கட்டுப்பாடுகள், கடுமையான கொள்கைகள், வழமையான கணக்காய்வு செய்கைகளுடன் மெனுவல் முறைகள் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

முதிர்ச்சி முதலீட்டுப் பட்டியல்
2021.12.31 இல் ஆயுள் நிதியம்
%



< ஒரு வருடம்	7.78%
1-2 வருடங்கள்	26.47%
2-5 வருடங்கள்	32.47%
5-10 வருடங்கள்	16.98%
>10 வருடங்கள்	16.30%

முதிர்ச்சி முதலீட்டுப் பட்டியல்
2021.12.31 இல் பொது நிதியம்
%



< ஒரு வருடம்	37.48%
1-2 வருடங்கள்	33.98%
2-5 வருடங்கள்	28.57%

இடர் முகாமைத்துவ அறிக்கை

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம்

தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் தொடர்பான எமது இடர்களை முகாமைத்துவம் செய்வதற்காக பல்வேறு விதமான மேம்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு நாம் செயற்பட்டு வருகின்றோம். இவ்வருடம் எமது அனர்த்த மீண்டெழல் தளங்களை மேம்படுத்தி குறைவான தடங்களுடன் சிறப்பான சேவைகளை அர்ப்பணிப்புடன் வழங்கியுள்ளோம். இவை தொடர்பில் நாம் மேற்கொண்ட உபாயரீதியான சில முன்னெடுப்புகள், பாதுகாப்பு தகவல்கள் மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் (SIEM) மற்றும் பாதுகாப்பு தொழிற்பாட்டு நிலையம் (SOC) ஆகும். அதேபோல் இணைய மூலமாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் முகமாக நாம் சில உபாய ரீதியான முன்னெடுப்புகளையும் மேற்கொண்டோம். நாம் தொடர்ச்சியாக எமது பாதுகாப்பு தொழில்நுட்ப தளங்களை மேம்படுத்துகின்ற அதேவேளை இணைய பயன்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் சாத்தியப்பாடுள்ள சிறப்பான நடைமுறைகள் தொடர்பில் பயன்பாட்டாளர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை மேற்கொள்வதற்காக நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம். மேலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான இடர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இடர்கள் ஆகியன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களத்தினாலும் தொழில்முயற்சி இடர் முகாமைத்துவத்தினாலும் மீளாய்வு செய்யப்படுகின்றன. இவற்றின் பெறுபேறுகள் உரிய நேரத்தில் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுவதுடன் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக சபையினால் நியமிக்கப்பட்ட இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் தொடர்பான இடர்கள் உள்ளக (ICT முறை பாதுகாப்பு குழு) மற்றும் வெளிநிலை தரப்புகள் (தகவல் முறை கணக்காய்வாளர்கள்) ஆகியோரினால் பாதிப்புறும் தன்மை மதிப்பீடுகள் மேற்கொள்ள்பபட்டு முறையாக மேற்பார்வை செய்யப்படுகின்றன. இத்தகைய பாதிப்புறு மதிப்பீடுகளின் பெறுபேறுகள் அறிக்கையிடப்படுவதுடன் இதனை கருத்திற் கொண்டு மிகவும் பயன்மிக்க முறையில் குறைபாடுகள் தீர்க்கப்படுவதுடன் மிகவும் பாதுகாப்பான தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் சேவை முறைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
இடர் முகாமைத்துவ கண்ணோட்டத்தில் நோக்குகையில் இணைய பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் தொடர்பில் "இணைய பாதுகாப்பு நிகழ்வு அறிக்கை" ஐ 2021 ஆம் ஆண்டில் பிரதான தகவல் அதிகாரியிடமிருந்து காலாண்டுக்கு ஒரு முறை நுசுஆ திணைக்களம் பெற்றுக் கொண்டது. மேலும் REF02/17/150/0095/001 ஆம் இலக்க சுற்றுநிருபம் மூலம் இலங்கை மத்திய வங்கி வழங்கிய வடிவத்தின் பிரகாரம் இதனை சபை இடர் முகாமைத்துவ உபகுழு சமர்ப்பித்தது. 2017 ஆம் ஆண்டு கூட்டுறவு ஆளுகை குறியீடு பிரிவு ஜி இனால் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் ஆகியவற்றினால் கூட்டிணைந்து விநியோகிக்கப்பட்டன. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் 17 ஆம் பிரகடனத்தின் பிரகாரம் இவற்றை பின்பற்றவதற்கு நாம் கடப்பட்டுள்ளோம். தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் இடர் முகாமைத்துவம் தொடர்பான சபைக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மனித வளங்கள் இடர்கள்

2021 ஆம் ஆண்டு மத்திய காலப் பகுதியில் நிலவி வந்த கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக நிச்சயமற்ற தன்மைகள் நிலவின. இதன் காரணமாக எவ்வித தங்குதடையுமின்றி தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஊழியர்களை பணிக்கு அமர்த்துவதில் மனித வளங்கள் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை மனித வளங்கள் திணைக்களம் எதிர்கொண்டது. எமது ஊழியர்கள் பெருந்தொற்றினால் பாதிக்கப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்பட்டதன் காரணமாக சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டி ஏற்பட்டது. இவற்றை சுகாதார அதிகார அமைப்புகள் சுகாதார வழிகாட்டிகள் அமுல்படுத்தின.

இருப்பினும் ஏதாவது கழிவுகளோ சம்பளத்தில் குறைபாடுகளோ அல்ல து உண்மைகளின் எவ்வித குறைபாடுகளோ அற்ற நிலையில் வேலை நிலைமைகளை நாம் பேணி வந்தோம். மேலும் எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கி வருகின்ற சேவையின் தன்மையில் எவ்வித குறைபாடும் இல்லாத இணையம் மற்றும் டிஜிட்டல் தளங்கள் மூலமாக இயலுமான வரை சிறப்பான சேவைகளை நாம் வழங்கினோம். இதன் மூலமாக எமது ஊழியர்கள் எதிர்கொள்ளக்கூடிய இடர்கள் குறைக்கப்பட்டன.

மேலும் எமது ஊழியர்கள் எதிர்கொள்ளக்கூடிய சுகதாரம் சார்ந்த இடர்களை குறைக்கும் முகமாக கோவிட் செயற்படையொன்றை அமைப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டதோடு இந்த வளங்களுடன் தொடர்புடைய இடர்களைக் குறைக்கும் முகமாக துன்பங்களை தவிர்த்தல் தொடர்பான குழுவையும் தாபித்தோம். தற்சமயம் இவை காத்திரமாக செயற்பட்டு வருகின்றன.

மோசடி மற்றும் பிழையான நடத்தைகளை முகாமைத்துவம் செய்தல்

கீழ் தரப்பட்டுள்ளதன் பிரகாரம் பல்வேறு விதமான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் எமக்கு ஏற்புடையனவாக காணப்படுகின்றன. எமது மோசடிக்கு எதிரான மற்றும் பிழையான நடத்தைக்கு எதிரான செயற்பாடுகளுக்காக பல்வேறு விதமான வழிமுறைகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன:

அ. பணம் துய்தாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கு எதிரான சட்டம்: 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணம் துய்தாக்கலுக்கு எதிரான சட்டம் (PMLA), 2006 ஆம் ஆண்டின் 06 இலக்க நிதி கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் திருத்தப்பட்டவாறு (FTRA), 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காப்பீட்டாளர்கள் (வாடிக்கையாளர் உரிய கவனம்), ஐநாவினால் அனுமதிக்கப்பட்ட பட்டியல், விதிகள், நிதி புலனாய்வு பிரிவினால் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகள். இகாகூ இல் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி மோசடி தடுப்பு வரைவுச் சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன. இவற்றை இந்த நிதி மோசடி தடுப்பு வரைவுச் சட்ட நடைமுறைகளை நாம் காத்திரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

ஆ. 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பிரகடனம்: இந்த சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருடாந்தம் தமது சொத்துக்களையும் பொறுப்புகளையும் பிரகடனப்படுத்தினர்.

இ. 1954 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலஞ்ச சட்டம் - இந்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றோம்.

ஈ. கூட்டுறவு ஆளுகை விதிகள் - மோசடிகளை தவிர்க்கும் முகமாக இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நாம் பின்பற்றுவதோடு மோசடி முகாமைத்துவ கொள்கையும் நடைமுறையில் இருக்கின்றது.

இணக்க அறிக்கை

காப்புறுதித் துறையில் அதிகரித்து வரும் ஒழுங்கமைப்பு சார்ந்த ஆணைகள் மற்றும் வளர்ந்து வரும் வியாபார சூழல் ஆகியன இணக்கம் தொடர்பான இடர்களை வினைத்திறன்மிக்க முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான தேவையை ஏற்படுத்தியது. விசேடமாக பல்வேறு வகையான சட்ட ரீதியான தேவைப்பாடுகள் பரந்து காணப்படுவதன் காரணமாக, வாடிக்கையாளர், தரவு பாதுகாப்பு, அந்தரங்கத்தை பேணுதல் ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடுகள் எழுந்தன. இவையும் மற்றும் ஏனைய விருத்திகள் காரணமாக இணக்கப்பாட்டு செயலின் அவசியம் அதிகரித்தது. ஏனைய காப்புறுதியாளர்களிடம் தற்சமயம் காணப்படுகின்றவற்றை போல் அல்லாது மிகவும் காத்திரமான நவீனமயப்பட்ட இயங்காற்றல்மிக்க இணக்கப்பாட்டு செயன்முறைகள் அவசியப்படுகின்றன.

காப்புறுதியை வழங்குபவர்களுக்கு வெளிப்படைத்தன்மை மிக முக்கியமாகும். இதன் அடிப்படையில் இணக்கப்பாடு தேவைப்பாடுகளை கடுமையாக பின்பற்றுவதல் வேண்டும். இகாகூ ஐ பொறுத்தவரையில் இந்த தேவைப்பாட்டினை அன்றாட வியாபார நடைமுறைகளில் நாம் பிரயோகித்து வருகின்றோம். ஒழுங்கமைப்பு மாற்றங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவது தொடர்ச்சியாக ஒரு சவாலாக காணப்படுகின்றது. காப்புறுதிக் கம்பனிகள் சில இடர்பாடுகளை எதிர்கொள்வதனால் குறிப்பாக புதிய நிதி ரீதியான அறிக்கையிடல் தராதரம் IFRS 17 மிகவும் முக்கியமான மாற்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதுடன் 20 வருடங்களுக்கு மேலதிகமாக காப்புறுதித் துறையில் கணக்கீட்டு தேவைப்பாடு மாற்றங்களையும் இது உள்ளடக்குகின்றது.

இகாகூ ஆனது அராசாங்கத்திற்கு சொந்தமான அமைப்பு என்ற முறையில் வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனிகள், காப்புறுதி கம்பனிகள், அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனிகள் ஆகியவற்றுக்கு ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியன இதற்கும் ஏற்புடையதாகும்.

கம்பனிக்கு ஏற்புடைய வரைவுச் சட்டகம் பற்றிய விபரங்களை கீழுள்ள வரைவு காட்டுகின்றது.



சகல விதமான சம்பந்தப்பட்ட சட்டங்களையும் அர்ப்பணிப்புடன் நாம் பின்பற்றி வருகின்றோம். ஆகவே இவற்றை இனங்கண்டு மேற்பார்வை செய்து அறிக்கையிட்டு மற்றும் இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான முறைசார்ந்த இணக்கப்பாட்டு வரைவுச் சட்டகம் விருத்தி செய்யப்பட்டது. இதன் பிரகாரம் கூட்டுறவு இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றை தாபித்து அதனை தொழிற்படுத்துவதை இணக்கப்பாட்டு ஆணை கட்டாயமாக்குகிறது. இணக்கப்பாட்டு குழுவின் தலைவர் அவர்கள் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு, இடர் முகாமைத்துவக் குழு, சபை ஆகியவற்றுக்கு ஒழுங்கான முறையில் அறிக்கையிடல் வேண்டும். சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட "இணக்கப்பாட்டு கொள்கையானது" வழிகாட்டி கோட்பாடுகள், பிரதான அம்சங்கள், கம்பனியின் இணக்கப்பாட்டு செயன்முறையை அடைவதற்கு அவசியமான நோக்கங்கள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை குறிப்பிடுகின்றது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான முக்கிய தொனி மற்றும் ஏனைய சில அம்சங்களை நிறைவேற்றுக் குழு மேற்கொள்கின்றது. இதன் பிரகாரம் சட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குவிதிகள் ஆகியன ஏற்புடைய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்வதோடு சபை முழுவதும் இவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட சட்டங்களுக்கு இணங்க மறுத்தல், ஒழுங்குவிதிகள் உள்ளக கொள்கைகள், செயன்முறைகள், கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப நடக்க மறுத்தல் அல்லது வினைத்திறன்மிக்க முறையில் இணக்கப்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்ய மறுத்தல் இவற்றின் காரணமாக இகாகூ இற்கு ஏதாவது தண்டப் பணங்கள், சிவில் அல்லது குற்றவியல் சார்ந்த தண்டனைகள் விதிக்கப்படல், இத்தகைய காரணிகளினால் இகாகூ இன் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுகின்ற பொழுது அவற்றை இணக்கப்பாட்டு சார் இடர்கள் என நாம் அழைக்கின்றோம். இகாகூ இன் வியாபார கோட்பாடுகளின் பிரகாரம் பணியாற்றுகின்ற சகல ஊழியர்களும் சகல மட்டங்களை சார்ந்த ஊழியர்களும் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது மாத்திரம் அல்லாமல் நேர்மையாகவும், பொறுப்புக் கூறக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். சிறந்த முறையில் இணக்கப்பாட்டு இடர்களை முகாமைத்துவம் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்களதும் ஏனைய பங்கீட்டுபாட்டாளர்களதும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியும் என்பதை இகாகூ உணர்ந்துள்ளது.

ஆணைகளை சமநிலைப்படுத்தல் (ஒழுங்குவிதிகள் மற்றும் கைத்தொழிற்துறை விதிகள் போன்றன) மற்றும் தன்விருப்புரிமை (வியாபார உபாயமுறை மற்றும் நோக்கங்கள் மற்றும் கூட்டுறவு கொள்கைகள் போன்றன) ஆகியவற்றை சமநிலை செய்து இணக்கப்பாட்டு இடர் தொடர்பான விடயங்களை தாபித்து அதற்கு பொறுப்பாக கம்பனியின் பணிப்பாளர்கள் சபை இருத்தல் வேண்டும். வினைத்திறன்மிக்க இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவமானது ஒரு கூட்டிணைந்த செயன்முறையாகும். இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடு, சட்ட, மனித வளங்கள் உட்பட சகல விடயங்களையும் கூட்டிணைத்து செயற்பட வேண்டியுள்ளது.

ஏற்புடைய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு பொறுப்பான பிரிவுகளை கம்பனியின் இணக்கப்பாட்டு திணைக்களம் இனம் கண்டுள்ளோது இணக்கப்பாடு தொடர்பான தேவைகளை நிறைவேற்றுவதற்காக கூட்டிணைந்த செயன்முறைகளை நடைமுறைப்படுத்துகின்றது. இதன் அங்கமாக எதிர்காலத்தில்

இணக்க அறிக்கை

எதிர்பார்க்கின்ற ஒழுங்குவிதிகள் தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் முகாமைத்தும் சார்ந்த விடயங்களை இணக்கப்பாட்டு திணைக்களம் வழங்குகின்றது. அத்தோடு காத்திரமான வியாபார செயன்முறை முகாமைத்துவ தீர்வுகளானது புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பில் செயற்படுவதற்கான கருவிகளை செலவுச் சிக்கனத்துடன் கம்பனிக்கு வழங்குகின்றது.

பணம் துய்தாக்கல் மற்றும் பணம் துய்தாக்கலை இலகுபடுத்துகின்ற ஏதாவது செயற்பாடுகள் அல்லது பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல் போன்ற செயல்களை தடுத்தல் போன்றன கம்பனியின் கொள்கையாக காணப்படுகின்றது. ஏற்புடைய சட்டங்களின் பிரகாரம் நிதி மோசடி தடுப்பு இணக்கப்பாடுகள் தொடர்பில் இகாகூ அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது மற்றும் பணம் துய்தாக்கல் நோக்கங்களுக்காக இதனது உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளை பயன்படுத்துவதை தடை செய்யும் முகமாக இதனது முகாமைத்துவம், பணியாளர்கள்,

நியமிக்கப்பட்ட முகவர்கள் ஆகியோர் இவற்றினை பின்பற்றுதல் வேண்டும். பணம் துய்தாக்கல் செயல்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, இதனை தடுப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பிலான விபரங்களை வழங்குவதற்காக இது தொடர்பாக பணியாளர்களுக்கு ஆழமான புரிதல்களை வழங்கும் நோக்குடன் இகாகூ இனால் விருத்தி செய்யப்பட்ட ந கற்றல் மொடியுள் காணப்படுகின்றது. இந்த செயன்முறையின் இறுதியில் ஊழியர்கள் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும். பரீட்சையில் சித்தியடையும் பொழுது 5% ஆன கொடுப்பனவொன்று செயலாற்றுகை மதிப்பீட்டின் பொழுது வழங்கப்படுகின்றது.

குறைகளை இனங்காண்பதற்கான கொள்கையொன்றும் காணப்படுகின்றது. இதற்காக கம்பனியின் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கொள்கை கம்பனியினுள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை உறுதி செய்வது இவரது பொறுப்பாகும். வியாபாரங்களில் ஈடுபடுகின்ற பொழுது குறிப்பிடப்பட்ட கொள்கைகள், விதிகள், பெறுமானங்கள், தராதரங்கள், சட்ட ரீதியான இணக்கப்பாடுகள் ஆகியவற்றுக்கு ஏற்ப பிரதான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் ஏனைய சகல ஊழியர்கள், பணிப்பாளர்கள் ஆகியோர் நடந்து கொள்கின்றனர் என்பதை உறுதி செய்து கொள்வதற்காக "வியாபார நடத்தல் மற்றும் ஒழுக்க நெறிக் கோவை" காணப்படுகின்றது.

இணக்கப்பாட்டு திணைக்கள ரீதியான பயிற்சிகளை நடத்தி வருகின்றது. அதன் மூலம் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு உள்ளக தொடர்பாடல் தளங்கள் மூலம் "இணக்கப்பாட்டு துணுக்குகளை" வழங்கி வருகின்றது. மேலும் கம்பனியானது தனது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் செயற்பட்டு வருகின்றது. இதன் காரணமாக எதிர்காலத்தில் இணக்கப்பாட்டு முகாமைத்துவத்தை மேலும் வினைத்திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன. மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் இணக்கப்பாட்டு திணைக்களமானது "ந வர்த்தக சட்டங்கள் மற்றும் இணையப் பாதுகாப்பு" தொடர்பான பயிற்சிநெறிகளை நடத்தியது. இணக்கப்பாட்டு கலாசார முன்னுரிமைகளை வழங்குவதற்கும் 2022 ஆம் ஆண்டில் "தரவு பாதுகாப்பு" போன்ற ஏனைய துறைகளில் பயிற்சிகளை வழங்குவதற்கும் அமைப்பு திட்டமிட்டது.

இணக்கப்பாட்டு இடர் தொடர்பான பிரதேசங்களில் நான்கு வகையான பாதுகாப்பு முறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அவையாவன, சம்பந்தப்பட்ட திணைக்கள சட்டங்களினால் முதலாவதாக பாதிக்கப்படக்கூடியவர்கள் என இனங்காணப்பட்ட உண்மையில் நேரடியாக இடரினால் பாதிக்கப்படுபவர்கள்: இடர் முகாமைத்துவ குழு மற்றும் கணக்காய்வு ம்றறும் இணக்கப்பாட்டு குழு ஆகியன இரண்டாம் நிலை பாதுகாப்பாக கருதப்படுகின்றன் உள்ளக கணக்காய்வு மூன்றாம் மட்ட பாதுகாப்பாக பண தூய்தாக்கல் செயற்பாடுகள் தொடர்பில் கருதப்படுகின்றது ஒழுங்கமைப்பாளர், உதாரணமாக, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் வெளிநிலை கணக்காய்வாளர்கள் (சுற்றுநிருப இலக்கம் 29,2010 ஆகஸ்ட் 23 ஆம் திகதியிடப்பட்டது) நான்காம் நிலை பாதுகாப்பாக செயற்படுகின்றது. இணக்கப்பாட்டு இடர் நிகழ்ச்சி நிரலானது கணக்காய்வு நிகழ்ச்சி நிரலுக்கு எந்த விதத்திலும் இரண்டாம் தரமானது அல்ல என்பதை உறுதிப்படுத்தும் முகமாக இணக்கப்பாட்டு திணைக்களமானது கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு, இடர் முகாமைத்துவ குழு ஆகியவற்றுக்கு அறிக்கையிடுகிறது.

பின்வரும் விடயங்கள் நடைமுறையில் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் இணக்கப்பாடு சார்ந்த இடர்களை குறைப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன: இணக்கப்பாட்டை மேற்பார்வை செய்தல் மற்றும் இடர் முகாமைத்துவத்தை ஒருங்கிணைத்தல் பகிரங்கமான மற்றும் வெளிப்படையான அறிக்கையிடலுக்கு உதவுதல் பங்கீட்டுபாட்டாளர்களுடனான தொடர்பு முறைகளை கட்டியெழுப்புதல். ஒழுக்கநெறி மற்றும் சிறப்பு நடைமுறைகள் ஆகியவற்றின் பிரகாரம் இணக்கப்பாட்டு வரைவுச் சட்டகத்தை மேலும் வலுப்படுத்தும் முகமாக, சீர்திருத்த மற்றும் தடுத்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக இணக்கப்பாடு சார்ந்த பிரச்சினைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியன சபையின் உபகுழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

கோவிட்-19 பரவலாக காணப்படுகின்ற நிலையில் நிதி ரீதியான குற்றங்கள் மற்றும் இணைய ரீதியான ஆக்க நடவடிக்கைகள் தொடர்பில் விழிப்புணர்வுடன் இருப்பதன் அவசியத்தை நாம் உணர்ந்துள்ளோம். அடையாளத்தை திருடுதல், மின்னஞ்சல் மற்றும் இணையத்தளம் மூலம் மோசடிகள், வழங்கப்பட்ட சேவைகளை மறுதளித்து தாக்குதல், உள்ளடங்கலாக பல்வேறு வகையான இணைய ரீதியான குற்றங்கள் உலகளாவிய ரீதியில் அதிகரித்து வருவதை நாம் அறிவோம். அத்தோடு தரவுகளை பாதுகாத்தல் மற்றும் மறைமுகமாக பயங்கரவாதத்திற்கு நிதியிடல் போன்ற வளர்ந்து வரும் இணக்கப்பாடு சார்ந்த இடர்களை முகாமைத்துவம் செய்வதன் அவசியம் பற்றியும் நாம் உணர்ந்துள்ளோம்.

மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் கீழ் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு கம்பனியியானது சகல விதமான சட்ட ரீதியான தேவைகள் ,விதிகள், ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு ஏற்ப நடந்துள்ளது. இவை தொடர்பான விடயங்கள் நிதிக் கூற்றுகள் மற்றும் கூட்டுறவு ஆளுகை அறிக்கை தொடர்பான வெளிநிலை கணக்காய்வாளரின் அறிக்கை மற்றும் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தபான லிமிடட்

ஒழுங்குவிதிகள் மற்றும் சட்ட ரீதியான இணக்கம் - 2021 ஜனவரி 01 முதல் 2021 டிசம்பர் 31 வரையிலான காலப் பகுதிக்கான வருவாய் மற்றும் கொடுப்பனவு தொடர்பான அறிக்கையை ஒழுங்கமைப்பு/ மேற்பார்வை அதிகார அமைப்பு இணக்கப்பாட்டு அறிக்கையை சமர்ப்பித்தல்.

ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான தேவைப்பாடுகள்	வருவாய்/ கொடுப்பனவு சமர்ப்பித்தல் கால அளவு	சமர்ப்பணம்/ கொடுப்பனவு திகதி	நிறைவேற்றப்பட்ட திகதி	இணக்கம் மற்றும் குறிப்புகள்
ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான வருவாய் / கொடுப்பனவுகள் வரும் காலப் பகுதி				
இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (IRCSL)				
RII சட்டத்தின் 49 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கான இற்கான காலாண்டு வருவாய்க்ள				
2012 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் (49 வடிவங்கள்) RII சட்டத்தின் 49(ஆ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இலங்கைக் காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு இற்கு மீளாய்வு செய்யப்பட்ட காலாண்டு வருவாய்கள் சமர்ப்பித்தல்				
தீர்மானம் சார் வடிவங்கள்	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
இடர் அடிப்படையிலான மூலதனம் (வடிவங்கள்) - பொது	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
இடர் அடிப்படையிலான மூலதனம் (வடிவங்கள்) - ஆயுள்	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
ஐந்தொகை மற்றும் இலாப நட்ட கணக்கு (வடிவங்கள்)	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
IRCSL சுற்றுநிருபம் 12 இன் கீழ் CEO மற்றும் பிரதான அதிகாரியின் கீழ் காலாண்டு சான்றுப்படுத்தல் (அ)	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
IRCSL சுற்றுநிருபம் 12 இன் கீழ் CEO மற்றும் பிரதான அதிகாரியின் கீழ் காலாண்டு சான்றுப்படுத்தல் (ஆ)	காலாண்டு இறுதியில் 45 நாட்களுக்குள்	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	

இணக்க அறிக்கை

ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான தேவைப்பாடுகள்	வருவாய்/ கொடுப்பனவு சமர்ப்பித்தல் கால அளவு	சமர்ப்பணம்/ கொடுப்பனவு திகதி	நிறைவேற்றப்பட்ட திகதி	இணக்கம் மற்றும் குறிப்புகள்
மேலதிக வருவாய்கள்				
1) மீள் காப்புறுதி உடன்படிக்கை குறிப்புகள்	வருடாந்தம்	அடுத்த வருட மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர்	15.03.2021	
2) மீள் காப்புறுதி இடர் மாற்ற நிகழ்ச்சித்திட்டம் (2020 ஆம் வருடம்)	வருடாந்தம்	2021.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்	29.01.2021	
3) பிரிவுத் துறை சார் ஏற்பாடுகள்	காலாண்டு	4வது காலாண்டு (20)- பெப்ரவரி 15	15.02.2021	
		1வது காலாண்டு (21)- மே 15	15.05.2021	
		2வது காலாண்டு (21)- ஆகஸ்ட் 15	13.08.2021	
		3வது காலாண்டு (21)- நவம்பர் 15	15.11.2021	
2000 ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதித் துறை ஒழுங்குவிதிகளின் கீழ் வருடாந்த கோவையிடல்				
இடர் அடிப்படையிலான மூலதனம் (வடிவங்கள்) - பொது	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
இடர் அடிப்படையிலான மூலதனம் (வடிவங்கள்) - ஆயுள	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
தீர்மான வடிவங்கள்	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
ஐந்தொகை மற்றும் இலாப நட்ட கணக்கு (வடிவங்கள்)	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
காப்பீட்டு கணக்கர் அறிக்கை மற்றும் சுருக்கம்	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
ஏனைய வடிவங்கள்				
1. இடர் மதிப்பீட்டு அறிக்கை	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	28.04.2021	
2. பணிப்பாளர்களது பொறுப்பு தொடர்பான கூற்று	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
3. நீண்ட கால காப்புறுதி வியாபாரம் - காப்புறுதியாளர் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கம் தொடர்பான சான்றுப்படுத்தல்	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
4. பொது காப்புறுதி வியாபாரம் - காப்புறுதியாளர் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் இணக்கம் தொடர்பான சான்றுப்படுத்தல்	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
5. கம்பனியின் வருடாந்த அறிக்கை	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	06.07.2021	குழு கணக்கினால் இறுதிப்படுத்துவதற்கு ஏற்பட்ட தாமதம்
6. IRCSL இன் 29 ஆம் இலக்க சுற்றுநிருபம் தொடர்பிலான விடயங்களை கண்டறிதல் தொடர்பான கணக்காய்வாளர்கள் அறிக்கை	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	2021.04.30 ஆம் திகதியில் நகல் வரைவு IRCSL இற்கு சமர்ப்பிக்கப்பட்டது மற்றும் இறுதி அறிக்கை 2021.08.06 இல் சமர்ப்பிக்கப்பட்டது	
7. முகாமைத்துவக் கடிதம்	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	05.11.2021	குழு கணக்கினால் இறுதிப்படுத்துவதற்கு ஏற்பட்ட தாமதம்

ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான தேவைப்பாடுகள்	வருவாய்/ கொடுப்பனவு சமர்ப்பித்தல் கால அளவு	சமர்ப்பணம்/ கொடுப்பனவு திகதி	நிறைவேற்றப்பட்ட திகதி	இணக்கம் மற்றும் குறிப்புகள்
8. இணக்கப்பாட்டு சான்றிதழ் அ - நீண்ட கால காப்புறுதி வியாபாரம் இணக்கப்பாட்டு சான்றிதழ் அ -- பொதுக் காப்புறுதி வியாபாரம	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
9. இணக்கப்பாட்டு சான்றிதழ் ஆ	வருடாந்தம்	2020 வருட இறுதி- 2021 ஏப்ரல் 30	30.04.2021	
கொடுப்பனவுகள்				
Cess ஆயுள் 0.2%, பொது 0.4% தேறிய காப்பீட்டு கட்டணம்	காலாண்டு	4வது காலாண்டு (20)- ஜனவரி 31	27.01.2021	
		1வது காலாண்டு (21)- ஏப்ரல் 30	29.04.2021	
		2வது காலாண்டு (21)- ஜூலை 31	28.07.2021	
		3வது காலாண்டு (21)- ஒக்டோபர் 31	27.10.2021	
வருடாந்த கட்டணம்	வருடாந்தம்	கணக்காய்வு கணக்குகளின் ஒரு மாதத்தின் பின்னர் அல்லது அடுத்த வருட ஜூலை 31 இற்கு முன்னர்	29.04.2021	
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்				
வருவாய்கள்				
சேர்பெறுமதி வரி வருவாய்கள்	காலாண்டு	4வது காலாண்டு (20)- ஜனவரி 31	31.01.2021	
		1வது காலாண்டு (21)- ஏப்ரல் 30	30.04.2021	
		2வது காலாண்டு (21)- ஜூலை 31	31.07.2021	
		3வது காலாண்டு (21)- ஒக்டோபர் 31	31.10.2021	
முத்திரைக் கட்டணம்	காலாண்டு	4வது காலாண்டு (20)- ஜனவரி 31	14.01.2021	
		1வது காலாண்டு (21)- ஏப்ரல் 30	12.04.2021	
		2வது காலாண்டு (21)- ஜூலை 31	15.07.2021	
		3வது காலாண்டு (21)- ஒக்டோபர் 31	15.10.2021	
உழைக்கும் போது செலுத்துதல் வரிவாய் (PAYE)	வருடாந்தம்	2020 - 2021 ஏப்ரல் 30	உரிய திகதியில் நிறைவேற்றப்பட்டது	
பயிர் காப்புறுதி விதிப்பனவு	காலாண்டு	3வது காலாண்டு (20)- ஜனவரி 30	29.01.2021	
		4வது காலாண்டு (20)- ஏப்ரல் 30	29.04.2021	
		1வது காலாண்டு (21)- ஜூலை 31	30.07.2021	
		இறுதி (20)- ஒக்டோபர் 31	30.09.2021	
		2வது காலாண்டு (21)- ஒக்டோபர் 30	29.10.2021	

இணக்க அறிக்கை

ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான தேவைப்பாடுகள்	வருவாய்/ கொடுப்பனவு சமர்ப்பித்தல் கால அளவு	சமர்ப்பணம்/ கொடுப்பனவு திகதி	நிறைவேற்றப்பட்ட திகதி	இணக்கம் மற்றும் குறிப்புகள்
கொடுப்பனவுகள்				
சேர் பெறுமதி வரி	மாதாந்தம்	அடுத்த மாதம் 20 ஆம் திகதி	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)	மாதாந்தம்	அடுத்த மாதம் 15 ஆம் திகதி	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
வருமான வரி	காலாண்டு	பெப்ரவரி 15 அல்லது அதற்கு	15.02.2021	
		மே 15 அல்லது அதற்கு முன்னர்	13.05.2021	
		ஆகஸ்ட் 15 அல்லது அதற்கு முன்னர்	13.08.2021	
		செப்டெம்பர் 15 அல்லது அதற்கு முன்னர்	30.09.2021	
		நவம்பர் 15 அல்லது அதற்கு முன்னர்	15.11.2021	
முத்திரை கட்டணம்	காலாண்டு	4வது காலாண்டு (20)- ஜனவரி 15	15.01.2021	
		1வது காலாண்டு (21)- ஏப்ரல் 15	12.04.2021	
		2வது காலாண்டு (21)- ஜூலை 15	15.07.2021	
		3வது காலாண்டு (21)- ஒக்டோபர் 15	15.10.2021	
பயிர் காப்புறுதி விதிப்பனவு	காலாண்டு	3வது காலாண்டு (20)- ஜனவரி 30	29.01.2021	
		4வது காலாண்டு (20)- ஏப்ரல் 30	29.04.2021	
		1வது காலாண்டு (21)- ஜூலை 30	30.07.2021	
		இறுதி (20)- செப்டெம்பர் 30	கட்டணம் இல்லை	
		3வது காலாண்டு (20)- ஒக்டோபர் 30	29.10.2021	
பிடித்துவைத்தல் வரி	மாதாந்தம்	2020.01.01 இல் செல்லுபடியாகும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டது.		
பிடித்துவைத்தல் வரி				
ஊழியர் சேமலாப நிதி வருவாய்கள்	வருடத்திற்கு இருமுறை	ஜனவரி 31 மற்றும் ஜூலை 31	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
AML (பணம் துய்தாக்கலுக்கு எதிரானது) வருவாய்கள்				
1. பண கொடுக்கல் வாங்கல் அறிக்கை	மாதாந்தம்	அடுத்த மாதம் 15 ஆம் திகதி	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
2.சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல் அறிக்கைகள்	இரண்டு நாட்களுக்குள்	இரண்டு நாட்களுக்குள்	-	
ஊழிய சேமலாப நிதி பங்களிப்புகள்	மாதாந்தம்	அடுத்த மாதம் இறுதி வேலை தினத்திற்கு ஒரு நாள் முன்னர்	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	

ஒழுங்குவிதிகள் / சட்டரீதியான தேவைப்பாடுகள்	வருவாய்/ கொடுப்பனவு சமர்ப்பித்தல் கால அளவு	சமர்ப்பணம்/ கொடுப்பனவு திகதி	நிறைவேற்றப்பட்ட திகதி	இணக்கம் மற்றும் குறிப்புகள்
ஊழியர் நம்பிக்கை நிதிய சபை குரனெ				
ஊழியர் நம்பிக்கை நிதிய வருவாய்கள்	வருடத்திற்கு இரு முறை	ஜனவரி 31 மற்றும் ஜுலை 31	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்பு	மாதாந்தம்	அடுத்த மாத இறுதி வேலை தினத்திற்கு ஒரு நாள் முன்னர்	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
மோட்டார் வாகனங்களை பதிவு செய்தல்				
கொடுப்பனவு - சொகுசு மற்றும் அரை சொகுசு வரி	மாதாந்தம்	அடுத்த மாதம் 15 ஆம் திகதி	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
கம்பனிகளை பதிவு செய்தல் ழக ஊழஇயனைள				
நிதி கூற்றுக்களை பதிவு செய்தல்	வருடாந்தம்	கம்பனியின் நிதிக் கூற்றுகளுக்கு பின்னர் 20 வேலை நாட்களுக்குள்		
போக்குவரத்து அமைச்சு				
கொடுப்பனவு - வீதி பாதுகாப்பு நிதியம்	காலாண்டு	அடுத்த மாதம் 15 ஆம் திகதி	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
மாநகர/ நகர சபை				
கொடுப்பனவு - விகிதம் மற்றும் வரி	வருடாந்தம்	தற்போதைய வருடத்தின் ஜனவரி 31 இற்கு முன்னர் (கழிவுகளை பெற்றுக் கொள்ள)	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்				
கொடுப்பனவு - SRCC மற்றும் பயங்கரவாத நிதி	காலாண்டு	மாத இறுதியிலிருந்து 45 நாட்களுக்குள்	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	
வேலை செய்பவர்களுக்கான நட்டஈடு தொடர்பான ஆணையாளர் ஊழஇநளெயவழைெ				
அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் - வேலை செய்பவர்களுக்கான நட்டஈட்டு காப்புறுதிறயட ழக	வருடாந்தம்	மே 30 இற்கு முன்னர்	குறிப்பிட்ட திகதியில் நிறைவேற்றப்பட்டது	

உள்ளக கட்டுப்பாட்டு கூற்று

உள்ளக கட்டுப்பாடு தொடர்பான காத்திரமான முறையொன்று நடைமுறையில் இருக்கின்றது என்பதை உறுதி செய்து கொள்வதற்காக உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கு மேற்பார்வை மற்றும் பணிப்புரைகளை இறுதியாக சபை வழங்குகின்றது. பங்கீட்டுப்பாட்டாளர்களது நலன்களை வினைத்திறன்மிக்க முறையில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளும் முகமாக இடர் மற்றும் ஆளுகை பிரதேசங்களில் நடைபெற்று வரும் விருத்திகள் தொடர்பில் சபையானது கவனத்துடன் செயற்படுகின்றது.

கம்பனியின் ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ வரைவுச் சட்டகத்தில் காத்திரமான உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன முக்கியமான அங்கம் என கம்பனியின் பணிப்பாளரகள் சபை அங்கீகரித்துள்ளது. உள்ளக கட்டுப்பாட்டு முறையானது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைதல் மற்றும் உபாயரீதியான நோக்கங்கள் ஆகியவற்றை இல்லாதொழித்தல் அல்லது தவறுதல் தொடர்பான இடர்களுக்கு பதிலாக இடர்களை நியாயபூர்வமான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கான விடயங்களை மேற்கொள்கின்றது. இந்த நோக்கத்தை அடையும் முகமாக சபையானது 5 பிரதான உபகுழுக்களையும் மற்றும் நன்கு வரையறை செய்யப்பட்ட அமைப்பு ரீதியான கட்டமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இவை பொறுப்புக் கூறல் மற்றும் அதிகார பரவலாக்கம் தொடர்பில் தெளிவாக எடுத்துரைக்கின்றன. 5 சபை உபகுழுக்களாவன, கணக்காய்வ மற்றும் இணக்கப்பாட்டு குழு கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கை, இடர் முகாமைத்துவ குழு, மனித வளங்கள் குழு, முதலீட்டுக் குழு, உபாய ரீதியான மீளாய்வு குழு. பிரதான குழுக்களானது சபையினால் அனுமதிக்கப்பட்ட சமவாயங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன் சிறந்த ஆளுகை தொடர்பான அடிப்படை கொள்கைகளுக்கு ஏற்ப செயற்படுத்தப்படுகின்றது.

சபையானது தனது மேற்பார்வை சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு உதவும் முகமாக உபாயரீதியான வகிபாகங்களை கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு வகிக்கின்றது. அவையாவன, நிதி ரீதியான அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாட்டு முறைகள், இடர் முகாமைத்துவ முறைகள், உள்ளக மற்றும் வெளிநிலை கணக்காய்வு செயற்பாடுகள். தொழிற்பாடுகளானது, கொள்கைக்கும் நடைமுறைகளுக்கும் ஏற்ப நடைபெறுகின்றதா மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் போதுமை மற்றும் பயனுறுதித்தன்மை, இணக்கப்பாடின்மை தொடர்பிலான ஏதாவது முக்கிய விடயங்களை கண்டறிந்து குறிப்பிடல் ஆகியவற்றை இது உறுதிப்படுத்துகின்றது. சகல கிளைகளிலும் பிரிவுகளிலும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன, இடர் மதிப்பீட்டின் அடிப்படையில் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுகின்றது. இந்த பிரிவுகள் மற்றும் கிளைகள் தொடர்பான சுயாதீன மற்றும் நோக்க தொழிற்பாடு தொடர்பான நோக்க அறிக்கை ஆகியன வழங்கப்படுகின்றன. வருடாந்த கணக்காய்வு திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு கணக்காய்வு குழுவினால் ஒப்புதல் அளிக்கப்படுகின்றது மற்றும் இவற்றினால் கண்டறியப்பட்ட விடயங்கள் அவ்வப்பொழுது நடைபெறும் கூட்டங்களின் பொழுது மீளாய்விற்காக கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. கிளை அலுவலகங்கள் தொடர்பான கண்டறிதல்களை கலந்தாராயும் முகமாக விசேட குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது. நிதியிடல் அறிக்கை தொடர்பான உள்ளக கட்டுப்பாடானது அமைப்பொன்றின் ஆளுகைக்கு முக்கியமானதாகும்.

உள்ளக கட்டுப்பாட்டு தொடர்பில் கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கை இன் பிரதான பொறுப்பானது நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடாகும். உள்ளக கட்டுப்பாட்டு முறை தொடர்பிலான வினைத்திறன்மிக்க முறையொன்றினை தாபித்து அதனை பேணுவதற்கு பொறுப்பாக முகாமைத்துவம் காணப்படுகின்றது. இவற்றை மேற்பார்வை செய்வதற்கு கணக்காய்வு மற்றும் இணக்கக் குழு அறிக்கை பொறுப்பாக இருப்பதுடன் ஒட்டுமொத்த முறைகளையும் பயனுறுதித்தன்மை பற்றி மீளாய்வு செய்வதற்கும் இவை பொறுப்பாக இருக்கின்றன. உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் செயலாற்றுகை பற்றி தற்போது நடைபெற்று வரும் மேற்பார்வை செயற்பாடுகள், தனியான மதிப்பீடு அதாவது உள்ளக கணக்காய்வு, பொருத்தப்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கான செயன்முறைகள் ஆகியவற்றின் மூலம் மதிப்பிடப்படுகின்றது மற்றும் அடையாளம் காணப்பட்ட கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மை பற்றி அமைப்பின் சாதாரண தொழிற்பாடுகளின் பொழுது இணைக்கப்படுகின்றன.

காத்திரமான இணக்கப்பாட்டு முகாமைத்துவ முறையொன்று ஒட்டுமொத்த இடர் முகாமைத்துவ உபாயமுறையில் ஒருங்கிணைக்கப்பட்டு நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் இணக்கப்பாட்டு இடர் முகாமைத்துவ அத்தியாயத்தில் அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளது. இணக்கப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்கு இணங்கி நடப்பது பற்றி குறிப்பிடுவதுடன் கம்பனிகள் சட்டத்தினால் ஆளுகை செய்யப்படுகின்ற வரையறை செய்யப்பட்ட கம்பனி என்ற முறையில் அரசாங்கத்திற்கு சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனிகள் என்ற முறையில் காப்புறுதி தொழிற்துறை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனி என்ற முறையில் பொறுப்புகள் காணப்படுகின்றன. நாணயம் மற்றும் ஸ்திரத்தன்மை தொடர்பான பாதகமான பின்விளைவுகளை குறைக்கும் முகமாக நாம் காத்திரமான பணம் தூய்தாக்கலுக்கு எதிரான வரைவுச் சட்டகத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். வடிவமைக்கப்பட்ட தரவு மையத்தினூடாக வாடிக்கையாளர்களை ஆராய்தல், வாடிக்கையாளர்கள் தொடர்பில் உரிய கவனத்தை செலுத்துதல், ஊழியர்கள் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீட்டில் ஓர் அங்கமாக காணப்படுகின்ற ஈ கற்றல் மாதிரி, வருடாந்த உள்ளக கணக்காய்வு, (பணம் தூய்தாக்கலுக்கு எதிரானது இடர் மதிப்பீடு ஆகியன காணப்படுகின்றன.

இடர் முகாமைத்துவ செயற்பாடுகளை தனியான இடர் குழுவிற்கு சபை வழங்கியுள்ளது. கம்பனியின் மிக முக்கியமான இடர்கள் மற்றும் இடர் முகாமைத்துவ ஆற்றல்கள் தொடர்பில் இது கவனம் செலுத்துகின்றது. இடர் முகாமைத்துவ கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் வடிவமைக்கப்பட்டு கம்பனியினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றவைகள், கம்பனியின் உபாய முறை மற்றும் இடர் சார் விடயங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப காணப்படுகின்றன என்பது தொடர்பில் பணிப்பாளர்கள் திருப்தியடைகின்றனர். மேலும் பொருத்தமான இடர் விழிப்புணர்வுகளும் காணப்படுகின்றன. சபையினால் நியமிக்கப்பட்ட உபகுழுவிற்கு இடர் சார் திணைக்களம் பிரதிநிதித்துவங்களை மேற்கொள்கின்றது அவையாவன, இடர் முகாமைத்துவ குழு மற்றும் முதலீட்டுக் குழு மற்றம் பல்வேறு வகையான முகாமைத்துவக் குழுக்கள். குறிப்பாக நிறைவேற்றுக் குழு, கணக்காய்வு பின்னூட்டல் குழு, உற்பத்தி அபிவிருத்திக் குழு போன்றன. இதன் பிரகாரம் நுசுஆ ஆனது இடர் கண்ணோட்டத்தில் சுயாதீன கருத்தினை வழங்குகின்றது. இதன் காரணமாக இடர் ரீதியான தாக்கங்களை கருத்திற் கொண்டு முகாமைத்துவம் மற்றும் சபை ஆகியன அறிவிக்கப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ள முடிகின்றது.



பொறியியலாளர் விஜித ஹேரத்
தவிசாளர்

டப்ளியு. ஏ. சமந்த உபனந்த
தவிசாளர் - கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு

2022 மே 24 ஆந் திகதி

நிதி அறிக்கைகள்

116 - கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை
120 - பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று
121 - பொறுப்புகள் தொடர்பான பிரதான நிதி அதிகாரியின் கூற்று
122 - காப்புறுதி காப்பீட்டு கணக்கரின் சான்றிதழ்
123 - பொறுப்பு போதுமை சோதனை
124 - ஏற்பட்ட அறிக்கையிடப்பட்ட கோரிக்கைகள் தொடர்பான சான்றிதழ்
125 - சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
128 - நிதி நிலை தொடர்பான கூற்று
130 - இலாபம் அல்லது நட்டம் அல்லது ஏனைய முழுமையான வருமானம் தொடர்பான கூற்று
132 - உரிமை முதலில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று
138 - காசோட்டம் தொடர்பான கூற்று
140 - பிரிவு சார்ந்த மீளாய்வு: நிதி நிலை கூற்று
142 - பிரிவு சார்ந்த மீளாய்வு: வருமானம் தொடர்பான கூற்று
144 - நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்

LEADER-SHIP

தலைமைத்துவம்

எழுத்திலுள்ள எமது உபாயமுறைகளை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு தொலைநோக்கு பார்வையுடைய தலைமைத்துவம் முக்கிய அம்சமாகும்.

கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை

பொது

உறுப்பினர்களின் வருடாந்த அறிக்கை மற்றும் கம்பனியின் 2021 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடத்திற்கான கணக்காய்வு நிதி கூற்றுகள், குழு மற்றும் கணக்காய்வாளர்கள் அறிக்கை அதாவது அத்தகைய நிதிக் கூற்றுகள் 2007, 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப காணப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் துறையின் ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டவை மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் கூட்டுறவு ஆளுகையின் சிறப்பான நடைமுறைகள் ஆகியவற்றை சமர்ப்பிப்பதில் கம்பனியின் பணிப்பாளர்கள் சபை மகிழ்ச்சியடைகின்றது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக 99.97% ஆன பங்குகள் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

லிட்ரொ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவிட் லிமிடட், Canowin Hotels and Spas (Pvt) Ltd மற்றும் முகாமைத்துவ சேவைகள் ரக்சனா பிரைவட் லிமிடட் ஆகியன கம்பனிக்கு சொந்தமான முழுமையான துணைக் கம்பனிகளாகும். லிட்ரொ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவிட் லிமிடட்டின் 99.94% ஆன பங்குகளும் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபன பீஎல்சி இன் 51.34% பங்குகளும் இகாகூ இடம் காணப்படுகின்றன மற்றும் Canowin Hotels and Spas (Pvt) Ltd இன் 52.05% ஆன பங்குகள் இகாகூ இடம் காணப்படுகின்றன.

கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியன "ரக்'ன மந்திரய", இல. 21, வொக்ஸ்ஹோல் வீதி, கொழும்பு 02 இல் காணப்படுகின்றது.

2022 மே 24 இல் பணிப்பாளர்கள் சபையினால் இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குழு மற்றும் கம்பனியின் பிரதான செயற்பாடுகள்

கம்பனியானது ஆயுள் மற்றும் ஆயுள் சாராத காப்புறுதி (பொது காப்புறுதி) வியாபாரங்களை இலங்கையில் மேற்கொண்டு வருகின்றது. மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளில் எத்தகைய பாரிய மாற்றங்களும் இல்லை.

லிட்ரொ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவிட் லிமிடட்டின் பிரதான செயற்பாடு திரவ பெற்றோலிய வாயுவை களஞ்சியப்படுத்தி (LPG) வைப்பதுடன் அதேவேளை லிட்ரொ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவிட் லிமிடட்டானது LPG வீட்டு பாவனை எரிவாயு, வர்த்தக எரிவாயு ஆகியவற்றை மொத்தமாகவும் விற்பனை செய்கின்றது. லங்கா ஹொஸ்பிடல்ஸ் கூட்டுத்தாபன பீஎல்சி ஆனது சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்குகின்றது. முகாமைத்துவ சேவைகள் ரக்'னா பிரைவட் லிமிடட்டானது சம்பள முகாமைத்துவத்தை மேற்கொள்கின்றது. Primary business of Canwill Holdings (Pvt) டுவன ஹோட்டல் கருத்திட்டங்களில் முகாமைத்துவம் / முதலீடுகளை மேற்கொள்கின்றது. Canowin Hotels and Spas (Pvt) Ltd ஆனது அடிப்படையில் தெற்கு அதிவேகப் பாதையில் காணப்படுகின்ற வியாபார நிலையங்களை முகாமைத்துவம் செய்கின்றது.

ஏற்புடைய சட்ட வரைவு திட்டங்களுக்கு ஏற்ப மேற்படி வியாபாரங்களில் கம்பனி ஈடுபட்டு வருகின்றது.

நிதி ரீதியான அறிக்கையிடல் தொடர்பில் பணிப்பாளர்களது பொறுப்புகள்

கம்பனியின் நிதிக் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் மற்றும் அதனது நடவடிக்கைகள் உண்மையாகவும் நேர்மையாகவும் பிரதிபலிக்கின்றன என்பதைக் காட்டுவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருக்கின்றனர். பணிப்பாளர்களது பொறுப்பாக வடிவமைத்தல், நடைமுறைப்படுத்தல், உள்ளக கட்டுப்பாடுகளை பேணுதல், நிதி ரீதியான கூற்றுக்களை தயார் செய்து நேர்மையாக சமர்ப்பித்தல் அவை எத்தகைய பொருள் ரீதியான பிழையான நடவடிக்கைகளுக்கும் உட்படாமம் இருத்தல் என்பதை உறுதி செய்தல், எத்தகைய மோசடிகளோ அல்லது பிழைகளோ இல்லை என்பதை உறுதி செய்தல் கணக்கீட்டு கொள்கைகளை தெரிவு செய்து ஏற்றுக் கொள்ளுதல், கணக்கீட்டு கொள்கையானது நியாயபூர்வமான நிலையில் காணப்படும் விதத்தில் உருவாக்குதல் போன்றன.

நிதி நிலை தொடர்பான கூற்றுக்கள், இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றுகள், ஏனைய பூரணத்துவமிக்க வருமானம், உரிமை முதல் மாற்ற கூற்றுகள், காசோட்ட கூற்றுகள், குறிப்பிடக்கூடிய கணக்கீட்டு கொள்கைகள், வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறிப்புகள் ஆகியன இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள் மற்றும் கணக்கீட்டு தராதரங்கள், 2020 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் துறை ஒழுங்குவிதிகள், திருத்தப்பட்டவை, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் ஆகியவற்றிற்கு ஏற்ப காணப்படுகின்றன என்ற கருத்தை பணிப்பாளர்கள் கொண்டிருக்கின்றனர்.

நிதி கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை

2021.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட லங்கா கணக்கீட்டு தராதரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. பிரதான நிதி அதிகாரி மற்றும் பணிப்பாளர்களினால் கையொப்பமிடப்பட்ட குழு மற்றும் கம்பனியின் நிதி ரீதியான கூற்றுகள் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. 2021.12.31 இல் உள்ளவாறு கம்பனியின் நிதி நிலை மற்றும் அவ்வருடத்தில் அத்திகதியில் நிறைவு பெற்ற செயலாற்றுகைகள் போன்றன தொடர்பான உண்மையான நேர்மையான கருத்தை இந்த நிதிக் கூற்றுகள் மற்றும் குறிப்புகள் ஆகியன தெரிவிக்கின்றன.

கணக்காய்வாளரின் அறிக்கை

இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வெளிநிலை கணக்காய்வாளராக பணியாற்றுகின்றார். மேலும் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் அரசியலமைப்பின் 154(4) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2021.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கம்பனியின் நிதிக் கூற்றுகளுக்கான வருடாந்த கணக்காய்வில் தலைமை அதிபதிக்கு உதவும் முகமாக தகைமை படைத்த கணக்காய்வாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் ஆநளளசள டீனுழு பங்காளர்கள், பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஆகியன நியமிக்கப்பட்டன.

பணிப்பாளர்கள் சபையின் அறிக்கையில் முக்கிய பாகமாக திகழும் நிதிக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கை இந்த வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

கணக்காய்வு மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தேவைகள் தொடர்பான கட்டணங்கள்

மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் கணக்காய்வு கட்டணங்களாகவும் ஏனைய சம்பந்தப்பட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட்ட கட்டணங்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இப்பந்திகளில் தெரிவிக்கப்பட்ட காரணங்களை தவிர ஏனைய எந்த விதமான தொடர்பு முறைகளும் கணக்காய்வாளர்களுக்கு இல்லை என்பதை பணிப்பாளர்கள் அறிந்துள்ளனர்.

	2021	2020
	Rs. 000	Rs. 000
சட்ட ரீதியான கணக்காய்வு கட்டணம்	5,198	5,602
கணக்காய்வு சாராத	-	-

கணக்கீட்டு கொள்கைகள்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான விபரங்கள வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுபாட்டு முறைகள்

ISO 31000 இடர் வரைவுச் சட்டகத்திற்கு ஏற்பவும் மற்றுடம் கூட்டுறவு ஆளுகை விதிமுறைகளின் தேவைப்பாடுகளுக்கு ஏற்பவும் பூரணத்துமிக்க இடர் இனங் காணல், அளவீடு மற்றும் தணிப்பு செயன்முறைகள் ஆகியவற்றை கம்பனியின் சபை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவம் ஆகியன செயற்படுத்தியுள்ளன. குறிப்பிடப்பட்ட செயன்முறைகள் தொடர்பான விரிவான பார்வையொன்று தெளிவாக தொழில்முயற்சி இடர் முகாமைத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காத்திரமான உள்ளக கட்டுப்பாட்டு கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை கம்பனி நடைமுறைப்படுத்தியதுடன் அத்தகைய செயன்முறைகள் கம்பனியின் உள்ளக கணக்காய்வு திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டன. கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறையை கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு மேற்பார்வை செய்கின்றது.

மீளாய்விற்கு உட்பட்ட வருடத்திற்கான உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் ஆகியவற்றின் வினைத்திறன் தொடர்பில் கம்பனி திருப்தியடைகின்றது.

தொடர்ந்து செல்லும் முறைகள்

நிதி நிலை, செயலாற்றுகை, காசோட்டம், ஒழுங்குவிதி மற்றும் சட்ட ரீதியான காரணிகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்தில் தனது தொழிற்பாடுகளை தொடர்வதற்கான போதியளவு வளங்கள் குழுவிடமும் கம்பனியிடமும் காணப்படுகின்றன என்பது தொடர்பில் பணிப்பாளர்கள் சபை திருப்தியடைகின்றது.

அதன் அடிப்படையில் நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் செயன்முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

விற்பனை புறழ்வு/ மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் (GWP)

கம்பனியின் மொத்த விற்பனை புறழ்வாக ரூபாய் 64,662 மில்லியன் ஆகும். 2020 உடன் ஒப்பிடுகையில் அவ்வருடத்தில் இத்தொகை 52,614 மில்லியன் ஆகும். 2021 ஆம் ஆண்டில் மொத் புரீ ஆனது ரூபாய் 43,231 மில்லியன் ஆகும். இதில் ஆயுள் காப்புறுதி மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணம் ரூபாய் 21,976 மில்லியன் மற்றும் ஆயுள் சாராத காப்புறுதி மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணம் ரூபாய் 21,255 மில்லியன் ஆகியன உள்ளடங்குகின்றன. 2020 ஆம் வருடத்திற்கான அறிக்கையிடப்பட்ட மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணத்தின் பெறுமதி ரூபாய் 39,421 மில்லியன் ஆகும். இதில் ஆயுள் காப்புறுதி எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் ரூபாய் 19,258 மில்லியன் மற்றும் ஆயுள் சாராத காப்புறுதி மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் ரூபாய் 20,163 மில்லியன் ஆகும் (கடந்த வருடத்திற்கானது). கம்பனியினால் அடையப்பட்ட மொத்த புரீ தொடர்பில் பகுப்பாய்வு செய்யப்பட்ட விவரமான தகவல்கள் நிதிக் கூற்றுகளில் தரப்பட்டுள்ளன.

நிதி பெறுபேறுகள் மற்றும் பொருத்தப்பாடுகள்

	2021	2020
	Rs. 000	Rs. 000
வரிக்கு முன்னரான இலாபம் (PBT)	11,725,433	7,971,782
வருமான வரி செலவுகள்	1,684,297	2,183,248
வரிக்கு பின்னரான இலாபம்	10,041,136	5,788,533
ஏனைய பூரணத்துமிக்க வருமானம்	704,012	(368,153)
தேய்மானம் தொடர்பான கடந்த வருட சீர்செய்தல்கள்	-	(182)
வருமான ஒதுக்கங்கள் ஏனைய பொறுப்புகள்	-	(118,402)
முன் கொண்டுவரப்பட்ட பொருத்தமற்ற இலாபம்	29,913,401	27,447,383
காணிகளை விற்பனை செய்தமை தொடர்பான மீள் மதிப்பீடு விபரங்கள்	-	5,182
ஒதுக்கீட்டுக்காக காணப்படும் இலாபங்கள்	40,658,549	32,754,362
செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்	899,603	695,693
ஆயுள் காப்புறுதியிலிருந்து பங்காளர் தொடர்பான விபரங்கள்	4,983,788	2,145,273
முன் கொண்டுவரப்பட்ட ஒதுக்கப்படாத இலாபம்	34,775,158	29,913,401

பங்குலாபங்கள்

2021 ஆம் ஆண்டு நிதி வருடத்திற்கான இடைக்கால பங்குலாபமாக ரூபாய் 1.26 ஒரு பங்கிற்காக சபை பிரகடனம் செய்தது (மொத்தமாக ரூபாய் 755,676,432). மேலும் இறுதி பங்குலாபமாக ரூபாய் 1.26 இனை ஒரு பங்கிற்காக பணிப்பாளர்கள் சபை விதப்புரை செய்தது

கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் வருடாந்த அறிக்கை

(மொத்தமாக 755,676,432). கம்பனியின் சாதாரண பங்குகளிலிருந்து காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்காக செலுத்தப்பட்டது, இது 2022 ஜூன் வரையிலாகும்.

இங்கு குறிப்பிடப்பட்ட இறுதியாக பிரகடனப்படுத்தப்பட்ட பங்குலாபங்களுக்காக 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் கீழ் கடனிறுக்கும் ஆற்றல் தொடர்பில் கம்பனி திருப்தியடைவதாக பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தினர். மேலும் கணக்காய்வாளர்களிடமிருந்து கடனிறுக்கும் ஆற்றல் சான்றிதழ்களும் பெறப்பட்டன.

நன்கொடைகள்

2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1.04 மில்லியன் ரூபாய்களை கம்பனி நன்கொடையாக கொடுத்தது.

வரி விதிப்பிற்கான ஏற்பாடுகள்

கம்பனியின் வரி நிலைமைகள் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுகளில் தரப்பட்டுள்ளன.

ஒதுக்கங்கள்

வருட காலப் பகுதிக்கான ஒதுக்கங்களின் நகர்வு தொடர்பான விபரங்கள் "உரிமை முதல் கூற்றுகளில் மாற்றங்கள் தொடர்பான கூற்றில்" தரப்பட்டுள்ளது.

காப்புறுதிப் பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

ஏற்பட்ட கோரிக்கைகள் தொடர்பான ஏற்பாடுகள் ஆனால் அறிக்கையிடப்படவில்லை (IBNR) மற்றும் ஏற்பட்ட கோரிக்கைகள் ஆனால் போதியளவு அறிக்கையிடப்படவில்லை. IBNR இது ஆயுள் காப்புறுதி சாராதவைகளுக்காகவும். இவை உள்ளடங்கலாக ஈட்டப்படாத காப்புறுதிக் கட்டணங்கள் மற்றும் கோரிக்கை நிலுவைகள் உள்ளடங்கலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக பணிப்பாளர்கள் நியாயமான சகல படிமுறைகளையும் மேற்கொண்டுள்ளனர். IBNR மதிப்பீட்டு செயன்முறைகள் மற்றும் IBNER ஒதுக்கங்கள் செயன்முறைகளுக்காக சுயாதீன காப்பீட்டு கணக்கர் ஒருவரை பணிப்பாளர்கள் ஆலோசித்துள்ளனர். இவர்களது அறிக்கையும் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

LKAS 19 ஊழியர் நன்மைகளில் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சுயாதீன காப்பீட்டு கணக்காளர் ஒருவரால் பணிக் கொடை சார்ந்த பொறுப்புகளும் மதிப்பிடப்பட்டுள்ளன.

அறிக்கையிடும் திகதியில், நிதிக் கூற்றுகளில் போதாமை ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை என்பதை பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

பணிப்பாளர்கள மற்றும் அதிகாரிகள் காப்புறுதி

பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள் பொறுப்பு காப்புறுதி காப்பீட்டு பத்திரம் மூலம் உள்ளடக்கப்படுகின்றனர்.

முதலீடுகள்

2021.12.31 இல் கம்பனியில் காணப்பட்ட முதலீடுகள் தொகை ரூபாய் 234,571 மில்லியன் ஆகும் (2020 இல் ரூபாய் 205,746 மில்லியன்). இது தொடர்பிலான விரிவான விபரங்கள் தனித்தனியாக நிதிக் கூற்றுகளில் தரப்பட்டுள்ளன.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

வெள்ளங்கமில்லா சொத்துக்களின் சந்தை பெறுமதி

காணி மற்றும் கட்டிடங்களை தவிர ஏனைய சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களை பதிவு செய்து கொள்வதற்கு கணக்கீடுகளுக்காக கம்பனியானது செலவு முறையை பயன்படுத்துகின்றது. சொத்துக்களை கம்பனியின் கொள்கையின் பிரகாரம் 3 வருடங்களுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் 2021 ஆம் நிதி ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் ஆகியன M/S Trustus Business Solutions & Advisory Services (Pvt) Ltd. இனால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டது. இத்தகைய சொத்துக்களானது பகிரங்க சந்தை பெறுமானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. அத்தகைய மீள் மதிப்பீடுகளின் பெறுபேறுகள் நிதிக் கூற்றுக்களில் 2021.12.31 இல் செல்லுபடியாகும் வகையில் கூட்டிணைக்கப்பட்டன.

அறிக்கையிடல் திகதிக்கு பின்னராக ஏற்பட்ட நிகழ்வுகள்

நிதிக்கூற்றுகள் தொடர்பான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டவையை தவிர வேறு நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய அல்லது சீர் செய்யப்பட வேண்டிய அறிக்கையிடப்பட்ட திகதிக்கு பின்னர் எத்தகைய பொருள் சார்ந்த நிகழ்வுகளும் ஏற்படவில்லை.

சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் (டுமுயுளு) 24 இன் பிரகாரம் சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல் வாங்கல்கள், சம்பந்தப்பட்ட தரப்பு வெளியிடல்கள் ஆகியன நிதிக் கூற்றுக்களை தயாரிக்கப்படுகின்ற பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவை இந்த வருடாந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

கம்பனியுடனான ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களது நலன்கள்

ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களது நலன்கள் நிதித் கூற்றுகளில் தரப்பட்டுள்ளன. இத்தகைய நலன்கள் பற்றி பணிப்பாளர்களது கூட்டங்களின் பொழுது முழுமையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கம்பனியின் எத்தகைய பங்குகளையும் பணிப்பாளர்கள் வைத்திருக்கவில்லை.

பணிப்பாளர்களுக்கான ஊதியங்கள்

பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் மற்றும் வருட காலப் பகுதியின் பொழுது செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஆகியன ரூபாய் 5.1 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டில் இது ரூபாய் 10.2 மில்லியன் ஆகும்.

குறிப்படப்பட்ட மூலதனம்

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு ஏற்ப 2021 டிசம்பர் 31 இல் கம்பனியின் குறிப்பிடப்பட்ட மூலதனமானது ரூபாய் 6000 மில்லியன் ஆகும். 2021.12.31 இல் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக 99.97% ஆன பங்குகள் திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

சட்டரீதியான கொடுப்பனவுகள்

அரசாங்க, இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (IRCSL) மற்றும் ஊழியர்கள் தொடர்பான சகல விதமான சட்ட ரீதியான கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் வழங்கப்பட்டன என்பதை பணிப்பாளர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப திருப்தியடைகின்றனர்.

தொட்டு உணரமுடியா சொத்துக்கள்

2021.12.31 ஆம் திகதியில் தொட்டு உணர முடியா சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கம்பனியின் நிதிக் கூற்றுகளில் பதியப்பட்டுள்ளது.

சுற்றாடல்

சம்பந்தப்பட்ட சுற்றாடல் சட்டங்களின் அடிப்படையில் கம்பனி தொழிற்பட்டு வருகின்றது. எத்தகைய பாதகமான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி நடத்தல்

சுயாதீன கணக்காய்வாளர் அறிக்கையில் வேறு விதமாக வெளிப்படுத்தப்பட்டால் அன்றி நிதியாண்டு காலப் பகுதியின் பொழுது ஏற்புடைய சகலவிதமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இணங்கவே கம்பனி நடந்து கொண்டது. கம்பனியின் சகலவிதமான இணக்கப்பாடு சார்ந்த தொழிற்பாடுகள் பற்றி கம்பனியின் இணக்கப்பாட்டு திணைக்களம் மேற்பார்வைகளை செய்வதுடன் இது தொடர்பில் கணக்காய்வு மற்றும் இணக்கப்பாட்டு குழு, இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றுக்கு அறிவிக்கின்றது. அத்தோடு காலப் பகுதிக்கான இணக்கப்பாட்டு அறிக்கைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கு ஒப்புதல் அளித்தல்

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகளானது சபையினால் 2022 ஏப்ரல் 28 ஆம் திகதி ஒப்புதலளிக்கப்பட்டது.

அறிக்கையிடும் திகதியில் பணிப்பாளர்கள் சபையில் பின்வருவோர் இருந்தனர்.

திரு. ஹேரத் முதலியன்சலாகே விஜித ஹேரத்
திரு. அனில் கொஸ்வத்த
திரு. சிங்களகே அருண நி'ாந்த தயானந்த
திரு. மீகஹகெதர பிரஸாந்த அனில் குமார
திருமதி. ஜயங்கனி சுரேகா அலஸ்
திரு. வில்வல ஆரச்சிகே சமந்த உபனந்த
திரு. ரனதுன் ஆரச்சிகே லக்மினி உதய குமார
(திரு. விமலேந்திரராஜா அவர்களுக்கு பதிலாக சபையின் திறைசேரி பிரதிநிதியாக 2022 மார்ச் 14 இலிருந்து செல்லுபடியாகும் வகையில் திர. ஆர்.ஏ. லக்மினி உதய குமார சபைக்கு நியமிக்கப்பட்டார்.)

வருடாந்த பெதுக் கூட்டம்

வருடாந்த பொதுக் கூட்டமானது 2022 ஜூன் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கம்பனியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், இல. 21, வொக்ஸ்வோல் வீதி, கொழும்பு 02 இல் காணப்படுகின்றது அல்லது கோவிட்-19 பெருந்தொற்றைக் கருத்திற் கொண்டு இது நிகழ்நிலையாக நடைபெறும்.

அறிக்கையின் உள்ளக்கடங்களை ஏற்றுக் கொள்ளல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 168(1) (கே) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் பணிப்பாளர்கள் சபை இத்தாள் இவ்வறிக்கையிலுள்ள உள்ளடக்கங்களை ஏற்றுக் கொள்கின்றனர்.

சபையின் உத்தரவின் பிரகாரம்

கம்பனி செயலாளர்கள்
பணிப்பாளர்கள் சபை சார்பாக

பொறியியலாளர் விஜித ஹேரத்
பணிப்பாளர்

டப்ளியு.ஏ. சமந்த உபனந்த
பணிப்பாளர்

2022 மே 24

பணிப்பாளர்களது பொறுப்பு தொடர்பான கூற்று

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க 150 ஆம் பிரிவு, 152 ஆம் பிரிவு, 153 ஆம் பிரிவு கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பது தொடர்பான பணிப்பாளர்களது பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பில் பின்வரும் கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதிக் கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர்களின் பொறுப்புகள் பற்றி இவ்வருடாந்த அறிக்கையின் கணக்காளர்கள் அறிக்கையில் தெவிக்கப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனியின் நிதி ரீதியான கூற்றுகளை உறுதிப்படுத்துவதற்கும் கம்பனியின் பணிப்பாளர்கள் பொறுப்பாக இருக்கின்றனர். அத்தோடு கம்பனியின் உண்மையான நேர்மையான நிலைமைகளை புலப்படுத்துவதுடன் ஐந்தொகை திகதியில் இருக்கின்றவாறு இலாபம் அல்லது நட்டம் அல்லது வருமானம் அல்லது செலவுகள் பற்றிய விபரங்களை எது ஏற்புடையதோ அதன் பிரகாரம் தெரிவித்தல் வேண்டும். ஐந்தொகை திகதியில் நிறைவு பெறுகின்ற கணக்கீட்டின் பிரகாரம் இதனை தெரிவித்தல் வேண்டும்.

கணக்கீட்டு தராதரங்கள் (SLFRS மற்றும் LKAS), 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தின் இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தராதரங்கள், மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதி செய்வது அவசியமாகும்.

பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டு அறிவார்ந்த தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் ஆகியன நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது பிரயோகிக்கப்பட்டன என்பதை பணிப்பாளர்கள் உறுதி செய்கின்றனர். மேலும் எதிர்காலத்தின் கம்பனியின் தொழிற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு போதியளவு வளங்கள் கம்பனியிடம் காணப்படுகின்றன என்ற நியாயபூர்வமான எதிர்பார்ப்புகளும் பணிப்பாளர்களிடம் காணப்படுகின்றன. ஆகவே நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ச்சியாக முன்னெடுக்க முடியும் என்ற முறை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், கம்பனிகள் சட்டத்தின் 166 (1) ஆம் பிரிவு மற்றும் 167 (1) ஆம் பிரிவு ஆகியவற்றினால் தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் உரிய நேரத்தில் இந்த வருடாந்த அறிக்கையை தயாரித்ததாகவும், கம்பனியின் சகல பங்காளர்களுக்கும் அதன் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும் வரையறை செய்யப்பட்ட காலப் பகுதியினுள் அதன் மென்பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக தமது ஆர்வத்தை பங்காளர்கள் தெரிவித்ததாகவும் பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது.

பணிப்பாளர்களின் அறிவுக்கு எட்டிய வகையில் சகல விதமான வரிகள், சட்ட ரீதியான விதிப்பனவுகள், கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய கடப்பாடுகள், ஊழியர்கள் சார்பாக கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புகள் மற்றும் வரிகள் மற்றும் சகல விதமான அறியப்பட்ட சட்ட ரீதியான நிலுவைகள் ஆகியன ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டுள்ளன அல்லது அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர்கள் உறுதிப்படுத்துகின்றன.

மேலும் காப்பீட்டு கணக்காளர்களிடமிருந்து அறிக்கையொன்றினை பணிப்பாளர்கள் பெற்றுள்ளனர். இதில் காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய போனஸ் மற்றும் ஆயுள் காப்புறுதிகளை பெற்றுக் கொண்ட பங்காளர்களுக்கு தொடர்பில் காணப்படும் மேலதிக தொகைகள் ஆகியன தீர்மானிக்கப்பட்டன. கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பணிப்பாளர்கள் தமது கடமைகளை நிறைவேற்றினர் என்ற கருத்தை கொண்டிருக்கின்றனர்.

சபையின் உத்தரவின் படி.

வரையறுக்கப்பட்ட என் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்கெட்டேரியஸ் (தனியார்) நிறுவனம்
கம்பனியின் செயலாளர்கள்

2022 ஜூன் 07

பொறுப்புகள் தொடர்பான பிரதான நிதி அதிகாரியின் கூற்

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டின் கூற்றுகள் (கம்பனி) கம்பனியின் ஒருங்கிணைந்த நிதி கூற்றுகள், துணை கம்பனிகள் (குழு) ஆகியன பின்வரும் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

i. ICASL இனால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் தராதரங்கள் (SLFRS / LKAS)
ii. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
iii. 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் துறையின் ஒழுங்குவிதிகள், திருத்தப்பட்டவாறு

	ஆயுள் காப்புறுதி அல்லாதவை	ஆயுள் காப்புறுதி	சுகாதார பராமரிப்பு	சக்தி	ஏனையவை	அகற்றியவைகள்	மொத்தம்
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
சொத்துக்கள்							
நிதிசார் முதலீடுகள்	35,343,058	160,554,249	4,749,971	100,000	-	-	200,747,278
துணைக் கம்பனிகளில் முதலீடு	19,634,852	3,296,543	-	5,000,000	20,500,000	(48,431,395)	-
அமைப்புகளில் முதலீடு	198,673	-	-	-	-	-	198,673
சொத்துக்கள். பொறித்தொகுதி, உபகரணம்	12,639,695	97,939	4,718,257	20,835,636	27,099,981	-	65,391,507
சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை	170,593	388,059	533,477	200,749	22,634	-	1,315,512
முதலீட்டு சொத்துக்கள்	1,942,600	-	-	-	863,880	-	2,806,480
குத்தகை சொத்துக்கள்	-	-	-	-	-	-	-
கட்புலனாகா சொத்துக்கள்	36,398	-	55,276	-	752	2,992,805	3,085,231
காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்கள்	-	1,637,187	-	-	-	-	1,637,187
வர வேண்டிய மீள் காப்புறுதி	2,090,082	811,913	-	-	-	-	2,901,995
வரவேண்டிய காப்பீட்டுக் கட்டணம்	7,470,356	507,391	-	-	-	-	7,977,747
பிற்போடப்பட்ட சொத்துக்கள்	-	-	-	384,485	206	-	384,691
ஏனைய சொத்துக்கள்	1,044,622	3,539,443	1,488,988	4,725,720	2,040,611	(1,274,182)	11,565,202
பிற்போடப்பட்ட செலவுகள்	483,822	-	-	-	-	-	483,822
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள்	3,137,996	13,782,374	453,898	8,860,650	1,143,947	-	27,378,865
மொத்த சொத்துக்கள்	84,192,747	184,615,098	11,999,867	40,107,240	51,672,011	(46,712,772)	325,874,190
பொறுப்புகள் மற்றும் உரிமை முதல்							
பொறுப்புகள்							
காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் - ஆயுள்	-	155,788,928	-	-	-	-	155,788,928
காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் - ஆயுள் சாராதவை	20,879,547	-	-	-	-	-	20,879,547
குத்தகை பொறுப்புகள்	17,602	450,308	248,041	220,545	190	-	936,686
செலுத்த வேண்டிய மீள் காப்புறுதி	1,773,196	1,095,095	-	-	-	-	2,868,290
தற்போதைய வரி பொறுப்புகள்	427,587	1,257,284	265,224	264,374	1,873	-	2,216,343
பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்	3,114,782	-	509,403	769,509	89,998	-	4,483,692
ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள்	1,000,561	917,180	277,776	166,890	161,112	-	2,523,520
ஏனைய பொறுப்புகள்	3,170,777	3,080,779	897,957	16,473,942	3,929,309	(273,899)	27,278,863
நிதி ரீதியான பொறுப்புகள்	325,632	213,651	482,385	116,958	3,396,367	(1,000,272)	3,534,721
மொத்த பொறுப்புகள்	30,709,684	162,803,225	2,680,786	18,012,218	7,578,849	(1,274,171)	220,510,591
உரிமை முதல்							
குறிப்பிடப்பட்ட மூலதனம்	6,000,000	-	2,671,543	1,947,109	41,870,087	(46,488,739)	6,000,000
ஒழுங்குவிதிகளினால் மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் ஒன்றிலிருந்தான மிகை தொகை	-	98,237	-	-	-	-	98,237
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	9,203,609	71,673	1,330,581	5,099,559	5,663,461	(2,954,655)	18,414,228
விற்பனை ஒதுக்கங்களாக காணப்படுபவை	2,748,526	3,260,333	-	-	-	-	6,008,859
வருமான ஒதுக்கங்கள்	35,530,928	18,381,630	5,316,957	15,048,354	(3,440,386)	(5,120,871)	65,716,612
கட்டுப்பாடற்ற வட்டி	-	-	-	-	-	9,125,663	9,125,663
மொத்த உரிமை முதல்	53,483,063	21,811,873	9,319,081	22,095,022	44,093,162	(45,438,602)	105,363,599
மொத்த பொறுப்புகள் மற்றும் உரிமை முதல்	84,192,747	184,615,098	11,999,867	40,107,240	51,672,011	(46,712,773)	325,874,190

2020						
ஆயுள் காப்புறுதி அல்லாதவை	ஆயுள் காப்புறுதி	சுகாதார பராமரிப்பு	சக்தி	ஏனையவை	அகற்றியவைகள	மொத்தம்
ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
31,693,115	138,614,218	3,106,994	100,000	-	-	173,514,327
19,634,852	1,296,543	-	5,000,000	18,500,000	(44,431,395)	-
164,125	-	-	-	-	-	164,125
10,781,351	86,004	4,757,114	18,859,283	22,268,479	-	56,752,233
172,755	458,820	551,719	408,772	22,982	-	1,615,048
1,719,966	-	-	-	854,614	-	2,574,580
-	-	-	-	-	-	
37,172	-	56,532	-	781	2,992,805	3,087,290
-	1,734,723	-	-	-	-	1,734,723
1,692,118	488,859	-	-	-	-	2,180,977
6,202,338	531,495	-	-	-	-	6,733,833
-	-	-	-	1,562	-	1,562
637,709	3,877,779	1,118,908	4,206,856	1,251,067	(1,758,788)	9,333,531
478,162	-	-	-	-	-	478,162
3,186,885	12,963,071	290,657	14,702,187	403,602	-	31,546,402
76,400,548	160,051,512	9,881,924	43,277,102	43,303,087	(43,197,378)	289,716,794
-	137,129,036	-	-	-	-	137,129,036
18,866,402	-	-	-	-	-	18,866,402
17,474	510,975	272,170	394,141	217	-	1,194,977
1,059,939	615,341	-	-	-	-	1,675,280
919,374	1,113,679	47,914	220,416	4,243	-	2,305,626
3,193,361	-	1,052,709	3,333,001	72,943	-	7,652,015
1,332,256	1,221,234	294,427	187,860	181,168	-	3,216,945
3,528,994	3,260,971	785,047	12,358,676	2,974,396	(714,098)	22,193,986
281,487	172,510	260,343	167,007	2,430,615	(1,044,579)	2,267,383
29,199,287	144,023,746	2,712,610	16,661,101	5,663,582	(1,758,677)	196,501,651
6,000,000	-	2,671,543	1,947,109	37,870,087	42,488,740	6,000,000
-	98,237	-	-	-	-	98,237
7,301,747	57,378	1,093,047	3,349,535	4,063,395	(2,752,503)	13,112,599
2,819,764	2,884,888	-	-	-	-	5,704,652
31,079,750	12,987,262	3,404,724	21,319,357	(4,293,977)	(5,182,630)	59,314,486
-	-	-	-	-	8,985,168	8,985,168
47,201,261	16,027,765	7,169,314	26,616,001	37,639,505	41,438,702	93,215,143
76,400,548	160,051,512	9,881,924	43,277,102	43,303,087	43,197,378	289,716,794

பிரிவு ரீதியான மீளாய்வு: நிதி நிலை தொடர்பான கூற்று

டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கானது	2021						
	ஆயுள் காப்புறுதி அல்லாதவை	ஆயுள் காப்புறுதி	சுகாதார பராமரிப்பு	சக்தி	ஏனையவை	அகற்றியவைகள்	மொத்தம்
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	21,255,023	21,975,988	-	-	-	(167,172)	43,063,839
மொத்த சம்பாதிக்காத காப்பீட்டுக் கட்டணங்கள் ஒதுக்கங்களில் மாற்றம்	(778,671)	-	-	-	-	-	(778,671)
மொத்த ஈட்டப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	20,476,352	21,975,988	-	-	-	(167,172)	42,285,168
மீள் காப்புறுதியாளர்களுக்காக இணங்கப்பட்ட தொகை	(4,029,008)	(479,754)	-	-	-	-	(4,508,762)
சம்பாதிக்காத மீள் காப்புறுதி கட்டுப்பணம் தொடர்பான ஒதுக்க மாற்றம்	453,247	-	-	-	-	-	453,247
தேறிய ஈட்டப்பட்ட காப்புறுதிக் கட்டணம்	16,900,591	21,496,234	-	-	-	(167,172)	38,229,653
ஏனைய தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம்	-	-	10,033,567	53,925,156	112,010	(1,927,695)	62,143,038
மொத்த வருமானம்	16,900,591	21,496,234	10,033,567	53,925,156	112,010	(2,094,867)	100,372,691
நன்மைகள் மற்றும் இழப்புகள்	-						
தேறிய நன்மைகள் மற்றும் கோரிக்கைகள்	(10,206,589)	(9,978,828)	-	-	-	-	(20,185,417)
ஒப்புறுதி மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவுகள்	(653,821)	(2,566,486)	-	-	-	-	(3,220,308)
ஒப்பந்த பொறுப்புகளில் மாற்றம் - ஆயுள் நிதி		(18,849,187)	-	-	-	-	(18,849,187)
உப கம்பனிகளது சேவை தொடர்பான செலவு			(5,270,035)	(59,869,936)	(27,701)	1,745,511	(63,422,161)
மொத்த நன்மைகள் மற்றும் இழப்புகள்	(10,860,410)	(31,394,501)	(5,270,035)	(59,869,936)	(27,701)	1,745,511	(105,677,072)
ஏனைய வருமானம்							
முதலீட்டு வருமானம்	3,404,457	19,988,041	252,324	580,484	77,325	(257,753)	24,044,878
கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்	-	76,441	-	-	-	-	76,441
தேறிய உணரப்பட்ட வருவாய்கள்	733,199	279,792	153,946	(541,584)	(345,830)	-	279,523
ஏனைய வருமானம்	518,162	737,827	137,071	85,019	1,951,764	(195,855)	3,233,988
	4,655,818	21,082,101	543,341	123,919	1,683,259	(453,608)	27,634,829
செலவுகள்							
ஏனைய தொழிற்பாடு மற்றும் முதலீடுகளுடன் தொடர்புடைய மற்றும் நிர்வாக செலவுகள்	(5,457,312)	(4,697,086)	(3,074,237)	(3,148,447)	(907,544)	592,422	(16,692,204)
வரிக்கு முன்னரான இலாபம்	5,238,687	6,486,748	2,232,636	(8,969,308)	860,024	(210,542)	5,638,243
வருமான வரி செலவுகள்	(181,339)	(1,502,959)	(21,122)	2,671,765	(23,626)	-	942,720
வரிக்கு பின்னரான இலாபம்/ பங்காளர்களுக்கான நிதிக்கு மாற்றம்	5,057,348	4,983,789	2,211,514	(6,297,543)	836,398	(210,542)	6,580,963

2020						
ஆயுள் காப்புறுதி அல்லாதவை	ஆயுள் காப்புறுதி	சுகாதார பராமரிப்பு	சக்தி	ஏனையவை	அகற்றியவைகள	மொத்தம்
ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
20,163,296	19,257,997	-	-	-	(155,023)	39,266,270
(1,548,103)	-	-	-	-	-	(1,548,103)
18,615,193	19,257,997	-	-	-	(155,023)	37,718,167
(3,133,728)	(413,574)	-	-	-	-	(3,547,302)
(119,430)	-	-	-	-	-	(119,430)
15,362,035	18,844,423	-	-	-	(155,023)	34,051,435
-	-	6,803,676	41,222,971	107,925	(1,628,843)	46,505,729
15,362,035	18,844,423	6,803,676	41,222,971	107,925	(1,783,866)	80,557,164
(7,786,220)	(7,986,076)	-	-	-	-	(15,772,296)
(864,830)	(2,131,963)	-	-	-	-	(2,996,793)
-	(16,118,705)	-	-	-	-	(16,118,705)
-	-	(3,941,721)	(37,719,891)	(20,973)	1,628,843	(40,053,742)
(8,651,050)	(26,236,744)	(3,941,721)	(37,719,891)	(20,973)	1,628,843	(74,941,536)
2,601,161	13,910,156	198,161	1,196,496	48,955	(200,000)	17,754,929
-	67,886	-	-	-	-	67,886
261,998	97,762	51,382	(326,613)	(72,604)	-	11,925
296,068	1,245,441	62,461	223,354	722,066	(1,008,574)	1,540,816
3,159,227	15,321,245	312,004	1,093,237	698,417	(1,208,574)	19,375,556
(5,047,880)	(4,779,473)	(2,763,598)	(3,159,840)	(913,151)	1,163,597	(15,500,345)
4,822,332	3,149,451	410,361	1,436,477	(127,782)	(200,000)	9,490,839
(1,179,071)	(1,004,178)	(25,366)	(332,718)	(19,177)	-	(2,560,510)
3,643,261	2,145,273	384,995	1,103,759	(146,959)	(200,000)	6,930,329

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

1. அறிக்கையிடும் நிறுவனம்

1.1 கூட்டாண்மை தகவல்கள்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டானது (உழஅியலெ/இகாகூ) வரையறுக்கப்பட்ட பொது பொறுப்புகள் கம்பனியாகும். இது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு காணப்படுகின்ற கம்பனியாகும். இந்த கம்பனியின் அல்லது குழுவின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது கொழும்பு மாவட்டத்தில் பிரதான வியாபாரத்தை முன்னெடுக்கும் இடமாக "ரக்'ன மந்திரய" இல. 21, வொக்சோல் வீதி, கொழும்பு - 02 இல் காணப்படுகின்றது.

2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறானதும் மற்றும் முடிவடைந்த ஆண்டுக்குமான குழுத்தின் திரட்டிய நிதிக் கூற்றுகள் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் (கூட்டாக குழுமம் எனவும் தனியாக குழும நிறுவனங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன). மற்றும் இக்குழுவில் அக்கறையுள்ள இணை நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. குழுமத்தில் காணப்படுகின்ற சகல கம்பனிகளின் நிதிக் கூற்றுகள் 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஒரு பொது நிதி வருடத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

தாய் கம்பனியின் 599,598,516 சாதாரண பங்குகளானது (99.97%) திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும் ஏனையவை கம்பனியின் தற்போதைய ஊழியர்கள் மற்றும் முன்னாள் ஊழியர்களுக்கு சொந்தமானதாக காணப்படுகின்றது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

1.2.1 குழுமம்/ கம்பனி

கம்பனியின் பிரதான செயற்பாடாக சகல வகையான காப்புறுதி வியாபாரங்களையும் பொறுப்பேற்று அவற்றை முன்னெடுத்துச் செல்வதாகும்.

1.2.2 துணை கம்பனிகள்

துணை கம்பனிகளின் பெயர்கள்	பிரதான செயற்பாடுகள்
லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோபரே'ன் பீஎல்சி	சுகாதார பராமரிப்பு மற்றும் ஆய்வு கூட சேவைகளை வழங்குதல்
லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்	திரவ பெற்றோலிய வாயுவை (LPG) இறக்குமதி செய்து செயன்முறைப்படுத்தி, களஞ்சியப்படுத்தி, விநியோகம் மற்றும் விற்பனையை மேற்கொள்ளுதல். அத்தோடு அதனோடு நேர்விளைவான சேவைகளையும் வழங்குதல்
லிட்ரோ கேஸ் டர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்	திரவ பெற்றோலிய வாயுவிற்கான பாரியளவில் களஞ்சிய வசதிகளை வழங்குதல்
கெனொவின் ஹோடல்ஸ் என்ட் ஸ்பாஸ் பிரைவட் லிமிடட்	வர்த்தக நோக்கங்களுக்காக வாடகை அடிப்படையில் இடங்களை வழங்குதல் மற்றும் விருந்தோம்பல் வியாபாரத்தில் ஈடுபடல்
கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்	பொழுதுபோக்கு துறையுடன் சார்ந்த முதலீட்டு மேம்பாடுகள், கம்பனி என்ற முறையில் துணை கம்பனிகளை கட்டுப்படுத்தி மேற்பார்வை செய்தல்
முகாமைத்துவ சேவைகள் ரக்'ன பிரைவட் லிமிடட்	இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன லிமிடட்டிற்கு சம்பளம் செலுத்துதல், முகாமைத்துவம் சார்ந்த சேவைகளை வழங்குதல்

2. தயார் செய்தமைக்கான அடிப்படைகள்

2.1 இணக்கப்பாடு கூற்று

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் துறை சட்டத்தின் 43 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு ஏற்ப இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் (LKASs/SLFRSs) ஆகியவற்றின் பிரகாரம் இந்த நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டன.

2022 ஏப்ரல் 28 ஆம் திகதி இந்த நிதிக்கூற்றுகளானது விநியோகத்திற்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

2.2 அளவீட்டிற்கான அடிப்படைகள்

கம்பனி மற்றும் குழுமம் ஆகியவற்றின் நிதிக் கூற்றுகளானது பின்வரும் முக்கிய விடயங்கள் தவிர்ந்த ஏனையவை வரலாற்று அடிப்படையிலான கிரய முறையில் தயாரிக்கப்பட்டன என்பதோடு அவை மாற்று முறை அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

- காப்பீடுகளை பெற்றுக் கொண்டவர்களது பொறுப்புகளானது காப்புறுதி கணக்கர் தீர்மானிக்கப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அளவிடப்படுகின்றது.
- வரையறை செய்யப்பட்ட நன்மை சார் கடப்பாட்டுக்கான பொறுப்புகளானது காப்புறுதி கணக்கரினால் பெறுமதியிடப்படுவதோடு வரையறை செய்யப்பட்ட நன்மை சார் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியென ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- காணி மற்றும் கட்டிடங்கள் ஆகியன நியாயப் பெறுதியில் மதிப்பிடப்படுகின்றன.
- வர்த்தகத்திற்காக ஒதுக்கப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் நியாய மதிப்பீட்டு அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றன.
- விற்பனைக்காக காணப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள் நியாய மதிப்பீட்டு அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.
- இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

நிதியியல் கூற்றுகளின் நிலைமையை குழுமமானது விரிவாக திரவத்தன்மை அடிப்படையில் முன்வைக்கின்றது.

2.3 தொழிற்பாடு மற்றும் சமர்ப்பண நாணயம்

நிதிக் கூற்றுகளாது இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்படுகின்றது. இதுவே குழுமத்தின் மற்றும் கம்பனியினது தொழிற்பாட்டு நாணயமாகும். வேறு விதமாக குறிப்பிடப்பட்டால் அன்றி சகல தொகைகளும் அண்மித்த 1000 ரூபாவில் தரப்

2.5 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை பிரயோகித்தல்

இந்த நிதிக் கூற்றுகளை தயாரிப்பது தொடர்பில் முகாமைத்துவமானது தீர்மானங்கள், மதிப்பீடுகள், ஊகங்கள் போன்ற கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகளை தாக்குகின்ற விடயங்களை பயன்படுத்தியது மற்றும் சொத்துக்கள் தொடர்பில் அறிக்கையிடப்பட்ட தொகைகள், பொறுப்புகள், வருமானம், செலவுகள் ஆகியவற்றுக்கும் இம்முறையையே பயன்படுத்தியது. இத்தகைய மதிப்பீடுகளிலிருந்து உண்மையான விளைவுகள் மாறுபடலாம்.

தொழில்வாண்மை மிக்க தீர்மானத்தின் பிரகாரம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என்பதன் அடிப்படையில் மதிப்பீடுகளும் அதனோடு தொடர்புடைய ஊகங்களும் மீளாய்வு செய்யப்பட்டன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான மீளாய்வுகள் எதிர்கால அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டன.

ஊகங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மை தொடர்பான மதிப்பீடுகள் ஆகியன நிதிக் கூற்றுகளில் அங்கீகரிக்கப்பட்ட தொகைகள் தொடர்பில் முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தவல்லன. இவை பின்வரும் குறிப்புகளுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 26 - வரையறை செய்யப்பட்ட நன்மை கடப்பாடுகள் தொடர்பான அளவீடு: பிதான காப்பீட்டு கணக்கர் ஊகங்கள்

குறிப்பு 5,8,13,14 மற்றும் 16 - நிதி சாரா சொத்துகள் மற்றும் நிதி சார் சொத்துக்கள் தொடர்பான தேய்மான ஏற்பாடுகள்: பிரதான ஊகங்கள்

குறிப்பு 23 - ஆயுள் காப்புறுதி தொடர்பான காப்பீட்டு கணக்கர் பெறுமானம் : பிரதான காப்பீட்டு கணக்கர் ஊகங்கள்

குறிப்பு 24 - ஐடீசே உள்ளடங்கலாக ஆயுள் காப்புறுதி சாராத காப்புறுதி ஏற்பாடுகள் தொடர்பான அளவீடுகள்

குறிப்பு 17 - பிற்போடப்பட்ட கையகப்படுத்தப்பட்ட செலவு தொடர்பான அளவீடு

குறிப்பு 05 - குறிப்பிடப்படாத கருவிகள் தொடர்பான உண்மை பெறுமதி அளவீடு மற்றும் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான நிதி முதலீடுகள் மூலமான உண்மை மதிப்பீடு.

குறிப்பு 8 மற்றும் 10 - சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் உண்மை மதிப்பீடு மற்றும் முதலீட்டு சொத்துக்கள்

உண்மை பெறுமதிகள் தொடர்பான அளவீடு

குழு கம்பனிகளின் கணக்கீட்டு கொள்கைகளின் எண்ணிக்கை மற்றும் வெளிப்பாடுகள் ஆகியவற்றுக்கு உண்மை பெறுமதிகளின் அளவீடுகள் அவசியப்படுகின்றன, இவற்றுள் நிதி ரீதியான மற்றும் நிதி சாராத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியனவும் உள்ளடங்குகின்றன.

உண்மைப் பெறுமதிகளை அளவீடு செய்வது தொடர்பில் தாபிக்கப்பட்ட கட்டுப்பாட்டு வரைவுச் சட்டகம் குழுவிடம் காணப்படுகின்றது. முக்கியமான பெறுமதி சார்ந்த விடயங்களானது கம்பனிக்கும் சம்பந்தப்பட்ட துணைக் கம்பனிகளின் கணக்காய்வு குழுவிற்கும் அறிக்கையிடப்படுகின்றன.

சொத்துக்களின் நியாயமான பெறுமதி அல்லது பொறுப்புகள் ஆகியன அளவிடப்படுகின்ற பொழுது, இயலுமான வரை கம்பனி அல்லது குழுமம் ஆனது அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளைப் பயன்படுத்துகின்றது. பெறுமதி கணிப்பீட்டு நுட்பங்களின் போது பயன்படுத்தப்பட்ட விடயங்களானது ஒழுங்குமுறையின் அடிப்படையில் மாறுபட்ட மட்டங்களில் நியாயமான பெறுமதிகள் வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன பின்வருமாறு-

- **மட்டம் 1** - ஒத்த வகையான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்காக காத்திரமான சந்தையில் குறிப்பிடப்பட்ட விலைகள் (சீர் செய்யப்படாதவைகள்)
- **மட்டம் 2** - குறிப்பிடப்பட்ட விலைகளைத் தவிர்ந்த ஏனைய உள்ளீடுகளானது மட்டம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் தொடர்பிலான அவதானத்தை மேற்கொள்ள முடியும்.
- **மட்டம் 3** - சொத்துக்கள் தொடர்பான உள்ளீடுகள் அல்லது பொறுப்புகள் அவதானிக்கக்கூடிய சந்தை தரவுகளை அடிப்படையாகக் கொள்ளாதவைகள் (அவதானிக்க முடியாத உள்ளீடுகள்)

காணப்படுகின்ற சந்தை நிலைமைகளின் அடிப்படையில் சுயாதீன தகைமை படைத்த மதிப்பீட்டாளரின் சிறப்பான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் தனது சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணம், மூலதன சொத்துக்கள் ஆகியவற்றின் நியாயபூர்வ பெறுமதியை குழுமம் மதிப்பீடு செய்கின்றது. இதுவே மதிப்பீட்டாளரினால் பரிசீலிக்கப்பட்ட தெரிவாகும். இது SLFRS இன் 13 நியாயபூர்வ பெறுமதி அளவீட்டின் தேவைப்பாடுகளை நிறைவேற்றக் கூடியதாக உள்ளது.

நியாயபூர்வமான பெறுமதியை அளவீடு செய்வது தொடர்பில் பயன்படுத்தப்பட்ட ஊகங்கள் தொடர்பான மேலதிக தகவல்களானது நிதிக் கூற்றுகளின் சம்பந்தப்பட்ட குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் மற்றும் பொருளாதார வீழ்ச்சிகள்

கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் மற்றும் பொருளாதார, அரசியல், சந்தை நிலைமைகள் ஆகியன நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது பயன்படுத்தப்பட்ட நிச்சயமற்ற தன்மை தொடர்பான மதிப்பீடுகளை அதிகரிக்கச் செய்தன. இந்த நிலைமையை முகாமைத்துவம் அறிந்திருந்ததன் காரணமாக மதிப்பீடுகளை மீளாய்வு செய்தல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றின் பொழுது இத்தகைய சூழ்நிலைகளை பரிசீலித்தது. மதிப்பீட்டு நிச்சயமற்ற தன்மைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது:

- வைரஸ் பரவிக் காணப்பட்ட நிலைமை மற்றும் சுகாதார அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றினால் தோற்றுவிக்கப்பட்ட நிலைமையானது வியாபார தொழிற்பாடுகளை எந்தளவுக்கு பாதித்தது. இத்தகைய பாதிப்புக்கள் எந்தளவுக்கு எவ்வளவு காலத்திற்கு காணப்படலாம் போன்றவற்றை மதிப்பீடு செய்யப்பட்டன.
- வியாபாரத்திற்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை குறைக்கும் முகமாக அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனுறுதித்தன்மை
- எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வீழ்ச்சிகள், மூலதனம் மற்றும் பண சந்தைகளுக்கு ஏற்பட்ட தாக்கம், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம், வேலைவாய்ப்பின்மை, பண வீக்கம், பண பெறுமதியின் ஏற்றத்தாழ்வுகள், தற்போதைய பொருளாதார வளர்ச்சியின் காரணமாக சர்வதேச வியாபார மட்டுப்பாடுகள் மற்றும் ஏனைய பேரண்ட பொருளாதார காரணிகள் பரிசீலிக்கப்பட்டன.
- பொருளாதார ரீதியான தாக்கங்கள் வாடிக்கையாளர்களின் கொள்வனவு ஆற்றல்கள் மற்றும் அவர்களது நடத்தைகளை எந்தளவுக்கு தாக்கியது.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

கோவிட்-19 இன் தாக்கங்கள் மற்றும் மதிப்பீட்டு கணக்கீடுகளின் பொருளாதார ரீதியான வீழ்ச்சி ஆகியன ஏற்புடைய சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நிதிக் கூற்றுகளின் குறிப்புகளில் கீழ் மேலும் ஆராயப்பட்டன.

2.6 பொருள்கள் மற்றும் ஒன்று கூட்டுதல்

ஒத்த தன்மையுடைய ஒவ்வொரு பொருள்கள் தொடர்பிலும் தனித்தனியாக நிதிக்கூற்றுகளில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒத்த தன்மையற்ற பொருட்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியன LKAS 1 – "நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல;" வேறுவிதமாக குறிப்பிடப்பட்டால் அன்றி தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.7 ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு ஆண்டுக்கான முன்வைப்புக்கு உறுதிப்படுத்துவதற்கு தேவைப்படுமிடத்து ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் மீள் வகைப்படுத்தப்படுகின்றன.

2.8 தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் நிலை

தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல முடியுமா என்பது தொடர்பிலான மதிப்பீடு ஒன்றை குழு/ கம்பனியின் ஆற்றல் தொடர்பில் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்ட பணிப்பாளர்கள் எதிர்காலத்தில் வியாபாரத்தை முன்னெடுத்து செல்வதற்கான வளங்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பில் திருப்தியடைந்தனர். மேலும் தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் அடிப்படையில் கம்பனி அல்லது குழுவின் முக்கிய நடவடிக்கைகள் தொடர்பில் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன என்பதற்கான அறிவு பூர்வமான சான்றுகள் இல்லை என்பதை பணிப்பாளர்கள் உணர்ந்தனர். எனவே இந்த நிதிக் கூற்றுகளானது தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல முடியும் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. 2021 டிசம்பர் 31 உடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது அதற்கான அடிப்படைகளை தீர்மானிக்கின்ற பொழுது, தற்போது காணப்படுகின்ற தகவல்களின் அடிப்படையில், முகாமைத்துவமானது தற்போது காணப்படுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகள் மற்றும் குழுவின் மீது அவை ஏற்படுத்துகின்ற தாக்கம், தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்பதை பிரயோகிக்கின்ற பொருத்தப்பாடு ஆகியவற்றை முகாமைத்துவம் மதிப்பீடு செய்தது.

நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது குழு மற்றும் கம்பனியானது தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியும் என்ற விடயத்தை பிரயோகிப்பதற்கு பொருத்தமானதா என்பதை தீர்மானிக்கின்ற பொறுப்பு பணிப்பாளர்களை சார்ந்ததாகும். குறைவான பொருளாதார வளர்ச்சியின் தாக்கங்கள், அன்னியச் செலாவணிப் பிரச்சினைகள், அரசாங்கத்தின் நிதி மற்றும் பண ரீதியான கொள்கைகள், உரிமை முதல் தொடர்பான அசைவுகள், கம்பனி மற்றும் குழு மீது பணச் சந்தையின் செல்வாக்கு போன்ற பல விடயங்களை முகாமைத்துவம் மதிப்பீடு செய்தது. காத்திரமான வியாபார தொடர் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. அத்தோடு பெருந்தொற்றினால் ஏற்படக்கூடிய தாக்கத்தை குறைக்கக்கூடியதாக அறிவார்ந்த முதலீட்டு உபாய முறைகள் காணப்பட்டன.

தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்பதன் கம்பனி, குழுவின் ஆற்றல்கள் தொடர்பில் பணிப்பாளர்கள் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டதன் எதிர்காலத்தினால் கம்பனியை தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் திருப்தி அடைந்தனர். மேற்படி விடயங்கள் தொடர்பில் தீர்மானிக்கையில் முக்கியமான முகாமைத்துவ தீர்ப்புகள், மதிப்பீடுகள், ஊகங்கள், தற்போதைய பேரண்ட பொருளாதாரங்கள் தொடர்பான தாக்கங்கள் ஆகியவற்றை பரிசீலித்தனர். கோவிட்-19 தாக்கம் உள்ளடங்கலாக பல்வேறு வகையான தாக்கங்கள், விளைவுகள் தொடர்பில் ஆராய்ந்த பொழுது இவை பொருள் ரீதியான நிச்சயமற்ற தன்மைகளை உருவாக்கவில்லை அல்லது தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வது தொடர்பில் முக்கியமான சந்தேகங்களை நிகழ்ச்சிகள் அல்லது நிலைமைகள் ஏற்படுத்தவில்லை என்பன உணரப்பட்டன. ஆகவே தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்ல முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுகளின் 50 ஆவது குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3. முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள்

இத்தகைய நிதியியல் கூற்றுகளை எல்லா காலங்களுக்கும் முன்வைப்பதற்காக பின்வரும் கணக்கீட்டு கொள்கைகளை குழுமம் அல்லது கம்பனி பிரயோகித்து வருகின்றது.

3.1 ஒருங்கிணைத்தலுக்கான அடிப்படை

3.1.1 வியாபார இணைப்புகள்

கட்டுப்படுத்தலானது கம்பனிக்கு அல்லது குழுமத்திற்கு மாற்றப்படுகின்ற பொழுது வியாபார இணைப்புகளுக்கான குழும கணக்குகளுக்கு சுவீகரித்தல் முறைமை பயன்படுத்தப்படுகின்றது. அடையாளம் காணத்தக்க தேறிய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகின்றமையால், கொள்வனவில் பரிமாறப்படுகின்ற தொகையானது பொதுவாக நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. எழக்கூடிய ஏதேனும் நன்மதிப்பு மற்றும் அதன் குறைபாடுகள் தொடர்பில் சோதனை செய்யப்படுகின்றது. பேரம் பேசுதல், கொள்வனவு தொடர்பான ஏதேனும் பெறுகையானது உடனடியாக இலாபம் அல்லது நட்ட கணக்கில் பதிவு செய்யப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல் செலவினங்கள் கடன் அல்லது உரிமை முதல் பிணையங்கள் தொடர்பான பிரச்சினையாக இருந்தால் அன்றி அவை குறிப்பிடப்பட்ட செலவினமாக பதியப்படுகின்றன.

பரிமாறப்பட்ட தொகையானது முன் நிலவிய கடன்களின் தீர்ப்பனவுடன் தொடர்புடைய கணக்குகளில் உள்ளடக்கப்பட மாட்டாது. அத்தகைய தொகைகள் இலாபம் அல்லது நட்டம் என அடையாளப்படுத்தப்படும்.

3.1.2 கட்டுப்படுத்தப்படாத அக்கறைகள்

சுவீகரித்தல் வீதத்தில் அடையாளம் காணப்பட்ட தேறிய சொத்துக்களின் சுவீகரிப்பு விகிதாசார அடிப்படையில் கட்டுப்பாட்டுக்கு உட்படாத அக்கறைகள் கணிப்பிடப்படுகின்றன.

துணைக் கம்பனி ஒன்றின் குழுமத்தின் அக்கறையில் ஏற்படுகின்ற மாற்றங்கள் கட்டுப்பாட்டின் இழப்பொன்றில் விளைவை ஏற்படுத்துவதில்லை என்பதோடு உரிமை முதல் பரிமாற்றல்களாக அமைகின்றன.

3.1.3 துணைக் கம்பனிகள்

குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற நிறுவனங்களாக துணைக் கம்பனிகள் காணப்படுகின்றன. நிறுவனம் ஒன்று அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றத்தக்க வருமானம் தெரிவுபடுகின்ற பொழுது அல்லது அத்தகைய வருமானத்திற்கான உரிமை இருக்கின்ற போது குழுமம் அந்த நிறுவனத்தை கட்டுப்படுத்தக்கூடியதாக காணப்படுகின்றது. கட்டுப்பாட்டினை மதிப்பீடு செய்கின்ற பொழுது தற்பொழுது காணப்படுகின்ற வாக்களிக்கும் உரிமையை பிரயோகிக்க முடியும். இது பரிசீலிக்கப்படுகின்றது.

துணை கம்பனிகளின் நிதிக் கூற்றுகளானது கூட்டிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படுவதுடன் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து கட்டுப்பாடுகள் ஆரம்பமாவதுடன் முடிவுறும் திகதி வரை அது செல்லுபடியுள்ளதாக காணப்படுகின்றது.

துணைக்கம்பனிகளில் முதலீடானது கம்பனியின் நிதிக் கூற்றுகளில் செலவு குறைந்த தேய்மானமாக முன்னெடுக்கப்படுகின்றது.

3.1.4 கட்டுப்பாட்டை இழத்தல்

துணை நிறுவனம் ஒன்றின் கட்டுப்பாட்டை குழுமம் இழக்கின்ற போது அத்தகைய துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் ஏதேனும் தொடர்புடைய கட்டுப்பாட்டிற்கு உட்படாத அக்கறை மற்றும் பங்கின் ஏனைய கூறுகள் என்பவற்றை குழுமம் அங்கீகரிப்பதில்லை. பெறுகை அல்லது இழப்பிலிருந்தான ஏதேனும் விளைவை இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றன. கட்டுப்பாட்டை இழக்கின்ற பொழுது முன்னைய துணை நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட ஏதேனும் வட்டியானது நியாயமான பெறுமதி அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

3.1.5 பங்கு பெறுமதி அடிப்படையில் அமைந்த முதலிடப்படுகின்ற கம்பனிகள் மீதான அக்கறை

இணைக் கம்பனிகள் மீது கம்பனிக்கு குறிப்பிடக்கூடிய அளவு செல்வாக்கு காணப்படுகின்றது. இதுவோர் துணைக் கம்பனியோ அல்லது கூட்டிணைந்த நிறுவனமோ அல்ல. இத்தகைய முதலீட்டில் குழுமத்திற்கு அல்லது கம்பனிக்கு 20% அல்லது அதற்கு அதிகமான வாக்களிக்கும் உரிமை காணப்படுகின்ற பொழுது கணிசமான செல்வாக்கு உண்டு. வாக்களிக்கின்ற உரிமைக்கு வேறுவிதமாக குறிப்பிடப்பட்டால் அன்றி இந்த செல்வாக்கு தொடர்ந்து இருக்கும்.

இணைக் கம்பனிகள் மீது காணப்படுகின்ற அக்கறையானது உரிமை முதல் முறையை பயன்படுத்தி கணக்கெடுக்கப்படுகின்றது. இவை அடிப்படையில் செலவு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. இவற்றுள் கொடுக்கல் வாங்கல் செலவுகளும் உள்ளடங்குகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் கூட்டிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுகளானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான குழுவின் பங்கு மற்றும் உரிமை முதல் முதலீட்டாளரின் OCI உம் உள்ளடங்குகின்றது. முக்கியமான செல்வாக்குகள் அல்லது கூட்டுக் கட்டுப்பாடு முடிவுறும் திகதி வரை இது ஏற்புடையதாகும்.

இணைக் கம்பனிகள் தொடர்பான முதலீடுகளானது கம்பனியின் நிதிக் கூற்றுகளில் செலவு குறைவு தேய்மான அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றது.

3.1.6 ஒருங்கிணைத்தல் தொடர்பில் அகற்றப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள்

குழுக்களுக்கிடையிலான மிகுதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுக்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல் மூலமாக எழுகின்ற மற்றும் ஏதேனும் கிடைக்கப் பெறாத செலவுகள் ஆகியன மற்றும் வருமானங்கள் ஆகியன அகற்றப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல் மூலம் கிடைக்கப் பெறாத வருவாய்கள் உரிமை முதல் முதலீடுகளுடன் தொடர்புடையவனாக காணப்படும் பட்சத்தில் முதலீடு செய்தவர் தொடர்பில் குழுவின் அக்கறைக்கு ஏற்ப அவை அகற்றப்படுகின்றன. பெறப்படாத வருவாய்கள் எவ்வாறு அகற்றப்படுகின்றதோ அதே விதத்தில் இழப்புகளும் அகற்றப்படுகின்றன. தேய்மானத்திற்கான எவ்விதமான சான்றாதாரங்களும் இல்லாத பட்சத்திலேயே இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது.

3.2 வெளிநாட்டு நாணய பரிமாற்றங்கள்

வெளிநாட்டு நாணயங்களில் பரிமாற்றங்கள் நடைபெறுகின்ற பொழுது அத்தகைய பரிமாற்றங்கள் இடம்பெற்ற திகதியில் நிலவுகின்ற நாணயப் பரிமாற்று வீதங்களின் பிரகாரம் குழுமத்தின் செயற்பாட்டு நாணயங்களுக்கு மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு நாணயத்தில் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற பணம் சாராத சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியன நியாயப் பெறுமதி தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அன்னிய செலாவணி வீதத்தில் தொழிற்பாட்டு நாணயத்திற்கு மாற்றப்படுகின்றது. வெளிநாட்டு நாணயம் ஒன்றில் வரலாற்று ரீதியான கிரயத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்ற பண ரீதியற்ற விடயங்கள் பரிமாற்றல் திகதியில் உள்ளவாறான நாணய மாற்று வீதத்திற்கு மாற்றப்படுகின்றன.

வெளிநாட்டு நாணய வித்தியாசங்கள் பொதுவாக இலாப அல்லது நட்ட கணக்கில் பதியப்படுகின்றன.

3.3 காப்புறுதி ஒப்பந்தங்கள்

பொருள் வகைப்படுத்தல்

காப்புறுதி வழங்குநரினால் எழுதப்படுகின்ற ஒப்பந்தங்கள் மாற்றப்படுகின்ற காப்புறுதி இடரின் மட்டத்தை பொருத்து காப்புறுதி ஒப்பந்தங்கள் அல்லது முதலீட்டு ஒப்பந்தங்கள் என வகைப்படுத்தப்பட வேண்டுமென இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்டதொரு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு காப்புறுதி செய்யப்படுகின்ற நிகழ்வு காப்புறுதி பெறுநருக்கு பாதகமாக நடைபெற்றால், காப்புறுதி பெறுநருக்கு நட்டஈடு வழங்குவதற்கு உடன்படுவதன் மூலம் அடுத்த தரப்பிடமிருந்து முக்கிய காப்புறுதி இடரை (காப்புறுதி வழங்குநர்) ஏற்றுக் கொள்கின்ற பொழுது அத்தகைய ஒப்பந்தங்கள் காப்புறுதி ஒப்பந்தங்களாகும். ஒரு பொது வழியாக காப்புறுதி செய்யப்படுகின்ற நிகழ்வு இடம்பெறாவிட்டால் நன்மைகள் செலுத்தப்படக்கூடிய விடயத்துடன் ஏற்கனவே செலுத்தப்பட்ட நன்மைகளுடன் ஒப்பிடுவதன் மூலம் முக்கிய காப்புறுதி இடர் காணப்படுகின்றதா என்பதை குழு தீர்மானிக்கின்றது. காப்புறுதி ஒப்பந்தங்களும் நிதி ரீதியான இடர்களாக மாறலாம்.

காப்புறுதி ஒப்பந்தம் என ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே வரையறை செய்யப்பட்டதன் பின்னர் அதன் எஞ்சிய காலம் முழுதும் காப்புறுதி ஒப்பந்தமாகவே கருதப்படுகின்றது. இக்காலப் பகுதியில் காப்புறுதி சார்ந்த இடர்கள் குறிப்பிடக்கூடியளவு குறைந்த பொழுதிலும் கூட சகல விதமான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் ஆகியன காலாவதியாகாத வரையிலேயே இது மேற்கொள்ளப்படுகின்றது. காப்புறுதி இடர்கள் முக்கியத்துவமிக்கவையாக மாறுகின்ற பொழுது இவை காப்புறுதி ஒப்பந்தங்களாக மீள் வகைப்படுத்தப்படுகின்றன.

கம்பனியில் விற்பனை செய்யப்படுகின்ற சகல விடயங்களும் காப்புறுதி ஒப்பந்தங்களாகும் என்பதோடு இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 4 இன் கீழ் காப்புறுதி ஒப்பந்தங்கள் என வகைப்படுத்தப்படுகின்றமை "காப்புறுதி ஒப்பந்தகள்" ஆகும். அதாவது அறிக்கையிடப்படுகின்ற திகதியில் கம்பனியின் பொருள் துறைக்குள் ஏதேனும் முதலீட்டு ஒப்பந்தங்களை கம்பனி கொண்டிருப்பதில்லை.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.3.1 காப்புறுதி ஒப்பந்த பொறுப்பிலிருந்து மிகையான இலாபத்தினை பங்காளர்களுக்கு மாற்றுதல்

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப் பகுதியிலும் பங்காளர்களுடன் தொடர்புடைய ஒதுக்கங்களைப் பயன்படுத்தி பங்காளர்களுடைய பெறுமதிகளை கம்பனி மதிப்பீடு செய்கின்றது. ஒதுக்கங்கள் தொடர்பான ஆரம்ப மற்றும் முடிவு மிகுதியின் அடிப்படையில் பங்காளர்களுடன் தொடர்புடைய மிகுதியாக பரிசீலனை செய்யப்படுகின்றது மற்றும் காப்புறுதி ஒப்பந்த பொறுப்பிலிருந்து இது கழிக்கப்படுகின்றது. பங்காளர்களுடன் தொடர்புடைய மிகை வருமானமானது இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கின்றன. அவையாவன்

- காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்கள் நிதியுடன் தொடர்புடைய பங்காளர் தொடர்பான மிகை இலாபம்
- பங்காளர் சொத்துக்களிலிருந்து ஈட்டப்பட்ட இலாபம்

காப்பீட்டு பத்திரத்தை பெற்றவர் நிதியிலிருந்து பங்காளருடன் தொடர்புடைய மிகை இலாபம்

நியமிக்கப்பட்ட காப்பீட்டு கணக்கரின் விதப்புரைகளிலிருந்து காப்பீட்டு கணக்கரின் பெறுமதியிலிருந்து மிகை உருவாகின்றது.

3.4 இலாப அல்லது நட்டக் கூற்று மற்றும் ஏனைய பூரணத்துவமிக்க வருமானம்

3.4.1 வருமான அங்கீகாரம்

3.4.1.1 மொத்த பதிவு செய்த காப்புறுதி கட்டுப்பணங்கள்

(அ) ஆயுள் காப்புறுதி மொத்த பதிவு செய்த காப்பீட்டு கட்டுப்பணம்

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்கள் மீதான மொத்த மீண்டெழுகின்ற கட்டுப்பணங்கள் காப்புறுதி பெறுநர்களால் செலுத்தப்பட இருக்கின்ற பொழுது அவை வருமானமாக அடையாளப்படுத்தப்படுகின்றது (30 நாட்கள் சலுகை காலத்துக்குள் உள்ள ஒப்பந்தங்கள் வருமானமாக கருதப்படுகின்றன). முன்னரே கிடைக்கப் பெற்ற ஏதேனும் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் அத்தகைய காப்புறுதி கட்டுப்பண வருமானமாக பதியப்பட வேண்டுமென உரிய காப்புறுதி ஒப்பந்த நிபந்தனைகளினால் கோரப்படாத வரை அவை வருமானமாக பதியப்படுவதில்லை.

தனியான காப்புறுதிக் கட்டண வியாபார வருமானங்கள் தொடர்பில் காப்பீட்டுப் பத்திரம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து அவை அங்கீகரிக்கப்படுகின்றன.

(ஆ) ஆயுள் காப்புறுதி சாராத மொத்த பதிவு செய்த காப்பீட்டு கட்டுப்பணம்

காப்பீட்டு கணக்கீட்டு காலப் பகுதிக்காக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் மொத்த காலப் பகுதிக்குமாக பெறப்பட வேண்டிய மொத்த காப்புறுதி காப்பீட்டு கட்டணங்களை உள்ளடக்கியதாக மொத்த எழுதப்பட்ட காப்பீட்டுக் கட்டணம் காணப்படுகின்றது. காப்பீட்டுப் பத்திரம் ஆரம்பிக்கப்படுகின்ற திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் இவை அங்கீகரிக்கப்படுகின்றன. ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியிலிருந்து இந்த காப்பீட்டுக் கட்டணங்களானது எழுதப்பட்டவையாக பதியப்படுவதுடன் சம்பந்தப்பட்ட காப்பீட்டு பத்திரம் தொடர்பில் சாதகமான அடிப்படையில் பதியப்படுகின்றன.

உரிமை கோரிக்கைகள் கோரப்படாத கழிவுகள் போன்ற காப்புறுதிக் கட்டுப்பண வீதத்தின் பகுதியொன்றை உருவாக்குகின்ற கழிவுகள் மொத்த எழுத்து மூல கட்டுப்பணத்திலிருந்து கழிக்கப்படுகின்றன.

உழைக்கப்படாத காப்பீட்டு கட்டண ஒதுக்கங்கள்

உழைக்கப்படாத காப்பீட்டு கட்டணங்களானவை அறிக்கையிடப்பட்ட திகதிக்கு பின்னர் இடரின் காலங்கள் தொடர்பான வருடமொன்றில் எழுதப்படுகின்ற காப்பீட்டு கட்டுப்பணங்களின் விகிதங்களாகும். உழைக்காத கட்டுப்பண ஒதுக்கமானது வருடத்தில் எழுதப்படுகின்ற கட்டுப்பணத்தின் குறிப்பிட்ட பாகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஆனால் காலாவதியாகாத காப்பீட்டு காலத்துடன் இது தொடர்புடையதாக காணப்படுகின்றது.

உழைக்கப்படாத காப்புறுதி கட்டுப்பணங்களானது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழிற்துறை சட்டங்களின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 365 என்ற அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. இருப்பினும், ஒப்பந்த காலத்திலிருந்து குறிப்பிட்டதக்கவைகளாக வித்தியாசப்படுகின்ற இடரின் காலத்திற்கு ஏற்ப அந்த ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட காப்புறுதி பாதுகாப்பு தொகைக்கு ஏற்ற விதத்தில் இடர் காலம் தொடர்பான கட்டுப்பணங்கள் உழைக்கப்படுகின்றன. எதிர்வரும் காலங்களுக்கு காரணமாக திகழக்கூடிய விகிதமானது பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்படுவதில்லை. இவை உழைக்கப்படாத கட்டுப்பணங்களுக்கான ஒரு ஏற்பாடாக பிற்போடப்படுகின்றது.

3.4.1.2 மீள் காப்புறுதி கட்டுப்பணங்கள்

காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பான மொத்த மீள் காப்புறுதி கட்டுப்பணமானது கட்டுப்பணங்கள் செலுத்தக்கூடியதாக மாறுகின்ற போது அல்லது காப்புறுதி ஒப்பந்தம் செயற்திறனுடையாக மாறுகின்ற போது அத்திகதிக்கு முன்னர் செலவினம் ஒன்றாக பதியப்படும் மீள் காப்புறுதி கட்டுப்பணங்கள் மீள் காப்புறுதி செய்பவர் தொடர்பில் ஏற்புடையதான வீதங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

(அ) ஆயுள் காப்புறுதி சாராத மீள் காப்புறுதி கட்டுப்பணங்கள்

ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியினாலும் மற்றும் ஒப்பந்தம் ஆரம்பிக்கின்ற திகதியில் ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்படுகின்ற திகதி ஆகியவற்றில் வழங்கப்படுகின்ற முழுமையான காப்பீட்டிற்காக செலுத்தப்பட வேண்டிய மொத்த காப்பீட்டு கட்டுப்பணத்தை எழுத்து மூல மீள் காப்புறுதிக் கட்டுப்பணம் உள்ளடக்குகின்றது.

உழைக்கப்படாத மீள்காப்புறுதி காப்பீட்டு கட்டண ஒதுக்கங்கள்

உழைக்கப்படாத மீள்காப்புறுதி காப்பீட்டு கட்டுப்பணங்களானது அறிக்கையிடப்படுகின்ற திகதிக்கு பின்னர் இடர் காலப் பகுதியுடன் தொடர்புடைய வருடமொன்றில் எழுத்து மூல கட்டுப்பணங்களின் வீதங்களாகும். உழைக்கப்படாத மீள் காப்புறுதி கட்டுப்பணங்கள் என்பவை இடர்கள் தொடர்புடைய ஒப்பந்தங்களுக்காக நேரடி காப்புறுதி ஒப்பந்தங்களின் காலத்தின் மீது பிற்போடப்படுகின்றன (2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப 365 என்ற அடிப்படையில் இவை பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் ஒப்பந்த காலத்திலிருந்து குறிப்பிடத்தக்கவாறு பிற்போடப்படுகின்ற இடரின் காலத்தின் அடிப்படையில் அத்தகைய ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட காப்புறுதி பாதுகாப்பின் தொகைக்கு ஏற்ப விதத்தில் இடர் காலத்தின் மீது உழைக்கப்பட்ட கட்டுப்பணங்களாகும்).

(ஆ) ஆயுள் காப்புறுதி மீள் காப்புறுதி கட்டுப்பணங்கள்

ஆயுள் காப்புறுதி தொடர்பான மீள் காப்புறுதிக் கட்டணமானது கட்டுப்பணம் செலுத்த வேண்டியதாக இருக்கின்ற பொழுது அல்லது காப்புறுதி ஒப்பந்தம் அமுலுக்கு வருகின்ற திகதியின் ஆரம்பத்தில் ஒரு செலவினமாக இது பதியப்படுகின்றது.

3.4.1.3 கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம்

(அ) மீள்காப்புறுதி தரகு வருமானம்

வெளிச்செல்லுகின்ற மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் மீதான மீள் காப்புறுதி தரகு வருமானம் கிடைக்கப் பெறக் கூடியதாக இருக்கின்ற போது அவை வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட அங்கீகாரத்தின் பின்னர் வெளிச் செல்கின்ற மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் தொடர்பான மீள் காப்புறுதி தரகு வருமானங்கள் பிற்போடப்படுகின்றன.

(ஆ) ஏனைய கட்டண வருமானம்

காப்புறுதி ஒப்பந்த காப்பீட்டு பத்திரகாரர்களிடமிருந்து காப்பீட்டு பத்திரம் சார்ந்த நிருவாக சேவைகள் மற்றும் ஏனைய ஒப்பந்த கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. இந்த கட்டணங்களானது கிடைக்கப் பெற்றதன் பின்னர் அல்லது கிடைக்கவிருக்கின்ற நிலையில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

3.4.1.4 முதலீட்டு வருமானம்

முதலிடப்பட்ட நிதிகள் மீதான வட்டி வருமானம், பங்கிலாப வருமானம், மூலதன பெறுகைகள் அல்லது இழப்புகள் மற்றும் வெளிநாட்டு நாணய பெறுகைகள் அல்லது இழப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக நிதி வருமானம் காணப்படுகின்றது.

(அ) வட்டி வருமானம்

வட்டி வருமானமானது செயலூக்கமுடைய வட்டி முறையை பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றது. செயலூக்கமான வட்டி வீதம் என்பது நிதிச் சொத்தைக் கொண்டு வருகின்ற தொகைக்கு நிதிச் சொத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற ஆயுளின் ஊடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப் பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் ஆகியன சரியாக கழிக்கப்படுகின்ற விகிதமாகும். செயற்திறனான வட்டி விகதத்தை கணிப்பிடுகின்ற போது நிதியியல் சாதனங்களின் சகல ஒப்பந்தம் சார்ந்த நிதிகளை கருத்திற் கொண்டு எதிர்கால பணப் பாய்ச்சல்களை குழுமம் மதிப்பீடு செய்கின்றது. ஆனால் அது எதிர்கால கடன் இழப்புக்களை கருத்திற் கொள்வதில்லை.

சகல விதமான கொடுக்கல் வாங்கல் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலுத்தப்பட்ட புள்ளிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக வினைத்திறன்மிக்க வட்டி வீதம் கணிப்பிடப்படுகின்றது. வினைத்திறன்மிக்க வட்டி வீதத்தின் முக்கிய அங்கமாக இவை காணப்படுகின்றன. கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் என்பது நிதிச் சொத்தொன்றை பெற்றுக் கொள்வதற்கு அல்லது வழங்குவதற்கு நேரடியான காரணமாக அமையக்கூடிய அதிகரிக்கின்ற கிரயங்களை குறிப்பிட்ட காலப் பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றது என்பதோடு அவை வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன.

(ஆ) பங்கிலாப வருமானம்

வருமானத்தை பெறுவதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற பொழுது பங்கிலாப வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.4.1.4 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்

பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான கட்டுப்பாடுகள் குறிப்பிடப்பட்ட தொகைக்கு வாடிக்கையாளர்களுக்கு மாற்றப்படுகின்ற பொழுது மற்றும் அந்த பொருட்கள் அல்லது சேவைகளின் பரிமாற்றத்திற்காக குழு உரித்துடையது என எதிர்பார்க்கின்ற தொகை பரிசீலனைகளில் பிரதிபலிக்கின்ற பொழுது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது.

3.4.1.5 வைத்தியசாலை வருமானம்

வழங்கப்படும் சேவையின் முழுமையான திருப்தியின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டு உள்ளீட்டு முறையொன்றினை பயன்படுத்தி வைத்தியசாலை சேவைகளிலிருந்து காலத்திற்கான வருமானத்தை குழு அங்கீகரிக்கின்றது. ஏனெனில் குழுவினால் வழங்கப்படுகின்ற நன்மைகளை வாடிக்கையாளர்கள் சமகாலத்தில் பெற்று அனுபவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் இருக்கின்ற அல்லது வருகை தருகின்ற வைத்தியர்கள் சார்பாக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் குழுவின் வருமானத்தின் ஓர் அங்கமாக கருதப்படுவதில்லை. இவை வருமானத்திலிருந்து தவிர்க்கப்படுகின்றன.

3.4.1.6 பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானம்

சொத்துக்களின் கட்டுப்பாடானது வாடிக்கையாளர்களுக்கு மாற்றப்படுகின்ற பொழுது, பொதுவாக சம்பந்தப்பட்ட உபகரணங்கள் விநியோகிக்கப்படுகின்ற பொழுது அத்தருணத்தில் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. இத்தருணத்தில் ஒப்பந்தம் தொடர்பில் வேறு ஏதாவது வாக்குறுதிகள் காணப்படுகின்றனவா? வித்தியாசமான செயலாற்றுகை கடப்பாடுகள் காணப்படுகின்றவா? இதன் காரணமாக கொடுக்கல் வாங்கல் விலையின் ஒரு பகுதியானது ஒதுக்கப்பட வேண்டிய தேவை உள்ளனவா? போன்றவற்றை குழு பரிசீலனை செய்கின்றது. பொருட்களை விற்பனை செய்வது தொடர்பான கொடுக்கல் வாங்கல் விலையை தீர்மானிக்கின்ற பொழுது, பல்வேறு விதமான விடயங்களை குழுமம் பரிசீலனை செய்வதுடன் தற்போது காணப்படுகின்ற முக்கியமான நிதி சார் அம்சங்களையும் கருத்திற் கொள்கின்றது.

(i) பல்வேறு வகையான பரிசீலனைகள்

ஒப்பந்தம் தொடர்பான பரிசீலனைகளானது மாறுபட்ட தொகைகளை உள்ளடக்கியிருக்கின்ற பொழுது, வாடிக்கையாளருக்கு பொருட்களை பரிமாறிக் கொள்வதன் காரணமாக உரித்துடைய தொகையை குழு பரிசீலனை செய்கின்றது. ஒப்பந்த ஆரம்பத்தின் பொழுதும் பல்வேறு வகையான பரிசீலனைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. கூட்டிணைக்கப்பட்ட தொகையில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் வருமானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தாது என்கின்ற பொழுது இவை அங்கீகரிக்கப்படுகின்றன. சில பொருட்களை விற்பனை செய்வது தொடர்பான ஒப்பந்தங்களானது அப்பொருட்களை மீண்டும் திருப்பி செலுத்துவதற்கான உரிமையை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. இதன் பொழுது பல்வேறு வகையான விடயங்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

(ii) திருப்பிக் கொடுப்பதற்கான உரிமைகள்

சில ஒப்பந்தங்களின் பிரகாரம் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொண்ட பொருட்களை குறிப்பிட்ட காலப் பகுதியினுள் திருப்பிக் கொடுப்பதற்கான உரிமைகள் காணப்படுகின்றன. மீள திருப்பிக் கொடுக்கப்படாத பொருட்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக குழுவானது எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முறையை பிரயோகிக்கின்றது. ஏனெனில் இம்முறையானது குழு அருகதையுள்ள பல்வேறு வகையான பரிசீலனைகளுக்கான தொகைகள் தொடர்பில் சிறப்பான எதிர்வுகூறல்களை தெரிவிக்கின்றன. கொடுக்கல் வாங்கல் விலையில் உள்ளக்கக்கூடிய பல்வேறு விதமான பரிசீலனைகளின் தொகையை தீர்மானிக்கும் முகமாக பல்வேறு விதமான பரிசீலனைகள் பற்றிய மதிப்பீடுகளை SLFRS 15 தேவைப்படுத்துகின்றது. திருப்பிக் கொடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்கள் தொடர்பில், வருமானத்திற்கு பதிலாக குழுவானது மீண்டும் பணத்தை செலுத்துவதற்கான பொறுப்பினை அங்கீகரிக்கின்றது.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

(iii) முக்கியமான நிதியிடல் அம்சங்கள்

பொதுவாக குழுவானது தனது வாடிக்கையாளர்களிடமிருந்து குறுகிய கால முற்பணங்களை பெற்றுக் கொள்கின்றது. SLFRS 15 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறை சார்ந்த விடயங்களைப் பயன்படுத்தி, வாக்குறுதியளிக்கப்பட்ட தொகையை பொதுவாக குழு சீர் செய்வதில்லை. முக்கியமான நிதியிடல் அம்சங்களின் தாக்கத்தை பரிசீலனை செய்கின்றது. அத்தோடு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றத்திற்கான காலப் பகுதி மற்றும் குறிப்பிட்ட பொருள் அல்லது சேவைக்கான கட்டணத்தை அல்லது தொகையை வாடிக்கையாளர் செலுத்தும் பட்சத்தில் அதற்கான காலப் பகுதி பொதுவாக 01 வருடம் அல்லது அதனை விட குறைவாக இருத்தல் வேண்டும் என கணிக்கப்படுகின்றது.

3.4.1.7 முதலீட்டு சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம்

முதலீட்டு சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானமானது குத்தகை காலத்திற்கு ஒரு நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது. வழங்கப்பட்டிருக்கின்ற குத்தகை தொடர்பான ஊக்குவிப்புகளானது குத்தகை காலத்திற்கான மொத்த வாடகை வருமானத்தின் ஒருங்கிணைந்த பகுதியொன்றாக அங்கீகரிக்கப்படுகின்றது.

3.4.1.8 சொத்துக்கள், பொறித்தொகுதி அல்லது உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் அல்லது நட்டம்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன தொடர்பான விற்பனை இலாபமானது விற்பனை செய்யப்பட்ட காலப் பகுதியினுள் அங்கீகரிக்கப்படுகின்றது. அத்தோடு ஏனைய வருமானத்தின் கீழ் இவை அங்கீகரிக்கப்படுகின்றன.

3.4.2 நன்மைகள், கோரிக்கைகள் மற்றும் செலவினங்கள்

3.4.2.1 மொத்த நன்மைகள் மற்றும் கோரிக்கைகள்

(அ) ஆயுள் காப்புறுதி வியாபாரம்

இறப்பு மற்றும் முதிர்வு என்பவற்றினால் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகள், இறப்பு அல்லது காப்புறுதி ஒப்பந்தத்தின் காலம் முடிவடைதலின் அறிவித்தல் மீதான வருமானத்திற்கு எதிராக கட்டணம் அறவிடப்படுகின்றது. இடைக்கால கொடுப்பனவுகள் மற்றும் ஒப்படைப்புக்கள் ஆகியன தீர்ப்பனவு காலத்திற்காக மாத்திரமே பிரயோகிக்கப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய கொள்வனவு செலவினங்கள், ஆயுள் காப்புறுதி வியாபாரம் தொடர்பான பராமரிப்பு செலவினங்கள் மற்றும் முதலீட்டுடன் தொடர்புடைய செலவுகள் என்பன முதலீட்டிடன் தொடர்புடைய மூலதனச் செலவின் ஓர் அங்கமாக கணிக்கப்படுவதில்லை. இவை காப்பீட்டு கணக்கர் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

(ஆ) ஆயுள் காப்புறுதி சாராத வியாபாரங்கள்

ஆயுள் காப்புறுதி சாராத வியாபாரம் ஒன்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது கோரிக்கைகளின் செயன்முறை மற்றும் விதித்தல் என்பவற்றுடன் நேரடியாக தொடர்புடைய கோரிக்கைகளை கையாளல் என்பன கிரயங்களுடன் சேர்க்காத தொகைகள் மற்றும் உரிமை கோரிக்கைகளை பாதுகாத்தல், பெறுமதிக்கான ஒரு குறைப்பு மற்றும் ஏனைய மீட்பனவுகள் ஆகியன முன்னைய வருடங்களிலிருந்தான நிலுவைகளை கோருவதற்கான ஏதேனும் சீர் செய்தல்கள் போன்ற குறிப்பிட்ட வருட காலத்தில் இடம்பெறுகின்ற சகல கோரிக்கைகளையும் உள்ளடக்குகின்றது. கோரிக்கைகள் தொடர்பான நிலுவைகளானது, தனிப்பட்ட கோரிக்கை கோப்புகளை மீளாய்வு செய்வதன் மூலம் மதிப்பிடப்படுகின்றது மற்றும் தீர்த்தல் கோரிக்கைகளின் இறுதி மதிப்பீட்டு மாற்றங்களும் பரிசீலிக்கப்படுகின்றன.

ஏற்பட்ட கோரிக்கைகளுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் ஆனால் இவை அறிக்கையிடப்படாமல் காணப்படுகின்ற பொழுது (IBNR) ஏற்பட்ட கோரிக்கைகள் ஆனால் போதியளவு அறிக்கையிடப்படாமல் காணப்படுகின்ற பொழுது (IBNER) கடந்த கால அனுபவங்களின் போக்குகளை அடிப்படையாகக் கொண்டு மிகவும் யதார்த்தபூர்வமான மதிப்பீட்டினை உறுதி செய்யும் முகமாக காப்பீட்டு கணக்கர் முறையில் பெறுமதியிடப்படுகின்றது.

தற்போது காணப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கோரிக்கைகள் தொடர்பான ஏற்பாடுகள் நேர்மையாக கூறப்படுள்ளனவா என்பதை பணிப்பாளர்கள் பரிசீலித்துக் பார்க்கின்றனர், பின்னர் கிடைத்த தகவல்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றின் காரணமாக இறுதிப் பொறுப்பானது மாற்றமடையலாம். இதன் காரணமாக வழங்கப்பட்ட தொகைகளில் சீர் செய்தல் மேற்கொள்ள வேண்டி ஏற்படலாம். குறிப்பிட்ட காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுகளில் அத்தகைய தொகைகள் குறிப்பிடப்படுகின்றன.

கோரிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் ஆகியன முறையாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

3.4.2.2 மீள் காப்புறுதி கோரிக்கைகள்

சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு ஏற்ப சம்பந்தப்பட்ட மொத்த காப்புறுதி கோரிக்கைகள் அங்கீகரிக்கப்படுகின்ற பொழுது மீள் காப்புறுதி கோரிக்கைகளும் அங்கீகரிக்கப்படுகின்றன.

3.4.2.3 தேறிய பிற்போடப்பட்ட கையகப்படுத்தும் செலவினங்கள்

கையகப்படுத்தும் செலவினங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தரகுகள் என்பவை வணிகத் தயாரிப்புடன் மாறுபடுகின்றது என்பதோடு இதனுடன் நேரடித் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது. ஆயுள் காப்புறுதி அல்லாத ஒப்பந்தங்களுக்கு ஏற்புடைய கையகப்படுத்தல் செலவினங்கள் பிற்போடப்பட்டு உரி எழுத்து மூல கட்டுப்பணங்கள் உழைத்த காலத்திற்கு கையளிக்கப்பட்ட மீள் காப்புறுதி தரகு பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களுக்குள் அதே முறையில் பரிசீலிக்கப்படுகின்றது.

3.4.2.4 ஆயுள் காப்புறுதி நிதியத்தின் காப்பீட்டு கணக்கர் மதிப்பீடு

ஆயுள் காப்புறுதி வியாபாரம் தொடர்பான வருடாந்த விசாரணைகளை தொடர்ந்து சுயாதீன ஆலோசனை காப்பீட்டு கணக்கரின் விதிப்புரைகளுக்கு ஏற்ப வருட இறுதியில் கம்பனிக்கான நீண்ட கால காப்புறுதி ஏற்பாடுகள் தொடர்பில் பணிப்பாளர்கள் இணங்குகின்றனர். காப்பீட்டு கணக்கரின் மதிப்பீடானது சகல விதமான பொறுப்புகளை சுயாதீன ஆலோசனை காப்பீட்டு கணக்கரினால் தெரிவிக்கப்பட்ட விதப்புரைகளின் படி ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டு கணக்கர் மதிப்பீடானது சகல பொறுப்புகளையும் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.

3.4.2.5 ஏனைய செலவினங்கள்

ஏனைய செலவினங்கள் காப்பீட்டு கணக்கர் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தை கொண்டு நடத்தல் மற்றும் சொத்துக்களை பேணுதல் தொடர்பில் ஏற்பட்ட சகல விதமான செலவுகள் மற்றும் சொத்துக்கள், பொறித்தொகுதி உபகரணங்களை பேணவது தொடர்பான செலவினங்கள் ஆகியன இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கணக்கில் குறிப்பிடப்படுகின்றன.

3.4.3 ஊழியர் நன்மைகள்

(அ) குறுகிய கால நன்மைகள்

குறுகிய கால ஊழியர் நன்மைகளானது சம்பந்தப்பட்ட சேவையில் செலவாக குறிப்பிடப்படுகிறது. ஊழியரினால் கடந்த காலத்தில் சேவையை வழங்கப்பட்டதன் காரணமாக இந்த தொகையை செலுத்துவதற்கு நடைமுறை சட்டம் அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு குழுவிற்கு இருத்தல் குறுங்கால காசு மிகை ஊதிய கொடுப்பனவின் கீழ் அல்லது இலாபப் பகிர்வு திட்டங்களின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற தொகையொன்று தொடர்பில் பொறுப்பொன்று காணப்படுவதுடன் கடப்பாட்டினை நம்பகமான முறையில் மதிப்பீடு செய்ய முடியும்.

(ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது நிறுவனம் ஒன்று தனியான நிறுவனமொன்றுக்கு நிலையான பங்களிப்புகளை செலுத்துவதன் மூலம் தொழிலுக்கு பின்னராக வழங்கும் நன்மைகளாகும். மேலதிகத் தொகைகளை செலுத்த வேண்டும் என்பது தொடர்பில் சட்ட அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு கிடையாது.

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகளானவை ஊழியர்களினால் வழங்கப்படுகின்ற சேவைக் காலங்களின் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் ஊழியர் நல செலவினம் என அங்கீகரிக்கப்படுகின்ற திட்டங்களாகும்.

ஊழியர் சேமலாப நிதியம்

கம்பனி மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன லிமிடட்டின் ஊழியர்கள், லிட்ரோ கேஸ் லங்கா லிமிடம் மற்றுடம் லிட்ரோ டேர்மினல் பிரைவட் லிமிடட் ஆகியன 15மூ மற்றும் 10மூ ஆகியவற்றை முறையே ஒவ்வொரு ஊழியருடைய சம்பளம் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு வழங்குகின்றது.

ஏனைய குழு நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோர் சேமலாப நிதியத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒவ்வொரு ஊழியரது சம்பளத்திற்கும் முறையே 12% மற்றும் 8% இனை பங்களிப்புச் செய்கின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்திலிருந்தும் 3% இனை கம்பனி அல்லது குழுமம் பங்களிப்புச் செய்கின்றது.

(இ) வரையறை செய்யப்பட்ட நலத்திட்டம்

வரையறை செய்யப்பட்ட நலத்திட்டம் என்பது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டத்தை விடவும் தொழிலுக்கு பின்னரான நன்மை பயக்கும் திட்டமாகும். வரையறை செய்யப்பட்ட நன்மை சார் திட்டங்கள் தொடர்பிலான நிதியியல் நிலைமை கூற்றில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற பொறுப்பானது அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறு வரையறை செய்யப்பட்ட நன்மை கடப்பாட்டின் நடைமுறை பெறுமதியாகும். வரையறை செய்யப்பட்ட நன்மை சார்ந்த கடப்பாடு தொடர்பான கணிப்பீடானது (ஊழியர் நன்மைகள்) இது இலங்கை கணக்கீட்டு தர நிர்ணயம் 19 இனால் பரிந்துரைக்கப்பட்ட அடிப்படையில் திட்டமிடப்பட்ட தொகுதிக் கடன் முறையைப் பயன்படுத்தி அறிக்கையிடுகின்ற தினத்தில் ஒரு தகுதி வாய்ந்த காப்புறுதி காப்பீட்டு கணிப்பாளரினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. கழிவு வீதம், சம்பள அதிகரிப்பு வீதம், மற்றும் ஊழியர்களின் எஞ்சிய சேவைக் காலம் என்பவை தொடர்பான ஊகங்களை உருவாக்குவதில் காப்பீட்டு கணிப்பாளரின் மதிப்பீடு இடம் பெறுகின்றது. திட்டங்களின் நீண்ட கால தன்மை காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு இட்டுச் செல்கின்றன.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்ட கொடுப்பனவின் கீழ் ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு 5 வருடங்கள் தொடர் சேவையை பூர்த்த செய்த பின்னரே எழுகின்றது. இந்த பங்களிப்புக்கு வெளிநிலையிலிருந்து நிதியிடப்படுவதில்லை.

தேறிய வட்டிச் செலவினங்கள் மற்றும் வரையறை செய்யப்பட்ட அனுகூலத் திட்டங்களுடன் தொடர்புடைய ஏனைய செலவினங்கள் ஆகியன இலாபம் அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன. அவற்றை கொடுத்துத் தீர்க்கின்ற நிலைமை ஏற்படுகின்ற பொழுது ஏதாவது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான வரையறை நன்மைத் திட்டத்தின் தீர்வுகளை குழு அங்கீகரிக்கின்றது.

தேறிய வரையறை செய்யப்பட்ட நலன் தொடர்பான கடப்பாடுகள் பற்றிய மீள் மதிப்பீடானது காப்பீடு சார்ந்த இலாபங்கள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருப்பதோடு ஏனைய பூரணத்துமிக்க வருமானத்தில் உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றது.

3.4.4 வருமான வரி செலவினங்கள்

வருமான வரி செலவுகளானது நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. உரிமை முதல் அல்லது OCI இல் நேரடியாக அங்கீகரிக்கப்பட்ட பொருட்களை தவிர்ந்த ஏனையவை தொடர்பான நடைமுறை அல்லது பிற்போடப்பட்ட வரிகள் இலாபமாக அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

3.4.4.1 நடைமுறை வரி

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டவாறு வருமானம் மற்றும் செலவினம் என்பன தொடர்பான கூற்றுக்களின் அடிப்படையில் அமைவதோடு 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 67 ஆம் பிரிவு மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப கணிப்பிடப்படுகின்றது. இந்த பிரிவின் பிரகாரம் ஆயுள் காப்புறுதி தொடர்பான வருவாய்கள் மற்றும் இலாபங்கள் ஆகியன செலுத்தப்பட வேண்டிய வரி பின்வருமாறு கூட்டப்படுகின்றது.

- 24% என்ற அடிப்படையில் காப்பீட்டு கணக்கரினால் சான்றுபடுத்தப்பட்டதன் பிரகாரம் ஆயுள் காப்புறுதி காப்பீட்டாளர் நிதியிலிருந்து பங்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட மிகைகள்.
- 24% அடிப்படையில் அத்தகைய வருமானங்களை தோற்றுவிப்பது தொடர்பில் ஏற்பட்ட ஏதாவது செலவுகளை பங்காளர் முதலீட்ட வருமான நிதியிலிருந்து கழித்தல்
- 24% அடிப்படையில் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இலாபத்தை பகிர்ந்து கொள்கின்ற நபர் ஒருவரின் ஆயுள் காப்புறுதி காப்பீட்டு பத்திரத்திற்கான வழங்கப்பட்ட மிகை தொகை

ஆனால் ஆயுள் காப்புறுதி வியாபாரத்தை சாராதவை தவிர ஏனைய சகல பிரிவுகளுக்கு இவை ஏற்புடையன மற்றும் அத்தகைய வியாபாரங்களுக்கான வருவாய் மற்றும் இலாபம் ஆகியவற்றுக்கு 24% வரி விதிக்கப்படுகின்றது.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

நடைமுறை வருமான வரியானது முடிவடைந்த ஆண்டுக்கான வரி செலுத்தப்படக்கூடிய வருமானம் அல்லது இழப்பு மீதி எதிர்பார்க்கப்படுகின்ற செலுத்தப்பட வேண்டிய அல்லது பெறப்பட வேண்டிய வரியாகும். அத்தோடு முன்னைய வருடங்கள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய அல்லது பெறப்பட வேண்டிய வரிக்கான சீராக்கலானது அறிக்கையிடப்படுகின்ற திகதியில் அமுலாக்கப்படுகின்ற வரி வீதங்களை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

ஏற்புடைய வரி ஒழுங்குவிதிகள் தொடர்பான பொருள் கோடல்களுக்கு ஏற்ப பொருத்தமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நிலைமைகள் தொடர்பில் முகாமைத்துவம் குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒரு முறை மதிப்பீடுகளை மேற்கொள்கின்றது.

3.4.4.2 பிற்போடப்பட்ட வரி

கையகப்படுத்தும் செலவினங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தரகுகள் என்பவை வணிகத் தயாரிப்புடன் மாறுபடுகின்றது என்பதோடு இதனுடன் நேரடித் தொடர்புடையதாகவும் காணப்படுகின்றது. ஆயுள் காப்புறுதி அல்லாத ஒப்பந்தங்களுக்கு ஏற்புடைய கையகப்படுத்தல் செலவினங்கள் பிற்போடப்பட்டு உரி எழுத்து மூல கட்டுப்பணங்கள் உழைத்த காலத்திற்கு கையளிக்கப்பட்ட மீள் காப்புறுதி தரகு பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் கிரயங்களுக்குள் அதே முறையில் பரிசீலிக்கப்படுகின்றது.

சகல விதமான தற்காலிக வித்தியாசங்களுக்காக பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியன அங்கீகரிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத வரிக் கடன்கள் மற்றும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகள் ஆகியன எதிர்காலத்தில் வரி அறவிடக்கூடிய இலாபங்களாக காணப்படலாம். அவை பயன்படுத்தப்பட முடியும் என்பதன் அடிப்படையில் முன்கொண்டுவரப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதோடு அவற்றுடன் தொடர்புடைய வரி சார்ந்த நன்மைகள் பயன்படுத்தப்படும் என்ற சாத்தியப்பாடு இல்லாத அளவுக்கு குறைக்கப்படும். எதிர்காலத்தில் வரி அறவிடக்கூடிய இலாபங்கள் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் அத்தகைய குறைப்புகள் பற்றிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பிற்போடப்பட்ட வரியானது அவை மாற்றப்படுகின்ற பொழுது தற்காலிக வித்தியாசங்களின் படி பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வட்டி வீதங்களின் படி அளவிடப்படுகின்றன. அறிக்கையிடும் திகதியில் உருவாக்கப்பட்ட வட்டி வீதங்களை பிரயோகித்து அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட வட்டி வீதங்களை பிரயோகித்து அளவிடப்படுகின்றன.

அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரி சொத்துக்களானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீள் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அவற்றை எதிர்காலத்தில் பயன்படுத்தக்கூடிய விதத்தில் எதிர்கால வரி அறவிடல் இலாபங்கள் காணப்படுகின்றன என்பதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிகள் அதே வரி அறவிடக்கூடிய நிறுவனம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரசபையுடன் தொடர்புடையதாக இருக்கின்ற போது நடைமுறை வரி பொறுப்புகளுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை தீர்ப்பதற்கு சட்ட ரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமை காணப்பட்டால் ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் ஆகியன அவற்றிற்கு எதிராக ஈடு செய்யப்படுகின்றன.

நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரிகள்

2002 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரி மற்றும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி கணிப்பிடப்படுகின்றது. நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரியை கணிப்பிடுவதற்கான அடிப்படையானது பெறுமதி சேர் வரி இலாபத்திற்கு முன்னான கணக்குகள் மற்றும் வருமான வரி, பொருளாதார தேய்மானத்திற்காக சீர் செய்யப்பட்ட தொகைகள், ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் மற்றும் பணம் சாராத நன்மைகள், வேலை முடிவுறுத்தப்படுகின்ற பொழுது வழங்கப்படக்கூடிய நன்மைகள் ஆகியன உள்ளடங்கலாக சகல விதமான ஊதியங்களையும் உள்ளடக்கியதாக இது காணப்படுகின்றது..

3.4.4.3 ஊழியர் நம்பிக்கை நிதியம்

குழுவினால் செலுத்தப்படுகின்ற பங்குலாபங்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற பிடித்து வைத்தல் வரியானது சம்பந்தப்பட்ட பங்கிலாபத்தை செலுத்துவதற்கான பொறுப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட 2020 பெப்ரவரி 18 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட (PNIT/2020-3) திகதியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பங்கிலாபங்கள் மீதான பிடித்து வைத்தல் வரி கழிக்கப்படுவதுடன் 2020 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் இது அகற்றப்படுகின்றது.

3.4.4.5 பயிர் காப்புறுதி வரி

பயிர் காப்புறுதி வரியானது 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு 2013 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இதனை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு செலுத்தப்படுவதோடு வரிக்கு பின்னரான இலாபத்தில் 1மூ செலுத்தப்படல் வேண்டும்.

3.5 நிதி நிலைமை தொடர்பான கூற்றுகள்

3.5.1 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

3.5.1.1 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமதிகள் கிரயத்தில் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் திரண்டு குறைபாட்டு இழப்பு என்பவற்றை கழித்து கணிப்பிடப்படுகின்றன. சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களுக்கான கிரயம் அவற்றின் பயன்பாட்டுக்காக வேலை செய்கின்ற நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஏற்பாடு எவையெனும் இருப்பினும் அவை செலவினங்களுடன் சேர்த்து கையகப்படுத்தல் அல்லது நிர்மாணிப்பு தொடர்பான கிரயமாகும்.

சொத்துக்களை கையகப்படுத்துவதுடன் நேரடியாக தொடர்புடைய செலவுகளும் இவற்றுள் உள்ளடங்குகின்றன. சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துகளுக்கான செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- பொருட்கள் மற்றும் நேரடி உழைப்புக்கான கூலி
- சொத்துக்களின் பயன்பாட்டிற்காக வேலை செய்கின்ற நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தொடர்பில் ஏற்பட்ட எவையேனும் செலவினங்கள்
- சொத்தை அகற்றுவதற்கு அல்லது தளத்தை மீளமைப்பதற்கான கடப்பாடுகள் குழுவிடம் காணப்படும் பட்சத்தில் அதனை பிரித்தெடுப்பதற்கும் அகற்றுவதற்கும் அதனை மீளப் பொருத்துவதற்கும் மதிப்பிடப்பட்ட செலவினம்,

விற்பனையின் போது ஏற்படுகின்ற ஏதேனும் பெறுகை அல்லது இழப்பு அல்லது ஏனைய செயற்பாட்டு வருமானம் தொடர்பான இலாபம் அல்லது நட்டத்தில் இவை பதியப்படுகின்றன.

3.5.1.2 பின்தொடரும் செலவினம் மற்றும் பிரதியீடு செய்தல்

சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் ஏதாவது ஒரு பாகத்தை மீள் பொருத்துகின்ற செலவானது முன் கொண்டு வருகின்ற தொகையில் பதியப்படுகின்றது. உதிரிப் பாகத்தில் காணப்படுகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகள் சாத்தியமாக இருத்தல், அது குழுமத்திற்கு முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதோடு அதன் கிரயம் நம்பகமான முறையில் அளவிடப்பட வேண்டும். மீள் பாகத்தை பொருத்துகின்றது என்பது தொடர்பில் ஏற்படுகின்ற தொகை பதியப்பட மாட்டாது. சொத்துகள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை திருத்தியமைப்பதற்கான செலவினங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படும்.

3.5.1.3 மீள் மதிப்பீடுகள்

காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியன சொத்தொன்றாக மதிப்பிடப்பட்டதன் பின்னர் அவற்றின் நியாயமான பெறுமதியை நம்பகமாக அளவிட முடியும் என்பதோடு அவை மீள் மதிப்பீட்டு தினத்தில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் முன்கொண்டு வரப்பட்டு பின் தொடர் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் பின் தொடர்ந்த குறைபாட்டு இழப்புகள் ஆகியன கழிக்கப்படுவதோடு அறிக்கையிடப்படுகின்ற திகதியில் உள்ளவாறை அவை கொண்டு வருகின்ற தொகையிலிருந்து முக்கியமான வித்தியாசமில்லாத ஒரு மீள் மதிப்பிடப்பட்ட சொத்தின் பெறுமதியை உறுதி செய்வதற்கு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காணி மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்கான பணிகள் தொழில்வாண்மைமிக்க நபர்களினால் பொறுப்பேற்கப்படுகின்றன. ஆகக் குறைந்தது 03 வருடங்களாகும். மாற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற ஏதாவது நன்மைகள் அல்லது இழப்புகள் ஆகியன அவற்றின் உண்மைப் பெறுமதியில் அவை ஏற்படுகின்ற வருடத்தில் பூரணத்துவமிக்க ஏனைய வருமானங்களாக உள்ளடக்கப்படுகின்றன.

மீள் மதிப்பீட்டின் விளைவாக முன்கொண்டு வருகின்ற தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டால் அவை ஏனைய விரிவான வருமானத்தில் பதியப்படுவதுடன் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் என்ற தலைப்பின் கீழ் பங்குப் பெறுமதியில் சேர்க்கப்படுகின்றது. எப்படியிருப்பினும் கூட முன்னர் இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்பட்ட சொத்தொன்றின் மீள் மதிப்பீட்டு குறைவானது. பின்னடைகின்ற தருணத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் அத்தகைய அதிகரிப்பு பதியப்படுகின்றது.

மீள் மதிப்பீட்டின் காரணமாக முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையில் குறைவு ஏற்படும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் அது அங்கீகரிக்கப்படுகின்றது. மீள் மதிப்பீட்டில் காணப்படுகின்ற ஏதாவது எஞ்சிய கடன் தொகையானது சம்பந்தப்பட்ட சொத்தை விட அதிகமாக காணப்படும் பட்சத்தில் இந்த குறைவானது ஏனைய பூரணத்துவமிக்க வருமானத்திலிருந்து கழிக்கப்படுகின்றது.

மீள் மதிப்பீட்டு திகதியில் கூட்டிணைந்த பெறுமான தேய்வானது சொத்து தொடர்பில் மொத்தமாக முன் கொண்டு வரப்பட்ட தொகையிலிருந்து அகற்றப்படுவதுடன் தேறிய தொகையானது சொத்தின் மீள் மதிப்பீட்டு தொகையின் தேறிய தொகையாக மீள் குறிப்பிடப்படுகின்றது. விற்பனை செய்யும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பான மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள் விற்பனை செய்யப்படும் பட்சத்தில் நேரடியாக தேக்கி வைக்கப்பட்ட ஈட்டல்களுக்கு மாற்றப்படுகின்றன.

3.5.1.4 தேய்மானம்

மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுள் கால நேரடி கோட்டு முறையை பயன்படுத்தி அவற்றின் எஞ்சிய பெறுமதிகளை கழிப்பதற்காக சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் செலவினை பதிவளிப்பதற்காக தேய்மானம் மதிப்பிடப்படுகின்றது. பொதுவாக இது இலாபம் அல்லது நட்டத்தில் மதிப்பிடப்படுகின்றது. சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்கால பொருளாதார நன்மைகள் சார்ந்த எதிர்பார்க்கப்பட்ட நுகர்வு முறையை மிகவும் நெருக்கமாக இது பிரதிபலிக்கின்றது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டு காலப் பகுதிக்காக மதிப்பிடப்பட்ட பயன்மிகு ஆயுட் காலம் பின்வருமாறு-

- கட்டிடங்கள - 20-40 வருடங்கள்
- தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்கள் - 5-10 வருடங்கள்
- அலுவலகம் மற்றும் அலுவலக உபகரணம் - 5-10 வருடங்கள்
- மின் பிறப்பாக்கிகள் மற்றும் காற்று சீராக்கி பொறித் தொகுதி - 5-10 வருடங்கள்
- மோட்டார் வாகனங்கள் - 4-5 வருடங்கள்
- இணைப்புகளும் பொருத்திகளும் - 6 2/3 வருடங்கள்
- பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் - 20 வருடங்கள்
- கணினிகள் மற்றும் கணினி உபகரணங்கள் - 4 - 7 வருடங்கள்
- திரவ பெற்றோலிய வாயு களஞ்சிய தாங்கிகள், குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் - 25 வருடங்கள்
- திரவ பெற்றோலிய வாயு சிலிண்டர்கள் - 10 வருடங்கள்
- ஏனைய பொருத்தப்பட்ட சொத்துக்கள் - 3-12 வருடங்கள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தேய்மான முறைகள், பயன்மிக்க ஆயுட் காலம் எஞ்சிய பெறுமதிகள் ஆகிய மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமான முறையில் சீர் செய்யப்படுகின்றன.

3.5.1.5 ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள், ஆலை மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளின் சுமக்கும் அளவு அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றுதல் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படாதபோது அங்கீகரிக்கப்படாதது. சொத்துக்கள், மரம் மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளை டி-அங்கீகாரம் செய்வதால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம், பொருள் அங்கீகரிக்கப்படும்போதான இலாபம் அல்லது நட்டத்தில் சேர்க்கப்படுகிறது.

3.5.1.5 பெறுமானத் தேய்வு

2021 டிசம்பர் 31 இல் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கு ஏற்படக்கூடிய தேய்மானம் தொடர்பான இழப்பீடுகளை பணிப்பாளர்கள் சபை மதிப்பீடு செய்தது. இதன் பொழுது கோவிட்-19 பெருந்தொற்றினால் ஏற்படக்கூடிய தாக்கம் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பில் அறிக்கையிடும் திகதியில் நிதிக்கூற்றுகளில் எத்தகைய தேய்மானம் தொடர்பான ஏற்பாடுகளும் அவசியமில்லை என மதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.5.1.6 தொடர்கின்ற மூலதன வேலைகள்

செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற மூலதன வேலைகள் குறிப்பிடப்பட்டன. நிர்மாணப் பணிகள் மற்றும் வரவிருக்கின்ற மூலதனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நேரடியாக ஏற்படுகின்ற மூலதனத் தன்மை சார்ந்த செலவுகள் இவையாகும்.

3.5.2 கண்ணுக்கு புலப்படாத சொத்துக்கள்

குழுவுக்கு உரித்தாகக் கூடிய சொத்தொன்று எதிர்கால பொருளாதார நன்மைகளின் காரணமாக சாத்தியமாக இருக்கின்ற பட்சத்தில் அவை புலப்படாத சொத்தென்று பதியப்படுவதோடு அவற்றின் கிரயம் நம்பகரமாக மதிப்பிடப்படவும் முடியும்.

3.5.2.1 நன்மதிப்பு

துணைக் கம்பனிகளை கையகப்படுத்துவதன் மூலம் எழுகின்ற நன்மதிப்பானது திரட்டிய குறைபாட்டு இழப்புகளை கழித்த பின்னர் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றது.

நன்மதிப்பு குன்றுதல்.

வியாபார இணைப்பொன்றின் மூலம் முயன்று பெறுகின்ற நன்மதிப்பானது அதன் சேதம் தொடர்பில் வருடாந்தம் ஆராயப்படுகின்றது. அத்தோடு முன்கொண்டு வருதல் பெறுமதி சேதத்திற்கு உள்ளாகியதா என்பதும் ஆராயப்படுகின்றது. இவை தொடர்பில் சூழ்நிலைகள் சாதகமாக சுட்டிக் காட்டுகின்ற பொழுது நன்மதிப்பு தொடர்பில் காசு பிறப்பிக்கின்ற ஒவ்வொரு பிரிவுக்குமான மீட்கப்படக்கூடிய தொகையை மதிப்பிடுவதன் மூலம் நன்மதிப்பு தொடர்பான சேதம் தீர்மானிக்கப்படுகின்றது. பணத்தினால் பிறப்பிக்கின்ற பிரிவின் மீட்கப்படக்கூடிய தொகையானது முன் கொண்டு வருகின்ற தொகையை விடவும் குறைவாக இருக்கின்ற பட்சத்தில் அது குறைவான இழப்பு இலாபம் அல்லது நட்டக் கணக்கில் பதியப்படுகின்றது. நன்மதிப்பு மீதான சேத இழப்புகள் மாற்றப்படுவதில்லை.

3.5.2.2 மென்பொருள்

குழுவினால் கையகப்படுத்தப்படுகின்ற ஏனைய கட்புலனாகா சொத்துக்கள் மற்றும் இருக்கின்ற வரையறுக்கப்பட்ட பயன் ஆயுள்கள், திரண்ட கடனளிப்பு மற்றும் சேத இழப்புகள் என்பவற்றைக் குறைத்து கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன. பயனுள்ள ஆயுள்களுடன் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட கண்ணுக்கு புலப்படா சொத்துக்களானவை சேதத்திற்கு உள்ளாகியிருக்கலாம் என இனங் காணப்படுகின்ற பட்சத்தில் குறைபாட்டிற்கு அவை மதிப்பிடப்படுகின்றன. வரையறுக்கப்படாத பயனுள்ள ஆயுள்களுடன் கூடிய கட்புலனாகா சொத்துக்களின் குறைபாட்டை கண்டறிவதற்கு வருடாந்தம் தனிப்பட்ட முறையில் அல்லது பண பிறப்பாக்கம் பிரிவு மட்டத்தில் இவை பரீட்சித்து சோதிக்கப்படுகின்றன.

அறிக்கையிடும் திகதியில் ஏனைய கட்புலனாகா சொத்துக்களைப் போன்று குழுவானது தனியாக மென்பொருள்களையும் பெற்றுக் கொண்டது.

பின் தொடர்ந்து வருகின்ற செலவினம்

மென்பொருள் தொடர்பான பின்தொடர்ந்து வருகின்ற செலவானது அதனுடன் தொடர்புடைய தனிப்பட்ட சொத்தில் காணப்படுகின்ற எதிர்கால பொருளாதார நலன்களை அதிகரிக்கின்ற பொழுது மாத்திரமே அது மூலதனமாக கருதப்படுகின்றது. ஏனைய சகல விதமான செலவினங்களும் ஏற்பட்ட இலாபமாக அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

இலதாக்கல்

இலதாக்கல் ஆனது அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுள்கள் மீது நேர்கோட்டு முறைமையை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எஞ்சிய பெறுமதிகளை குறைத்து கட்புலனாகா சொத்துக்களின் செலவுகள் பதிவளிக்கப்படுவதற்காக கணிப்பிடப்படுகின்றன. அத்தோடு அவை இலாபமாக அல்லது நட்டமாக குறிப்பிட்ட கணக்கில் பதிவிடப்படுகின்றது. மென்பொருட்களின் குறிப்பிடப்பட்ட பயன்மிக்க காலமாக 05 வருடங்கள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியும் இலதாக்கல் முறைகள், பயன்மிக்க ஆயுட் காலம், எஞ்சிய பெறுமானங்கள் ஆகியன மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமாயின் சீர் செய்யப்படுகின்றன.

அங்கீகாரம் இழத்தல்

கட்புலனாகா சொத்தொன்று விற்பனை செய்யப்படும் பொழுது அல்லது எதிர்காலத்தில் பொருளாதார ரீதியான நன்மைகள் இல்லை என எதிர்பார்க்கப்படுகின்ற பொழுது அல்லது விற்பனை செய்வதன் காரணமாக அது அங்கீகாரத்தை இழக்கின்றது. அத்தகைய கட்புலனாகா சொத்துக்களை அங்கீகாரம் இழக்கச் செய்வதனால் கிடைக்கின்ற இலாபம் அல்லது நட்டமானது அத்தகைய பொருள் அங்கீகாரத்தை இழக்கின்ற பொழுது இலாபம் அல்லது நட்டக் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

2021 டிசம்பர் 31 வரையில் கோவிட்-19 தாக்கத்தில் ஏற்பட்ட விளைவுகள் உள்ளடங்கலாக கட்புலனாகா சொத்துக்களினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேய்மானம் தொடர்பான குறிகாட்டிகளை குழு மதிப்பீடு செய்தது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் எத்தகைய தேய்மானம் சார்ந்த குறிகாட்டிகளும் இனங் காணப்படவில்லை.

3.5.3 சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை

LKAS 17 குத்தகைகளை விஞ்சியதாக SLFRS 16 காணப்படுகின்றது. குத்தகை தொடர்பான ஏற்பாடு காணப்படுகின்றதா என்பதை IFRIC 4 தீர்மானிக்கின்றது. SIC 15 தொழிற்பாட்டு குத்தகைகள் - ஊக்குவிப்புகள் மற்றும் SIC 27 கொடுக்கல் வாங்கலுக்கான பொருட்கள் குத்தகை தொடர்பான சட்டரீதியான வடிவத்தை கொண்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்கின்றது. அங்கீகாரம், அளவீடு, சமர்ப்பணம், வெளியிடல் ஆகியன தொடர்பான கொள்கைகளை தராதரம் வெளிப்படுத்துவதுடன் சகல விதமான குத்தகைகளுக்குமான குத்தகை தேவைப்பாடுகள், ஆகியவற்றை தனியான ஐந்தொகையின் கீழ் கொண்டு வருகின்றன. SLFRS 16 ஐ பயன்படுத்தி குழுவானது 2019 சனவரி 01 இலிருந்து செல்லுபடியாகும் வகையில் பின்விளைவாந்த தன்மை உடையவற்றை ஏற்றுக் கொண்டுள்ளது. 2018 அறிக்கையிடும் காலப் பகுதிக்கான ஒப்பீடுகள் இங்கு குறிப்பிடப்படவில்லை. இதற்கான அனுமதிகள் தராதரங்களில் உள்ள விசேட நிலைமாற்று ஏற்பாடுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தமொன்றின் ஆரம்பத்தின் பொழுது குத்தகைக்கான பண்புகளை அவ்வொப்பந்தம் கொண்டுள்ளதா என்பதை குழு மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது குத்தகை பண்புகளை கொண்டிருக்குமாயின் இனங் காணப்பட்ட சொத்தொன்றை கட்டுப்படுத்துவதற்கான உரிமையை அது கருத்திற் கொள்ளக்கூடிய குறிப்பிட்ட காலப் பகுதியொன்றுக்கு வழங்குகின்றது. இனம் காணப்பட்ட சொத்தை கட்டுப்படுத்துவதற்கான உரிமை ஒப்பந்தம் வழங்குகின்றதா என்பதை மதிப்பீடு செய்வதற்காக குழு பின்வருவனவற்றை மேற்கொள்கின்றது.:

- இனம் காணப்பட்ட சொத்தை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஒப்பந்தம் வழங்குகின்றதா
- பயன்படுத்தப்படுகின்ற காலப் பகுதி முழுவதும் அந்த சொத்தை பயன்படுத்துவதன் காரணமாக அது சார்ந்த சகல விதமான பொருளாதார ரீதியான நன்மைகளையும் பெற்றுக் கொள்வதற்கான உரிமை கம்பனிக்கு காணப்படுகின்றதா
- சொத்தை பயன்படுத்துவது தொடர்பான பணிப்புரைகளை வழங்குவதற்கான உரிமை கம்பனிக்கு காணப்படுகின்றதா

சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகை ஆரம்பிக்கப்படும் திகதியில் குத்தகை பொறுப்புகள் ஆகியவற்றை குழு அங்கீகரிக்கின்றது. குழுவின் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமையானது வாடகைக்கு எடுக்கப்பட்ட கிளைகளின் வளவுகள் ஏற்கனவே LKAS 17 குத்தகை தொழிற்பாடுகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளனா என பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப அளவீடுகள்

சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் குத்தகை ஆரம்பமாகும் திகதியில் குத்தகை சார்ந்த பொறுப்புகள் ஆகியவற்றை குழு அங்கீகரிக்கின்றது. சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை ஆரம்பத்தில் கிரயத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது, ஆரம்பாகும் திகதியில் அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்ட ஏதாவது குத்தகை சார்ந்த கொடுப்பனவுகள் மற்றும் சீர் செய்யப்பட்ட குத்தகை பொறுப்புத் தொகைகள் தொடர்பான ஆரம்பக் கட்ட தொகை ஆகியவற்றை இவை உள்ளடக்கியுள்ளன. அவற்றோடு ஏதாவது ஆரம்ப நேரடி செலவுகள் மற்றும் குறிப்பிடப்பட்ட சொத்துக்களை அகற்றுவதற்காக அல்லது அழிப்பதற்காக ஏதாவது மதிப்பிடப்பட்ட செலவுகள், எந்த இடத்தில் அது அமையப் பெற்றுள்ளதோ, கிடைக்கப் பெற்ற ஏதாவது குத்தகை தொடர்பான ஊக்குவிப்புகள் ஆகியன கழிக்கப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

குத்தகை பொறுப்புகளானது ஆரம்பத்தில் ஆரம்பமாகும் திகதியில் செலுத்தப்படாத குத்தகை பெறுமதிகளின் தற்போதைய பெறுமானம், குத்தகையில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி வீதத்தை கழித்து அல்லது அந்த தொகையை உடனடியாக தீர்மானிக்க முடியாத பட்சத்தில், குழுவின் பெறுகை சார்ந்த வீதம் ஆகியவற்றின் பிரகாரம் மதிப்பிடப்படுகின்றது. பொதுவாக குழுவானது தனது பெறுகைகள் சார்ந்த விகிதத்தை கழிக்கப்பட்ட விகிதமாகவே கணிப்பிடுகின்றது.

கம்பனியினால் துணை கம்பனி ஒன்றிற்கு சொத்தொன்றினை குத்தகை அடிப்படையில் வழங்கும் பட்சத்தில் துணைக் கம்பனிக்கு அந்த சொத்தினை பயன்படுத்துவதற்கான உரிமை காணப்படுகின்றது. அத்தகைய சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை மற்றும் பொறுப்புகள் ஆகியன கூட்டிணைக்கப்பட்ட நிதி கூற்றுகளிலிருந்து அகற்றப்படுகின்றன.

பின்தொடரும் அளவீடுகள்

சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை பின்னர் தேய்மானம் அடையும் பொழுது ஆரம்ப திகதியிலிருந்து நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பயன்படுத்தும் சொத்தின் பயன்மிக்க ஆயுள் காலமானது அல்லது குத்தகை காலத்தின் இறுதியிலிருந்து பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. சொத்துக்கள் மற்றும் உபகரணங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற அதே விதமான அடிப்படைகளை பயன்படுத்தி இந்த சொத்துக்களையும் பயன்படுத்தக்கூடிய ஆயுட் காலம் மதிப்பிடப்படுகின்றது. மேலும் சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமையானது தேய்மான இழப்புகளின் காரணமாக குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒரு முறை குறைகின்றது, ஏதாவது சில மீள் அளவீடுகளுக்காக குத்தகை பொறுப்பு தொடர்பில் சீர் செய்யப்படுகின்றன. வினைத்திறன்மிக்க வட்டி முறையை பயன்படுத்தி இலதாக்கல் செலவில் குத்தகை பொறுப்புகள் அளவிடப்படுகின்றன. குறியீடு மற்றும் வீதத்தில் ஏதாவது மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளில் மாற்றம் ஏற்படுகின்ற பொழுது இது மீள் அளவிடப்படுகின்றது, எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் குழுவினால் மதிப்பிடப்பட்ட தொகையில் ஏதாவது மாற்றங்கள் காணப்படும் பட்சத்தில் அவையும் கருத்திற் கொள்ளப்படுகின்றன அல்லது கொள்வனவொன்றை மேற்கொள்வதற்காக அதன் மதிப்பீடுகளில் குழு மாற்றங்களை மேற்கொள்கின்ற பொழுது, விரிவாக்கங்களை அல்லது முடிவுறுத்தல் தெரிவுகளை மேற்கொள்ளப்படுகின்ற பொழுதும் இவை கருத்திற் கொள்ளப்படுகின்றன.

சொத்துக்களை பயன்படுத்தும் உரிமையுடன் தொடர்புடைய தேய்மானங்கள்

அறிக்கையிடும் திகதியில், கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக சொத்துக்களை பயன்படுத்துவதுடன் தொடர்புடைய தேய்மானங்கள் தொடர்பில் எத்தகைய விடயங்களும் குழுவினால் அங்கீகரிக்கப்படாமையின் காரணமாக மற்றும் வியாபார தொடர் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வியாபாரங்களும் தொடரப்படுவதன் காரணமாகவும், கம்பனியின் இடர் முகாமைத்துவ உபாய முறைகளின் கீழ் இது இடம்பெறுவதன் காரணமாகவும் அரசாங்கத்தின் கோவிட்-19 தொடர்பான விதிமுறைகளையும் பணிப்புரைகளையும் உறுதியாக பின்பற்றுவதன் காரணமாகவும் எத்தகைய தேய்மானம் சார்ந்த விடயங்களும் அங்கீகரிக்கப்படவில்லை.

3.5.4 முதலீட்டுச் சொத்து

வாடகை வருமானம் அல்லது மூலதன பெறுமதிகள் அல்லது இவை இரண்டும் சேர்ந்த சொத்துக்கள் முதலீட்டு சொத்துக்கள் எனப்படுகின்றன. முதலீட்டு சொத்துக்களானது ஆரம்பத்தில் செலவின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன் பின்னர் இலாபம் அல்லது நட்டம் தொடர்பில் ஏதாவது மாற்றங்கள் அவதானிக்கப்படும் பட்சத்தில் உண்மை பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றன.

முதலீட்டுச் சொத்துக்களானது விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் அல்லது எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லை எனக் கருதி அவை நிரந்தரமாக வாபஸ் பெறப்பட்டதன் பின்னர் அவற்றிற்கான அங்கீகாரத்தை இழக்கின்றன. முதலீட்டு சொத்துக்களை விற்பனை செய்வதனால் கிடைக்கின்ற இலாபம் அல்லது நட்டமானது (அவற்றை விற்பனை செய்வதனால் கிடைக்கப் பெற்ற தேறிய இலாபம் மற்றும் முன்கொண்டு வரும் தொகை ஆகியவற்றுக்கிடையிலான வித்தியாசத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது). முதலீட்டு சொத்துக்களை விற்பனை செய்வதனால் கிடைக்கின்ற தொகை இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது. ஏற்கனவே சொத்தாக வகைப்படுத்தப்பட்ட முதலீட்டு சொத்தானது, மற்றும் பொறித் தொகுதி அல்லது உபகரணம் விற்பனை செய்யப்படும் பொழுது, உள்ளடக்கப்பட்ட ஏதாவது தொடர்புடைய தொகையானது மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் உள்ளடக்கப்படும் பட்சத்தில் தேக்கி வைக்கப்பட்ட ஈட்டல்களுக்கு அவை மாற்றம் செய்யப்படுகின்றன.

அவற்றின் பயன்பாட்டில் மாற்றம் காணப்படும் பட்சத்தில் முதலீட்டு சொத்துகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. துணைக் கம்பனி ஒன்றின் சொத்து தொடர்பில் குறிப்பிடக்கூடிய அளவொன்றினை குழு கம்பனி கொண்டிருக்கும் பட்சத்தில், அத்தகைய முதலீட்டு சொத்தானது கூட்டிணைக்கப்பட்ட நிதி கூற்றுகளில் சொத்தாக, பொறித் தொகுதி அல்லது உபகரணமாக கணிக்கப்படுவதுடன் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் தொடர்பான LKAS 16 இன் பிரகாரம் நடத்தப்படுகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.5.5 நிதி சாரா சொத்துக்களின் சேதம்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் சேதம் தொடர்பான ஏதாவது குறிகாட்டிகள் காணப்படுகின்றனவா என்பதை தீர்மானிக்கும் முகமாக நிதி சாரா சொத்துக்கள் தொடர்பாக முன்கொண்டு வரப்படும் தொகையை குழு மீளாய்வு செய்கின்றது (முதலீட்டு சொத்துக்கள், கையிருப்புகள், பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் தவிர). அத்தகைய குறிகாட்டிகள் ஏதாவது காணப்படும் பட்சத்தில் சொத்தின் மீட்கப்படக்கூடிய தொகை மீட்கப்படுகின்றது. சோதம் தொடர்பான நன்மதிப்பானது வருடாந்தம் மதிப்பிடப்படுகின்றது.

சொத்தொன்றின் மீட்கப்படக் கூடிய தொகை அல்லது பணம் பிறப்பித்தல் பிரிவு ஆகியன அதன் பயன்பாட்டில் உள்ள அதிகூடிய பெறுமதியாகும். விற்பனை செய்வதற்கான நியாய பெறுமதி செலவுகள் கழிக்கப்படுகின்றன. பயன்பாட்டில் உள்ள பெறுமதியை மதிப்பிடுகின்ற பொழுது பணத்தின் காலப் பெறுமதி மற்றும் சொத்து அல்லது பணம் பிறப்பித்தல் பிரிவுக்கு ஏதாவது இடர்கள் காணப்படுகின்றனவா என்பவற்றின் நடைமுறை சந்தை மதிப்பீடுகள் பிரதிபலிக்கப்படுவதோடு முன்-வரி கழிவு வீதம் ஒன்றைப் பயன்படுத்தி அவற்றின் நடைமுறைப் பெறுமதிக்கு மதிப்பிடப்பட்ட காசு பாய்ச்சல்கள் கழிக்கப்படுகின்றன.

சொத்தொன்றின் அல்லது பணம் பிறப்பித்தல் பிரிவொன்றின் முன்கொண்டு வருதல் தொகையானது அதனை மீட்கக்கூடிய தொகையை விட அதிகமானால் மதிப்பிக் குன்றுதல் இழப்பீடு ஒன்று அங்கீகரிக்கப்படுகின்றது. மதிப்புக் குன்றுதல் இழப்பீடுகள் இலாப நட்டக் கணக்கில் பதியப்படுகின்றன. காசு பிறப்பித்தல் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட ஏதேனும் நன்மதிப்பு தொடர்பான முன்கொண்டு வருகின்ற தொகையை கழிப்பதற்காக முதலில் அவை ஒதுக்கப்படுகின்றன. அத்தோடு பின்னர் காசுப் பிறப்பித்தல் பிரிவிலுள்ள ஏனைய சொத்துக்கள் முன்கொண்டு வருகின்ற தொகைகளை குறைப்பதற்காக விகிதாசார அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன.

நன்மதிப்பு தொடர்பான மதிப்புக் குன்றுதலானது மீண்டும் பெறப்படுவதில்லை. ஏனைய வேறு சொத்துகளுக்காக மதிப்புக் குன்றுதல் இழப்பு பதியப்பட்டிருக்காவிட்டால் பெறுமானத் தேய்வு அல்லது இலதாக்கல் என்பவற்றின் தேசிய தொகை தீர்மானிக்கப்படுகின்ற அளவுக்கு மாத்திரம் மதிப்புக் குன்றுதல் இழப்பு திரும்ப பெறப்படுகின்றது.

3.5.6 பொருட் பதிவேடுகள்

குறைந்த செலவிலும் நிகர பெறுமதியிலும் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நுகர்வுப் பொருட்களையும் உள்ளடக்கியதாக பொருட் பதிவேடு காணப்படுகின்றது.

கம்பனியினால் பேணப்படுகின்ற பொருட் பதிவேடுகளின் தன்மையை மதிப்பீடு செய்த பொழுது கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக மற்றும் பொருட் பதிவேடில் முன்கொண்டு செல்லப்பட்டுள்ள பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கான தேவைப்பாடுகள் காணப்படுகின்றனவா என்பதை இதன் காரணமாக தேறிய யதார்த்த பூர்வமான பெறுமதியில் ஏதாவது தாக்கம் ஏற்பட்டுள்ளதா என்பதை குழு மதிப்பீடு செய்கின்றது. பதிவேட்டில் முன்கொண்டு செல்லப்படுகின்ற பெறுமதிகளைக் குறைப்பதற்கு அவசியமான சீர் செய்தல்கள் எதுவும் அவசியமில்லை என்பதை குழு கண்டறிந்தது.

3.5.7 நிதிக் கருவிகள் – LKAS 39

குழுவானது பெறுமதியற்ற நிதியியல் சொத்துக்களை பின்வரும் வகையில் வகைப்படுத்துகின்றது. விற்பனைக்காக காணப்படுகின்ற நிதி சொத்துக்கள், கடன்கள் மற்றும் பெறுகைகள், முதிர்ச்சிக்காக காணப்படுகின்ற நிதியியல் சொத்துக்கள், இலாபம் அல்லது நட்டம் மூலம் உண்மை பெறுமதியில் நிதி சொத்துக்கள்.

கம்பனியானது பெறுமதியற்ற நிதி சார்ந்த பொறுப்புகள் மற்றும் ஏனைய நிதி பொறுப்புகள் வகைகள் ஆகியவற்றையும் வகைப்படுத்துகின்றது.

3.5.7.1 பெறுமதி சாரா நிதிச் சொத்துக்கள்

கம்பனியானது கடன்கள் பெறுகைகள் மற்றும் விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள் ஆகியவற்றை அவை தொடங்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. அவை தவிர்ந்த ஏனைய நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டம் மூலமாக உண்மைப் பெறுமதியில் ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான தரப்பொன்றினால் விற்பனை திகதியின் ஆரம்பத்தில் அடையாளம் காணப்படுகின்றன.

நிதி சொத்தானது ஆரம்பத்தில் உண்மைப் பெறுமதியுடன் சேர்த்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் அல்லாத சொத்தொன்றாக அளவிடப்படுகின்றது. இதன் பொழுது இவற்றுடன் நேரடியாக தொடர்புடைய கொடுக்கல் வாங்கல் செலவுகள் ஆனது அவற்றின் கையகப்படுத்தலுடன் சம்பந்தப்பட்டிருக்கின்ற பொழுது அவையும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

சொத்தொன்று தொடர்பான பணப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமை காலாவதியாகின்ற போது அல்லது நிதியியல் சொத்தின் உரிமை தொடர்பான கணிசமான அனைத்து இடர்களும் கைமாற்றுத் தொகைகளும் இடம் மாற்றப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ஒன்றில் நிதியியல் சொத்து மீதான ஒப்பந்த பணப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமையினை குழு இடம் மாற்றுகின்ற போது நிதி சார்ந்த சொத்தொன்றினை குழு இனம் காணாது இடமாற்றம் செய்யப்பட்டுள்ள சொத்து தொடர்பில் குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள அல்லது தக்க வைத்துள்ள ஏதேனும் நன்மை, வேறு ஒரு சொத்தாக அல்லது பொறுப்பாக அடையாளம் காணப்படுகின்றது.

தொகைகளை ஈடு செய்வதற்கும், கழிவு முறையொன்றின் பிரகாரம் தீர்ப்பனவு செய்வதற்கோ அல்லது சம காலத்தில் சொத்து தேர்வதற்கோ அது தொடர்பான பொறுப்பினை இலதாக்கல் செய்வதற்கோ சட்ட ரீதியாக செயல் வடிவமுடைய உரிமை ஒன்று குழுவிற்கு காணப்படுகின்ற நிலையில் அத்தகைய நிலைமைகளில் மாத்திரம் நிதி சார்ந்த சொத்துக்களும் நிதி சார்ந்த பொறுப்புகளும் ஈடு செய்யப்பட்டு அல்லது தேறிய தொகை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அவை குறிப்பிடப்படுகின்றன.

பின்தொடரும் அளவீடுகள்

(அ) விற்பனைக்கு கிடைக்கக் கூடிய நிதியியல் சொத்துக்கள்

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை அல்லது இலாபம் அல்லது நட்டம் மூலமாக நியாயப் பெறுமதியில் குறிக்கப்பட்டவைகள் தவிர்ந்த ஏனையவை விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் முதலீடுகள் ஆகும்.

விற்பனைக்கு கிடைக்கக்கூடிய நிதியியல் முதலீடுகள் ஆனது அதன் ஆரம்ப நியாயப் பெறுமதி அளவீட்டின் பின்னர் சந்தைப் பெறுமதியில் அளவிடப்பட்டு அவற்றிலுள்ள மாற்றங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் அடையாளம் காணப்பட்டு விற்பனைக்காக கிடைக்கக்கூடிய ஒதுக்கம் ஒன்றில் திரட்டப்படுகின்றன. இச்சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டமையின் போது பங்கு மூலதனத்தில் ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இவை மீள் வகைப்படுத்தப்படுகின்றன.

அண்மைய காலத்தில் விற்பனைக்காக கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துக்களை விற்பனை செய்வது எந்தளவுக்கு பொருத்தமானது என்ற

விடயங்களை நிர்ணயிப்பதற்கு அவற்றை குழு மதிப்பீடு செய்கின்றது, பாதகமான சந்தை நிலைமை மற்றும் அண்மைய எதிர்காலத்தில் அவ்வாறு செய்வதற்கு முகாமைத்துவத்தின் நோக்கத்தில் கணிசமான மாற்றங்கள் போன்ற காரணங்களின் விளைவால் இந்நிதியியல் சொத்துக்களை வர்த்தகம் செய்வதற்கு குழுவினால் இயலாமல் இருக்கின்ற சந்தர்ப்பங்களில், அரிதான சூழ்நிலைகளில் இந்நிதிச் சார்ந்த சொத்துக்கள் மீள் வகைப்படுத்தலினை குழு தெரிவு செய்யலாம். கடன் மற்றும் வருமானம் தொடர்பான வரைவிலக்கணங்களை நிதி சார்ந்த சொத்துக்கள் நிறைவு செய்கின்ற போதும் அண்மைய எதிர்காலத்திற்காக அல்லது முதிர்ச்சியடையும் வரை இந்த நிதி சார்ந்த சொத்துக்களை வைத்திருப்பதற்கான நோக்கத்தினையும் இயலுமையையும் முகாமைத்துவம் கொண்டிருக்கின்ற போதும் கடன்களையும் இலாபங்கள் தொடர்பான விடயங்களையும் மீள் வகைப்படுத்துவதற்கான அனுமதிகளை இது வழங்குகின்றது. நிதி சார்ந்த சொத்துக்களை அவை முதிர்ச்சியடையும் வரை வைத்திருப்பதற்கான இயலுமையினையும் நோக்கத்தினையும் நிறுவனம் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் முதிர்வுக்காக வைக்கப்பட்டவைகளுக்கான பிரிவில் மீள் வகைப்படுத்தலுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

கம்பனியின் விற்பனைக்கான நிதி ரீதியான முதலீடுகளானது உரிமை முதல் மற்றும் கடன் பிணையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இவை இலாபம் அல்லது நட்டம் மூலம் விற்பனைக்காக வகைப்படுத்தப்பட்டவைகளாகவோ அல்லது உண்மை பெறுமதியில் ஒதுக்கப்பட்டவைகளாகவோ காணப்படுவது இல்லை.

(ஆ) இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் காணப்படுகின்ற நிதி சார்ந்த சொத்துக்கள்

நிதி சார்ந்த சொத்தானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான நியாயப் பெறுமதியில் காணப்படுகின்றவையாக வகைப்படுத்தப்படுகின்ற போது மற்றும் வர்த்தகப்படுத்தல் தொடர்பான வகைப்படுத்தல் அல்லது ஆரம்ப இனங் காணலின் பொழுது அவ்வாறு குறிக்கப்பட்டு இருப்பின் அவை நியாயப் பெறுமதியில் காணப்படுகின்ற நிதி சார்ந்த சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. நியாயப் பெறுமதியில் காணப்படுகின்ற நிதி சார்ந்த சொத்துக்களானது இலாபம் அல்லது நட்டம் மூலம் அளவிடப்படுவதுடன் அவற்றில் ஏதாவது மாற்றங்கள் காணப்படும் பட்சத்தில் அதாவது ஏதாவது வட்டி அல்லது பங்கிலாப வருமானம் காணப்படும் பட்சத்தில் அவை இலாபம் அல்லது நட்ட கணக்கில் அங்கீகரிக்கப்படுகின்றன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியன கம்பனியின் நிதி சார்ந்த சொத்துக்கள், நிதி சார்ந்த பொறுப்புகள் அல்லது இவை இரண்டின் பாகங்களாக காணப்படுகின்றன. இவை முகாமைத்துவம் செய்யப்பட்டு இவற்றின் செயலாற்றுகைகள் நியாயப் பெறுமதி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதாவது குழுவின் முதலீட்டு உபாயமுறைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன. கம்பனியின் இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதியில் அமைந்த நிதி ரீதியான சொத்துக்களானது பட்டியலிடப்பட்ட உரிமை முதலீடுகளை உள்ளடக்கியுள்ளது.

(இ) முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்கள்

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய பெறுமதியற்ற நிதிசார்ந்த சொத்துக்கள் இவையாகும். இவற்றை முதிர்வு வரை வைத்திருப்பதற்கான நோக்கம் குழுவிடம் காணப்படும் பட்சத்தில் மற்றும் அதற்கான இயலுமை ஆகியவற்றை கொண்டிருக்கின்ற போது நிலையான முதிர்வுக்காக வைக்கப்பட்டவைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இத்தகைய சொத்துக்கள் ஆரம்பத்தில் எவையேனும் நேரடியாக சாட்டியுரைக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் தொடர்பான செலவுகளுடன் சேர்த்து நியாயப் பெறுமதியில் அடையாளம் காணப்படுகின்றன. ஆரம்ப அடையாளம் காணுதலுக்கு பின்னர் இவை தொடர்பான விளைவு வட்டி வீத முறையை பிரயோகித்து பெறுமதி குறைப்பு செலவில் கணிப்பிடப்படுகின்றன.

முதிர்வுக்காக வைக்கப்பட்ட நிதி சார்ந்த சொத்துக்களானது திறைசேரி உண்டியல்கள் மற்றும் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி பிணைய முதலீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

(ஈ) கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள்

கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள் ஆகியன செயற்திறன்மிக்க சந்தை ஒன்றில் விலை குறிப்பிடப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய நிதி சார்ந்த சொத்துக்களாகும். இத்தகைய சொத்துக்கள் முதலில் ஏதேனும் நேரடியாக சாட்டியுரைக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் இணைத்து சந்தைப் பெறுமதியில் அடையாளம் காணப்படுகின்றன. கடன்களையும் வரவேண்டியவைகளையும் ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டதன் பின்னர் அவை தொடர்பான விளைவு வட்டி வீத முறையினை பிரயோகித்து பெறுமதி குறைப்புச் செலவில் அவை கணிப்பிடப்படுகின்றன.

கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள் ஆகியன விலை கோரப்படாத படுகடன் தவணை வைப்பு முறை மூலம் துணையளிக்கும் பிணையங்கள், சொத்துக்களை பின்னணியாகக் கொண்ட பிணையங்கள், அபிவிருத்தி முறிகள், வர்த்தக பத்திரங்கள், ஏனைய கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள், பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.

மீள் காப்புறுதி தொடர்பாக வரவேண்டியவைகள்

அங்கீகரிக்கப்பட்ட மீள் காப்புறுதி வழங்குநர்களுக்கு குழுவானது சாதாரண வியாபார நடவடிக்கைகளின் பொழுது முறையான மீள் காப்புறுதி அங்கீகாரங்களை வழங்குகின்றது.

கொடுப்பனவு செய்யப்பட்ட மற்றும் கொடுப்பனவு செய்யப்படாத இழப்புகளுக்கான மீள் காப்புறுதி கம்பனிகளிடமிருந்து வரவேண்டிய எஞ்சிய நிலுவைகள் மற்றும் நட்டம் தொடர்பான சீராக்கல் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக மீள் காப்புறுதி சொத்துக்கள் காணப்படுகின்றன. இவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகைகள் மீள் காப்புறுதி வழங்குநர்களின் கொள்கைகளுடன் தொடர்புடைய பட்சத்தில் நிலுவையாக உள்ள தொகை மற்றும் இலகுபடுத்தல் செய்யப்பட்ட உரிமை கோரிக்கைகள் ஆகியவற்றிற்கு ஏற்ற விதத்தில் மதிப்பிடப்படுவதுடன் சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கு ஏற்றவகையில் காணப்படுகின்றன.

மீள் காப்புறுதி ஈடு செய்வதற்கான உரிமை இல்லாத விடத்து மொத்தமாக இவை நிதி நிலைமை கூற்றில் பதிவு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அல்லது அறிக்கையிடுகின்ற ஆண்டின் போது எழுகின்ற பெறுமதி குறைப்பு தொடர்பில் குறிகாட்டி ஒன்று காணப்படும் பொழுது மீள் காப்புறுதி சொத்துக்களானது குறைத்தலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒப்பந்த நியதிகளின் பிரகாரம் நிலுவையாக உள்ள அனைத்து தொகைகளையும் குழுவினால் பெற்றுக் கொள்ள இயலாமல் இருக்கின்ற பொழுது அத்தோடு மீள் காப்புறுதி வழங்குநரிடமிருந்து குழு பெற்றுக் கொள்ளும் தொகை மீது நம்பத்தகுந்த முறையில் அளவிடக்கூடிய தாக்க நிகழ்வொன்றினை தன்னகத்தே கொண்டுள்ள மீள் காப்புறுதி சொத்தின் ஆரம்ப அடையாளம் காணலுக்கு பின்னர் நிகழ்ந்த நிகழ்வொன்றின் காரணமாக பொருத்தமான சான்றாதாரங்கள் காணப்படுகின்ற நிலையில்

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

பெறுமதிக் குறைப்பு இடம்பெறுகின்றது. பெறுமதி குறைப்பு தொடர்பான நட்டம் ஏதாவது காணப்படும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டக் கணக்கில் அவை பதிவு செய்யப்படுகின்றன.

இணங்கப்பட்ட மீள் காப்புறுதி ஏற்பாடுகளின் காரணமாக கம்பனியானது தனது காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பான கடப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படவில்லை.

ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற உரிமைகள் முடிவுறுத்தப்படுகின்ற போது அல்லது அவை காலாவதியாகின்ற நிலையில் அல்லது வேறு ஒருவருக்கு ஒப்பந்தம் மாற்றப்படுகின்ற போது மீள் காப்புறுதி தொடர்பான சொத்துக்கள் அல்லது பொறுப்புகள் இனங்காணப்படுவதில்லை.

- **வரவேண்டிய காப்புறுதி கட்டுப்பணங்கள்**

வரவேண்டிய காப்புறுதி கட்டுப்பணங்கள் அவை நிலுவையாக உள்ள போது இனங்காணப்படுவதுடன் சேவை கட்டண வருவாய்கள் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங் காணப்படுவதன் மூலம் அளவிடப்படுகின்றன. தொடர் செயன்முறை அடிப்படையில் சேகரிக்கப்படவுள்ள காப்புறுதி கட்டுப்பணங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒப்பந்தக் கால கொடுப்பனவுகள் நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற பொழுது அவற்றை தவணை தவறலாக கம்பனி பரிசீலிக்கின்றது. தொழிற்துறை நடைமுறைகள், முகாமைத்துவ தீர்மானம் ஆகியவற்றுக்கு ஏற்ப இவ்வாறு கணிப்பிடப்படுகின்றது. ஒப்பந்த காசோட்டத்தை மீண்டும் அறவிடுவதற்கான நியாயபூர்வமான எதிர்பார்ப்புகள் இல்லாத நிலையில் வரவேண்டிய எஞ்சிய காப்புறுதி கட்டுப்பண தொகைகள் பதிவளிக்கப்படுகின்றன.

ஆயுள் காப்புறுதி கட்டுப்பணங்கள் தொடர்பான கணக்குகளை கம்பனி அற்றுரு அடிப்படையில் மதிப்பிடுகின்றது. இதன் பிரகாரம் ஆயுள் காப்புறுதி கட்டுப்பணங்களானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் அங்கீகரிக்கப்படுவதுடன் அடுத்த மாதத்தில் கட்டுப்பணம் செலுத்தப்படாத நிலையில் அதனை மாற்றியமைக்கின்றது (காப்புறுதி கட்டுப்பண நிலுவையானது 30 நாள் சலுகைக் காலத்தில் இருக்கப்படும் பொழுது மாத்திரமே). கம்பனியின் கொள்கையின் பிரகாரம் இத்தகைய காப்புறுதி பத்திரங்கள் காலாவதியானதாக கருதப்படுகின்றன.

- **சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து ஏனைய வரவேண்டியவைகள் மற்றும் நிலுவைகள்**

சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து ஏனைய வரவேண்டியவைகள் தொகைகள் மற்றும் நிலுவைகள் ஆகியன சந்தேகத்திற்கிடமான வரவேண்டியவைகளாக அல்லது ஒதுக்கீடுகளிலிருந்து கழித்து செலவில் இனங்காணப்படுகின்றன.

- **காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்கள்**

காப்பீட்டுப் பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்களானது ஆயுள் காப்புறுதி தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையில் 90மூ சந்தை வீதத்தில் வழங்கப்படுகின்றன. காப்பீட்டுப் பத்திர கடன்களானது ஆரம்பத்தில் கடன் தொகையானது நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுவதுடன் பின்னர் இலதாக்கல் செலவில் மதிப்பிடப்படுகின்றது. கடனை முழுமையாக செலுத்துவதற்கு முன்னர் காப்பீட்டுப் பத்திரத்தை பெற்றுக் கொண்டவர் இறப்பாராயின் எஞ்சிய கடன் தொகையானது இறப்பு சார்ந்த நன்மைகளிலிருந்து கழிக்கப்படும். காப்பீட்டுப் பத்திர கடன்களானது நியாயப் பெறுமதியில் காணப்படும் பொழுது அதனை முன்னெடுத்துச் செல்லும் தொகைக்கு சமமாக இருக்கின்றது. போட்டித் தன்மைமிக்க சந்தை வீதத்தில் அவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் காப்பீட்டுப் பத்திர கடன்கள் தொடர்பான தேய்மானம் மீளாய்வு செய்யப்படுகின்றது.

- **மிள் காப்புறுதி தொடர்பாக வரவேண்டியவைகள்**

மீளப் பெற்ற மீள் கொள்வனவு உடன்படிக்கைகள், பண மீதிகள், மூன்று மாத கால முதிர்ச்சியடைந்த அழைக்கப்பட்ட வைப்புகள் அல்லது உண்மையான பெறுமதியின் குறிப்பிடக்கூடிய இடர்களைக் கொண்ட கையகப்படுத்தப்படும் திகதியை விட குறைந்தவைகள், தமது குறுகிய கால அர்ப்பணிப்புகளுக்காக முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக குழுவினால் பயன்படுத்தப்பட்ட அர்ப்பணிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள் காணப்படுகின்றன.

3.5.7.2 பெறுதியற்ற நிதியியல் பொறுப்புகள்

குழுவானது விநியோகிக்கப்பட்ட பிணையங்கள், பின்நிகழ்வுப் பொறுப்புகளையும் அவை தோற்றுவிக்கப்பட்ட திகதியின் ஆரம்பத்தில் அடையாளம் காண்கின்றது. ஏனைய அனைத்து நிதியியல் பொறுப்புகளும் அவை தொடர்பான ஒப்பந்த ஏற்பாடுகளுக்கான திகதியான வர்த்தக திகதியின் ஆரம்பத்தில் அடையாளம் காணப்படுகின்றன.

நேரடியாக சாட்டியுரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் செலவுகள் ஏதவாது இருப்பின் அவற்றை நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் கழித்ததன் பின்னர் ஏனைய நிதியியல் பொறுப்புகள் நேரடியாக கணிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டினை தொடர்ந்து அவற்றுக்கான விளைவு வட்டி வீத முறையை பயன்படுத்தி பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் இப்பொறுப்புகள் கணிப்பிடப்படுகின்றன.

நிதி சார்ந்த பொறுப்பொன்று அதனது ஒப்பந்தம் சார்ந்த கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற பொழுது அல்லது இரத்துச் செய்யப்படுகின்ற பொழுது அல்லது காலாவதியாகின்ற பொழுது கம்பனி அவற்றின் அங்கீகாரத்தை அவற்றை இல்லாதொழித்து விடுகின்றது.

ஏனைய நிதி சார்ந்த பொறுப்புகளாக கடன்கள், பெறுகைகள், வங்கி மேலதிகப் பற்றுகள். வியாபாரம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் உள்ளடங்குகின்றன.

3.5.8 நிதி சார்ந்த சொத்துக்களின் தேய்மானம் (பெறுதியற்ற பொறுப்புகள்)

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயப் பெறுமதியில் வகைப்படுத்தப்படாத நிதி சார் சொத்துக்கள் அவற்றின் தேய்மானம் தொடர்பில் ஏதாவது உண்மையான சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதை தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடப்படுகின்றன.

நிதி சார்ந்த சொத்துக்கள் தேய்மானத்தை உள்ளடக்கியுள்ளனவா என்பதை தீர்மானிப்பதற்கான சான்றாதாரங்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியுள்ளது;

- கடன் பெற்றுக் கொண்டவர் தவணை தவறுதல் அல்லது ஒழுக்கயீனம்
- கடன் பெற்றுக் கொண்டவர் அல்லது விநியோகித்தவர் வங்குரோத்து நிலைமையை அடைந்தமைக்கான குறிகாட்டிகள்
- கடன் பெற்றுக் கொண்டவர்கள் அல்லது விநியோகத்தர்களினால் கொடுப்பனவு தொடர்பிலான பாதகமான மாற்றங்கள்
- நிதி நெருக்கடிகளின் காரணமாக பாதுகாப்பான காத்திரமான சந்தைத் தன்மைகள் மறைதல், அல்லது நிதி சொத்துக்கள் குழுமங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட காசோட்டத்தில் அளவிடக்கூடிய குறைபாடுகள் காணப்படுவதற்கான அவதானிக்கக்கூடிய தரவுகள் எடுத்து காட்டுகின்றமை

- விற்பனைக்காக காணப்படுகின்ற வகைப்படுத்தப்பட்ட உரிமை முதல் முதலீடுகள் தொடர்பில், உண்மையான சான்றாதாரங்களில், அதன் செலவை விட மிக குறைந்ததாக உண்மைப் பெறுமதி "குறிப்பிடக்கூடிய அளவு" அல்லது "நீண்ட காலம்" வீழ்ச்சி கண்டிருத்தல் "முக்கியமானது" அல்லது "நீண்ட காலம்" என்பதை தீர்மானிப்பதற்கு அவை தொடர்பான நுண்ணிய ஆய்வுகள் அவசியப்படுகின்றன.

3.5.8.1 இலதாக்கல் செலவில் முன்னெடுக்கப்பட்ட நிதி ரீதியான சொத்துக்கள்

இச்சொத்துக்கள் சேதமடைந்திருக்கின்றனவா என்பதற்கான சான்றுகள் தனிப்பட்ட சொத்துக்கள் என்ற முறையிலும் கூட்டு மட்டத்திலும் பரிசீலிக்கப்படுகின்றன. தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் மிக்க சகல விதமான சொத்துக்களும் அவற்றின் தேய்மானம் தொடர்பில் தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்படுகின்றது. ஏதாவது தேய்மானம் தொடர்பில் அவதானிக்கப்படாதவைகள் கூட்டாக மதிப்பீடு செய்யப்படுவதுடன் தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்படாத சொத்துக்களாகவும் இருத்தல் வேண்டும். தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் பெறாத சொத்துக்களானது அவற்றின் தேய்மானம் தொடர்பில் கூட்டாக மதிப்பிடப்படுகின்றன. பொதுவான இடர் சார்ந்த பண்புகள் காணப்படுகின்ற சொத்துக்களை குழுவாக இணைத்து பார்ப்பதன் மூலம் கூட்டு மதிப்பீடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சொத்தொன்றின் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை மற்றும் எதிர்கால காசோட்டம் தொடர்பில் மதிப்பிடப்பட்ட தற்போதைய பெறுமதியிலிருந்து சொத்தின் உண்மையான செல்லுபடியாகும் வட்டி வீதத்திலிருந்து கழிக்கப்படுவதன் மூலம் தேய்மானம் தொடர்பான இழப்பு மதிப்பிடப்படுகின்றது. இழப்புகளானது இலாபம் அல்லது நட்டக் கணக்கில் அங்கீகரிக்கப்படுவதுடன் ஊதியம் தொடர்பான கணக்கில் அவை குறிப்பிடப்படுகின்றன. தேய்மானம் தொடர்பான தொகை பின்னர் குறைவடையும் பட்சத்தில், தேய்மானத்தின் பின்னர் அத்தகைய இழப்புகள் அவதானிக்கப்படுமாயின் இலாபம் அல்லது நட்டம் மூலம் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தேய்மானம் தொடர்பான இழப்புகள் மாற்றியமைக்கப்படுகின்றன.

3.5.8.2 விற்பனைக்காக காணப்படுகின்ற நிதி சார்ந்த சொத்துக்கள்

விற்பனைக்கான நிதியியல் சொத்துக்கள் தொடர்பான பெறுமதி குறைப்புகள் நட்டங்கள், விற்பனை சார்ந்த ஒதுக்கங்களுக்காக கிடைக்கக்கூடிய ஒன்று திரண்டு நட்டங்களை மீள் வகைப்படுத்துவதன் மூலமாக இலாபம் அல்லது நட்டத்தில் இனம் காணப்படுகின்றன. மீள் வகைப்படுத்த தொகையானது கையகப்படுத்தல் செலவு (ஏதாவது பிரதான கொடுப்பனவு மற்றும் இலதாக்கல்) மற்றும் தற்போதைய நியாயப் பெறுமதி, ஏற்கனவே இலாபம் அல்லது நட்டமாக அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது தேய்மானப் பெறுமதியிலிருந்து கழிக்கப்படும்.

விற்பனைக்காக உள்ள தேய்மானம் அடைந்தவற்றின் நியாயப் பெறுமதியானது கடன் பிணையங்கள் பின்னர் அதிகரிக்கும் பொழுது தேய்மான இழப்பு ஏற்பட்டதன் பின்னர் அத்தகைய அதிகரிப்பு அவதானிக்கக்கூடியதாக காணப்படுகின்ற பொழுது இலாபம் அல்லது நட்டம் மூலம் அத்தகைய தேய்மானம் தொடர்பான இழப்புகள் மீள் சீர் செய்யப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் மூலமாக அங்கீகரிக்கப்பட்ட தேய்மான இழப்புகளானது உரிமை முதல் மூலதனம் தொடர்பில் வகைப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்ற பொழுது விற்பனைக்காக காணப்படுகின்றவையாக வகைப்படுத்தப்பட்டிருக்கும் பட்சத்தில் இலாபம் அல்லது நட்டம் மூலம் இவை மாற்றியமைக்கப்படுவதில்லை.

3.5.9 நிதி ரீதியான கருவிகள் – SLFRS 09

நிதி ரீதியான சொத்துக்கள், நிதி ரீதியான பொறுப்புகள், நிதி சாராத விடயங்களை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல் தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியவற்றை அங்கீகரித்தல் மற்றும் அளவிடல் தொடர்பான விடயங்கள் பற்றிய தேவைப்பாடுகளை SLFRS 09 குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த தராதரங்கள் LKAS 39 நிதிக் கருவிகள் பிரதியீடு செய்கின்றன: அங்கீகாரம் மற்றும் அளவிடல். மேலும் SLFRS 07 நிதி கருவிகளில் பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் குழு ஏற்றுக் கொண்டுள்ளது: 2018 தொடர்பான வெளிப்படுத்தல்கள் இவற்றுக்கு ஏற்புடையவையாக காணப்பட்ட பொழுதிலும் கூட ஒப்பீட்டு தகவல்கள் தொடர்பில் பொதுவாக இவை பிரயோகிக்கப்படுவதில்லை.

நிதிச் சொத்துக்கள் தொடர்பில் வகைப்படுத்தப்பட்ட 03 பிரதான வகைப்படுத்தல்களை SLFRS 9 உள்ளடக்கியுள்ளது: இலதாக்கல் செலவில் அளவிடுதல், FVOCL மற்றும் FVTPL. SLFRS 9 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட நிதி ரீதியான சொத்துக்களானது பொதுவாக வியாபார மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதன் பிரகாரம் நிதி ரீதியான சொத்தொன்று அதன் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் அதன் ஒப்பந்த காசோட்ட பண்புகளின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. முதிர்ச்சிக்காக காணப்படுகின்ற கடன்கள் மற்றும் வர வேண்டியவைகள் மற்றும் விற்பனைக்காக உள்ளவைகள் தொடர்பானவற்றை முன்னைய LKAS 39 வகைகளை SLFRS 9 இல்லாதொழிக்கின்றது.

LKAS 39 இன் கீழ் ஏற்கனவே கடன்களாகவும் மற்றும் வர வேண்டியவைகளாகவும் வகைப்படுத்தப்பட்ட வியாபாரம் மற்றும் ஏனைய வர வேண்டியவைகள், பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள், சம்பந்தப்பட்ட தரப்பிடமிருந்து வர வேண்டியவைகள் ஆகியன SLFRS 9 இன் கீழ் இலதாக்கல் செலவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

SLFRS 9 ஆனது மீள் வகைப்படுத்தல் மற்றும் நிதி பொறுப்புகளை அளவிடல் மற்றும் கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் அதாவது நிதிப் பொறுப்புகளுடன் தொடர்புடைய கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் தவிர்ந்த தராதரங்களை ஏற்றுக் கொண்டமையானது முக்கியமான விடயமானது என்பதை தவிர LKAS 39 இன் தற்போதைய தேவைகள் கொண்டுள்ளன.

3.5.10 பிற்போடப்பட்ட செலவுகள்

பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள்

பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளானது ஆயுட் காப்புறுதி சாராத ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகும். பிற்போடப்பட்ட கையக்கப்படுத்தல் செலவுகளானது உழைக்கப் பெற்ற வருவாய்களுக்கு அமைவாக அவற்றோடு தொடர்புடைய கையகப்படுதுதல் செலவுகளாக ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்களுக்காக மாத்திரமே கணிப்பிடப்படுகின்றன.

காப்புறுதி ஒப்பந்தங்களை வழங்குவதிலிருந்து அல்லது அவற்றை மீளப் புதுப்பிப்பதிலிருந்து தோன்றுகின்ற நிதியியல் காலத்தின் போது நேரடியாக மற்றும் நேரடியற்ற செலவுகள், பிற்போடப்பட்டு உழைக்கப்பட்ட வருவாய்களுடன் தொடர்புடைய தொடர்புபட்டதாக பெறுமதிகள் குறைக்கப்படுகின்றன.

இலங்கை காப்புறுதி ஆணைக்குழுவின் காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் வழிகாட்டிகளுக்கு அமைவாக 365 அடிப்படையில் பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகள் கணிப்பிடப்படுகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியில் அல்லது அடிக்கடி தேய்மானம் தொடர்பான குறிகாட்டிகள் எழுகின்ற பொழுது தேய்மானம் தொடர்பான மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அறவிடப்படக்கூடிய தொகையானது முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையை விட குறைவாக இருக்கின்ற பொழுது, இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் சேதம் தொடர்பான இழப்புகள் குறிப்பிடப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் தீர்க்கப்படும் பட்சத்தில் அல்லது காலாவதியாகும் பட்சத்தில் பிற்போடப்பட்ட கையகப்படுத்தல் செலவுகளானது தமது அங்கீகாரத்தை இழக்கின்றன.

3.5.11 குறிப்பிடப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகளானது உரிமை முதல்களாக வகைப்படுத்தப்படுகின்றன. சாதாரண பங்குகள் விநியோகத்திற்காக நேரடியாக சாட்டியுரைக்கப்பட்ட முறையில் செலவுகள் ஏதேனும் அதிகரிக்கும் பட்சத்தில் அவை தொடர்பான வரி விளைவுகளை கழித்து பங்கு மூலதனத்திலிருந்து கழிவொன்றாக இனங் காணப்படுகின்றன.

3.5.12 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

3.5.12.1 காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள்

காப்புறுதி ஏற்பாடுகள் - ஆயுள் காப்புறுதி

ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பான காப்புறுதி கட்டுப்பணங்கள் அறவிடப்படுகின்ற நிலையில் ஆயுள் காப்புறுதி தொடர்பான பொறுப்புகள் அங்கீகரிக்கப்படுகின்றன. சுயாதீன ஆலோசனை காப்பீட்டு கணிப்பரின் விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு 2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதி ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களுக்கு ஏற்ப தேறிய காப்பீட்டு கட்டண முறையை பயன்படுத்தி இந்த பொறுப்புகள் அளவிடப்படுகின்றன. எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள், பயன்படுத்தப்பட்ட மதிப்பீட்டு ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால காசோட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காப்பீட்டு கட்டுப்பணங்களிலிருந்து கழிக்கப்பட்டு பொறுப்புகள் தீர்மானிக்கப்படுகின்றன. இத்தகைய மதிப்பீட்டு ஊகங்களானது சிறப்பான மதிப்பீட்டு அனுபவம் அத்தோடு பாதகமான விலகல்களுடன் தொடர்புடைய விதந்துரைக்கப்பட்ட இடர் எல்லை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடுகளுக்கான ஊகங்கள் எழுகின்றன. பங்குபற்றாத பொறுப்புகளானது இடர் இல்லா விளைவுகளைப் பயன்படுத்தி கழிக்கப்படுகின்றன.

பங்குபற்றுதல் தொடர்பான கொள்கை பொறுப்புகளின் பெறுமதியானது உத்தரவாதமளிக்கப்பட்ட நல பொறுப்புகள் மற்றும் பங்களிப்பு தொடர்பான காப்புறுதி நிதிய மட்டத்தினால் தோற்றுவிக்கப்படும் மொத்த நல பொறுப்புகள் ஆகியவற்றின் பெறுமதிகளை விட உயர்வானதாகும். உத்தரவாதமளிக்கப்பட்ட நல பொறுப்பினை கணிப்படும் சந்தர்ப்பங்களில் உத்தரவாதமளிக்கப்பட்ட நலன்கள் மாத்திரம் கருத்திற் கொள்ளப்படுவதுடன் இடர் இல்லாத வட்டி விகித முறையினைப் பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் தொடர்பான விலைக் கழிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மொத்த நலன் சார்ந்த பொறுப்புகளானது சகல விதமாக உத்தரவாதமளிக்கப்பட்ட மற்றும் உத்தரவாதமளிக்கப்படாத நலன்களையும் உள்ளடக்குவதோடு பங்களிப்பு காப்புறுதி நிதியத்தின் விளைச்சலின் அடிப்படையில் நிதியத்தினை பிரயோகித்து காசுப் பாய்ச்சல் கழிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது காலாவதியான ஒப்பந்தங்களை எதிர்காலத்தில் மீளாய்வு செய்வதனால் ஏற்படக்கூடிய பொறுப்புகள் தொடர்பில் கருத்திற் கொண்டு சீர் செய்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

SLFRS 4 – "காப்புறுதி ஒப்பந்தங்கள்" தேவைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ஆயுள் காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் தொடர்பிலான பொறுப்பு போதுமை சோதனையை கம்பனியானது வெளிநிலை காப்பீட்டு கணக்கரின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றது. பொறுப்பு போதுமை சோதனையை மேற்கொள்கின்ற பொழுது, எதிர்கால காசோட்டங்களுடன் தொடர்புடைய தற்போதைய சிறப்பான மதிப்பீடுகள், கோரிக்கைகளை கையாளுதல் மற்றும் காப்பீட்டு பத்திர நிருவாக செலவுகள், காப்பீட்டு பத்திர தெரிவுகள், உத்தரவாதங்கள், பொறுப்புகளினாலிருந்து கிடைக்கப் பெறுகின்ற சொத்துக்களிலிருந்து கிடைக்கின்ற முதலீட்டு வருமானம் உள்ளடங்கலான விடயங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

காப்புறுதி ஏற்பாடுகள் - ஆயுள் காப்புறுதி சாராதவைகள்

ஆயுள் காப்புறுதி சாராத ஒப்பந்த பொறுப்புகளானது அறிக்கையிடப்படாத உரிமைக் கோரல்களுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் IBNRER உள்ளடங்கலாக நிலுவையிலுள்ள கோரிக்கைகள் ஏற்பாடு, உழைக்கப்படாத கட்டுப்பண ஏற்பாடுகள் மற்றும் காப்பீட்டு கட்டுப்பண குறைபாடு ஏற்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

உழைக்கப்படாத காப்பீட்டு கட்டண ஒதுக்க பெறுமதிகளானது 2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழிற்துறை சட்டத்தின் ஒழுங்குவிதிகளில் உள்ள வழிகாட்டிகளுக்கு ஏற்ப அளவிடப்படுகின்றன (உதாரணம், 365 ஐ அடிப்படையாகக் கொண்டு) இருப்பினும், இடர் கால ஒப்பந்த காலத்திலிருந்து குறிப்பிடக்கூடிய அளவு வேறுபடுகின்ற ஒப்பந்தங்களின் நிமித்தம் கட்டுப்பணங்கள் வழங்கப்படும் காப்புறுதி பாதுகாப்பின் தொகைக்கான விகிதாசாரத்திலுள்ள இடர் காலத்தின் மீது உழைக்கப்படுகின்றன.

எப்படியிருப்பினும், இத்தொழிற்துறையிலுள்ள காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் கம்பனியின் வரி ஆலோசகர்கள் ஆகியோர் கம்பனியானது நிதிச் சேவைகள் தொடர்பான வியாபாரத்தில் ஈடுபடாததன் காரணமாக காப்புறுதி கம்பனிகளானது பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ஆகியவற்றை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தினை இவர்கள் கொண்டிருந்தனர். ஆகவே நிதிக் கூற்றுகளில் இவை தொடர்பிலான மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

45.2 அவசரத் தேவை பொறுப்புகள் மற்றும் உத்தரவாதங்கள்

வருமான வரி

ஆயுள் காப்புறுதி வரி தொடர்பில் 2011/2012 முதல் 2017/2018 வரையிலான காலப் பகுதிக்கான வருமான வரி மதிப்பீடுகளை கம்பனி பெற்றுக் கொண்டது. குறிப்பிட்ட காலப் பகுதிக்கான மதிப்பீட்டு தொகைகள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டப் பிரிவு 92 இற்கு முரணாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் இந்த மதிப்பீடுகள் விநியோகிக்கப்பட்டன. காப்புறுதித் துறையிலுள்ள ஆயுள் காப்புறுதி கம்பனிகளுக்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட பொதுவான வருமான வரி மதிப்பீடாக இது காணப்படுகின்றது. இத்தொழிற்துறையை சேர்ந்தவர்கள், கம்பனி மற்றும் கம்பனியின் வரி ஆலோசகர்கள் ஆகியோரின் கருத்துப் படி இந்த மதிப்பீடுகளை யதார்த்தபூர்வமாக மாற்ற முடியாது. ஆகவே நிதிக் கூற்றுகளில் இது தொடர்பில் மேலதிக ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

கம்பனி வரி ஆலோசகர்களுடனான கலந்துரையாடலுடன் இத்தகைய மதிப்பீடுகளுக்கு எதிரான மேன்முறையீடுகளை உரிய முறையில் கம்பனி மேற்கொண்டது. 2012/2013 மற்றும் 2011/2012 ஆகிய காலப் பகுதிகளுக்கான நிதிச் சேவைகள் தொடர்பில் வழங்கப்பட்ட மதிப்பீடுகளானது செல்லுபடியாகும் என்பதினை 2020 ஆகஸ்ட் 18 ஆம் திகதி மற்றும் 2021 டிசம்பர் 14 ஆம் திகதி ஆகியவற்றின் மூலம் செல்லுபடியானது என வரி மேன் முறையீட்டு ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. மேற்படி தீர்மானத்திற்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மேல் முறையீடு ஒன்றினை கம்பனி மேற்கொண்டிருந்ததுடன் வரி மேன் முறையீட்டு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யும் படி கோரி ரிட் உத்தரவொன்றினை பெற்றுக் கொள்வதற்கும் தாக்கல் செய்திருந்தது. அத்தோடு வங்கியில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த பணத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்தது. ஒவ்வொரு வழக்கினதும் நிலைமை மற்றும் மதிப்பீடுகள் பின்வருமாறு.

மதிப்பீட்டு வருடம்	மதிப்பீட்டின் நிலை	அவசர தேவை பொறுப்பின் தன்மை	கம்பனிக்கு ஏற்படும் அவசர தேவை தாக்க மதிப்பீடு
2011/2012	மேல் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 524 மில்லியன்
2012/2013	மேல் முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 296 மில்லியன்
2013/2014	வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 768 மில்லியன்
2014/2015	வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 1,149 மில்லியன்
2015/2016	வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 1,374 மில்லியன்
2016/2017	வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 1,823 மில்லியன்
2017/2018	ஆணைக்குழு நாயகத்தின் தீர்ப்பிற்காக காத்திருத்தல்	வருமான வரி	மேலதிக வரி பொறுப்பு ரூபா. 2,170 மில்லியன்

த லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோபரேஷன் பீஎல்சி

த லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோபரே'ன் பீஎல்சி இற்கு எதிரான வழக்கின் தீர்ப்புகள் இதுவரை வழங்கப்படவில்லை. அறிக்கையிடும் திகதியில் ஆகக் கூடிய பொறுப்பாக ரூபா. 56 மில்லியன் காணப்படுகின்றது. தற்பொழுது கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் கம்பனிக்கு அதன் சட்ட வல்லுநர்கள் தமது ஆலோசனைகளை தெரிவித்துள்ளனர். அதன் பிரகாரம் இந்த சட்ட நடவடிக்கைகளின் தீர்ப்பானது கம்பனிக்கு பாதகமான பொருள் சார்ந்த விளைவுகளை அதனது தொழிற்பாட்டிலோ அல்லது நிதி நிலையிலோ அல்லது கம்பனியின் திரவத் தன்மையிலோ ஏற்படுத்தாது எனக் கூறியுள்ளனர். இதன் பிரகாரம் ஏதாவது பொறுப்புகள் தொடர்பான எத்தகைய ஏற்பாடுகளும் இந்த நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்படவில்லை.

இத்தகைய பொருள் சார்ந்த அவசரத் தேவை பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் காணப்படவில்லை. மேற்படி குறிபிடப்பட்டவைகள் தவிர வேறு எதற்கும் சீர் செய்தல்களோ அல்லது நிதிக் கூற்றுகளின் வெளிப்படுத்தல்களோ அவசியம் இல்லை.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

45 அர்ப்பணிப்புகள், அவசரத் தேவைகள் மற்றும் உத்தரவாதங்கள் (தொடர்ச்சி)

45.2 அவசரத் தேவை பொறுப்புகள் மற்றும் உத்தரவாதங்கள் (தொடர்ச்சி)

கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்

இங்கு கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகளைத் தவிர வேறு முக்கியமான அவசரத் தேவை பொறுப்புகள் காணப்படவில்லை. நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தக்கூடிய அளவுக்கு சீர் செய்தல்கள் இவற்றிற்கு அவசியம் இல்லை.

கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளராக கடமையாற்றி திரு. டி.ஆர்.பீ. அபேசிங்க அவர்கள் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரமும் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரமும் 2019 ஜூலை 23 ஆம் திகதி தனது பதவியிலிருந்து விலக்கப்பட்டார். மேலும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 206 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகள் சங்கத்தின் 25(4) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கவும். அத்தோடு 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி நடைபெற்ற மேலதிக பொதுக் கூட்டத்துடன் இணைத்து வாசிக்கும் வகையில் கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட் இன் பணிப்பாளர் பதிவியிலிருந்து அவர் அகற்றப்பட்டார்.

இதன் பிரகாரம் இவரை பதவி விலக்கியது சட்டத்திற்கு முரணானது என்ற அடிப்படையில் கம்பனிக்கு எதிராக தொழில் நியாயாதிக்க சபையில் (வழக்கு இல. LT2/907/2019) திரு. அபேசிங்க அவர்கள் வழக்கொன்றினை தாக்கல் செய்தார். அத்தோடு ஏனைய முறைப்பாடுகள் தொழில் திணைக்களம் மற்றும் ஊழியர்கள் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட வழக்கு இல. LT2/907/2019 இன் தீர்ப்பானது விண்ணப்பதாரிக்கு சாதகமான வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 2021 சனவரி 20 ஆம் திகதியிடப்பட்ட தீர்ப்பில் கௌரவ தொழில் நியாய சபையின் தலைவர் அவர்களது தீர்ப்பின் பிரகாரம் கம்பனியானது ரூபா. 1,6000,000 தொகையை உதவி தொழில் ஆணையாளர், கொழும்பு கிழக்கு என்ற கணக்கிற்கு வைப்பிடும் படி உத்தரவளிக்கப்பட்டது. மேற்படி விண்ணப்பதாரிக்கு நட்டஈடு வழங்கும் முகமாக இச்செயல் மேற்கொள்ளப்பட்டது. இவ்வழக்கு தொடர்பில் மேலதிக சட்ட ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதன் பிரகாரம் கொழும்பு மேல் மாகாணத்தில் மாகாண மேல் நீதிமன்றத்தில் முகாமைத்துவம் மேன் முறையீடு ஒன்றினை மேற்கொண்டது. 2021 பெப்ரவரி 19 ஆம் திகதியிடப்பட்டு இவ்விடயத்தை மேற்கொண்டது. அடுத்த வழக்கு விசாரணை 2022 ஜூன் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அறிக்கையிடும் திகதி வரையில் இவ்வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்

மேலும் திரு. டி.ஆர்.பீ. அபேசிங்க அவர்கள் தனக்கு ரூபா. 8,065,000 சட்ட ரீதியான தொகையாக ஊழியர் சேமலாப நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும் என கோரி 2019 ஆகஸ்ட் 15 இல் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்தார். இந்த விடயத்தை கம்பனி சட்டத்தரணிகள் பிரதிநிதித்துவம் செய்ததுடன் இது தொடர்பிலான எழுத்து மூல சமர்ப்பணத்தினை 2022 சனவரியில் சமர்ப்பிக்க வேண்டும் என தொழில் ஆணையாளர் திணைக்களம் வேண்டுகோள் விடுத்தது.

ஸினோலங்கா ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட்

கிரேன்ட் ஹயாட் கருத்திட்டத்தின் நில வரைபாட்டு வேலைகளையும் மற்றும் பேணுதல் வேலைகளையும் மேற்கொள்வதற்கான ஒப்பந்தகாரர்களாக பதிவு செய்த கிரீனெரி கம்பனி பிரைவட் லிமிடட் ஆனது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்ற தவறியது. இதன் அடிப்படையில் செயலாற்றுகை முறை தொகையான ரூபா. 3,629,275 ஐ முழுமையாக கோருவதற்கு SHSL விரும்பியது. இருப்பினும் செயலாற்றுகை முறையை பணமாக்கப்படுவதை தடுக்கும் முகமாக SHSL இற்கு எதிராக இடைக்கால தடை உத்தரவொன்றினை பெற்றுக் கொள்ளும் முகமாக கிரீனெரி கம்பனி பிரைவட் லிமிடட் ஆனது சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆரம்பத்தில் கிரீனெரி கம்பனி பிரைவட் லிமிடட் இனால் கோரப்பட்ட தடை செய் கட்டளைக்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியது. மேலும் குறிப்பிடப்பட்ட முறையானது 19.07.2019 இல் காலாவதியாவதன் காரணமாக குறிப்பிடப்பட்ட தடைசெய் கட்டளைக்கு எதிராக சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். இருப்பினும் 2019.07.22 இலிருந்து 03 மாதங்களுக்கு குறிப்பிடப்பட்ட செயலாற்றுகை முறியை மேலும் விரிவுபடுத்துவதற்கு கிரீனெரி கம்பனி இணங்கியது. இரு தரப்பினரும் தமது எழுத்து மூலமான சமர்ப்பணங்களை மேற்கொண்டதன் பின்னர் கிரீனெரி கம்பனி பிரைவட் லிமிடட் இனால் கோரப்பட்ட இடைக்கால தடை உத்தரவுக்கு மறுப்பு தெரிவித்து நீதிமன்றம் உத்தரவொன்றை வழங்கியதுடன் வழக்கு விசாரணைக்காக பிறிதொரு திகதியொன்றையும் நியமித்தது. அறிக்கையிடும் திகதி வரையில் வழங்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

46 அறிக்கையிடப்பட்ட திகதிற்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளில் சீர் செய்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் அவசியப்படுகின்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை தவிர வேறு குறிப்பிடக்கூடிய அவசரத் தேவை பொறுப்புகள் எதுவும் காணப்படவில்லை.

த லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோபரேஷன் பீஎல்சி

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதியாண்டிற்கான பங்கு ஒன்றுக்கு ஒரு இலங்கை ரூபா கொண்ட இடைக்கால பங்கிலாபம் ஒன்றை 2021 சனவரி 20 ஆம் திகதி கம்பனியின் பணிப்பாளர்கள் சபை பிரகடனம் செய்ததுடன் 2022 பெப்ரவரி 23 இல் செலுத்தியது. .

46.1 மேல் விதிப்பு வரி

2022 ஏப்ரல் 08 ஆம் திகதி சான்றுப்படுத்தப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மேல் விதிப்பு வரி சட்டத்தின் பிரகாரம், 2020/2021 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வரி விதிப்பிற்கான வருமானம் ரூபா. 9,706,499,829 இல் கம்பனியானது ரூபா. 2,426,624,957 ஐ மேல் விதிப்பு வரியாக செலுத்துவதற்கு கடப்பாடுடையது. குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரகாரம் 2020 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகும் மதிப்பீட்டு வருடத்துடன் தொடர்புடைய நிதி கூற்றுகளில் இந்த மேல் விதிப்பு வரியானது ஒரு செலவாக கருதப்படுகின்றது. இலங்கை கணக்கீட்டு தராதரங்களை இந்த சட்டம் விஞ்ஞி காணப்படுவதன் காரணமாக, மேல் விதிப்பு வரி தொடர்பான செலவுகளானது 2022 ஏப்ரலில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவகத்தினால் விநியோகிக்கப்பட்ட மேல் விதிப்பு வரி தொடர்பில் விநியோகிக்கப்பட்ட SoAT விதிப்புரைகளின் பிரகாரம் கணக்கு வைக்கப்பட்டது.

ஒப்பீட்டு வருடம் தொடர்பான மேல் விதிப்பு வரி சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேல் விதிப்பு வரியின் தாக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

	கம்பனி ரூபா. 000′	குழு ரூபா. 000′
31.12.2020 இற்கு வரிக்கு பின்னரான இலாபம்	5,788,533	6,930,328
மேல் விதிப்பு சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட மேல் விதிப்பு வரி	(2,426,625)	(2,853,981)
2020 ஆம் வருடத்திற்கான ஒப்பீட்டு இலாபம்	3,361,908	4,076,347

மேலும் 2020 டிசம்பர் 31 இல் முடிவடையும் வருடத்திற்கான குழுவின் மேல் விதிப்பு வரி கடப்பாடுகள் பின்வருமாறு

கம்பனியின் பெயர்	2020.12.31 இல் இ.கா.கூ. இன் தேக்கி வைத்திருக்கும் வீதம் (நேரடியானது)	2020.12.31 இல் இ.கா.கூ. இன் தேக்கி வைத்திருக்கும் வீதம் (மறைமுகமானது)	மேல் விதிப்பு வரிக்கு அருகதையுள்ள வரி அறவிடக்கூடிய வருமானம் (ரூபா. 000′)	மேல் விதிப்பு வரி (ரூபா. 000′)
இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடெட்	-	-	9,706,500	2,426,625
த லங்கா ஹொஸ்பிடல்ஸ் கார்ப்பரே'ன் பிஎல்சி	51.34%	-	140,381	35,095
லங்கா ஹொஸ்பிடல்ஸ் டயகனோசிஸ் பிரைவட் லிமிடட்	-	51.34%	27,644	6,911
லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட்	99.94%	-	NIL	NIL
லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்	100%	-	1,493,999	373,500
கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்	45.95%	27.02%	NIL	NIL
சினோலங்கா ஹோட்டல் என்ட் ஸ்பாஸ் (பிரைவேட்) லிமிடெட்	-	72.97%	NIL	NIL
ஹெலன்கோ ஹோட்டல் என்ட் ஸ்பாஸ் (பிரைவேட்) லிமிடெட்	-	72.97%	17,706	4,426
கெனோவின் ஹோட்டல் என்ட் ஸ்பாஸ் (பிரைவேட்) லிமிடெட்	100%	-	NIL	NIL
மெனேஜ்மன்ட் சேர்விஸஸ் ரக்'னா (பிரைவேட்) லிமிடெட்	100%	-	29,695	7,424
குழு மொத்தம் (ரூபா. 000′)				2,853,981

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

46 அறிக்கையிடப்பட்ட திகதிற்கு பின்னரான நிகழ்வுகள் (தொடர்ச்சி)

46.2 கம்பனியின் நிதி நிலைகள் மற்றும் செயலாற்றுகைகள் தொடர்பில் கோவிட்-19 இன் தாக்கம்

2020 ஆம் வருடம் மார்ச் ஆரம்ப பகுதி முதல் கம்பனி மற்றும் அதன் துணை கம்பனிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை தாக்கிய கோவிட்-19 ஆனது தொடர்ச்சியாக அதன் தாக்கம் காணப்பட்டதுடன் அதன் தாக்கம் கடுமையாக காணப்பட்டதனால் பல மாற்றங்களும் ஏற்பட்டன. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது முகாமைத்துவமானது கோவிட்-19 இன் தாக்கங்களை பின்வருமாறு பரிசீலித்தது: கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக கம்பனி தொடர்ச்சியாக இயங்குகின்ற செயற்பாடுகளில் குறிப்பிடக்கூடிய தாக்கங்கள் ஏதும் ஏற்படுவதற்கான சந்தேகங்கள் இருப்பதாக அது தொடர்பான நிகழ்வுகளோ அல்லது நிலைமைகளோ ஏற்படுவதற்கான சந்தேகங்கள் உள்ளதாக கம்பனியோ அல்லது குழுவோ அவதானிக்கவில்லை. இருப்பினும் கோவிட்-19 இன் காரணமாக ஏற்படக்கூடிய வியாபாரம் சார்ந்து வர வேண்டியவைகள் மற்றும் ஏனைய நிதி ரீதியான சொத்துக்கள் பற்றிய எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் தொடர்பிலான கம்பனியின் மதிப்பீடானது புலப்படுத்தப்பட்டதுடன் இவை பல்வேறு விதமான முகாமைத்துவ மதிப்பீடுகள் மற்றும் ஆராய்வுகள் ஆகியவற்றுக்க உட்பட்டவையாகும்.

47 வருமானக் கூற்று, இலாபம் மற்றும் ஏனைய பூரணத்துவமிக்க வருமானம், வருடத்திற்கான உரிமை முதல் மாற்றங்கள் கூற்று ஆகியவை தொடர்பான ஒப்பீட்டு இலக்கங்களை மீள் வகைப்படுத்தல்

2020 டிசம்பர் 31 இல் மேற்கொள்ளப்பட்ட மீள் வகைப்படுத்தல்கள் மற்றும் சமர்ப்பணங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் முகமாக சில ஒப்பீட்டு இல்ககங்கள் மீள் குறிப்பிடப்பட்டன. அதன் பிரகாரம், 2021 ஆம் வருடத்தில் உள்ளடக்கப்பட்ட வாடகை வருமான செலவுகளானது ரூபா. 82.9 மில்லியன் தொகையானது ஏனைய தொழிற்பாட்டு மற்றும் நிருவாக செலவுகளாக மீள் வகைப்படுத்தப்பட்டன.

48 ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்களை பிரித்து பார்த்தல்

2011 ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க திருத்தப்பட்ட காப்புறுதி சட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், சேர்வு நிலை காப்புறுதி கம்பனிகளானது தங்களினால் மேற்கொள்ளப்படும் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் மற்றும் பொது காப்புறுதி வியாபாரங்கள் ஆகியவற்றை தனித்தனியாக பிரித்து பார்த்தல் வேண்டும், 02 தனியாக தாபிக்கப்பட்ட கம்பனிகளாக பார்ப்பதுடன் இந்த குறிப்பிடப்பட்ட இணக்கப்படானாது 2015.02.11 இலிருந்து செல்லுபடியாகும். இந்த வரைவு சட்டகத்தை திருப்திப்படுத்தக்கூடிய முறையியல் ஒன்றை தாபிப்பது தொடர்பான இணக்கத்தை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சுகளுடன் தற்பொழுது கம்பனி கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளின் காரணமாக கம்பனியினால் சேர்வு நிலை வியாபாரங்களை தனித்தனியாக பிரித்து பார்க்க முடியாத நிலை காணப்படுவதன் காரணமாக, "இலங்கை பட்டயக் கணக்காளர் நிருவகத்தினால் விநியோகிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டு 03 ஆம் இல்கக காப்புறுதிக் கைத்தொழில் துறை ஒழுங்குவிதிகள் (திருத்தப்பட்டது) இன் 53 ஆம் பிரிவின் கீழ் நீண்ட கால மற்றும் பொது வியாபாரங்கள் தொடர்பான சமர்ப்பணம் மற்றும் வெளிப்படுத்தல் தொடர்பான வழிகாட்டிகள்" ஆகியவை ஏற்புடையவை அல்ல.

"இருப்பினும் 2021 நவம்பர் 12 இல் சமர்ப்பிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட பிரேரணை கலந்துரையாடல்களில் கம்பனியின் மேற்படி பிரிவுக்கு விதிவிலக்களிப்பதற்கான பிரேரணைகள் காணப்பட்ட பொழுதிலும் கூட அறிக்கையிடும் திகதி வரையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இது தொடர்பில் அறிவிக்கப்படவில்லை."

49 முனைய வசதிகளை பயன்படுத்துதல்

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட்

திரவ பெற்றோலிய வாயுவை பாரிய அளவில் களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகளை கம்பனியானது லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட் இடமிருந்து பெற்றுக் கொள்கின்றது. இந்த சேவைகளை பெற்றுக் கொள்ளும் பொழுது, லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா சொந்த களஞ்சிய தாங்கிகள், குழாய்கள், பம்பி நிலையங்கள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றது. இதற்காக லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட் இற்கு பெற்றுக் கொண்ட வசதிகளுக்காக செயற்பாட்டு கட்டணம் ஒன்றை செலுத்துகின்றது. இந்த செயற்பாட்டு கட்டண ஏற்பாடானது IFRIC 4 இன் கீழ் இனங் காணப்பட்ட குத்தகை ஏற்பாட்டை உள்ளடக்கியுள்ளது. அத்தோடு ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற நிபந்தனைகளின் பிரகாரம் நிதி குத்தகை ஏற்பாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இருப்பினும், முனையத்தில் காணப்படுகின்ற இந்த களஞ்சிய வசதிகளை ஏனைய இறக்குமதியாளர்கள் பயன்படுத்துவதன் காரணமாகவும் மற்றும் திரவ பெற்றோலிய வாயுவை களஞ்சியப்படுத்துவதற்காக ஏனைய இறக்குமதியாளர்களிடம் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஆர்வம் முகாமைத்திடம் காணப்படுவதன் காரணமாக கம்பனியின் கணக்கு புத்தகங்களில் குறிப்பிடப்பட்ட களஞ்சியசாலை வசதிகளானது அங்கீகரிக்கப்படவில்லை. இருப்பினும் மீளாய்விற்கு உட்பட்ட காலப் பகுதியில் லிட்ரோ கேஸ் பிரைவட் லிமிடட் ஆனது எதிர்கால இறக்குமதியாளர்களிடமிருந்து எத்தகைய சாதகமான பிரேரணைகளும் கிடைக்காத நிலையில் குத்தகைக்கு வழங்குவது தொடர்பான எத்தகைய உடன்படிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட்

லிட்ரோ கேஸ் டேர்மினல் லங்கா பிரைவட் லிமிடட் கம்பனியானது திரவ பெற்றோலிய வாயு களஞ்சிய வசதிகளை வழங்கி அதனை விநியோகம் செய்யும் வசதிகளையும் வழங்குகின்றது. இதற்காக தனது சொந்த களஞ்சியத் தாங்கிகள், குழாய்கள் மற்றும் நிரப்பு நிலையங்களைப் பயன்படுத்துவதோடு வழங்கப்படும் இந்த சேவைகளுக்காக லிட்ரோ கேஸ் லங்கா லிமிடட் நிறுவனத்தினால் "செயற்பாட்டுக் கட்டணம்" செலுத்தப்படுகின்றது. இந்த செயற்பாட்டுக் கட்டண ஏற்பாடு ஒப்பந்த நியதிகளுக்கு ஏற்ப IFRIC 4 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட ஒரு குத்தகை ஏற்பாட்டையும் இது உள்ளடக்கியுள்ளது. இருப்பினும், காணப்படுகின்ற களஞ்சிய வசதிகளை கருத்திற் கொண்டு திரவப் பெற்றோலிய வாயுவை களஞ்சியப்படுத்துவதற்கு ஏனைய இறக்குமதியாளர்களுக்கு இடமளிப்பதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சபை அபிப்பிராயப்படுகின்ற காரணத்தினால் மேற்குறித்த களஞ்சிய வசதிகள் கம்பனியின் கணக்குப் புத்தகங்களில் இனங் காணப்படவில்லை. மீளாய்வு வருடத்தில் குறித்த இறக்குமதியாளர்களிடமிருந்து சாதகமான முன்மொழிவுகள் கிடைக்காத காரணத்தினால் களஞ்சிய வசதிகளை வழங்குவதற்கான குத்தகை ஒப்பந்தங்கள் எதனையும் கம்பனி மேற்கொள்ளவில்லை.

50 தொடர்ந்து இயங்கும் தன்மை

அதிகரித்து வருகின்ற பொறுப்புகளுக்கு ஏற்ப தொடர்ந்து கம்பனி இயங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக கம்பனியின் பணிப்பாளர்கள் சபையினால் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அடுத்து வருகின்ற எதிர்காலத்தில் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான வளங்கள் கம்பனியிடம் காணப்படுகின்றமை தொடர்பில் திருப்தியுடன் காணப்பட்டனர். மேலும் கம்பனியை முன்னெடுத்துச் செல்வதற்கு பொருள் சார்ந்த முக்கிய நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் காணப்படவில்லை என்பதை பணிப்பாளரகள் உணர்ந்தனர். ஆகவே, நிதிக் கூற்றுகளானது தொடர்ந்தும் இயங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

ஹெலங்கோ ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட்

ஹெலங்கோ ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையானது 2015 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டையில் ஹோட்டலை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை கைவிடுவதற்கு தீர்மானித்தது. இதன் விளைவாக இந்த கருத்திட்டத்தின் ஹோட்டல் நிர்மாணப் பணிகள் வேலையானது முடிவுற்றது. மேலும் கம்பனியின் பங்கினை அதற்கேற்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட் (தாய் கம்பனி) மாற்றுவதற்கு 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதியிடப்பட்ட 17/1613/733/029 இலக்கமிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இதனை மாற்றுவதற்கான அறிவுறுத்தல்களை பொது தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு வழங்கியது. அறிக்கையிடும் திகதி வரையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏதிர்காலத்தில் கம்பனியை கலைப்பதற்கான எத்தகைய தீர்மானமும் கம்பனியினால் மேற்கொள்ளப்படவில்லை, ஆகவே கம்பனியின் முகாமைத்துவமானது அவசியமான பணிப்புரைகளை கம்பனியை முன்னெடுத்துச் செல்வதற்காக அமைச்சிடமிருந்து எதிர்பார்க்கின்றது. ஆகவே ஹெலங்கோ ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட் இன் நிதிக் கூற்றுகளானது தொடர்ந்தும் இயங்கும் தன்மையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

ஸினோலங்கா ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட்

ஸினோலங்கா ஹொடல்ஸ் என்ட் ஸ்பா பிரைவட் லிமிடட் நிறுவனத்தின் முகாமைத்துவமானது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் அடிப்படையில் கம்பனியை கொண்டு செல்ல முடியுமா என்ற மதிப்பீடு ஒன்றினை மேற்கொண்ட பொழுது எதிர்காலத்தில் அவ்வாறு கம்பனியின் வியாபாரங்களை கொண்டு நடாத்துவதற்கான வளங்கள் காணப்படுவதாக திருப்தியடைந்தது. மேலும், கம்பனியை முன்னெடுத்துச் செல்வதில் குறிப்பிடக்கூடிய பொருள் ரீதியான நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் காணப்படவில்லை என்பதனையும் முகாமைத்துவம் கண்டறிந்தது. மேலும், 2020 ஜுலை 08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் மூலம் கிராண்ட் ஹயாட் கொழும்பு கருத்திட்டத்தின் நிர்மாணச் செயற்பாடுகளை மீள் ஆரம்பிப்பதற்கான ஒப்புதலை அமைச்சரவை வழங்கியது. அதன் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீள் ஆரம்பிக்கப்பட்டன. அதனடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், 2022 சனவரி 01 ஆம் திகதியிடப்பட்ட 21/2278/306/100 இலக்கமுடைய அசைச்சரவை ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு கம்பனியின் முகாமைத்துவமானது ஐக்கிய அமெரிக்க டொலர் 175 மில்லியனை கருத்திட்ட நிதியாக திரட்டுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இதில் ஐக்கிய அமெரிக்க டொலர் 25 ஐ உரிமை முதலாகவும் மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர் 150 மில்லியனை கடன் மூலதனமாகவும் பெறவுள்ளன.

கென்வின் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்

கம்பனியும் அதன் உப கம்பனிகளையும் தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கான ஆற்றல்கள் தொடர்பான மதிப்பீடொன்றினை கென்வின் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட் கம்பனியின் முகாமைத்துவம் மேற்கொண்டது. எதிர்காலத்தில் அவ்வாறு வியாபாரத்தை கொண்டு நடத்துவதற்கான வளங்கள் காணப்படுவதாக இது திருப்தியடைந்தது. மேலும் கம்பனியை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆற்றல்கள் தொடர்பில் குறிப்பிடக்கூடிய சந்தேகங்கள் அல்லது பொருள் சார்ந்த நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் காணப்படவில்லை என்பதை முகாமைத்துவம் கண்டறிந்தது. அதன் அடிப்படையில் நிதிக் கூற்றுகளானது தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

51 தற்போதைய பொருளாதார தாக்கங்கள் தொடர்பான அவதானிப்புகள்

தற்போது காணப்படுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகள் மற்றும் அதன் தாக்கங்கள் ஆகியன நிதிக் கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளில் நிச்சயமற்ற தன்மைகளை அதிகரித்துள்ளன. இந்த மதிப்பீட்டு சார் நிச்சயமற்ற தன்மைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது:

1. தற்போது காணப்படுகின்ற பேரண்ட பொருளாதார நிலைமைகளின் காரணமாக எழுகின்ற வியாபார தடைகளின் அளவு மற்றும் அவற்றின் காலப் பகுதி மற்றும் அரசாங்கம், வியாபார நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய பங்கீட்டுப்பாட்டாளர்களின் நடவடிக்கைகள்.
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட தாக்கம், முதலீட்டு சந்தைகள், வாடிக்கையாளர்களது கடன் இடர்கள், வேலையில்லா தாக்கம், வாடிக்கையாளர் விருப்பத்திற்கு ஏற்ப செலவு செய்வதில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியவற்றின் காரணமாக தற்போது காணப்படுகின்ற பேரண்ட பொருளாதார நிலைகளின் அளவு மற்றும் காலப் பகுதி.
3. தற்போது காணப்படுகின்ற சூழமைவுகளுக்கு பதிலளிக்கும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க மற்றும் மத்திய வங்கி நடைமுறைகள் தொடர்பான பயனுறுதித்தன்மை

பின்வருமாறு குறிப்பிடக்கூடிய அண்மைய பொருளாதார ரீதியான அவதானிப்புகளானது காப்புறுதி வியாபார துறையில் முன்னெப்போதும் இல்லாத தாக்கத்தினை ஏற்படுத்தியது: பண வீக்கம் அதிகரித்தமை, வேலைவாய்ப்பின்மை அதிகரித்தமை, சந்தை வட்டி வீதங்கள் அதிகரித்தமை, அரசாங்க பிணையங்களின் விளைவுகள் அதிகரித்தமை, அதிகரித்த நிதி பற்றாக்குறை, அதிகரித்த அரசாங்க கடன்கள் மற்றும் கடன் சேவை கொடுப்பனவுகள், பிரதான நாணயங்களுக்க எதிராக ரூபாயின் வீழ்ச்சி, வெளிநாட்டு ஈட்டல்கள் அதிகரித்த பொழுதிலும் ஐந்தொகை கொடுப்பனவுகளும் அதிகரித்தமை, மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சிகள், சுற்றுலாத் துறை வருமானங்கள், வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல், கடன் தரமிடல்கள் போன்றன பாரியளவில் வீழ்ச்சி கண்டமை.

எமது வியாபாரத்தின் மாறுபட்ட துறைகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றி நாம் பின்வருமாறு கலந்தாராய்வுகளை மேற்கொண்டோம்.

முதலீடுகளில் ஏற்பட்ட தாக்கங்கள்

அதிகளவான பணவீக்கத்தின் காரணமாக ஏற்பட்ட எதிர்மறையான தாக்கத்தின் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு உரிய வருவாய்களை வழங்குதல் மற்றும் போட்டித் தன்மையுடன் திகழ்தல் போன்றவற்றில் பாரிய சவால்கள் ஏற்பட்டன. அதேவேளை, இலங்கை ரூபாயிற்கு எதிராக ஐக்கிய அமெரிக்க டொலரின் பெறுமதி குறிப்பிடக்கூடிய அளவு அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சந்தையில் செயற்படுகின்ற சகல பங்குபற்றுநர்களினாலும் பொருளாதாரத்தில் நிகழ்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் ஆகியன மிகவும் கவனமாக அவதானிக்கப்பட்டு வருகின்றது. இந்த இரு நிலைகளின் பொழுதும் நாம் ஐக்கிய அமெரிக்க டொலரை அடிப்படையாகக் கொண்ட உரிமை முதல் உபாய முறைகளை கருத்திற் கொண்டு செயற்படவுள்ளோம்.

பொது காப்புறுதி வியாபாரங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைகள் ஆகியவற்றின் காரணமாக பொது காப்புறுதி வியாபாரத்திற்காக 2022 ஆம் நிதியாண்டில் வரவு செலவுக்கு உட்பட்ட தொகைகள் தொடர்பில் மீள் எதிர்கூறல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இதன் அடிப்படையில் 2022 ஆம் நிதியாண்டிற்காக வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை விட மோட்டார் வாகனங்களுக்காக மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணமானது 3மூ இனால் வீழ்ச்சியடையும் எனவும், மோட்டார் வாகனங்கள் சாராத வியாபாரங்களுக்கான மொத்த எழுதப்பட்ட காப்பீட்டு கட்டணமானது சுமார் 4% இனால் வீழ்ச்சியடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக பொது காப்புறுதி வியாபாரத்தில் சுமார் 4% வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. மேல் குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலதிகமாக, உதிரிப் பாகங்களின் விலைகள் அதிகரித்தமையின் காரணமாக மோட்டார் வாகனங்களுக்கான கோரிக்கைகள்/ இழப்பு வீதுமானது 35மூ இனால் அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மோட்டார் வாகனங்கள் சாராத வியாபாரங்களை பொறுத்தவரையில், மேலும் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகள் ஆகியன 35மூ இனால் அதிகரித்தமையின் காரணமாக ளூர்று தொடர்பான கோரிக்கைகள் வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதற்கும் மேலதிகமாக 35% அதிகரிக்கலாம் என கணிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, பொது காப்புறுதி வியாபாரங்களுக்கான ஒட்டுமொத்த கோரிக்கை வீதம் 85% ஆகும்.

மேலும், அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டமை, பண வீக்கம் மற்றும் எதிகரித்த எரிபொருள் விலை ஆகியவற்றின் காரணமாக பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் தொடர்பான முகாமைத்துவ செலவுகளும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் எரிபொருளுடன் தொடர்புடைய விலைகளில் 45% அதிகரிப்பும் மற்றும் டொலர் பணப் பெறுமதியுடன் தொடர்புடையவற்றில் 50% அதிகரிப்பும் ஏற்படலாம் என ஊகிக்கப்படுகின்றது.

உதிரிப் பாகங்களின் விலைகள் மற்றும் மருந்துப் பொருட்களின் விலைகள் ஆகியன அதிகரித்தமையின் காரணமாக மோட்டார் வாகனங்கள் மற்றும் மருத்துவ துறைகளுடன் தொடர்புடைய கோரிக்கை செலவுகளும் அதிகரிக்கலாம். இதற்கு இரண்டு பிரதான காரணிகள் காணப்படுகின்றன: ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக பாதகமான முறையில் மிதக்க விடப்பட்ட ரூபாய் மற்றும் இறக்குமதி மட்டுப்பாடுகள். அதிகரித்த செலவுகளானது தீ தொடர்பான கோரிக்கைகள் மற்றும் நிர்மாணத் துறையுடன் தொடர்புடைய பொருட்கள் இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட பாரிய விலை அதிகரிப்பு ஆகியனவும் செலவுகளை அதிகரிக்கச் செய்யும்.

பணத்தை மிதக்க விடப்பட்டமை மற்றும் விநியோகப் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக எமது தொழிற்பாட்டு செலவும் அதிகரிக்கலாம்.

மேலும், நிதி நெருக்கடிகளின் காரணமாக சில மோட்டார் வாகன வாடிக்கையாளர்கள் மூன்றாம் தரப்பு காப்புறுதியை (மூன்றாம் தரப்பு காப்புறுதி) நாடலாம். அதேபோல் மோட்டார் காப்புறுதியை சாராத ஏனைய வாடிக்கையாளர்கள் தமது காப்புறுதி கொள்வனவு தொடர்பான தீர்மானங்களை தாமதப்படுத்தலாம். ஏனெனில் அடிப்படை தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். இத்தகைய சூழ்நிலையில் நாம் எதிர்பார்த்ததை விட குறைவான வருமானம் கிடைக்கின்ற பொழுதிலும் கூட அதிகரித்த செலவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன.

மேலும், பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவை கோரிக்கைத் தொகையையும் அதிகரிக்கச் செய்யலாம் (தீ வைத்தல், வேண்டுமென்றே மிகைப் படுத்திக் கூறல், மோசடியான கோரிக்கைகள் போன்றன). உதாரணமாக, அமைதியில்லாத நிலைமைகளின் காரணமாக சொத்துக்களுக்கு பாதிப்புகள் ஏற்படலாம் மற்றும் காயங்கள் அதிகரிக்கலாம். இதன் காரணமாக கோரிக்கைகளும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மேலும் வாடிக்கையாளர்கள் கொடுப்பனவுகளை தாமதித்தல், அவற்றை இரத்துச் செய்தல் போன்ற அச்சுறுத்தல் சம்பவங்களும் அதிகரிக்கலாம்.

ஆயள் காப்புறுதி வியாபாரங்களில் ஏற்படக்கூடிய தாக்கங்கள்

தற்போது நாட்டில் நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக காப்புறுதி கட்டண நீடிப்பு தொடர்பான தொகைகளை சேகரித்தல் மற்றும் புதிய காப்புறுதி காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான பிரச்சார பணிகள் போன்ற காப்புறுதி வியாபாரத்துடன் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்வதில் குறிப்பிடக்கூடிய தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவை பாரிய சவால்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவதானிக்க முடிகின்றது. அதேவேளை தொழிற்பாட்டு செலவுகளும் குறிப்பிடக்கூடிய அளவு அதிகரித்துள்ளன. மேலும் இலங்கையில் காணப்படும் அந்நிய செலாவணி பற்றாக்குறையின் காரணமாக மீள் காப்புறுதி காப்பீட்டு கட்டண கொடுப்பனவுகளை செலுத்துவதில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மின் வெட்டு மற்றும் போக்குவரத்து சிரமங்கள் ஆகியவற்றின் காரணமாக ஆயள் காப்புறுதி தொடர்பான தொழிற்பாட்டு சிரமங்கள் காணப்படுகின்றன. மேலும், பெருந்தொற்றினால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் வலு பற்றாக்குறை ஆகியவற்றினால் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் ஆகியவற்றிற்கு பதிலளிக்கும் முகமாக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து தொடர்பு கொள்ளக்கூடிய முறைகளையும் எமது பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் டிஜிட்டல் முறையில் தொடர்பு கொள்வதற்கான ஏற்பாடுகளையும் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

இத்தகைய விடயங்கள் பற்றி வியாபார தொடர்ச்சி செயற்படுத்தும் குழுவிலும் மற்றும் நிதி ரீதியான தாக்கங்கள், பிரேரிக்கப்பட்ட உபாயமுறைகள் ஆகியன வாராந்தம் நடைபெறும் செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டத்தின் பொழுது ஆராயப்பட்டு வருகின்றன.

இடரை அடிப்படையாகக் கொண்ட மூலதனம் மற்றும் கடனிறுக்கும் ஆற்றல் தொடர்பான தாக்கம்

எமது சகல பங்கீட்டுப்பாட்டாளர்களதும் நலனை கருத்திற் கொண்டு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் வியாபார நடவடிக்கைகளை நாடு முழுவதும் எத்தகைய பிரதான தடைகளும் இன்றி மேற்கொள்ள முடியும் என நாம் கருதுகின்றோம். இலங்கையில் தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கோவிட்-19 பெருந்தொற்றுடன் தொடர்புடைய சம்பவங்கள் குறிப்பிடக்கூடிய அளவு குறைந்துள்ளன. அதேவேளையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது உறுதியான நிதி நிலையில் திகழ்வதுடன் சிறப்பான முகாமைத்துவங்களையும் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பெருந்தொற்றுடன் தொடர்புடைய சம்பவங்களை வெற்றி கண்டுள்ளது. சவால்மிக்க இந்த காலப் பகுதியில் இலங்கை காப்புறதிக் கூட்டுத்தாபனமானது தனது ஆயள் காப்புறுதி ஊயுசு மற்றும் பொதுக் காப்புறுதி CAR ஆகியவற்றை முறையே 400% மற்றும் 200% ஆக பேணி வந்துள்ளது. இது இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் நிதி உறுதியையும் மற்றும் நீண்ட கால நிலைபேறு தன்மையையும் காட்டுகின்றது.

தற்பொழுது நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடியானது காப்புறுதி தொழிற்துறையில் குறுகிய கால மற்றும் நீண்ட கால தாக்கங்களை ஏற்படுத்தலாம். நாட்டில் அதிகரித்து வரும் பண வீக்கத்தின் காரணமாக, வாடிக்கையாளர்களது தேவைகள் மாறலாம். இதன் காரணமாக காப்புறுதி காப்பீட்டு கட்டண கொடுப்பனவுகளை செலுத்துவதில் தாக்கம் ஏற்படலாம். சாதாரண நிலைமைகளை விட காப்புறுதி காப்பீட்டு பத்திரங்களை கையளித்தல் அவை காலாவதியாதல் போன்றவை நிகழலாம் என இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது. இருப்பினும் உறுதியான சொத்து அடித்தளமானது ஆகக் குறைந்த ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் அதாவது ஆயள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி துறைகளுக்கு அவசியமான ஆகக் குறைந்த ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளை விட CAR ஐ அதிகமாக பேணுவதற்கு இவை உதவுகின்றன.

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

51 தற்போதைய பொருளாதார தாக்கங்கள் தொடர்பான அவதானிப்புகள் (தொடர்ச்சி)

இறப்பு மற்றும் நோயுற்ற தன்மை தொடர்பான ஊகங்கள் பற்றிய தாக்கம்

கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தின் காரணமாக 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுகாதாரம் தொடர்பான கோரிக்கைகள் அதிகரித்தமையை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அவதானித்தது. இருப்பினும் தடுப்பூசி ஏற்றலின் வெற்றிகரமான நிலைமையை கருத்திற் கொண்டு சுமார் 14.3 மில்லியன் நபர்கள் ஆகக் குறைந்தது கோவிட்-19 இரண்டு தடுப்பூசிகளையாவது பெற்றிருந்தனர். இவர்களுள் சுமார் 7.9 மில்லியன் நபர்கள் தமக்கான மூன்றாவது கோவிட்-19 தடுப்பூசியை (பூஸ்டர்) பெற்றிருந்தனர்.

(மூலம்: https://epid.gov.lk – 2022.04.02), தற்சமயம் இந்த எண்ணிக்கை பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தைப் பொறுத்த வரையில் கோவிட்-19 இனால் மோசமாக பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டது.

மீண்டுமொரு கோவிட்-19 தாக்கம் ஏற்பட்டமைக்கான சான்றுகள் இதுவரை இல்லை, இருப்பினும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது முறையாக மிகவும் அறிவார்ந்த அடிப்படையில் நடவடிக்கைகளை பேணி வருகின்றது, குறிப்பாக SLFRS நோக்கங்களுக்காக ஆயுள் காப்பீட்டு பத்திர நன்மைகளை பெற்றுக் கொண்டவர்கள் தொடர்பாக பொறுப்புகளை அறிவார்ந்த முறையில் வழங்கி வருகின்றது. சிறப்பாக மதிப்பிடப்பட்ட ஊகங்களின் அடிப்படையில் அறிவார்ந்த முறையில் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன, மோசமான விலகல் தொடர்பான எல்லைகளும் அனுமதிக்கப்படுகின்றன. கொரோனா வைரசின் தாக்கத்தின் காரணமாக இறப்புகள் மற்றும் நோயுற்ற தன்மைகள் ஆகியன மோசமான அனுபவங்களை தந்த பொழுதிலும் இவை குறுகிய காலத்திற்காகும். ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட ஊகங்கள் தொடர்பில் தற்சமயம் அக்கறைகளை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் போதியளவு பொறுப்புகள் காணப்படுகின்றன.

தரப்படுத்தல் தொடர்பான தாக்கம்

2021.11.24 இல் மேற்கொள்ளப்பட்ட பிட்ச் தரப்படுத்தல்களானது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்பில் "தேசிய காப்புறுதி நிதி ஆற்றல் தரப்படுத்தல்" AA(lka) இன் பிரகாரம் உறுதியான நிலையில் காணப்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனமானது தற்சமயம் இலங்கையில் உயர் தராதரம் பெற்ற காப்புறுதி கம்பனியாக காணப்படுகின்றது.

ஏதாவது பாதகமான பொருளாதார நிலைகளானது தரப்படுத்தல் தொடர்பில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தலாம், இருப்பினும் அத்தகைய எதிர்மறையான தாக்கங்கள் தொடர்பில் தற்போது எதிர்வு கூறுவதானது குறித்த காலத்திற்கு முன்பு தெரிவிப்பதாகும்.

மேலதிக தகவல்கள்

270 - ஆயுள் காப்புறுதி தொடர்பான நிதி நிலை கூற்று
271 - நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - ஆயுள் காப்புறுதி நிதி
276 - வருமானம் தொடர்பான பத்து வருட சுருக்க கூற்று
278 - பத்து வருட ஐந்தொகை சுருக்கம் - குழு
280 - பத்து வருட ஐந்தொகை சுருக்கம் - கம்பனி
284 - கிளை வலையமைப்பு
293 - பெருநிறுவன தகவல்கள்
294 - வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்
295 - குறிப்புகள்
297 - பதிவு படிவம்
299 - பதிலுறும படிவம்

STRATEGY

உபாயமுறை

எமது தொடர்ச்சியான சிறப்பிற்கு முன்னோக்கிய பார்வை கொண்ட உபாயமுறை முக்கியமான அம்சம் என நாம் நம்புகிறோம்.

ஆயுள் காப்புறுதி தொடர்பான நிதி நிலைமை கூற்று

	குறிப்பு	2021 ரூபா. '000	2020 ரூபா. '000
சொத்துக்கள்			
நிதி ரீதியான முதலீடுகள்	A	160,554,249	138,614,218
துணை கம்பனிகளில் முதலீடு	B	3,296,543	1,296,543
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	E	97,939	86,004
சொத்துக்களை பயன்படுத்துவதற்கான உரிமை		388,059	458,820
காப்புறுதி பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்கள்	C	1,637,187	1,734,723
வரவேண்டிய மிள் காப்புறுதி		811,913	488,859
காப்புறுதி பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களிடமிருந்து வரவேண்டிய கட்டுப்பணங்கள்		507,391	531,495
ஏனைய சொத்தக்கள்	D	3,539,443	3,877,779
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகள்		13,782,374	12,963,071
மொத்த சொத்துக்கள்		184,615,098	160,051,512
உரிமை முதல்			
விற்பனைக்காக உள்ள ஒதுக்கம்	F	3,260,333	2,884,888
வருமான ஒதுக்கம்	G	18,381,630	12,987,262
மட்டுப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதி ஒதுக்கங்கள்		98,237	98,237
மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்		71,673	57,378
கம்பனியின் உரிமை முதல் உரிமையாளர்களுக்கு உரித்தாகக்கூடிய மொத்த உரிமை முதல்		21,811,873	16,027,765
பொறுப்புகள்			
காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் (ஏற்பாடு - ஆயுள்)	H	155,788,928	137,129,036
பொறுப்புகளை பிரயோகிப்பதற்கான உரிமை		450,308	510,975
மீள் காப்புறுதி கடன் கொடுநர்கள்		1,095,095	615,341
வரி பொறுப்புகள்		1,257,284	1,113,679
ஒய்வூதிய நன்மை ஏற்பாடுகள்		917,180	1,221,234
ஏனைய பொறுப்புகள்	I	3,080,779	3,260,971
நிதி ரீதியான பொறுப்புகள் (வங்கி மேலதிகப் பற்று)		213,651	172,510
மொத்த பொறுப்புகள்		162,803,225	144,023,746
மொத்த உரிமை முதல் மற்றும் பொறுப்புகள்		184,615,098	160,051,512

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - ஆயுள் காப்புறுதி நிதியம்

A. நிதி ரீதியான முதலீடுகள்

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	குறிப்பு	2021		2020	
		முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி
		ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
முதிர்விற்காக வைக்கப்பட்டிருக்கின்வைகள்	A.1	60,399,783	58,824,840	51,319,076	60,961,319
கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள்	A.2	31,897,236	31,897,236	32,654,202	32,654,202
விற்பனைக்காக உள்ளவைகள் (யுகுளு)	A.3	50,606,618	50,606,618	43,263,216	43,263,216
இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதி (குஏவீடு)	A.4	17,650,612	17,650,612	11,377,724	11,377,724
		160,554,249	158,979,305	138,614,218	148,256,461

A.1 முதிர்விற்காக வைக்கப்பட்டிருக்கின்வைகள்

	2021		2020	
	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
திறைசேரி முறிகள்	60,399,783	58,824,840	51,319,076	60,961,319
	60,399,783	58,824,840	51,319,076	60,961,319

A.2 கடன்கள் மற்றும் வரவேண்டியவைகள்

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2021		2020	
	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
பட்டியலிடப்படாத கடன் பத்திரங்கள்	20,248,744	20,248,744	20,215,004	20,215,004
நிரந்தர வைப்புகள்	7,911,667	7,911,667	8,963,895	8,963,895
அபிவிருத்தி முறிகள்	3,736,825	3,736,825	3,475,304	3,475,304
	31,897,236	31,897,236	32,654,202	32,654,202

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - ஆயுள் காப்புறுதி நிதியம்

A.3 விற்பனைக்காக உள்ளவைகள்

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2021		2020	
	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
பட்டியலிடப்பட்ட இருப்புகள்	11,813,255	11,813,255	11,186,021	11,186,021
அலகு நம்பிக்கைகள்	967,235	967,235	856,514	856,514
பட்டியலிடப்பட்ட கடன் பத்திரங்கள்	35,805,985	35,805,985	29,994,194	29,994,194
திறைசேரி முறிகள்	2,020,143	2,020,143	1,226,488	1,226,488
	50,606,618	50,606,618	43,263,216	43,263,216

A.4 இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதி

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	2021		2020	
	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி	முன்கொண்டு வரப்படும் பெறுமதி	நியாயப் பெறுமதி
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
பட்டியலிடப்பட்ட இருப்புகள்	15,860,785	15,860,785	10,435,667	10,435,667
அலகு நம்பிக்கைகள்	1,789,827	1,789,827	942,057	942,057
	17,650,612	17,650,612	11,377,724	11,377,724

இலாபம் அல்லது நட்டம் மூலமான நியாயப் பெறுமதி மற்றும் விற்பனைக்காக உள்ளவைகள் தொடர்பான முதலீடுகள் ஆகியன நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டது. முதிர்வுக்காக வைக்கப்பட்டவைகள் மற்றும் கடன் மற்றும் வரவேண்டியவைகள் தொடர்பான முதலீடுகள் ஆகியன இலதாக்கல் செலவில் மதிப்பிடப்பட்டது.

B. துணை கம்பனிகளில் முதலீடுகள்

	2021	2020
	ரூபா. '000	ரூபா. '000
	3,296,543	1,296,543

	குறிப்பு	2021 ரூபா. '000	2020 ரூபா. '000
கிரயத்தில்			
பட்டியலிடப்பட்ட துணை கம்பனிகள்	B.1	1,296,543	1,296,543
பட்டியலிடப்படாத துணைக் கம்பனிகள்	B.2	2,000,000	-
		3,296,543	1,296,543

B.1 பட்டியலிடப்பட்ட துணைக் கம்பனிகள்

	2021			2020		
	பங்குகளின் எண்ணிக்கை	முன்கொண்டு வரப்படும் பெறுமதி ரூபா. '000	நியாயப் பெறுமதி ரூபா. '000	பங்குகளின் எண்ணிக்கை	முன்கொண்டு வரப்படும் பெறுமதி ரூபா. '000	நியாயப் பெறுமதி ரூபா. '000
த லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோபரே'ன் பீஎல்சி	58,781,308	1,296,543	3,279,997	58,781,308	1,296,543	3,162,434
	58,781,308	1,296,543	3,279,997	58,781,308	1,296,543	3,162,434

B.2 பட்டியலிடப்படாத துணைக் கம்பனிகள்

	2021		2020	
	பங்குகளின் எண்ணிக்கை	முன்கொண்டு வரப்படும் பெறுமதி ரூபா. '000	பங்குகளின் எண்ணிக்கை	முன்கொண்டு வரப்படும் பெறுமதி ரூபா. '000
கென்வில் ஹோல்டிங்ஸ் பிரைவட் லிமிடட்	235,294,117	2,000,000	-	-
	235,294,117	2,000,000	-	-

C. ஆயுள் காப்புறுதி பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்கள்

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000
காப்புறுதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டவர்களுக்கான கடன்கள்	1,637,187	1,734,722
	1,637,187	1,734,722

D. ஏனைய சொத்துக்கள்

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000
இருப்புகள்	97,275	49,167
ஏனைய கடனாளிகள் மற்றும் வரவேண்டியவைகள்	176,693	170,662
ஏனைய கடன்கள்	2,506,115	2,404,777
பொது பிரிவிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை	263,713	714,188
கடன்கள் தொடர்பில் முன் செலுத்தப்பட்ட நன்மைகள்	495,647	538,986
	3,539,443	3,877,779

நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - ஆயுள் காப்புறுதி நிதியம்

E. சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

இரையிலி ஆதனம்	காணி ரூபா. '000	கட்டிடம் ரூபா. '000	மொத்தம் ரூபா. '000
கிரயம்			
2021.01.01 இல் மீதி	43,530	47,193	90,723
மேலதிகம்	-	-	-
மீள் மதிப்பீடு	4,638	2,579	7,216
மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட திரண்ட பெறுமானத் தேய்வு	-	-	-
2021.12.31 இல் மீதி	48,168	49,772	97,939
திரண்ட பெறுமானத் தேய்வு			
2021.01.01 இல் மீதி	-	4,719	4,719
காலப்பகுதிக்கான பெறுமானத் தேய்வு கட்டணம்	-	2,360	2,360
மீள் மதிபபீட்டு ஒதுக்கங்களுக்கு மாறற்ப்பட்டவைகள்	-	(7,079)	(7,079)
2021.12.31 இல் மீதி	-	-	-
முன் கொண்டு செல்லப்படும் தொகை			
2021.12.31 இல் உள்ளவாறு	48,168	49,772	97,939

F. விற்பனை ஒதுக்கங்களுக்காக காணப்படுபவைகள்

ஆயுள் காப்புறுதி பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்கள் ரூபா. 4,584 மில்லியனையும் பங்காளர்கள் ரூபா. 3,260 மில்லியனையும் பெற்றுக் கொள்வதற்கு அருகதையுடையவர்கள்.

G. வருமான ஒதுக்கம்

	குறிப்பு	2021 ரூபா.000	2020 ரூபா.000
பொது ஒதுக்கம்		42,100	42,100
ஓய்வூதிய நன்மைகள் தொடர்பான காப்புறுதி கணக்கர் வருவாய்/ (இழப்பு) தொடர்பான ஒதுக்கம்		(46,924)	(457,504)
ஆயுள் காப்புறுதியிலிருந்தான மிகை	G.1	18,386,454	13,402,666
		18,381,630	12,987,262

G.1. ஆயுள் காப்புறுதியிலிருந்தான மிகை

	2021 ரூபா.000	2020 ரூபா.000
சனவரி 01 இல் மீதி	13,402,666	11,257,397
ஆயுள் காப்புறுதியிலிருந்து பங்காளர்களுக்கு உரித்தாகக்கூடிய மிகை	4,983,788	2,145,269
டிசம்பர் 31 இல் மீதி	18,386,454	13,402,666

H. காப்புறுதி ஒப்பந்த பொறுப்புகள் - ஆயுள்

	2021	2020
	ரூபா.000	ரூபா.000
ஆயுள் காப்புறுதி நிதியம்	129,151,483	112,914,376
நிதியத்தின் அசைவு	23,832,975	18,263,974
விற்பனைக்காக உள்ள சொத்துக்கள் தொடர்பில் பங்குதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட நடப்பு வருட இலாப மாற்றம்	-	118,402
நீண்ட கால காப்புறுதி வியாபாரங்களுக்கான மிகை மாற்றங்கள்	(4,983,788)	(2,145,269)
	148,000,670	129,151,483
விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்கள்		
விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கங்கள் - ஆயுள் நிதி	4,584,389	4,862,059
காப்பீட்டு பத்திரங்களை பெற்றுக் கொண்டவர்களுக்கான நிலுவை கோரிக்கைகள்	3,203,869	3,115,494
	155,788,928	137,129,036

I. ஏனைய பொறுப்புகள்

	2021	2020
	ரூபா.000	ரூபா.000
முன்கூட்டியே பெற்றுக் கொள்ளப்பட்ட காப்பீட்டுக் கட்டணங்கள்	287,586	293,850
வியாபார கடன் கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவுகள்	2,793,193	2,967,121
	3,080,779	3,260,971

வருமானம் தொடர்பான பத்து வருட சுருக்கக் கூற்று

	2021 ரூபா. '000	2020 ரூபா. '000	2019 ரூபா. '000
ஆயுள் காப்புறுதி அல்லாதது			
மொத்த பதியப்பட்ட காப்புறுதி கட்டுப்பணங்கள்	21,255,023	20,163,296	18,974,323
மீள் காப்புறுதி	(4,029,008)	(3,133,728)	(3,358,526)
உழைக்கப்படாத காப்புறுதி காப்பீட்டுக் கட்டணம்	(325,424)	(1,667,533)	(306,793)
தேறிய ஈட்டப்பட்ட காப்புறுதி கட்டுப்பணங்கள்	16,900,591	15,362,035	15,309,003
தேறிய ஏற்பட்ட கோரிக்கைகள்	(10,206,589)	(7,786,221)	(9,290,432)
ஒப்புறுதி மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவுகள் / தரகு செலவுகள்	(653,821)	(864,830)	(967,782)
தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்	(5,457,312)	(5,047,881)	(4,546,109)
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	4,655,818	3,159,227	4,483,050
வரிக்கு முன்னரான இலாபம்	5,238,687	4,822,331	4,987,730
வரி விதிப்பு	(181,339)	(1,179,070)	(330,151)
வரிக்கு பின்னரான இலாபம்	5,057,348	3,643,261	4,657,579
நீண்ட காலம்			
மொத்த பதியப்பட்ட காப்புறுதி கட்டுப்பணங்கள்	21,975,988	19,257,997	14,820,025
தேறிய பதியப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	21,496,234	18,844,423	14,463,057
முதலீடு மற்றும் ஏனைய வருமானம்	21,082,101	15,321,245	14,425,899
தேறிய ஏற்பட்ட கோரிக்கைகள்	(9,978,828)	(7,986,076)	(7,333,265)
தரகு செலவுகள்	(2,566,486)	(2,131,963)	(2,018,406)
தொழிற்பாடு மற்றும் நிருவாக செலவுகள்	(4,697,086)	(4,779,473)	(4,660,164)
ஒப்பந்த பொறுப்புகள் மாற்றம் - ஆயுள் காப்புறுதி	(18,849,187)	(16,118,705)	(11,659,844)
வரிக்கு முன்னரான இலாபம்	6,486,748	3,149,451	3,217,278
வரி விதிப்பு	(1,502,959)	(1,004,178)	(845,900)
வரிக்கு பின்னரான இலாபம்	4,983,789	2,145,273	2,371,377
மொத்த வியாபாரம்			
வருமானம்	64,062,308	52,614,495	48,608,571
மொத்த பதியப்பட்ட காப்பீட்டுக் கட்டணம்	43,231,011	39,421,293	33,794,347
தேறிய ஈட்டப்பட்ட காப்புறுதி கட்டுப்பணங்கள்	38,396,825	34,206,458	29,772,061
தேறிய ஏற்பட்ட கோரிக்கைகள்	(20,185,417)	(15,772,297)	(16,623,696)
ஒப்பந்த பொறுப்புகளில் மாற்றம் - ஆயுள் காப்புறுதி	(18,849,187)	(16,118,705)	(11,659,844)
முதலீடுகள் மற்றும் ஏனைய வருமானம்	25,665,483	18,408,038	18,836,510
ஒப்புறுதி மற்றும் தேறிய கையகப்படுத்தல் செலவுகள் / தரகு செலவுகள்	(3,220,308)	(2,996,793)	(2,986,189)
தொழிற்பாட்டு மற்றும் நிருவாகச் செலவுகள்	(10,081,963)	(9,754,918)	(9,133,838)
வரிக்கு முன்னரான இலாபம்	11,725,433	7,971,782	8,205,004
வரி விதிப்பு	(1,684,297)	(2,183,249)	(1,176,052)
வரிக்கு பின்னரான இலாபம்	10,041,136	5,788,533	7,028,955

2018 ரூபா. '000	2017 ரூபா. '000	2016 ரூபா. '000	2015 ரூபா. '000	2014 ரூபா. '000	2013 ரூபா. '000	2012 ரூபா. '000
18,532,092	18,920,562	15,720,793	14,049,934	12,544,828	12,953,151	12,803,592
(2,989,790)	(4,542,029)	(2,556,737)	(2,427,362)	(2,709,017)	(3,129,667)	(2,992,362)
(450,954)	(726,188)	(830,098)	(1,536,333)	15,662	(318,509)	(324,012)
15,091,348	13,652,345	12,333,957	10,086,240	9,820,149	9,504,974	9,487,217
(10,028,386)	(9,127,011)	(8,605,127)	(6,628,963)	(6,205,796)	(4,934,074)	(6,194,011)
(661,317)	(636,080)	(634,481)	(345,480)	(485,323)	(500,629)	(519,906)
(4,173,489)	(3,502,864)	(3,181,514)	(2,532,021)	(3,492,049)	(2,851,002)	(2,008,724)
4,168,839	2,189,129	9,322,418	2,472,763	2,224,732	2,516,799	2,064,835
4,396,994	2,575,519	9,235,253	3,052,539	1,861,713	3,736,069	2,829,411
(840,326)	(391,642)	(308,911)	(538,488)	(217,101)	(803,033)	(900,971)
3,556,668	2,183,878	8,926,342	2,514,051	1,644,612	2,933,035	1,928,440
13,205,802	12,517,120	11,893,640	10,470,079	8,121,159	8,397,718	7,369,032
12,913,268	12,285,325	11,679,336	10,307,235	7,984,758	8,300,082	7,281,225
12,278,853	11,272,939	8,772,049	8,290,528	9,272,341	7,658,997	6,811,038
(7,726,263)	(6,899,558)	(5,871,667)	(6,304,646)	(5,733,524)	(4,870,410)	(4,089,232)
(1,836,556)	(1,688,772)	(1,560,526)	(1,240,955)	(1,127,919)	(1,053,299)	(1,088,644)
(4,721,492)	(3,981,540)	(3,265,086)	(2,443,684)	(2,507,814)	(2,307,020)	(2,147,075)
(8,154,201)	(7,673,707)	(5,198,390)	(6,840,241)	(5,376,416)	(5,109,549)	(3,733,466)
2,753,606	3,314,688	4,555,715	1,768,238	2,511,426	2,618,801	3,033,847
(1,065,480)	(929,414)	(740,739)	(842,932)	(899,025)	(897,006)	(726,442)
1,688,126	2,385,274	3,814,976	925,306	1,612,400	1,721,795	2,307,405
44,379,869	39,399,736	42,107,760	31,156,767	29,301,980	27,890,852	25,644,316
31,737,894	31,437,682	27,614,433	24,520,012	20,665,987	21,350,869	20,172,624
28,004,616	25,937,670	24,013,293	20,393,475	17,804,905	17,805,056	16,768,441
(17,754,649)	(16,026,568)	(14,476,793)	(12,933,609)	(11,939,321)	(9,804,484)	(10,283,243)
(8,154,201)	(7,673,707)	(5,198,390)	(6,840,241)	(5,376,416)	(5,109,549)	(3,733,466)
16,375,253	13,462,066	18,094,467	10,763,292	11,497,075	10,175,796	8,875,872
(2,497,873)	(2,324,852)	(2,195,008)	(1,586,435)	(1,613,242)	(1,553,928)	(1,608,550)
(8,822,546)	(7,484,404)	(6,446,601)	(4,975,705)	(5,999,863)	(5,158,022)	(4,155,799)
7,150,600	5,890,205	13,790,968	4,820,777	4,373,139	6,354,870	5,863,255
(1,905,805)	(1,321,056)	(1,049,650)	(1,381,420)	(1,116,126)	(1,700,039)	(1,627,413)
5,244,795	4,569,150	12,741,317	3,439,357	3,257,013	4,654,830	4,235,842

பத்து வருட ஐந்தொகை சுருக்கம் - குழு

	2021	2020	2019
	ரூபா. '000	ரூபா. '000	ரூபா. '000
சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்	65,391,507	56,752,233	52,346,702
முதலீடுகள்	200,945,951	173,678,452	164,880,936
ஏனைய சொத்துக்கள்	59,536,732	59,286,109	47,550,609
மொத்த சொத்துக்கள்	325,874,190	289,716,794	264,778,247
உரிமை முதல் மற்றும் பொறுப்புகள்			
பங்கு மூலதனம்	6,000,000	6,000,000	6,000,000
மூலதன ஒதுக்கம்	18,414,228	13,112,599	13,058,735
ஒரு மிகை விடப்பட்ட ஒழுங்குவிதி மட்டுப்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள்	98,237	98,237	98,237
பொது ஒதுக்கம்	643,442	643,442	643,442
விற்பனைக்காக உள்ள ஒதுக்கம்	6,008,859	5,704,652	9,472,363
வருமான ஒதுக்கம்	65,073,169	58,671,046	53,068,008
கட்டுப்படுத்தாத வட்டி	9,125,663	8,985,168	8,767,718
